கர்த்தருக்குப் பயப்படும் பயம்

THE FEAR OF THE LORD



ஆசிரியர் : சகோ. S. செல்லத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கர்த்தருக்குப் பயப்படும் பயம்

THE FEAR OF THE LORD

ஆசிரியர் :

சகோ. S. செல்லத்துரை

கர்த்தருக்குப் பயப்படும் பயம்

THE FEAR OF THE LORD

கண்கள் இருந்தும் காணாமலும் காதுகள் இருந்தும் கேளாமலிருக்கிற அறிவில்லாத ஜனங்களே, கேளுங்கள்: எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ, என்று கர்த்தர் சொல்லுகிறார்......... அந்தப்பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும், பின்மாரியையும் கொடுத்து அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை. எரே.5:21,24.

சகோ. S. செல்லத்துரை

ஆசிரியர் : சகோ. S. செல்லத்துரை

முதற் பதிப்பு : 1994

இரண்டாம் பதிப்பு : 2010

பிரதிகள் : 1000

அச்சிட்டோர் : சி.எம்.எஸ். அச்சகம்

விலை : 30

தொடர்பு முகவரி :

சகோ. S. செல்லத்துரை

மனற்காடு

மேலப்பாட்டம் [P.O.]

பர்கிட்மா நகர் [VIA]

திருநெல்வேலி – 627 351.

Tel. : 0462 - 2950570
Cell : 9943135231

பொருளடக்கம்

அத்தியாயம்	பொருளடக்கம்	பக்கம்
1	கர்த்தருக்குப் பயப்படும் பயம்	1
2	கர்த்தருக்குப் பயப்படுதலின் முக்கியத்துவம்	4
3	கர்த்தருக்குப் பயப்படுதலின் அவசியம்	16
4	கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை எவ்விதம் பெற்றுக்கொள்வது	55
5	கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் செய்யவேண்டியது	81
6	கர்த்தருக்குப் பயந்து ஜீவித்த மனிதர்கள்	120
7	பிரயோஜனம் இல்லாத பயம்	123
8	கர்த்தருக்குப் பயப்படாத மனிதர்கள்	131
9	ஏன் கர்த்தருக்குப் பயப்படும் பயம் மனிதரில் இல்லாமற் போய்விடுகிறது	136
10	கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்கள் செய்யும் காரியங்கள்	140
11	மற்றவர்கள் கர்த்தருக்குப் பயப்பட நாம் செய்யவேண்டியது	146
12	கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்கள்	152

முன்னுரை

பிள்ளைகளே, வந்து எனக்கு செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன். சங்.34:11.

என் தேவனின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

என் இரட்சகராகிய இயேசுவின் இனிய நாமத்தில் இந்த புஸ்தகத்தை வாசிக்கிற உங்களை வாழ்த்துகிறேன்.

கிறிஸ்தவ உபதேசங்களில் மகிவும் முக்கியமானதும், மற்ற எல்லா உபதேசங்களுக்கும் அடிப்படையாக உள்ளதுமான உபதேசம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்ற உபதேசமாகும்.

ஒரு மனைவி தன் புருஷனுக்கு பயப்படவில்லையென்றால் அவள் அவனுக்கு அடங்கி நடக்காது அவன் தலை மீது உட்கார்ந்து அவன் மீது ஆட்சி செய்யப்பார்ப்பாள். பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குப் பயப்படவில்லையென்றால் அந்தப் பிள்ளைகள் அடங்காதவர்களாக எல்லாவிதமான தீமையானக் காரியங்களையும் துணிந்து செய்வார்கள். வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்கு அல்லது மேலதிகாரிகளுக்கு பயப்படவில்லையென்றால் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை சரிவரச் செய்யாது, வேலை நிறுத்தம் போன்ற தீமையானக் காரியங்களைச் செய்வார்கள். அதுபோலவே இன்றைய உலக ஜனங்களிடையே கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாததினால் தான் எல்லா விதமான தீமையானக் காரியங்களையும் அவர்கள் துணிந்து செய்கிறார்கள். இன்று மனிதர்களிடையே அக்கிரமும், அநியாயமும், பாவமும் ஏன் பெருகுகிறது என்றால் அவர்களிடையே கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாததினால்தான் என்பதை யாரும் உணர்வதில்லை.

கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களில் நாம் கர்த்தருக்குப் பயப்படுதலைக் கற்றுக்கொண்டவர்களாக, கர்த்தர் விரும்புகிறவண்ணமாக ஜீவித்து, மோட்ச பாக்கியத்தை பெற்றுக்கொள்ள கர்த்தர்தாமே கிருபை செய்வாராக.

அத்தியாயம் 1

கர்த்தருக்குப் பயப்படும் பயம்

1. கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்றால் என்ன?

தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் நீதி 8:13

கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள் நீதி. 16:6

கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது தீமையானக் காரியங்களை வெறுத்து அதை விட்டு விலக வேண்டும் என்பதே. இன்று அநேக நல்ல மனிதர்களும் நாம் தீமை செய்யாமல் இருப்பதினால் நமக்கு இலாபம் என்ன? இந்த உலகில் தீமை செய்கிறவர்கள்தானே நன்கு செழித்திருக்கிறார்கள். தீமை செய்கிறவர்களுக்கும் தீமையே செய்யாது நன்மையே செய்கிறவர்களுக்கும் ஒன்றுபோல்தானே சம்பவிக்கிறது. ஆகவே நாமும் தீமை செய்தால் என்ன என்று எண்ண ஆரம்பித்துவிடுகிறார்கள். இதுபற்றி வேத வசனம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். எல்லாருக்கும் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது சூரியனுக்கு கீழே நடக்கிறதெல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம். ஆதலால் மனுபுத்திரரின் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது. பிர.9:3. துர்கிரியைக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுப்புத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது பிர.8:11.

இன்று மனிதர் செய்கிற பாவங்களுக்குத் தக்கதாக உடனுக்குடன் தண்டனை கிடைக்கவில்லையென்றவுடன் மனிதர் தங்களில் துணிகரங் கொண்டு கொலைகள், கொள்ளைகள், விபச்சாரங்கள் ஏழை எளியவர்களை ஒடுக்கி அவர்களுக்கு தீமை செய்தல், அவர்களின் பொருள்களை பலாத்காரமாக எடுத்துக்கொள்ளுதல், பணத்தினால் நீதிமன்றங்களில் (In courts) நியாயத்தைப் புரட்டுதல், துரிதமாக பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணி வியாபாரங்களில் செய்கிறதான கள்ளத்தராசு, கலப்படம், ஏமாற்றுதல்கள் போன்றக் காரியங்களும், அரசாங்க அலுவலகங்களிலும், காவல் துறைகளிலும் நீதிமன்றகளிலும் பகிரங்கமாக லஞ்சம் வாங்குவதினால் ஏழை எளியவர்களும், லஞ்சம் கொடுக்கமனம் இல்லாது நேர்மையாய் நடக்க விரும்பு கிறவர்களும் அரசாங்கத் துறையினரிடம் இருந்து எந்தவித நன்மையும் பெறமுடியாமல் நவிக்கிறதையும் இன்னும் இவ்விதமான பலக் கொடிய தீமையயானக் காரியங்களையும் நமது மனித சமுதாயத்தில் நடப்பதை நாம் கண்கூடாகக் காணலாம்.

இன்று எங்கும் கொலைகள், கொள்ளைகள் விபச்சாரம்போன்ற பாவங்கள் துணிகரமாக செய்யப்படுகிறதையும், ஆகாயவிமானம், ரயில் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது இடங்கள் போன்றவைகள் வெடிகுண்டுகள்

வைத்து அழிக்கப்படுகிறதையும், அதனால் மிகுந்த ஆட்சேதமும், பொருட்சேதமும் ஏற்படுவதையும், எங்கும் குழப்பங்கள் ஏற்பட்டு அதினால் ஜனங்கள் மிகுந்த பயத்தோடும், திகிலோடும், சமாதானமற்ற நிலையில் வாழ்கிறதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இவ்விதக் கொடுந்தீமைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறதே. இதன் காரணம் என்ன என்று அநேகர் அங்கலாய்க்கலாம் ஆனால் வேதவசனம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

துன்மார்க்கர் பெருகினால் பாவம் பெருகும் நீதி. 29:16

யார் இந்த துன்மார்க்கர் என்றுக் கேட்கலாம். இதற்கும் வேதவசனம் கீழ்க்கண்டவாறு பதிலளிக்கிறது. துன்மார்க்கனுடைய துரோகப்பேச்சு எனக்குத் தெரியும். அவன் கண்களுக்கு முன் தெய்வபயம் இல்லை. சங்.36:1. துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத்தேடான். அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே சங்.10:4.

இன்று உலகில் தெய்வபயம் அற்ற தேவன் இல்லையென்று சொல்லி தேவனைத் தேட மனமற்றதான துன்மார்க்கரின் கூட்டம் நாளுக்குநாள் பெருகிக் கொண்டு வருவதினால்தான் இந்த உலகில் முன் சொன்னதுபோல் எல்லாவிதமான தீமையான காரியங்களும் பெருகிக்கொண்டுவருகிறது என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாது உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது. யோபு 9:24 என்றும் மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்பொழுது துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள். சங்.12:8 என்றும் கூறப்பட்டிருபபதினால் இந்த உலகம் தெய்வபயமற்ற, தேவன் இல்லையென்று சொல்கிறதான துன்மார்க்கரான மனிதரால் நிறைந்து இருக்கிறது என்றும் இந்த உலகின் ஜனங்களில் சண்டாளர் (VILEST MEN) சமுதாயத்தில் எந்தவித அந்தஸ்தும் பெறத் தகுதியற்ற மிக்க ஈனமான மனிதர்கள் உயர்ந்த அரசியல் நிலைகளில் இருப்பதினால்தான் அவர்கள் கையாட்களாக உள்ள தெய்வபயம் அற்ற துன்மார்கரின் கூட்டம் துணிகரமாக எங்கும் சுற்றித் திரிந்து சமுதாயத்தில் எல்லாவிதமான தீமையானக் காரியங்களையும் துணிந்து செய்கிறார்கள்.

இவ்வித தீமையானக் காரியங்கள் மனித சமுதாயததில் இருந்து நீங்க வேண்டும் என்றால் இந்த உலகில் எல்லாருமே கர்த்தருக்குப் பயப்படும் பயம் உடையவர்களாக இருக்க வேண்டும். அதாவது எல்லாருக்கும் தீமையான காரியங்களைக் குறித்து ஒரு உண்மையான வெறுப்பு ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்தத் தீமையான காரியங்களை அவர்கள் விட்டு விலகமுடியும். இன்று அனேகர் புகை பிடித்தல், பொடி போடுதல் வெற்றிலைப் பாக்கு போடுதல், மதுபானம் அருந்துதல், சினிமா பார்குதல் போன்ற பல பாவ பழக்கங்களுக்கு அடிமைகளாகி, பின்னர் அந்தத் தீயபழக்கங்களை விடமுடியவில்லையே என்று தவிக்கின்றனர். முதலாவது அவர்களில் காணப்படும்

தீமையான பழக்கங்களைக் குறித்து ஒரு உண்மையான வெறுப்பு அவர்களுக்கு ஏற்படும் என்றால் அவர்களால் அந்த தீய பழக்கங்களிலிருந்து விடுதலை பெற முடியும். அநேகர் தங்களில் காணப்படும் தீயப் பழக்கங்களைக் குறித்து ஒரு உண்மையான வெறுப்பு இல்லாததினால்தான் அத்தீய பழக்கங்களை விட மனமற்றவர்களாக ஐயோ என்னால் இந்தத் தீயப்பழக்கத்தை விடமுடியவில்லையே என்று சாக்குப் போக்குச் சொல்கின்றனர்.

2. கர்த்தருக்குப் பயப்படுவது என்பது கர்த்தரின் வேத வசனத்திற்குப் பயப்படுவது என்பதாகும்.

என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது சங். 119:161.

இரண்டாவது கர்த்தருக்குப் பயப்படுவது என்பது கர்த்தரின் வசனத்திற்குப் பயப்படுவது என்பதாகும். எவ்விதம் கர்த்தரின் வேதவசனத்திற்குப் பயப்படுவது என்பதுபற்றி ஒரு சிறு உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன்.

ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு மனிதன் தன் மேலதிகாரிகளைக் குறித்து அவனுக்கு பயம் இருந்தது என்றால், அந்த அதிகாரிகள் எழுதி அனுப்பும் கட்டளைகளுக்கு (orders) மதிப்புகொடுத்து, அந்த கட்டளைகளின்படியே தன் கடமைகளை செய்துமுடிப்பான். அதுபோலவே கர்த்தரைக் குறித்தான ஒரு உண்மையான பயம் காணப்படும் என்றால் நிச்சயமாகவே அவர்கள் தேவனால் மனுக்குலத்தின் ஈடேற்றத்துக்காக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் வேத வசனத்திற்குப் பயந்து வேதவசனத்திற்கு ஏற்றவாறு தங்கள் ஜீவயத்தை அமைத்துக் கொள்ளப் பார்ப்பார்கள்.

ஆனால் இன்று பெரும்பாலுமான கிறிஸ்மவர்கள் தெய்வ பயம் அற்றவர்களாக, வேதவசனத்திற்கு கீழ்ப்படிய மனமற்றவர்களாகி மனித உபதேசங்களுக்கு இடம் கொடுத்து வேத உபதேசங்களை அசட்டை செய்து உலக ஜனங்களை விட மோசமாக எல்லாவித தீமையானக் காரியங்களையும் துணிகரமாகச் செய்கிறார்கள். இவர்கள் பெயரளவில் கிறிஸ்தவர்களே ஒளிய இவர்களுடைய வாழ்க்கை முறைக்கும், கிறிஸ்தவ உபதேசத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இவர்களின் ஜீவிய முறையினால் தேவனின் பரிசுத்தமான நாமம் மற்றவர்களால் தூசிக்கப்படுகிறது என்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

3. கர்த்தருக்குப் பயப்படும் பயம் எத்தன்மையுடையது?

கர்த்தருக்குக் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றென்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது சங். 19:9.

அ. கர்த்தருக்குப் பயப்படும் பயம் சுத்தமானது

வேத புஸ்தகத்தில் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்பொழுது சுத்தமானது என்பது பற்றிய முக்கியமானக் காரியத்தை அறிந்துகொள்ள முடியும். ஆசரிப்புக் கூடாரத்தில் சுத்தமான வெள்ளைப் போளத்தைக் கொண்டுதான் சுத்தமான

அபிஷேகத் தைலத்தை தயாரித்தார்கள். அந்த சுத்தமான அபிஷேக தைலத்தைதான் பரிசுத்தமான அபிஷேக தைலமாக பயன்படுத்தினார்கள் (யாத் 30:23,25). இதிலிருந்து நாம் அறியவேண்டியது யாதெனில் சுத்தமான ஒன்றிலிருந்துதான் பரிசுத்தம் பிறக்கமுடியும். அதுபோலவே நம்மில் காணப்படும் கர்த்தருக்குப் பயப்படும் பயமானது சுத்தமானதாக இருப்பதினால் அது நம்மை பரிசுத்தவான்களாக மாற்றமுடியும் ஆகவே பரிசுத்தத்தின் முதல் படியே கர்த்தருக்குப் பயப்படும் பயமாகும்.

b. கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்றும் நிலைத்திருக்கிறது.

என்றும் நிலைத்திருக்கிறது என்பது அது காலத்தால் மாறாது. அது காலத்தால் அழியாது என்பதாகும். நிலைத்திராத இரண்டு முக்கியமானக் காரியங்கள் வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அவைகள் (I) செல்வம் 1தீமோ.6:17, நீதி. 27:24. (II) நமது ஜீவிய காலம் சங்.89:47, பிர. 9:9.

ஐஸ்வரியம் இன்று ஒருவன் கையிலே நாளை இன்னொருவன் கையில் என்றும் ஆகும். ஆனால் நாம் இந்த நிலைத்திராத உலகப் பிரகாரமான ஐஸ்வரி யத்தைதான் நாடித்தேடி இரவு பகலாக அதைச்சம்பாதிக்க அதிகம் முயற்சி செய்கிறோம். அதுபோலவே நமது ஜீவிய காலமும் நிலையற்றதாகும். ஆனால் நிலையற்றதான நமது ஜீயகாலத்தைப் பற்றிதான் நாம் அதிகம் கவலைப்படுகி றோம். என்றும் நிலைத்திருக்கிறதான கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைப் பெற்றுக்கொள்ள நாம் கவலைப்படுவதில்லை. என்ன பரிதாபம் பாருங்கள்.

4. கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமது சரீர அவயவங்களில் எதில் காணப்படவேண்டும்.

எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைப்பேன் எரே. 32:40.

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை நம் இருதயத்திலே வைப்பதாக தேவன் இங்கு சொல்கிறார். அப்படியென்றால் கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம் இருதயத்திலேக் காணப்படுவது அவசியமாகும். நமது மூளையிலோ, அல்லது நமது வெளித்தோற்றத்திலோ அல்ல என்பதை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம் இருதயத்தில் காணப்படும் என்றால் அது நம்மை கர்த்தரை விட்டுத் தூரம்போகாதபடி நாம் தேவனோடு இருக்கும் அனுபவத்திற்குள் அது நம்மைக்காத்துக்கொள்ளும். கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு ஜீவிக்க வாஞ்சிப்போமா?.

அத்தியாயம் 2

கர்த்தருக்குப் பயப்படுதலின் முக்கியத்துவம்

நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தின் முக்கியத்துவம் என்ன என்று இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

1. [illegible]

[illegible]

[illegible]

[illegible]

இக்கடைசி நாட்களில் தேவனே நம்மிடம் விரும்பி கேட்கிறதான கீழ்ப்படிதலுக்கும் [illegible] உடையவர்களாய் தேவசித்தத்தை மட்டும் [illegible] நாளுக்கு நாள் அந்த அனுபவத்தில் வளர்கிறவர்களாகவும் காணப்படுவது மிகவும் அவசியமாயிருக்கிறது. இதுபற்றி அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதம் கூறுகிறார் நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் ரோமர் 12:2 இந்த வாக்கியத்தின் சரியான கருத்துப்படி நாம் அனைவரும் தேவனுடைய பூரணமான சித்தம் இன்னதென்று அறிந்து அதின்படியாக மட்டும் ஜீவிக்கவும், அவ்வித அனுபவத்தில் நாளுக்கு நாள் வளர்கிறவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதுதான்

இன்று அநேக கிறிஸ்தவர்கள் பல வருஷங்களாக வேதத்தின் சத்தியங்களைக் கற்றவர்களாக இருந்தாலும் தேவ சித்தத்தை அறியமுடியாத வளர்ச்சியற்ற குழந்தைகளைப் போல் உள்ள கிறிஸ்தவர்களாகவும், இந்த உலகத்தின் பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர்களாகவும், உலக ஜனங்களுக்கும், தங்களுக்கும் இடையே எந்தவித வித்தியாசமும் இல்லாமல் உலக ஜனங்களைப் போலவே ஜீவிக்கிறார்கள். இவ்விதம் ஜீவிக்கிறவர்கள் யோனா தீர்க்கதரிசியின் வாழ்க்கையைப் பற்றிக் கூறப்பட்டுள்ள எச்சரிப்பை நினைவுப்படுத்திக்கொள்வது மிகவும் நன்றாயிருக்கும். யோனா தேவ சித்தத்துக்கு மாறாக செயல்பட்டபொழுது அவனுக்கு மட்டுமல்லாது அவன் கூட கப்பலில் பயணம் செய்த எல்லா மனிதருக்கும் கூட அழிவு வரவிருந்தது. அது போலவே நாமும் தேவசித்தத்துக்கு விரோதமாக செயல்படும்பொழுது தேவ தண்டனை நமக்கும் கிடைக்கும். அதுமட்டுமல்லாது நம்மைச் சேர்ந்தவர்ளுக்கும் ஆபத்து வரும் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. ஆகவே நாம் கர்த்தருக்குப்பயந்து தேவசித்தத்தை செய்ய முயற்சிப்போம்.

2 ஓ மனிதரே எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கர்த்தர் கேட்கிறார்.

கண்கள் இருந்தும் காணாமலும் காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற அறிவில்லாத ஜனங்களே கேளுங்கள். எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கர்த்தர் சொல்கிறார். அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாதபடிக்கும் அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும் கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ எரே. 5:21,22. அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும், பின்மாரியையும் கொடுத்து அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்கிறதில்லை எரே.5:24.

இங்கு தேவன் நமக்குச் செய்கிறதான இரண்டு காரியங்களைப் பார்க்கிறோம். எவ்வளவுதான் கடல் கொந்தளித்தாலும் கடலின் அலைகள் கரையைக் கடந்துவந்து மனிதருக்கு சேதத்தை உண்டுபண்ணாதபடி நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை தேவன் வைத்திருக்கிறார். இரண்டாவதாக நமது நிலங்கள் நமக்கு ஏற்றகாலங்களில் பயிரை விளைவிக்கும்படி தேவன் முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்துக் காத்துவருகிறார். அதாவது இயற்கையினால் நமக்கு சேதம் வராது கர்த்தர் நம்மைக் காத்துவருகிறார். இரண்டாவது நமது சரீரத்தின் தேவைகளையும் அதினதின் காலங்களில் நமக்குக் கிடைக்கும்படிச் செய்துவருகிறார். இவ்விதம் நம்மைப் பாதுகாத்து நமது தேவைகளை சந்தித்துவரும் தேவனுக்கு ஜனங்கள் பயப்படாதிருக்கிறார்கள். இவ்விதமான ஜனங்களைப் பார்த்துதான் தேவன் கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலும் இருக்கிற அறிவில்லாத

ஜனங்களே எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கேட்கிறார். இன்று ஏன் ஜனங்கள் கர்த்தருடையக் காரியங்களைப் பார்க்காமலும் கேட்காமலும் இருக்கிறார்கள் என்றும் வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. இவர்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும் நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது அப். 28:27. ஆம் ஜனங்களின் இருதயம் கொழுத்ததாய் இருக்குமானால் அவர்களால் தேவனுடையக் காரியங்களை பார்க்கவோ, கேட்கவோ முடியாது. மனிதன் எப்பொழுது இவ்விதக் கொழுத்த நிலைக்கு வருகிறான்? அவன் கொழுத்தபின் என்ன செய்வான் என்பதுபற்றியும் வேதவசனம் தெளிவாகக் கூறுகிறது.

நான் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் அவர்களை பிரவேசிக்கப்பண்ணின பின்பு. அவர்கள் புசித்து திருப்தியாகிக் கொழுத்துப்போயிருக்கும்போழுது அவர்கள் வேறே தேவர்களிடத்தில் திரும்பி, அவைகளைச் சேவித்து, எனக்குக் கோபமூட்டி என் உடன்படிக்கையை மீறுவார்கள் உபா. 31:20. யெஷூரன் கொழுத்து போய் உதைத்தான். கொழுத்து ஸ்தூலித்து நிணம் துண்ணினபோது தன்னை உண்டாக்கின தேவனை விட்டு, தன் ரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணினான் உபா. 32:15.

இன்று ஜனங்கள் இயற்கையில் தேவன் தங்களுக்காக உண்டாக்கிவைத்திருக்கும் காற்று, தண்ணீர் போன்ற எல்லாவற்றையும் இலவசமாக அநுபவித்து, தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் செல்வத்தை அநுபவித்து, இவ்விதமாய் கொழுத்தவர்களாகி தங்களை இந்த உலகில் சிருஷ்டித்துக் காப்பாற்றி வரும் சத்திய தேவனை தொழுது சேவியாமல், தேவன் அல்லாத, கையினால் உண்டாக்கப்பட்ட விக்கிரகங்களை தொழுது சேவிக்கவும், தங்களை சிருஷ்டித்த தேவனை அசட்டை செய்யவும் ஆரம்பித்து விடுகிறார்கள் இவ்விதம் தங்களை சிருஷ்டித்த தேவனை அசட்டை செய்கிற ஜனங்களாக தேவ காரியங்கள் பற்றிக் கேட்கவோ, பார்க்கவோ விருப்பம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் இவ்வித ஜனங்களைத்தான் தேவன் அறிவில்லாதவர்கள் என்று கூறுகிறார்.

இவ்விதம் ஜனங்கள் அறிவில்லாதவர்களாயிருப்பதினால் அவர்களுக்கு வரும் தேவ தண்டனையைப் பற்றியும் வேத வசனம் தெளிவாகக்கூறுகிறது. உங்கள் அக்கிரமங்களே இவைகளை விலக்கி உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது எரே. 5:25. இன்று மனிதனின் அக்கிரமம்தான் மழையில்லாத வறட்சிக்கும், பஞ்சம், பட்டினிக்கும் காரணம் என்று உணராதிருக்கிறார்கள். மனிதனின் பாவம் தான் அவர்கள் தேவனிடம் இருந்து எந்தவித நன்மையும் பெறமுடியாதபடி அதற்குத் தடையாக இருக்கிறது என்பதை இந்த உலகின் ஜனங்களில் யாரும் உணர்வதில்லை. ஒன்று எங்கும் மழை மிகவும் அதிகமாகப் பெய்து எங்கும் ஒரே வெள்ளச் சேதம் அல்லது

எங்கும் மழையில்லாத வறட்சியும் ஏற்பட்டு மனிதரின் வாழ்க்கையில் வேதனையை உண்டாக்குகிறது. இது தங்களின் பாவத்தினால் உண்டாகிறது என்பதை உணர்ந்து தங்கள் பாவங்களை விட்டு தேவனிடமாக மனந்திரும்புகிறார்களா? இல்லையே. மனிதன் தன் அறிவுத் திறமையால் பல திட்டங்களை உண்டாக்குகிறான். ஆனால் தனது திட்டங்களினால் வெள்ளச் சேதத்தையும், வறட்சியையும் மாற்ற முடியவில்லையே. சரி உலக ஜனங்களிடத்தில்தான் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லையென்றால் கிறிஸ்தவர்களிடமாவது கர்த்தருக்குப் பயப்படும் பயம் காணப்படுகிறதா? இல்லையே என்ன பரிதாபம் பாருங்கள்.

3 இந்த உலகின் எல்லா தேவர்களிலும் நமது தேவனே பயப்படத்தக்கவர்.

கர்த்தர் பெரியவரும் மிகவும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார். எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே 1நாளா. 16:25, சங்.96:4

இந்த உலகில் எத்தனையோ தேவர்கள், தேவதைகள் என்னப்படுகிறவர்கள் உண்டு என்றாலும் இவைகள் நம்மை உண்டாக்கிய தேவன் இல்லை. இவ்வித தேவனல்லாத தேவர்களுக்கு நாம் பயப்படக்கூடாது என்று வேதவசனம் நம்மை எச்சரிக்கிறது. நீங்கள் அந்நிய தேவர்களுக்குப் பயப்படாமலும், அவர்களைப் பணிந்து கொள்ளாமலும், சேவியாமலும் அவர்களுக்குப் பலியிடாமலும், உங்களை மகாவல்லமையினாலும், ஓங்கிய புயத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருக்கே பயந்து, அவரையே பணிந்துகொண்டு, அவருக்கே பலியிட்டு, அவர் உங்களுக்கு எழுதிக்கொடுத்த திட்டங்களின்படியும், முறைமைகளின் படியும், நியாயப்பிரமாணத்தின்படியும், கற்பனைகளின் படியும் நீங்கள் சகல நாளும் செய்கிறதற்குக் கவனமாயிருந்து அந்நிய தேவர்களுக்குக் பயப்படாதிருங்கள். நான் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை நீங்கள் மறவாமலும், அந்நிய தேவர்களுக்கு பயப்படாமலும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக 2இரா. 17:35-37.

நமது தேவன் நமது பயத்துக்குரியவர், ஏனெனில் அவரே நம்மை சிருஷ்டித்தவர், அவரே நம்மை அநுதினமும் போஷித்து, பாதுகாத்து நம்மை வழிநடத்துகிறார். அது மட்டுமல்லாது தேவன் நம்மை எகிப்தின் அடிமைத்தனமாகிய பாவத்திலிருந்து நம்மை மீட்டு. இரட்சித்து, நம்மை தமது நித்திய இராஜியத்திற்கு நேராக வழிநடத்திக் கொண்டு வருகிறார். ஆகவே இந்த உலகின் ஜனங்கள் தங்களை சிருஷ்டித்த தேவனுக்கு மட்டும் பயப்படவேண்டுமே ஒழிய அந்நிய தேவர்களுக்குப் பயப்படக்கூடாது.

இன்றைய கிறிஸ்தவ சபைகளில் கர்த்தருக்குப் பயப்படும் பயமும் இல்லை, இரட்சிக்கப்படுகிறவர்களை சபைகளில் சேர்ப்பதுமில்லை. இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவைகள் பெயர்க்கிறிஸ்தவ

சபைகளை என்றும், ஆவிக்குரிய சபைகள் என்றும் அவைகளை அழைக்கலாம். பெயர்கிறிஸ்தவ சபைகள் மனித உபதேசத்தையும், மனித பாரம்பரியங்களையும் கைக்கொள்கிறவர்களாகவும், வேத உபதேசத்திற்கும் தங்கள் சபை அமைப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதவர்களாகவும், தங்களுடைய ஜீவியமுறையினால் உலக ஜனங்கள் இதுவா கிறிஸ்தவம் என்று சொல்லி தேவனின் பரிசுத்தமான நாமத்தை தூஷிக்கும் அளவுக்கு மிகவும் மோசமாக ஜீவியம் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வித கிறிஸ்தவர்களைப் பற்றிவேதவசனம் கீழ்கண்டவாறு கூறுகிறது. தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்ககளாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு 2தீமோ. 3:5.

பெயர் கிறிஸ்தவ சபைகளில் எல்லாவித அலங்காரங்களும் உண்டு. ஆனால் பரிசுத்த அலங்காரம் மட்டும் கிடையாது. தேவபக்திக்குரிய எல்லாவித வேஷங்களும் உண்டு. அழகான பண்டிகை ஆராதனைகள் மற்றும் காரியங்களும் வெகு நன்றாக இருக்கும். ஆனால் தங்கள் குடும்பங்களில் கொஞ்சம் கஷ்டங்களோ, வியாதியோ வந்தால் உடனே விக்கிரகங்களிடத்தில் ஆலோசனைக் கேட்க ஓடுவார்கள். அல்லது வைத்தியர்களிடம் ஓடுவார்கள். தாஙகளின் இவ்வித செய்கைகளினால் தங்கள் தேவனின் பெலனை (Power-வல்லமை) மறுதலிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். அதாவது தங்கள் ஜீவியத்தின் மூலமாக தாங்கள் ஆராதிக்கிற தங்கள் தேவனுக்கு எந்தவித வல்லமையும் கிடையாது என்று நிரூபித்துக் காட்டுகிறார்கள், அதுமட்டுமல்லாது விபச்சாரம், கொலை, கொள்ளை போன்றக் கொடிய பாவங்களையும் துணிகரமாக செய்வார்கள். இவ்வித சபைகளைப் பற்றி நான் அதிகம் எழுத விரும்பவில்லை. வேதத்தின் சத்தியங்களை அறிந்தவர்கள் யாராவது இந்த சபைகளில் இருந்தால் அவர்கள் உடனே இவ்வித சபைகளை விட்டு விலக வேண்டும் என்று மேற்கூறப்பட்ட வேதவசனத்தின் மூலமாக தேவன் அனைவரையும் திட்டவட்டமாக எச்சரிக்கிறார். கீழ்ப்படிவோமா? அல்லது எங்களுக்கு அருமையான இனஜன பந்துக்களை விட்டு எப்படி பிரிவது, எங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் பள்ளிக்கூடங்களில் வேலைகிடைக்குமே, கல்லறைத்தோட்டம் உண்டே என்று எண்ணிக்கொண்டு இருந்தால் நிச்சயமாகவே அவர்களுக்கு வரும் அழிவில் நாமும் பங்கடைவோம் என்பதை மறக்க வேண்டாம். துரிதமாக செயலபடுவோமாக.

ஆவிக்குரிய சபைகளைப்பற்றி சிலகாரியங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆவிக்குரிய சபைகளின் ஊழியக்காரர்களில் அநேகர் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த மகிமையான ஊழியத்தை ஒரு இலாபகரமான ஆதாயத்தொழிலாக நடத்துகிறார்கள். தங்களுக்குக் கர்த்தரால் கொடுக்கப்பட்ட சில வரங்களை வைத்துக்கொண்டு அதை ஒரு விளம்பரப் பொருளாக பயன்படுத்துகிறார்கள். நாங்கள் விசுவாச ஊழியம் செய்கிறோம் என்று பணம் வசூலிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். பல

சந்தர்ப்பங்களில் தங்கள் சபைகளில் உள்ள விசுவாசிகள் மத்தியில் குழப்பங்கள் உண்டாவதற்கு ஊழியர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். இவர்கள் செய்யும் ஊழியமானது தங்கள் ஆதாயத்திற்காக ஒரு கூட்டம் ஜனங்களை தங்கள் சபைகளில் சேர்க்கவேண்டும் என்பதே ஒழிய மற்றபடி ஆத்துமாக்களை கர்த்தரின் வருகைக்காக ஆயத்தப்படுத்தவேண்டும் என்பதல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் எவ்விதம் ஆத்துமாக்களைக் குறித்து வாஞ்சையுடையவராக இருந்தார் என்று கீழ்க்கண்ட வேதவசனம் நன்கு விளக்கும். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம் கொலோ 1:28. அப்போஸ்தலனாகிய பவுலின் வாஞ்சை, விசுவாசிகள் எல்லாரும் கர்த்தரின் காரியங்கள் எல்லாவற்றையும் சரியாகக்கற்று, தேர்ச்சி அடைந்தவர்களாக கர்த்தரின் வருகையில் காணப்படவேண்டும் என்பதுதான். இன்றைய ஊழியர்கள் ஜனங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு, தங்களுக்குப் பேரும் புகழும், பணமும் கிடைக்கும்படியாகப் போதிக்கிறார்கள். இவ்விதம் செய்வதினால் தங்களுக்கு வரும் தேவத்தண்டனையைப் பற்றி சிறிதும் சிந்தியாமலிருக்கிறார்கள்.

இந்த கடைசி நாட்களில் ஊழியக்காரர்கள் எப்படியிருப்பார்கள் என்று வேதவசனம் மிகத்தெளிவாகக் கூறியுள்ளது. **கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய கெட்ட நடத்தைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய் தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்வார்கள். பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது. அவர்களுடைய அழிவு உறங்காது 2பேது. 1:3.**

இந்த நாட்களில் ஊழியக்காரர்கள் தங்களுக்கு அதிக ஆக்கினை வரும் என்பதை அறிந்து மிகவும் விழிப்புடன் இருப்பது மிகவும் அவசியம். கீழ்கண்ட எச்சரிப்பின் வசனத்தை கவனிப்பது நல்லது. **அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக யாக் 3:1.**

அதுபோலவே இன்றைய விசுவாசிகளில் அனேகரும் தங்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கிடைத்து விட்டால் போதும், நாம் பரலோகம் செல்ல நமக்கு டிக்கட் கிடைத்துவிட்டது இனிநாம் நம் இஷ்டம்போல் ஜீவிக்கலாம் என்று தங்கள் இஷ்டம்போல் ஜீவியம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். கிறிஸ்தவ ஜீவியத்தைப் பற்றி கர்த்தரின் வேதம் கூறும் எச்சரிப்பின் வசனங்களை நாம் அறிந்து நமது

ஜீவியத்தைக் காத்துக்கொள்வது நமக்கு நலமாயிருக்கும் ஒருசிலவசனங்களை தேவஜனங்களின் பிரயோஜனத்துக்காக குறிப்பிடுகிறேன்.

i) இடுக்கமான பாதை :

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக்கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் மத்.7:14.

நம் இஷ்டம்போல் ஜீவிக்கிறதும், உலக வேஷத்தை தரிப்பதும், உலகத்தோடு ஒத்துப்போவதும் உலக ஆடம்பரங்களை விரும்புவதும், உல்லாசமாக வாழ்கிறதுமான, விசாலமான வழியை தெரிந்துகொள்ளாது, கர்த்தர் காட்டுகிறதும் ஆகுமா நடத்துகிறதும், உலகத்தார் வெறுக்கிறதும், பாடுகளும், உபத்திரவங்களும் நிறைந்ததுமான இடுக்கமும் நெருக்கமுமான வழியைத் தெரிந்துகொண்டு நம்மை நடத்துகிற தேவனை மட்டும் நோக்கிப் பார்க்கிறவர்களாய், எந்த மனிதனையோ, சூழ்நிலைகளையோ பாராது நமது இலக்கை நோக்கி நடபோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

ii) நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் பற்றி நாம் ஜாக்கிரதையாயிருப்பது :

ஆகையால் சகோதரரே உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதை யாயிருங்கள் 2பேதுரு 1:10.

மேற்கூறப்பட்ட வசனத்தில் உறுதியாக்கும்படி என்ற வார்த்தை விசேஷித்த கருத்துடையது. ஒரு சிறு உதாரணத்தோடு இதை விளக்கிக்கூற விரும்புகிறேன். ஒரு மனிதன் புதிதாக ஒரு வேலையில் சேருகிறான் என்றால் அவன் ஒரு குறிப்பிட்டகாலம்வரையில் தற்காலிகமாக (Temporary) அந்த வேலையில் நியமிக்கப்படுகிறான். அதன் பின்னர் அந்த மனிதனின் வேலைத்திறமை, உண்மைத் தன்மை இவைகளைப் பார்த்து நிரந்தர வேலையில் (permanent) நியமிக்கப்படுகிறான். அதுபோலவே நமது அழைப்பும் தெரிந்துகொள்ளுதலும் தற்காலிக நிலையில் இருக்கிறது. என்பதை நாம் அறியவேண்டும். நாம் நமது அழைப்பிலும் தெரிந்துகொள்ளுதலிலும் உண்மையும், உத்தமுமாய் இருப்போம் என்றால் நமது மரணத்தில் அல்லது கர்த்தரின் வருகையில் நமது அழைப்பு உறுதியாக்கப்படும். ஆகவே நாம் மிகவும் விழிப்புடையவர்களாய் இருப்பது நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது.

iii) நமது இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படவேண்டும் :

அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள் பிலி. 2:12.

சகோதரரே அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை, ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்கு தேவன் அழைத்த பரம

அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் பிலி.3:13,14.

மேற்கூறப்பட்டுள்ள இரண்டு வசனங்களில் முதல் வசனத்தில் நமது இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது நமது இரட்சிப்பு பூரணப்பட நாம்தான் பிரயாசப்படவேண்டும் என்று அறிகிறோம். அப்படியென்றால் நாம் நமது இரட்சிப்பைக் குறித்து விழிப்புடையவர்களாய் இல்லையென்றால் நாம் பெற்ற இரட்சிப்பை நாம் இழந்து போகும் நிலையும் நமக்கு வரலாம். நாம் எவ்விதம் பிரயாசப்படவேண்டும் என்று இரண்டாவது வசனத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இரட்சிப்பின் அனுபவம் என்பது ஒருநாளைய அனுபவம் அல்ல. அது நமது மரணம் வரையில் அல்லது நமது கர்த்தராகிய இயேசுவின் வருகை வரையில் நாம் விழிப்புடன் காத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

நாம் எவ்விதம் பிரயாசப்பட வேண்டும் என்பது பற்றி இரண்டாம் வசனத்தின் மூலம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். இங்கு கிறிஸ்தவ ஜீவியமானது பந்தய சாலையில் ஓடுகிற ஒரு மனிதனின் அனுபவத்திற்கு உவமித்துக் கூறப்பட்டுள்ளது. பந்தய சாலையில் ஓடுகிற ஒரு மனிதன் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும் என்றும் பார்ப்போம்.

a) பின்னானவைகளை மறப்பது :

நமது பழைய ஜீவயத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் எண்ணுவது. இது இருவகைப்படும் . 1) பழைய ஜீவியத்தைப் பற்றி எப்பொழுதும் எண்ணுவது. ஐயோ நான் இப்படியெல்லாம் கொடிய பாவியாக ஜீவித்தேனே, என்பாவம் மன்னிக்கப்படுமா, எனக்கு இரட்சிப்பு கிடைக்குமா என்பது. 2) இரட்சிக்கப்பட்ட துவக்கத்தில் நாம் பெற்ற சில ஆவிக்குரிய மேன்மையானக் காரியங்களை எப்பொழுதும் சொல்லிக்கொண்டு பெருமைப்படுவது. மேற் கூறப்பட்ட இரண்டுவித அனுபவங்களுமே ஆபத்தானது. நாம் கர்த்தரின் சமூகத்தில் ஒரு தடவை நம்மை ஒப்புகொடுத்து கர்த்தர் நமது பாவத்தை மன்னித்துவிட்டார் என்றால் நாம் மீண்டும் அந்தப் பாவத்தைப்பற்றி எண்ணவேண்டியதில்லை இது பிசாசு நம்மில் உண்டுப்ண்ணுகிற சந்தேகமாகும். இரண்டாவது நாம்பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தின் துவக்க நாட்களில் நாம் பெற்ற சில ஆவிக்குரிய மேன்மையானக் காரியங்களைக் குறித்து பெருமைப்படுவது. இதுமிகவும் ஆபத்தானது இவ்விதம் செய்கிவர்கள் தாங்கள் பெற்ற இரட்சிப்பின் சந்தோசத்தை இழந்து, பலவித சோதனையில் அகப்பட்டு கொடிய வேதனையை அனுபவிப்பதைக் கண்டிருக்கிறேன். நாம் பெற்ற ஆவிக்குரிய மேன்மையான காரியங்களை குறித்து மிகவும் ஜாக்கிரதையாயிருப்போமாக. நமது கடந்த கால அனுபவங்களை மறந்துவிடுவோம்.

(b) முன்னானவைகளை நாடுவது :

இப்பொழுது நாம் எந்த நிலையில் வாழ்கிறோம் என்பதல்ல இனி நாம் ...விரும் கர்த்தரோடு சதாகாலமாக வாழபோகிறோம் என்ற அந்த எண்ணம் எப்பொழுதும் நம்மில் காணப்பட வேண்டும். இப்பொழுது நாம் அநுபவிக்கிற சந்தோஷமோ, துக்கமோ இவைகள் நாம் அடையப்போகும் மகிமையான காரியங்களுக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல. நம்முடைய எண்ணமும், சிந்தனையும நமது இலக்கைப்பற்றியதாகவே இருக்கவேண்டும். நமது பார்வை முன்னோக்கியதாக இருக்க வேண்டும்.

(c) ஓட்டக்காரனிடத்தில் காணப்படவேண்டியவை :

கட்டுப்பாடு : கிறிஸ்தவ ஜீவயம் நமது இஷ்டம்போல் ஜீவிக்கிற ஜீவியம் அல்ல. ... கட்டுப்பாடான ஜீவியம். நம்மில் என்ன என்னக் கட்டுப்பாடுகள் காணப்பட வேண்டும் என்றுப் பார்ப்போம்.

ஆகாரக் கட்டுப்பாடு : பந்தய சாலையில் ஓடுகிற ஒரு மனிதன் தன் வயிறு ... சாப்பிட்டுவிட்டு பந்தய சாலையில் ஓடமாட்டான். ஓடுவதற்கு ஏற்ற ...கொடுக்கக்கூடிய கொஞ்சமாகவும், சத்துள்ளதுமான ...களைத்தான் சாப்பிடுவான். நமது சரீரம் அதிகமான ஆகாரம் ...னால மந்தமாகக்கூடாது. சரீரத்திற்கு ஒத்துவராத பொருட்களை உண்டு ... சரீரத்தை கெடுக்கக்கூடாது. நமது சரீரம் எப்பொழுதும் ஆயத்த நிலையில் (condition) இருக்க வேண்டும்.

உடைக் கட்டுப்பாடு : ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிற ஒரு மனிதன் கனமான ...களை (heavy shoes) தன் காலில்போட்டுக்கொண்டு, பேண்ட், கோட், ...வைகளை மாட்டிக்கொண்டு ஓட்டப்பந்தயத்தில் ஓடமாட்டான். ஓட்டத்தை ... செய்யாத இலகுவான மிகக்குறைந்த ஆடைகளைத்தான் ...யப்பார்ப்பார்ன். விசுவாச ஓட்டத்தில் பங்குகொள்கிற நாமும் உலகத்தாரைப்போல் ஆடை ஆபரணங்கள் அணியாது 1தீமோ.2:9,10; பேதுரு 3:3ல் கூறப்பட்டுள்ளதுபோல் தகுதியான வஸ்திரங்களை அணிகிறவர்களாகக் காணப்பட வேண்டும். விசுவாசிகளின் வாழ்க்கையில் ...மாயிருக்கவேண்டிய காரியங்களில் உடைக்கட்டுப்பாடும் ...தாகும் விலையுயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள், பவுடர், பூ ...மபான அலங்காரங்கள் விசுவாசிகளாகிய தேவ ஜனங்களுக்கு அவசியமற்றது என்பதை மறக்கக்கூடாது.

சரீரக் கட்டுப்பாடு : பந்தய சாலையில் ஓடுகிற மனிதன் எப்பொழுதும் பல உடற்பயிற்சிகள் செய்து தன் சரீரத்தை ஒரு சுகமான நிலையில் (fit Condition) காத்துக்கொள்வான். நாமும் எப்பொழுதும் கர்த்தரின் சமூகத்தில் காத்திருந்து, ... சிந்தனைகள், மற்றும் தீமையான காரியங்கள் நம் சரீரத்தைக் கெடுக்காதபடி ...காத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

2) வழி : பந்தய சாலையில் ஓடுகிறவனுக்கு ஒரு குறிப்பிட்ட வழி(Track) உண்டு. அதில் மட்டும்தான் அவன் ஓடவேண்டும். நமது விசுவாச ஓட்டத்திலும் நமக்கு ஒரு வழியுண்டு நமது ஆண்டவராகிய இயேசுவே நமது வழி (யோவா. 14:6) அவர் காட்டுகிற வழியில் மட்டும்தான் நாம் ஓடவேண்டும். மனந்திரும்புவது, சரியான முறையில் ஞானஸ்நானம் எடுப்பது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுவது, பரிசுத்தமாக ஜீவிப்பது போன்றக் காரியங்கள்தான் ஆண்டவராகிய இயேசுகாட்டிய வழி, இவைகளில் செல்லாது இன்று அநேகர் பக்க வழியில் (தவறான வழியில்) செல்கிறார்கள். இது ஆபத்தானது, இதினால் பந்தயப் பொருளை (மோட்ச பாக்கியத்தை) அடைய முடியாது. (Short cut will cut short your life) குறுக்குப்பாதை ஆபத்தானது.

3) சோர்வு : பந்தய சாலையில் ஓடுகிற மனிதன் துவக்கத்தில் மிகவும் வேகமாக ஓடி பின் சோர்ந்துபோய் நின்றுவிட்டால் அவனுக்குப் பின்னாக வரும் மனிதன் வேகமாக ஓடி அந்த முதல் மனிதனுக்கு முந்தி ஓடி பந்தயப் பொருளை பெற்றுவிடுவான். அதுபோலவே நமது விசுவாச ஓட்டத்திலும் எந்த ஒரு சூழ்நிலையினாலும் நாம் சோர்ந்து போகாதபடி ஒரே நிலையில் சீராக ஓடப் பார்ப்போம். நாம் கிரீடத்தை பெறப்போகிறவர்கள் என்று அறிந்து நமது வாழ்க்கையைக் குறித்து எப்பொழுதும் விழிப்புடையவர்களாய் ஒரே சீராய் இந்த விசுவாச ஓட்டத்தில் ஓடக்கடவோம்.

IV) வேஷம் போடுவது : நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந் தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் ரோமர் 12:2.

உயிருள்ள மீன் ஆற்று வெள்ளத்திற்கு எதிராக நீச்சல் அடித்துச் செல்லும். செத்த மீன் ஆற்று வெள்ளப்போக்கில் அடித்துச் செல்லப்படும். அதுபோலவே நாமும் ஜீவனுள்ளவர்களாக இந்த உலகத்தார் செய்கிறதான மூடப்பழக்க வழக்கங்களில் உலக ஜனங்கள் செய்வதுபோல் நாமும் செய்யாதபடி, தேவன் நம்மைக்கொண்டு செய்ய விரும்பும் காரியங்களை மட்டும் செய்யப் பார்ப்போம். உலகத்துக்கு ஏற்றபடி வேஷம் போடுவது ஆபத்தாக முடியும். நாம் இந்த உலகில் ஜீவிக்கும் வரையில் நாம் தேவனுக்குப் பிரியமானக் காரியங்களை மட்டும் செய்கிறவர்களாக, நம்முடைய ஜீவியத்தைக் குறித்து மிகவும்ஜாக்கிரதை உடையவர்களாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது.

V) நமக்கு எச்சரிப்பாக கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்கள்:

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சவுல் அரசன் வாழ்க்கையும், புதிய ஏற்பாட்டில் கெட்ட குமாரன் உவமையில் கூறப்பட்டுள்ள மூத்தகுமாரன் சம்பவமும் நமக்கு எச்சரிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வாழ்க்கைப் பற்றி சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) **சவுல் அரசன் வாழ்க்கை :** சவுல் அரசாட்சி செய்வதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டவன். ஆனால் அபிஷேகம் பெறாதவன்போல் கில்போவா மலையில் மடிந்து கிடந்தான். அவனிடத்தில் காணப்பட்ட தவறுகளில் மூன்றை மட்டும் இங்கு எடுதது கூற விரும்புகிறேன்.

i) **தேவசித்தம் செய்ய தவறினான் (1சாமு.15:11) :**

நம் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலையிலும் தேவசித்தத்தை மட்டும் அறிந்து அதன்படி செயல்படவேண்டும்.

ii) **தனக்கென்று ஒரு ஜெய ஸ்தம்பம் நாட்டினான் (1சாமு.15:12)**

நாம் கர்த்தருக்கென்று ஊழியம் செய்தாலும் அல்லது கர்த்தருக்கென்று எந்த காரியம் செய்தாலும் அதைக் கர்த்தரின் நாம மகிமைக்கென்று மட்டும் நாம் செய்யவேண்டுமே ஒழிய நம்முடைய பேருக்காகவும், புகழுக்காகவும் ஒன்றும் செய்யக்கூடாது.

iii) **தனக்கு உன்டான நெருக்கத்தில் கர்த்தரை தேடாமல் அஞ்சனம் பார்கிறவர்களைத் தேடினான் (1நாளா. 10:13)**

நம் வாழ்க்கையில் எவ்வளவுதான் கஷ்டங்கள், துன்பங்கள் வந்தாலும், நம்முடைய எல்லாவித ஆபத்தான சூழ்நிலைகளிலும் நாம் தேவனை மட்டும் நோக்கிப் பார்க்க வேண்டுமே ஒழிய விக்கிரகங்களையோ அல்லது அஞ்சனம் பார்க்கிறவர்களையோ, அல்லது மனித ஒத்தாசையையோ் நாம் தேடக்கூடாது வேதவசனம் இவ்விதம் கூறுகிறது **ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்** சங.50:15. நிச்சயமாக நாம் நமது ஆபத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டால் அவர் நம்மை விடுவிப்பார்.

b) **கெட்ட குமாரன் சம்பவம்** லூக். 15:11-32

கெட்ட குமாரன் உவமையில் மூத்த குமாரன் ஜீவயம் நமக்கு எச்சரிப்பதாக கூறப்பட்டுள்ளது மூத்த குமாரன் தன் வாழ்நாள் முழுவதும் தன் தகப்பன் சித்தம் செய்தவனாகக் காணப்பட்டான். ஆனால் தகப்பன் உண்டாக்கிய விருந்தில் (சந்தோஷத்தில்) பங்கு கொள்ளாதபடி வீட்டிற்க்கு வெளியே நின்றான். அவன் தன் சுய நீதியை நம்பி தன் தகப்பனின் மனதுருக்கத்தைப் பற்றி அறியாதிருந்தான். (லூக்.15:20) நம் தேவனின் மனதுருக்கத்தைப் பற்றி வேதவனம் இவ்விதமாகக் கூறுகிறது. **துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன். அவர் அவன்மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக் கடவன். அவர் மன்னிக்கிறதற்கு தயை பெறுத்திருக்கிறார் ஏசா.55:7.** ஆம் நம் தேவன் தம்மிடம் உண்மையாக மனந்திரும்பி வரும் யாவரையும் மன்னிப்பதற்கு மனதுருகிற தயை பெறுத்த தேவனாய் இருக்கிறார்.

ஆகவே நாம் அவருடைய கிருபையை மட்டும் சார்ந்தவர்களாய் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள விசுவாச ஓட்டத்தில் நம் இரட்சகரை மட்டும் நோக்கினவர்களாய் பொறுமையோடே ஓட கடவோம். நம் சுய நீதியை நம்ப வேண்டாம். மனிதர் யாரையும் பார்க்கவேண்டாம். பார்த்தால் இடறி விழுவோம். கர்த்தருடைய வருகையில் யார் யார் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். யார் யார் கைவிடப்படுவார்கள் என்று நமக்கு தெரியாது. நம்மால் அதை அநுமானிக்கவும் முடியாது. எச்சரிக்கையோடு இருப்போமாக. கர்த்தருக்குரிய பயத்தோடு கர்த்தர் காட்டும் வழியில் ஒவ்வொரு நாளும் முன்னேறிச் செல்ல பார்ப்போம்.

தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனை சபையில் மிகவும் பயப்படத்தக்கவர். தம்மை சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத் தக்கவர் சங். 89:7.

இவ்விதம் ஆதி தேவ ஜனங்களிடத்தில் காணப்பட்ட கர்த்தருக்குப் பயப்படும் பயம் இன்று நமது ஊழியர்கள், விசுவாசிகள் மத்தியில் காணப்படுவது மிகவும் அவசியமாயிருக்கிறது. நாம் எப்படியாவது கர்த்தரின் வருகையில் காணப்படவேண்டும். வாஞ்சையோடும், தாகத்தோடும் செயல்படுவோமானால் பாக்கியவான்களாய் இருப்போம். **நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய். அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் மத்.25:23.**

இவ்வித ஆசீர்வாதமான வார்த்தையைக் கர்த்தர் நம்மைப் பார்த்துக்கூற நாம் தகுதியுடையவர்களாயிருக்கிறோமா? சிறிது நம்மை ஆராய்ந்து பார்ப்போம் நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்வோம்.

அத்தியாயம் 3

கர்த்தருக்குப் பயப்படுதலின் அவசியம்

கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்கு ஏன் அவசியம் என்று இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

I. கர்த்தரை விட்டுத் தூரம் போகாமலிருக்க கர்த்தருக்கு பயப்படும் பயம் நமக்கு அவசியம்.

அவர்கள் என்னைவிட்டு அகன்று (தூரம்) போகாதபடிக்கு எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைப்பேன் எரே.32:40.

நாம் கர்த்தரை விட்டுத் தூரம் போகாமலிருக்க கர்த்தருக்கு பயப்படும் பயத்தை நம் இருதயத்திலே வைப்பதாக தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார். அதாவது நாம் கர்த்தரை விட்டுத் தூரம் போகமலிருக்க வேண்டும் என்றால் கர்த்தருக்கு பயப்படும் பயம் நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது.

கர்த்தரை விட்டு தூரம் போவது என்றால் என்ன? கர்த்தரை விட்டு நாம் எப்படி தூரம் போக முடியும். நாம் கர்த்தரை விட்டுத் தூரம் போனால் நமக்கு என்ன சம்பவிக்கும் என்று பார்ப்போம்.

a) கர்த்தரை விட்டு தூரம்போவது என்றால் என்ன?

கர்த்தரை விட்டுத் தூரம் போவது என்றால் கர்த்தரை விட்டு பிரிந்து போவது அல்லது நாம் இஷ்டப்படி ஜீவிக்க வாஞ்சிப்பது என்பதாகும். பிரிந்து போகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான் நீதி. 18:1. நாம் தேவனோடு இருக்கவேண்டும் என்றால் தேவன் விதித்த கற்பனைகளின்படி ஜீவிக்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

லூக்கா சுவிசேஷம் 15ம் அதிகாரத்தில் கெட்டகுமாரன் உவமையில் இளைய குமாரன் தகப்பனின் ஆஸ்தியில் தனக்கு வரும் பாகத்தைக் கேட்டுவாங்கி அதை சேர்த்துக்கொண்டு தூரதேசம் போனான், (லூக்.15:13) ஏனெனில் தகப்பன் வீட்டில் இருக்கும் பொழுது, தகப்பனின் கட்டளைக்கு, கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிய வேண்டியவனாய் இருக்கிறான். ஆகவே தகப்பன் வீட்டை விட்டு தூரமாய் போய் விட்டால் தன் இஷ்டம்போல், எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி உல்லாசமாக வாழலாம் என்ற எண்ணத்தில் தான் அவன்தன் தகப்பன் வீட்டை விட்டுத் தூரதேசம் போனான் இன்றைய மனிதரின் பெரும்பாலானவர்கள் தேவனுக்கு கீழ்படிந்து, அவருடைய கட்டளைகளுக்கும், கற்பனைக்ளுக்கும் இணங்கி நடப்பதை விரும்பாது தேவனை விட்டுத் தூரம் போனவர்களாக தங்கள் இஷ்டம்போல் ஜீவிக்கிறார்கள்.

தகப்பனை விட்டுப் பிரிந்து துரமாய் போன இளையகுமாரனுக்கு சம்பவித்தது என்ன என்பது நமக்கு ஒரு எச்சரிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. என்பதை நாம் மறக்ககூடாது. இளைய குமாரனுக்கு சம்பவித்தது என்ன? அவன் தன் வாழ்க்கையில் குறைவுபட தொடங்கினான். பன்றிக்கு போடும் தவிட்டையாவது தின்று தன் வயிற்றை நிரப்பலாம் என்று எண்ணியபோது அதுகூட அவனுக்குக் கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு அவன் தன் வாழ்க்கையில் வேதனையை அனுபவிக்கவேண்டி வந்தது. இன்று நாமும்கூட சிலநேரம் நமது வாழ்க்கையில் குறைவுபடத் துவங்கும்பொழுது அதன் காரணத்தை நாம் அறிந்துக்கொள்வதில்லை. வேதம் தெளிவாக கூறுகிறது. சகலமும் பரிபூரணமாயிருக்கையில் நீ மகிழ்ச்சியோடும். களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரை சேவியாமற்போனதினிமித்தம் சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும், தாகத்தோடும் நிர்வாணத்தோடும் கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களை சேவிப்பாய் உபா.47:48. இப்பொழுது நம்மில் அநேகர் அநுபவிக்கும் வேதனைகளுக்கு காரணம் என்ன என்று இப்பொழுது புரிகிறதா?

b) நாம் கர்த்தரை விட்டு எப்பழ தூரம்போக முழயும்?

நாம் தேவனை விட்டு எப்படித் தூரம் போகமுடியும் என்பதை ஒருசில வேதவசனங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்போம்.

i) விக்கிரகத்தை பின்பற்றுவதினால் நாம் தேவனைவிட்டுத் தூரமாய் போகிறோம்.

என்னை விட்டு (கர்த்தரை விட்டு) தூரப்பட்டு மாயையைப் பின்பற்றி (விக்கிரகத்தை பின்பற்றி) வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள் எரே. 2:6.

இங்கு மாயை என்பது விக்கிரகத்தைக் குறிக்கும் என்பதை எரே. 10:8; 18:15 தெளிவுபடுத்துகிறது. கர்த்தரை விட்டுத் தூரமாய்ப் போக மாயையாகிய விக்கிரகத்தை பின்பற்றி வீணராகிறார்கள்.

வீணர் என்றால் யார்? **விக்கிரகங்களை உருவாக்குகிறவர்கள் யாவரும் வீணர் ஏசா. 44:9. வீணான விக்கிரகங்களைப் பின்பற்றி வீணராகிறார்கள் 2இரா.17:15.** மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து வீணர் என்றால் விக்கிரகங்களை உண்டாக்கி, அவைகளை பின்பற்றுகிறவர்கள் என்று மேற்கூறப்பட்டுள்ள வேதவசனங்கள் தெளிவுபடுத்துகிறது. நாம் ஜீவனுள்ள தேவனை சேவியாது மாயையான விக்கிரகங்களை பின்பற்றி வீணராகி அதனால் நாம் தேவனை விட்டுத் தூரமாய்போய், தேவசாபத்தை ஏற்று அதனால் நம் வாழ்க்கையில் பல குறைவுகளை அல்லது வேதனைகளை அநுபவிக்கிறோம் என்றால் இன்றே அவ்வித விக்கிரக ஆராதனையானக் காரியங்களை விட்டுவிட்டு ஜீவனுள்ள தேவனிடம் திரும்வுவோமாக.

விக்கிரகங்களை உண்டுபண்ணுவது பற்றி வேதம் நம்மைத்தெளிவாக எச்சரிக்கிறது. கீழ்க்கொடுக்கப்பட்டிருக்கும், இவ்வசனங்களை கருத்தாய் கவனிப்பது நல்லது.

மேலே வானத்திலும், **கீழே பூமியிலும் பூமியின்கீழ் தண்ணீரிலும் உண்ணடாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொருபத்தையாகிலும், யாதொரு விக்கிரத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் யாத்.20:4,5. நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற** செட்டையுள்ள **யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும்** பிராணியின் **உருவும் பூமியின் கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு** மச்சத்தின் **உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும் உங்கள் கண்களை** வானத்திற்கு **ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின்கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின** வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர, சூரிய, **நட்சத்திரங்களை நோக்கி அவைகளை தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும் உங்கள்**

[illegible] எச்சரிக்கையாயிருங்கள்
[illegible]

விக்கிரக ஆராதனையானது மனிதனை வழி தப்பிப்போகச் செய்து, தேவனை விட்டு தூரமாய்ப் போகும்படிச் செய்துவிடுகிறது என்பதை கீழ்க்கண்ட வசனங்கள் விளக்கும்.

இஸ்ரவேல் வழிதப்பிப் போகையில் என்னை விட்டுத் தூரமாய்ப்போனவர்களும், என்னை விட்டு வழிதப்பி தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் எசே.44:10.

வழிதப்பிப்போவது என்பது வழிதவறுவது அல்லது தேவன் நியமித்த சரியான வழியை விட்டுவிட்டு தவறான வழியில் செல்வது என்பது பொருளாகும். மேலேயுள்ள இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் நியமித்த வழியை விட்டுவிட்டு தவறான வழியிலே போனவர்கள் என்று அந்த வசனத்திலேயே கூறப்பட்டுள்ளது. நரகலான விக்கிரகங்களை பின்பற்றினதினால் அவர்கள் தேவனை விட்டு வழிவிலகி தூரமாய் போனவர்கள் என்றுக் கூறப்பட்டுள்ளது.

நாம் விக்கிரகங்களைப் பின்பற்றுகிறவர்களாக குறிகேட்பது, நாள் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, போன்ற இவ்விதமான பாவச்செயல்களைச் செய்து முன்பு சொல்லப்பட்டதுபோல் விக்கிரகங்களை உண்டாக்கி அவைகளை நாம் நமஸ்கரித்தோமென்றால் நம் தேவன் நமக்கு நியமித்த வழியை விட்டுவிட்டு தவறான வழியைத் தெரிந்துகொண்டு அதிலே செல்கிறவர்களாக தேவ தண்டனைக்கு பாத்திரராய் ஆகிவிடுவோம். எச்சரிக்கையாயிருப்போமாக.

விக்ரகம் என்றால் என்ன? விக்கிரகம் என்பது தேவனுக்குப் பதிலாக நமக்கு உண்டாக்கிக் கொள்கிறதான ஒன்றாகும். இந்த விக்ரகம் நமக்கும் தேவனுக்கு இடையே ஒரு பிரிவினைச் சுவர்போல் நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்து விடுகிறதாயிருக்கிறது. உலக ஜனங்கள் ஆவியாயிருக்கிற தேவனை தங்கள் சிந்தனைக்கு உட்பட்டதும், தங்கள் கண்களால் காணக்கூடியதுமான உருவங்களாக தங்களுக்கென்று உண்டாக்கிக்கொள்கிறார்கள். ஒரு சமயம் விசுவாசிகளாகிய தேவ ஜனங்கள் தாங்கள் எந்தவித படத்தையும் அல்லது உருவசிலைகளையும் எங்கள் வீடுகளில் வைப்பதில்லை என்று கூறலாம். தேவ ஜனங்கள் மத்தியில் காணப்படும் விக்கிரக ஆராதனையான காரியங்களையும் தேவவசனம் தெளிவாகக் கூறுகிறது.

a) பொருளாசையாகிய விக்கிரக ஆராதனை

விக்கிரக ஆராதனைக்காரனாகிய, பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் இராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லை எபே. 5:5.

இங்கு விக்கிரக ஆராதனைக்காரனாகிய பொருளாசைக்காரன் என்பது ஒரு மனுஷன் பொருளாசையுடையவனாய் இருந்தால் அவன் விக்கிரக

ஆராதனைக்காரனாகிறான் என்று அறியலாம். ஆவிக்குரிய தேவ ஜனங்களாகிய நாம் பொருளாசையைக் குறித்து மிகவும் எச்சரிக்கையுடையவர்களா யிருக்கவேண்டும். இந்த உலகத்தில் நாம் இருப்பதினால் நமக்கு உலகப்பிரகாரமாக பல தேவைகள் உண்டாகிறது. ஆனால் இந்த தேவை என்பது ஒரு இச்சையாகமாறி பின் அது நமக்குப் பாவமாக ஆகி நமக்கும், நம் தேவனுக்கும் இடையே விக்கிரகமாக ஆகிவிடக் கூடாது. வேதபுத்தகத்தில் பொருளாசையைக் குறித்து நமக்கு எச்சரிப்பாக கொடுக்கப்பட்டிருக்கும் சில வேதவசனங்களை அறிந்திருப்பது நமக்கு நலமாயிருக்கும்.

பின்பு அவர் (இயேசு) அவர்களை நோக்கி பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவுதிரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல லூக்.12:15. மேலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது எபே.5:3. ஐஸ்வரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள் சங். 62:10. தன் ஐஸ்வரியத்தை நம்புகிறவன் விழுவான் நீதி.11:28. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உலகததிலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அதுபோதுமென்றி ருக்கக்கடவோம். ஐஸ்வரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது, சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள் 1தீமோ.6:6. செல்வம் என்றைக்கும் நிலையாது நீதி.27:24. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை. இதுவும் மாயையே. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதை உடையவர்கள் தங்கள் கண்களினாலே அதைக் காண்பதேயன்றி அவர்களுக்கு பிரயோஜனம் என்ன பிர.5:10,11. தரித்திரத்தையும் ஐஸ்சுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும் என் படியை எனக்கு அளந்து என்னை போஷித்தருளும் நீதி. 30:8,9.

மேற்கூறிய வேத வசனங்களில் இருந்து நாம் எந்த அளவிற்கு பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையுடையவர்களாய் இருக்க வேண்டும்

என்பது தெளிவுற விளங்கும். ஆகாயத்துப் பறவைகளைப் போஷித்து காக்கிற தேவன் நம்மையும் விசேஷித்த பிரகாரமாகவும் அதிசயமாகவும், ஒரு குறையும் இல்லாதபடி நம்மை போஷித்துக் காப்பாற்றி நடத்துவார். உலக ஜனங்களைப்போல நாமும் பணம், பணம் என்று எப்பொழுதும் ஏங்கிக்கொண்டு இருந்தால நாமும் யூதாஸைப்போல நமது இரட்சகரைக் காட்டிக்கொடுக்கிறவர்களாய் ஆகிவிடுவோம். அல்லது பிலேயாமைப் போல் அநீதத்தின் கூலியை விரும்பி வஞ்சகம் செய்ய ஆரம்பித்துவிடுவோம். (யூதா 11; 2 பேது. 2:15) அவர்கள் இருவரின் முடிவும் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, எச்சரிக்கையாயிருப்போமாக.

புசிப்பும் குடிப்பும் உல்லாச வாழ்க்கையுமாகிய விக்கிரக ஆராதனை.

ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி அவர்களில் சிலர் விக்கிரக ஆராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள் 1 கொ. 10:7

மேலே கூறப்பட்டுள்ள வசனத்தில் இருந்து புசிப்பதும், குடிப்பதும், உல்லாசமாக ... கர்த்தரின் பார்வையில் விக்கிரக ஆராதனையாகி விடுகிறது என்பது ... தெரிகிறது. எவ்விதம் திருமணமான ஒரு பெண் தூர இடத்தில் இருக்கும் தன் ... எப்பொழுது வருவான் என்று அவன் சிந்தையாகவே இருப்பதுபோல ... நேசமணவாளனாகிய இயேசுகிறிஸ்து எப்பொழுது தம் மணவாட்டியாகிய ... தம்மோடு சேர்த்துக்கொள்ள வருவார், நான் எப்படியாவது அவர் ... காணப்பட வேண்டும் என்ற அந்த ஒரே வாஞ்சையோடும் ... ஜீவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். உல்லாச வாழ்க்கை, ... களியாட்டுகளை இவைகளை நாம் வெறுத்துத் தள்ள வேண்டும்.

... பந்தயத்தில் ஓட வேண்டிய ஒரு ஓட்டக்காரன் நன்றாக வயிறு நிரம்ப ... ஓட்ட பந்தயத்தில் ஓடி ஜெயம்பெற முடியாது. சரீரம் ஆகாரத்தினால் ... நமது சரீரத்தை குறித்து விழிப்புடைவர்களாய் இருக்க ... அவசியமாகவுள்ளது. இது குறித்து நமக்கு எச்சரிப்பதாகக் ... சில வேத வசனங்களை நாம் அறிந்திருப்பது நல்லது.

உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும், லௌகீக கவலையினாலும் பாரமடையாதபடிக்கும் நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் (கர்த்தருடைய வருகையின் நாள்) உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் லூக்.21:34. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது ரோமர் 14:17. போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப் போடாதே.

ரோமர் 14:20. சுகபோகமாக வாழ்கிறவன் உயிரோடே செத்தவன் 1தீமோ.3:6.

நமது விசுவாச ஜீவியத்தில், நாம் நம்மில் காணப்படுகிற பொருளாசையுள்ள சுபாவம், அல்லது புசிப்பது, குடிப்பது, உல்லாசமாக வாழ்வது போன்ற விக்கிரக ஆராதனையானக் காரியங்கள் நம்முடைய ஜீவியத்தில் சிறிதளவும் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது நல்லது. இந்த கடைசி நாட்களில் ஜீவிக்கிற நாம் நம்முடைய ஜீவியத்தைக் குறித்து மிகவும் விழிப்புடையவர்களாய் இருப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது.

ii) இருதயம் தேவனுக்குத் தூரமாயிருப்பது

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது ஏசா. 29:13; மத்.15:8.

இன்று பெரும்பாலும் கிறிஸ்தவர்களில் இவ்விதமாக தேவனை தங்கள் உதடுகளினால் கனம்பண்ணி துதிக்கிறார்கள். ஆனால் இருதயத்தில் அதாவது தங்கள் ஜீவியத்தில் அல்லது தங்கள் கிரியைகளில் தேவனுக்குத் தூரமாயிருக்கிறார்கள். தேவனுக்குத் தூரமாய் இருக்கிற மனிதனின் இருதயம் எத்தன்மையுடையதாயிருக்கும் என்று வேதவசனம் தெளிவுபடுத்துகிறது. பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும் மாற்.7:20,22. நாம் நம்முடைய இருதயத்தில் எல்லாவிதமான தீமையான காரியங்களையும் செய்கிறவர்களாயிருந்தால், நாம் எவ்வளவுதான் ஆலயத்திற்குப் போகிறவர்களாயிருந்தாலும், காணிக்கைகளை கொடுக்கிறவர்களா யிருந்தாலும், ஆலயக்குழுக்களில் பணிவிடை செய்கிறவர்களாயிருந்தாலும் அதினால் நமக்கு எந்த வித பயனும் இல்லை. ஏனெனில் நமது ஜீவியம் வேத வசனத்திற்கு ஏற்றவாறு இல்லை. இதுபற்றி வேதவசனம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. தீவினையை பின்பற்றுபவர்கள் ...... உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள் சங்.119:150. நம் வாழ்க்கையில் சிறிதளவும் மற்றவர்களுக்குத் தீமை செய்ய எண்ணக் கூடாது. நாம் தீமையை பின்பற்றுகிறவர்களாயிருந்தால் நாம் வேதத்துக்கு தூரமாயிருக்கிறவர் களாயிருப்போம். விழிப்புடன் இருப்போமாக.

2) மற்றவர்கள் தேவனுடைய நாமத்தை நிந்தியாமலிருக்க நமக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் அவசியம்.

நம்முடைய பகைஞராகிய புறஜாதியார் நிந்திக்கிறதினிமித்தம் நீங்கள்

நீங்களும் தேவனுக்குப் பயந்து நடக்க வேண்டாமா? எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்கு பாரமாயிருந்து அவர்கள் கையில் அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல் நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கி வந்தார்கள். அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்களின்மேல் அதிகாரம் செலுத்தினார்கள். நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படி செய்யவில்லை நெகே.5:9,15.

நெகேமியாவின் காலத்தில் இருந்ததான யூதர்கள் ஏழை எளியவர்களாகிய தங்களை உடன்சகோதரர்களிடத்தில் வட்டிக்குப் பணம்கொடுத்தும், அவ்விதம் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்க முடியாதவர்களுடைய நிலங்களை வலுக்கட்டாயமாக அபகரித்தும் அவர்கள் பிள்ளைகளை அடிமை வேலைக்கு உட்படுத்தியும் இவ்விதமான தீமையான காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். ஆகவே இதைக் கேள்விப்பட்ட நெகேமியா மிகவும் துக்கமடைந்து கவலையாய் இவ்விதமான காரியங்கள் தேவ ஜனங்களிடத்தில் நடக்கிறது என்று தேவனை அறியாத புறஜாதியார் அறிந்தால், அதினால் தேவனின் பரிசுத்தமான நாமத்தை அவர்கள் நிந்திப்பார்களே. ஆகவே நாம் அவ்விதமான காரியங்களை செய்யாது கர்த்தருக்குப் பயந்து நடக்கவேண்டும் என்று கூறினான். மேற்கூறப்பட்டுள்ள காரியம் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு எச்சரிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. என்பதை நாம் அறியவேண்டும்.

தேவனை அறியாத புறஜாதியான உலக ஜனங்கள் எந்தவித தீமையான காரியங்களை செய்தாலும், எவ்வித தீமையான முறையில் ஜீவித்தாலும் அதுபற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவன் இவ்விதமான காரியத்தைச் செய்தால், ஐயோ கிறிஸ்தவனா இதைச் செய்தான் என்று ஆச்சரியத்தோடு கேட்பார்கள். இன்றைய கிறிஸ்தவர்களில் அநேகர் மிகவும் கொடியவர்களாகமாறி கொலைகள், விபசாரங்கள் போன்ற கொடிய பாவ செயல்களைச் செய்கிறவர்களாகவும், வழக்குகள், வாதுகள், ஜாதிச் சண்டைகள் போன்றவைகளை உண்டாக்குகிறவர்களாகவும், குடும்ப ஜீவியத்தில், வேலை பார்க்கும் அலுவலகங்களில், வியாபாரம் மற்றும் தொழில் செய்வது போன்றவைகளில் உண்மையற்றவர்களாயும் இருக்கிறார்கள். தங்கள் ஜீவியத்தின் மூலமாய் கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் அவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று பிரசித்தப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் தங்கள் மதத்தைக் குறித்து மாமிச வைராக்கியம் உடையவர்களாய் இருக்கிறார்கள்.

இன்று புறஜாதி மனிதர்களில் அநேகர் கர்த்தரைப் பற்றி அறிந்து, அவரிடம் வரமுடியாதபடி கிறிஸ்தவர்கள் பெரிய இடறலாயிருக்கிறார்கள். எழுதியிருக்கிறபடி தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே ரோமர் 2:2. மேற் கூறப்பட்ட வசனமானது இன்றைய கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்பதை நாம அறிந்திருக்கவேண்டும்.

தாவீது ராஜாவின் வாழ்க்கையில் அவன் எவ்விதம் மற்றவர்கள் தேவனின் நாமத்தை தூஷிக்க காரணமாக இருந்தான், அதினால் அவனுக்கு ஏற்பட்ட நஷ்டம் என்ன என்று கீழ்க்கண்ட வேதவசனம் நமக்கு எச்சரிப்பாக உள்ளது. **நாத்தான் தாவீதை நோக்கி......... இந்த காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால் உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் 2சாமு.12:13,14.** தாவீதின் போர்ச்சேவகர்கள் யுத்தகளத்தில் எதிராளிகளோடு யுத்தம்செய்துகொண்டிருந்தபொழுது, தாவீது தன் வீட்டிலேயே தங்கி, பலகணிவழியாய் பார்த்து, உரியாவின் மனைவியாகிய பத்சேபாளைக் கண்டு அவளோடு தகாதமுறையில் உறவுகொண்டு, அவள் கர்ப்பம் ஆகும்படி செய்தான். தாவீதின் இச்செய்கையில் கர்த்தர் கோபமூண்டவராகி நாத்தான் என்ற தீர்க்கதரிசியின் மூலம் தாவீதை எச்சரித்தார். தாவீதும் தன் பாவத்தை மறைக்காமல் ஒத்துக்கொண்டு, தேவனிடம் மன்னிப்புக்காக மன்றாடினான். தேவன் தாவீதுக்கு மன்னித்தார். ஆனால் தேவனுடைய சத்துருக்கள் தேவனின் நாம்தை தூஷிக்க தாவீது காரணமாயிந்தபடியினால் அவனுக்கு பிறந்தக் குழந்தை மரிக்கும்படிக் கட்டளையிட்டார். நாம் செய்கிறதான பாவமான ஒவ்வொரு தவறான காரியங்களையும் பார்த்து இந்த உலகின் ஜனங்கள் ஐயோ கிறிஸ்தவர்களா இப்படி செய்கிறார்கள் என்று அவர்கள் நமது தேவனின் மகிமையான நாமத்தை தூஷிக்கிறார்கள். ஆகவே நாம் நம்முடைய ஜீவியத்தைக் குறித்து விழிப்புடையவர்களாய் இருப்பது மிகவும் அவசியம். நாம் நமது ஜீவியத்தின் மூலமாக தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட காரணமாயிருந்தால் தேவன் நம் கையின் பிரயாசங்களை அழிப்பார். நாம் வேதவசனத்திற்கு ஏற்றபடி அல்லது தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும்வண்ணமாக ஜீவித்தால் நம் ஜீவியத்தைபார்த்தே தேவனை அறியாதவர்களும், தேவனுக்கு எதிர்த்து நிற்கிறவர்களும் கர்த்தரிடம் நிச்சயமாகத் திரும்புவார்கள்.

3) நாம் பாவஞ் செய்யாமலிருக்க கர்த்தருக்குப் பயம் அவசியம்.

மோசே ஜனங்களை நோக்கி, பயப்படாதிருங்கள், உங்களை சோதிப்பதற்காகவும் நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு தம்மை பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும் தேவன் எழுந்தருளினார் யாத். 20:20.

நாம் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாக பாவஞ் செய்யாமலிருக்க வேண்டும் என்றால் நம்மில் கர்த்தருக்கு பயப்படும் பயம் காணப்படுவது மிகவும் அவசியமாகவுள்ளது. இன்று மனிதரிடையே கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாததினால்தான் துணிகரமாக பாவஞ்செய்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் பாவத்தினால் தங்களுக்கு வரும் தண்டனையைப்பற்றி சிறிதும் சிந்தியாமலிருக்கிறார்கள். பாவத்தைப் பற்றிய சில காரியங்களை நாம் தெளிவாக அறிந்திருப்பது நல்லது.

பாவம் என்றால் என்ன? நியாயபிரமாணத்தை மீறுகிறதே பாவம் 1யோவா. 3:4.

வேதபுத்தகத்தில் பாவம் என்றால் என்ன என்பதற்கு பல காரியங்கள் கூறப்பட்டுள்ளது விசுவாசத்தினால் வராத யாவும் பாவம் ரோமர் 14:23. தீய நோக்கம் பாவம் நீதி.24:9. விபசாரம் செய்கிறவன்..... பாவஞ்செய்கிறான் 1கொரி. 6:18. ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும் யாக். 4:17. இவ்விதமாக பாவத்தைக் குறித்து வேதத்தில் அநேகக்காரியங்கள் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவையெல்லாவற்றையும் சேர்த்து தொகையாக தேவன் நமக்கு விதித்த நியாயபிரமாணத்தை மீறுவதுதான் பாவம் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு சமயம் கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு நியாயபிரமாணத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதே அப்படி என்றால் அவர்கள் பாவத்தைபற்றி எப்படி அறிய முடியும் என்றுக் கேட்கலாம். இதையும் வேதம் தெளிவப படுத்துகிறது. அவர்களுடைய (கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்களுடைய) மனச்சாட்சியும் கூட சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள் ரோமர2:15. கிறிஸ்தவர்களல்லாத மற்றவர்களுடைய மனச்சாட்சியே அவர்களுக்கு நியாயப்பிரமாணமாக இருக்கிறதென்று இதன் மூலம் அறிகிறோம்.

பாவம் எப்படி அல்லது யாரால் இந்த உலகில் வந்தது என்று கேட்கலாம். நமது ஆதித்தகப்பனாகிய ஆதாமின் செய்கையினால் பாவம் இந்த உலகில் பிரவேசித்தது என்று ரோமர் 5:12ல் கூறப்பட்டுள்ளது.

நம்மில பாவம் உண்டாகக் காரணமாகவுள்ள சில காரியங்களை பற்றிப் பார்ப்போம்

அ) இச்சை (Lust): அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான், பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் யாக்.1:14,15. நம்மில் காணப்படும் இச்சையானது பாவக்கிரியைகள் நம்மில் உருவாகக்காரணமாக இருக்கிறது. வேதபுத்தகத்தில் இச்சைப்பற்றி பலக்காரியங்கள் கூறப்பட்டுள்ளது, நான் அவைகள் எல்லாவற்றையும் பற்றி இங்கு எழுதவிரும்பவில்லை. நம்மில் இச்சை உண்டாக முக்கிய காரணமாக இருப்பது நமது பார்வையாகும். ஆகவே நமது பார்வைப்பற்றி வேதபுத்தகம் கூறும் சிலக்காரியங்களைப் பார்ப்போம்.

அப்பொழுது ஸ்திரியானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும்,

பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து புசித்து தன் புருஷனுக்கு கொடுத்தாள். அவனும் புசித்தாள் ஆதி.3:6. அப்பொழுது ஆகான் யோசுவாவுக்குப் பிரதியுத்தரமாக மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன். இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன். கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும் ஐம்பது சேக்கல் நிறைய ஒரு பொன் பாளத்தையும் நான் கண்டு அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன் யோசு.7:20,21. ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று மத்.5:28.

மேற்கூறப்பட்டுள்ளது வேத வசனங்களில் இருந்து நமது கண்ணின் பார்வை எவ்விதம் நம்மில் இச்சையை உண்டுபண்ணி அதினால் நம்மை பாவஞ்செய்ய தூண்டுகிறது என்பதை தெளிவுற விளக்கும். ஏவாள் தேவனால் விலக்கப்பட்ட கனியைப்பார்த்தாள், இச்சித்தாள், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டாள், தானும் புசித்து தன் கணவனுக்கும் கொடுத்தாள். இந்த ஆதாம், ஏவாள் செய்கையானது அவர்கள் தேவனுடைய கற்பனையை மீறி. அதின் மூலமாக உலகத்தில் பாவம் பிரவேசிக்க காரணமாகிவிட்டது.

ஆகான் சாபத்தீடான பொருளைக்கண்டு இச்சித்து அதை தனக்கென்று எடுத்து ஒளித்து வைத்தான். இந்த ஆகானின் செய்கையானது இஸ்ரவேல் ஜனங்களுக்கு தங்கள் பகைஞர் முன்பில் பெருந்தோல்வியையும், பின்னர் ஆகானுக்கே மரணத்தையும் கொண்டு வந்தது. பாவியான ஒருவன் மிகுந்த நன்மைகளைக் கெடுப்பான் பிர.9:18. அதுபோலவே ஆண்டவராகிய இயேசுவும் எவ்விதம் நமது பார்வையானது நம்மை பாவத்திற் குள்ளாக்குகிறது என்று தமது வசனத்தின் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார். நமது பார்வையானது நமது ஜீவியத்தையே இருளடையச் செய்துவிடலாம்.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களில் இருந்து நமது கண்ணின் பார்வையானது நம்மில் இச்சையை உண்டுபண்ணி, தேவனுடைய கற்பனையை மீறுவது பொருளாசை, மாமிச இச்சை ஆகிய பாவங்களை நம்மில் உண்டாக்குகிறது என்பதைத் தெளிவுற அறிந்துகொள்ள முடியும். ஆகவே நமது கண்களின் பார்வையைக்குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக.

II) நமது பேச்சு நமக்கு பாவமாக ஆகலாம்.

அவர்கள் உதடுகளின் பேச்சு அவர்கள் வாயின் பாவமாயிருக்கிறது. சங்.59:12. சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது. நீதி.10:19. ஜனங்கள் மோசேயினிடத்தில் போய் நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய் பேசினதினால் பாவஞ்செய்தோம். எண்.21:7. இவைகள்

இவையாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை யோபு 2:10. உன் மாமிசத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே நீதி.5:6. விரியன் வாம்புக்குட்டிகளே நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்றுத் தீர்க்கப்படுவாய். அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்றுத் தீர்க்கப்படுவாய் மத்.12:34-37.

மேற் கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் பேசும் வார்த்தையானது எவ்விதம் நமக்கு பாவமாயுள்ளது என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். நமது வாயின் பேச்சானது நாம் நமது இருதயத்தில் எவ்வித சிந்தனையைக் கொண்டுள்ளோம் என்பதைக் காட்டுவதாகவுள்ளது. ஆகவே நாம் பேசும் விதத்தைக்குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கு கொடுக்கவேண்டும் என்பதை அறிந்து எச்சரிக்கையாயிருப்போமாக வீணபேச்சுகளிலும், பரியாசப்பேச்சுக்களிலும் மற்றவர்களை தூஷிப்பதிலும் காலம் கடத்த வேண்டாம்.

III) விக்கிரகங்களை உண்டுபண்ணுவது பாவமாகவுள்ளது.

ராஜாவானவன் (யொரொபெயாம்) யோசனைபண்ணி பொன்னினால் இரண்டு கன்று குட்டிகளை உண்டாக்கி ஜனங்களைப் பார்த்து.... இவைகளே உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி ஒன்றை பெத்தேலிலும் ஒன்றை தாணிலும் ஸ்தாபித்தான். இந்த காரியம் பாவமாயிற்று 1இரா.12:28. யூதாவின் ராஜாவாகிய தனக்கு முன்னிருந்த எல்லா ராஜாக்கள் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் கேடாக இந்த அருவருப்புகளைச் செய்து தன் நரகலான விக்ரகங்களால் யூதாவையும் பாவஞ்செய்யப்பண்ணினான் 2இரா 21:11. தங்கள் தேவனாகிய கர்த்ருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் பாவஞ்செய்து அந்நிய தேவர்களுக்குப் பயந்து நடந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்தின ஜாதிகளின் வழிபாடுகளிலும் நடந்துகொண் டிருந்தார்கள் 2இரா.17:7,8. மோசே ஜனங்களை நோக்கி (விக்கிரகங்களை உண்டுபண்ணினதால்) நீங்கள் மகாப்பெரிய பாவம் செய்தீர்கள் யாத்.32:30. இப்பொழுதும் அவர்கள் அதிகமதிகமாய் பாவஞ்செய்து தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சொரூபங்களையும் தங்கள் புத்திகேற்ப விக்கிரகங்களையும் தங்களுக்கு

உண்டுபண்ணுகிறார்கள். இவைகளெல்லாம் தட்டாருடைய வேலை ஓசி.13:2. அப்பொழுது நீங்கள் உங்கள் நரகலான விக்கிரகங்களைச் சேவித்தப் பாவங்களைச் சுமந்து நான் கர்த்தராகிய ஆண்டவர் என்று அறிந்துகொள்வீர்கள் எசே.23:49.

மேற்கூறப்பட்ட வசனங்களிலிருந்து எவ்விதம் விக்கிரகங்களை உண்டுபண்ணுவதும் அவைகளை சேவிப்பதும் நமக்கு பாவமாக ஆகிவிடுகிறது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்தின் முதல் பாகத்திலும் விக்கிரகத்தைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளேன். தேவனை விட்டுத் தூரம்போகிற அல்லது தன் இச்சையின்படி ஜீவிக்கிறதான மனுக்குலம் தங்கள் இஷ்டப்படி தங்கள் புத்திக்கேற்ப தெய்வங்களை உண்டுபண்ணிக்கொள்கிறதான தெய்வங்களின் சுபாவம்தான் அவர்களிலும் இருக்கும் என்பதை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.

இன்றுள்ள மனிதரில் பாவம் உருவாகக் காரணமாகவுள்ள சில பொதுவானக் காரியங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நாம் வாசிக்கிறதான புஸ்தகங்கள், நாம் பழகுகிறதான நண்பர்கள், நமது கண்களினால் காண்கிறதானக் காட்சிகள், விசேஷமாக சினிமாக் காட்சிகள், நாம் விருப்பத்தோடு செவிகொடுத்து கேட்கிறதான பேச்சுக்கள், நமக்குள் உருவாகிற சிந்தனைகள் இவையாவும் நம்மில் பாவம் உருவாக காரணமாக இருக்கலாம். ஆகவே மேற்கூறப்பட்டுள்ள காரியங்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு நமது பார்வையோ, நமது வாயின் பேச்சோ, விக்கிரகங்களை நமஸ்கரிப்பதோ, விக்கிரக ஆராதனையான பொருளாசையோ, மாமிச பெருந்தீனி போன்ற சுபாவங்களோ நம்மில் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

நாம் பாவம் செய்யாதபடி எவ்விதம் நம்மைக் காத்துக்கொள்வது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

a) **நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை (வார்த்தையை) என் இருதயத்தில் வைத்து வைத்தேன் சங்.119:11.**

கர்த்தரின் வார்த்தையை சரியான முறையில் கற்று அவைகளை நம் இருதயத்தில் பதித்துக்கொண்டு அவைகளின் எச்சரிப்புக்கு ஏற்றபடி நம்முடைய ஜீவியத்தைக் காத்துக்கொள்வதின் மூலம் நாம் பாவம் செய்யாமலிருக்க முடியும்.

b) **என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயை கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன். சங்.39:1.**

என் வாய் மீறாதபடிக்கு தீர்மானம் பண்ணினேன் சங்.17:3.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் கூறப்பட்டுள்ள வழி என்பது நாம் அமைத்துக்கொள்ளும் ஜீவியமுறையைக் குறிப்பதாக வுள்ளது.

[illegible] செய்யும் இந்த வியாபாரத் தொழிலில் பொய்சொல்லாமல், [illegible] குறைக்காமல் வியாபாரம் செய்யமுடியாது என்பார்கள். [illegible] இந்த என் உத்தியோகத்தில் பொய் சொல்லாமல், தவறு செய்யாமல் [illegible] என்பார்கள். சிலர் எங்கள் வறுமையின் காரணமாகத்தான் இந்த [illegible] தொழிலை செய்கிறோம் என்பார்கள். இன்னும் சிலர் எனக்கு எங்கும் [illegible]க்கவில்லை, ஆகவேதான் நான் இந்த சாராயக் கடையில் வேலை [illegible]கிறேன் அல்லது சினிமாக் கொட்டகையில் வேலை செய்கிறேன் என்று [illegible] சாக்குப்போக்குச் சொல்வார்கள். ஆனால் சங்கீதக்காரனாகிய [illegible] எவ்வளவு அழகாக மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் என் நாவினால் [illegible]யாதபடிக்கு நான் என் வழிகளைக் (ஜீவிய முறையை) காத்து, [illegible] பயமற்ற உலக ஜனங்கள் நான் எவ்விதம் பேசுகிறேன் என்று [illegible] வார்த்தையைக் கவனித்துக் கொண்டு) எனக்கு முன்பாக [illegible] என் வாயை கடிவாளத்தால் அடக்கிவைபேன் என்கிறார். நாம் [illegible]கிறோம்? மற்றவர்கள் நம்மைக் கவனித்துகொண்டு இருக்கிறார்கள் [illegible]ளவும் சிந்தியாமல் எல்லா வித வார்த்தைகளையும் தாராளமாகப் [illegible]ோம்!

[illegible]கரான உலக ஜனங்கள் நம் ஜீவிய முறையையும், நம் வாயின் [illegible] எப்பொழுதும் கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே நமது [illegible] நாமம் உலக ஜனங்களால் தூஷிக்கப்படாதபடி இருக்க நாம் நமது [illegible] (ஜீவிய முறையையும்) பேசும் முறையையும் குறித்து மிகவும் [illegible]ாடு இருப்பது நமக்கு அவசியமாகவுள்ளது.

[illegible]ான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு [illegible]னுக்கு விரோதமாய் பாவஞ்செய்வது எப்படி என்றான் [illegible].39:9.

[illegible]யோசேப்பு தன் வாலிப வயதிலேகொடிய சோதனைக்குள்ளாகிறான். தன் [illegible]னாகிய போத்திபாரின் மனைவி யோசேப்பின் மீது மோகங்கொண்டு [illegible] தவறான காரியத்துக்கு பலவந்தம்பண்ணுகிறாள், ஆனால் யோசேப்பு [illegible]காடிய சோதனையின் நேரத்திலும் யோசேப்பு தனக்குள் உள்ளதான [illegible] பயப்படும் பயத்தைக் கொண்டு தன்னை முற்றிலுமாய் [illegible]காள்கிறான். அதினால் பெரிய தேவ ஆசீர்வாதத்தையும் பின்னால் [illegible]க்கொள்கிறான்.

நாமும் நமது ஜீவியத்தில் பாவத்திற்கு இடங்கொடாமலிருக்க வேதவசனத்தை [illegible] இருதயத்தில் பதித்துக்கொண்டு, வேதவசனத்திற்கு ஏற்றவாறு நமது ஜீவிய [illegible]யை அமைத்துக்கொண்டு, நமது வழியைப் (ஜீவிய முறையை) பற்றியும், [illegible]பேசும் முறையைப்பற்றியும் நாம் எப்பொழுதும் எச்சரிக்கையா [illegible]மாக. பாவக்கிரியைகளைக் குறித்து சோதனை வரும்பொழுது, நாம் [illegible] இருந்து பாவத்திற்கு இடங்கொடாமல் நம்மைக் காத்துக்கொள்வது [illegible]வசியமாகவுள்ளது.

4) கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ள கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்கு அவசியம்.

உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதபடிக்கு நீ எனக்குப் பயந்து, கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள் என்றேன் செப்பனியா3:7.

இங்கு வாசஸ்தலம் என்பது எதைக்குறிக்கிறது?

வாசஸ்தலம் என்றால் வாசஞ்செய்யும் ஸ்தலம். அல்லது குடியிருக்கும் இடம் என்று சொல்லலாம். அது மனிதன் வாசஞ்செய்யும் ஸ்தலமாகவோ அல்லது தேவன் வாசஞ்செய்யும் ஸ்தலமாகவோ இருக்கலாம். கீழ்க்கண்ட இடங்களை தேவனின் வாசஸ்தலமாக வேதபுத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

a) தேவனுடைய ஆலயமாகிய வாசஸ்தலம். சங்.26:8; அப்.7:46.

b) சீயோன் தேவனின் வாசஸ்தலம். சங். 76:2; சங்.132:13; ஏசா.4:5.

c) பரலோகம் தேவனின் வாசஸ்தலம். ஏசா.63:15; 1இரா.8:30; யோவா.14:2; யூதா 6.

ஆனால் மனுஷர்களிடத்தில் தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. (வெளி.21:3) உபா. 26:11 என்றும், நாம்தான் தேவனுடைய வாசஸ்தலம் (எபே.2:22) என்றும் வேதம் தெளிவுபடுத்துகிறது. அப்படியென்றால் நாம்தான் தேவனுடைய வாசஸ்தலம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதிருக்க என்பது நம்மையேக் குறிப்பாகவுள்ளது. அப்படியென்றால் நாம் எதினால் நிர்மூலமாக்கப் படுவோம்?

1) அந்நிய தேவர்களை சேவிப்பதினால் நிர்மூலமாக்கப்படுவோம்.

நீங்கள் கர்த்தரை விட்டு, அந்நிய தேவர்களை சேவித்தால், அவர் திரும்பி உங்களுக்குத் தீமை செய்து உங்களை நிர்மூலமாக்குவார் என்றான் யோசு.4:20; 1இரா.9:7.

2) பாவம் செய்தால் நிர்மூலமாக்கப்படுவோம்.

இப்பொழுது அவர்கள் அக்கிரமத்தை நினைத்து, அவர்கள் பாவங்களை விசாரிப்பார். .... பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் நான் அவர்களை நிர்மூலமாக்குவேன் என்றார் எரே.14:10,12.

அந்நிய தேவர்களை சேவிப்பது என்பது விக்கிரகங்களை சேவிப்பதாகும். விக்கிரகங்களைப்பற்றி இதற்கு முந்திய பாகங்களில் விபரமாக எழுதியுள்ளேன். கிறிஸ்தவர்களிடத்தில் நாள் பார்ப்பது, குறிகேட்பது, சகுனம் பார்ப்பது உலக ஜனங்களைப்போல் சடங்காச்சாரமான காரியங்களை செய்வது போன்ற எந்தவிதமான விக்கிரக ஆராதனையான காரியங்கள் நம்மிடத்தில் காணப்படும் என்றால் தேவன் நம்மை நிச்சயமாக நிர்மூலமாக்குவார். அதுபோலவே நம்மிடத்தில் பாவக் கிரியைகள் காணப்படும் என்றாலும் தேவன் நம்மை நமது

[illegible] தகுதாக நிர்மூலமாக்கப்படவேண்டியவர்களாகிய இந்த மூன்றிலும் [illegible] கர்த்தருடையதோ என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை புல.3:22. நாம் நிர்மூலமாகாதிருக்க வேண்டுமென்றால் நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக அவரின் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கர்த்தர் யாரைக் கடிந்துகொள்ளுகிறார்? நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் வெளி.3:19. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் எபி 12:6

கர்த்தர் ஏன் மனிதரைக் கடிந்துகொள்ளுகிறார்? அக்கிரமத்தை விட்டுத் திரும்பும்படி அவர்கள் செவியைத்திறந்து கடிந்து கொள்ளுகிறார் யோபு. 36:10. ஆம் ஜனங்கள் தங்கள் பாவஜீவியத்தைவிட்டு தேவனிடமாக திரும்பவேண்டும் என்றுதான் அவர் கடிந்துகொள்ளுகிறார்.

கர்த்தர் எவ்விதம் மனிதரைக் கடிந்துகொள்ளுகிறார்?

a) **வேத வசனத்தின் மூலம் கடிந்துகொள்ளுகிறார்.**

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. .... அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும்............ பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது 2தீமோ.3:16,17.

b) **தமது ஊழியக்காரர் மூலமாக கடிந்துகொள்கிறார்.**

உம்முடைய (கர்த்தருடைய) ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைக் திடசாட்சியாய்க் கடிந்து கொண்டீர் நெகே.9:30.

c) **தேவனே நேரடியாகக் கடிந்துகொள்ளுவது.**

அவர்களைத் திடசாட்சியாய் கடிந்துகொண்டீர் நெகே.9:29.

தன்னுடைய (பிலேயாமினுடைய) அக்கிரமங்களினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான். பேசாத மிருகம் பேசி தீர்க்கதரிசியனின் மதிகேட்டை தடுத்தது 2பேது.2:16.

கர்த்தர் நம்மைத் தமது வேதவசனங்களின் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் ஏவுதலால் பேசுகிற தமது ஊழியக்காரர் மூலமாகவும், சில சமயங்களில் தேவனே நேரிடையாகவும் தேவன் மனிதரைக் கடிந்துகொள்கிறார். கர்த்தர் மனிதரிடம் நேரடியாக கடிந்துகொள்ளும்பொழுது பேச முடியாதக் கழுதையைக் கொண்டு தேவன் பிலேயாமுடன் பேசினதுபோல் கர்த்தர் எந்த ஒருகாரியத்தைக் கொண்டும் கர்த்தர் கடிந்துகொள்ளலாம்.

கர்த்தரின் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்வதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

a) **கடிந்து கொள்ளுதைல கவனித்து நடக்கிறவனே (Regardeth) விவேகி நீதி. 15:5.**

கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடப்பது என்பது கடிந்து கொள்ளுதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஆகும். விவேகி என்பது எச்சரிக்கையாயிருப்பவன் அல்லது கவனாமாயிருப்பவன் என்பதாகும். நாம் கர்த்தரின் கடிந்துகொள்ளுதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு ஏற்றபடி நமது ஜீவியத்தைக் காத்துக்கொள்கிறவர்களாயிருந்தால் நாம் விவேகியாய் ஆவிக்குரிய ஜீவியத்தை குறித்து கவனமாயிறுப்பவர் களாயிருப்போம்.

b) **கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனே கனமடைவான் நீதி.14:18.**

c) **கடிந்துகொள்ளுதல் ஞானத்தைக்கொடுக்கும் நீதி.29:15.**

கர்த்தரின் கடிந்துகொள்ளுதலை நாம் ஏற்றுக்கொள்ள வில்லையென்றால் நமக்கு சம்பவிக்கும் காரியங்கள்.

a) **கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான் நீதி.15:10.**

b) **அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான் நீதி.29:1.**

c) **உம்முடைய ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களை திடசாட்சியாய் கடிந்துகொண்டாலும் அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்களை அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர் நெகே.9:30.**

நாம் தேவனின் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை யென்றால் நமக்கு நாசமும், சாவும், அடுத்தவர்கள் நம்மீது அதிகாரம் செலுத்துவதான அடிமைத்தனமும்தான் நமது பங்காக இருக்கும். எச்சரிக்கையாயிருக்போமாக.

இன்றைய உலக ஜனங்கள் கர்த்தர் தமது வேதவசனங்களின் மூலமாகவும், நேரடியாகவும் (பஞ்சம், வறட்சி, கடல் கொந்தளிப்பு, பூமியதிர்ச்சி மற்றும் புயல் போன்ற காரியங்கள் மூலமாகவும்) ஜனங்களை கடிந்துகொண்டு வந்தும், ஜனங்கள் அதை அசட்டைசெய்து கொடிய பாவங்களிலும் அக்கிரமங்களிலும் ஜீவிக்கிறார்கள். கர்த்தர் அவர்களை வேறுவிதமாக கடிந்துகொள்ள வெகு சீக்கிரம் வரப்போகிறார் என்பதை கீழ்க்கண்ட வேதவசனம் தெளிவுப்படுத்தும். இதோ தம்முடைய கோபத்தை **உக்கிரமாகவும், தம்முடைய** கடிந்துகொள்ளுதலை **அக்கினி ஜீவாலையாகவும் செலுத்தக் கர்த்தர்** அக்கினியோடும் வருவார். **பெருங்காற்றைப் போன்ற தம்முடைய** இரதங்களோடும் வருவார் **ஏசா.66:15.**

கர்த்தர் தமது அக்னியால் இந்த உலகத்தை கடிந்துகொள்ள வரப்போகிறார். ஐயோ! இந்த உலகம் விழிப்படையுமா? இன்றுதானே கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு கர்த்தரிடமாகத் திரும்புவோமா?

இன்று விசுவாசிகளில் அநேகர் கர்த்தர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோய்விடுகிறார்கள். வேத வசனம் என்ன கூறுகிறது. அன்றியும் என்மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே எபி.12:5. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாய் இருப்பதினால்தான் கர்த்தர் நம்மை கடிந்துகொள்ளுகிறார். பாவத்தில் மாளும் உலக ஜனங்களையும் தேவன் நேசிப்பதினால்தான் கர்த்தர் இந்நாட்களில் அவர்களையும் கடிந்துகொண்டு வருகிறார். அவரை அசட்டைசெய்யும் உலக ஜனங்களோடு நாமும் அழியாதபடி இருக்க நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு அவரின் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு அவரிடமாகத் திரும்புவோமாக.

5) கர்த்தருக்கு செவிகொடுக்க கர்த்தருக்கு பயப்படும் பயம் வேண்டும்.

ஜனத்தில் மீதியான அனைவரும் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கும் தங்கள் தேவனாகிய கர்த்தர் அனுப்பின ஆகாய் என்னும் தீர்க்கதரிசியினுடைய வார்த்தைக்கும் செவிகொடுத்தார்கள். ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகப் பயந்திருந்தார்கள் ஆகாய் 1:12.

இங்கு கர்த்தர் தமது ஊழியக்காரனாகிய ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களோடு பேசியபொழுது ஜனங்கள் கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுத்தார்கள். ஏனெனில் அவர்கள் கர்த்தருக்குப் பயந்தவர்களாய் காணப்பட்டார்கள். ஆகவே கர்த்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டார்கள். நாமும் கர்த்தருக்குப் பயப்படுகிற ஜனங்களாக இருந்தால்தான் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து செயல்பட முடியும். ஆகவே நாம் செவிகொடுப்பது பற்றியதான சிலகாரியங்களை இந்தப்பகுதியில் அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

கர்த்தருக்கு செவிகொடுப்பது என்றால் என்ன? கர்த்தருக்கு நமது செவியைக்கொடுப்பது அல்லது கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு அதின்படி செய்வது அர்த்தமாகும. ஏசா.28:23; எரே.7:23; யோவா.10:27. இன்று நாம் பல சத்தங்களை விரும்பி கேட்கிறோம் தெருக்களில் நாம் நடந்துசெல்லும்பொழுது நாம விரும்பவில்லையென்றாலுங்கூட ஒலிபெருக்கிகளில் இருந்துவரும் சினிமாப்பாட்டுகள் நமது செவிகளைத் துளைத்துக்கொண்டு செல்கின்றன. மனிதர்கள் பெரும்பாலும் பேசுகிறதான மிகவும் அசுத்தமான வார்த்தைகளையும் மற்றும் இவைபோன்றவைகளையும் நாம் விரும்பவில்லை என்றாலும் அவைகளையும் கேட்கவேண்டியதாகவுள்ளது. சில நேரங்களில் நாம் நமது நண்பர்களோடு அல்லது மற்றவர்களோடு செல்லும்பொழுது அவர்கள் பேசும்

அசுத்தமான வார்த்தைகள், பரியாசச்சொற்களை நாம் நம்மை அறியாமலே பிரியத்தோடு கேட்க ஆரம்பித்துவிடுகிறோம். ஆனால் இவைகள் எல்லாம் நமது ஜீவியத்தை கறைபடுத்தக்கூடியவை என்பதை எண்ணுவதேயில்லை. ஆகவே, நாம் யாருக்கு செவிகொடுக்கவேண்டும் எவ்விதம் செவிகொடுக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

A) யாருக்கு அல்லது எதற்கு செவிகொடுப்பது?

1. தேவனுக்கு செவிகொடுக்க வேண்டும் அப்.4:19.
2. கர்த்தராகிய இயேசுவுக்கு செவிகொடுக்க வேண்டும் அப்.7:37.
3. தேவ ஊழியக்காரருக்கு செவிகொடுக்கவேண்டும் தானி.9:6; சக.1:4.

B) ஏன் செவிகொடுக்க வேண்டும்?

1. கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ள அதன்படி செய்ய கர்த்தருக்கு செவிகொடுக்க வேண்டும் உபா.13:17; 28:14,45; உபா.30:8; 2இரா.22:13.
2. கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்ய கர்த்தருக்கு செவிகொடுக்கவேண்டும் உபா.13:17.
3. கர்த்தரின் வழிகளில் நடக்க கர்த்தருக்கு செவிகொடுக்கவேண்டும் சங்.81:13.
4. நாம் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள கர்த்தருக்கு செவிகொடுக்க வேண்டும் நீதி. 23:19.
5. புத்தியை ஏற்றுக்கொள்ள கர்த்தருக்கு செவிகொடுக்கவேண்டும் எரே.32:33

C) கர்த்தருக்கு செவிகொடுக்கிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்கள்.

1. கர்த்தர் நமக்கு நன்மையுண்டாகும்படி சந்தோஷமாயிருப்பார். உபா.30:10; ஏசா.1:19; 55:2; எரே.38:10.
2. கர்த்தர் நம்மை மேன்மைபடுத்துவார் உபா.28:12,14.
3. விக்கினமின்றி வாசம்பண்ணி ஆபத்திற்குப்பயப்படாமல் அமைதியாயிருப்பான் நீதி.1:33.
4. ஞானமடைந்து இருதயத்தை நல்வழியில் நடத்துவான் நீதி.23:19.

D) கர்த்தருக்கு செவிகொடாதவர்கள் செய்யும் காரியங்கள்.

1. கர்த்தருக்கு செவி கொடாதவர்கள் அவரை விரும்பமாட்டார்கள் சங்.81:11.

- கர்த்தருக்கு செவிகொடாதவர்கள் நியாயபிரமாணத்தை (வேதத்தை) வெறுப்பார்கள் எரே. 6:19.
- கர்த்தருக்கு செவி கொடாதவர்கள் பாவம் செய்வார்கள் [illegible] 9:29.
- கர்த்தருக்கு செவிகொடாதவர்கள் கர்த்தரின் காரியங்களை விசுவாசிக்கமாட்டார்கள் 2இரா.17:13,14.
- கர்த்தருக்கு செவிகொடாதவர்கள் கர்த்தரை பரீட்சை பார்ப்பார்கள் எண் 14:22.
- கர்த்தருக்கு செவிகொடாதவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுப்பார்கள் சங்.106:25.
- கர்த்தருக்கு செவிகொடாதவர்கள்(பாவத்தின்) அடிமைத்தனத்திற்கு திரும்பும்படி கலகம் பண்ணுவார்கள் நெகே.9:16; எரே.43:7; 44:16,17.

11) கர்த்தருக்கு செவிகொடாதவர்களுக்கு வரும் தண்டனைகள்.

1. கர்த்தருக்கு செவிகொடாதவர்களுக்கு கர்த்தரின் சாபம் வரும் உபா.28:15,41.
2. கர்த்தருக்கு செவிகொடாதவர்கள் குறைவுபடுவார்கள் உபா.28:62,63; லேவி.26:14,22.
3. கர்த்தருக்கு செவிகொடாதவர்களை கர்த்தர் அந்நியரின் கையில் ஒப்புக்கொடுப்பார் நெகே.9:30; எரே.29:19; ஓசி.9:17.
4. கர்த்தருக்கு செவிகொடாதவர்களுக்கு கர்த்தர் தீங்கை அனுப்புவார் எரே.6:19,23,32; 40:3.
5. கர்த்தருக்கு செவிகொடாதவர்களுக்கு விரோதமாக கர்த்தரின் கோபம் பற்றி எரியும் 2இரா.22:13ங 2நாளா.24:19.
6. கர்த்தரின் வார்த்தைக்கு செவிகொடாதவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு உபா.18:19; எபி.12:25.

[illegible]களில் நாம் அனுபவிக்கிறதான பல தீமையான காரியங்களுக்கு [illegible] காரணம் என்பதை அநேகர் உணர்வதில்லை. நாம் கர்த்தரின் சித்தத்திற்கு செவிகொடாததினால் பல பாவமான காரியங்களை துணிந்துசெய்கிறோம். நாம் துணிந்துசெய்கிற பாவமானது நமக்கு எல்லாவிதமான சாபங்களையும், அதின் மூலம் வேதனைகளையும் நமக்கு கொண்டுவருகிறது என்பதை எவரும் சிந்திப்பதில்லை. நாம் சரியானமுறையில் கர்த்தருக்கு செவிகொடுத்து அதின்படி செய்கிறவர்களாயிருந்தால் முன் சொல்லப்பட்டதுபோல கர்த்தருக்கு செவிகொடுக்கிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று இவ்வுலகில் சந்தோஷமாக ஜீவியம் செய்யலாமே.

இந்நாட்களில் நாம் கர்த்தருக்கு செவிகொடுக்க கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை உடையவர்களாக ஜீவித்தால் பாக்கியவான்களாயிருப்போம்.

6) கர்த்தரின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் தேவை

அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணபடாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம் எபி.4:1.

a) மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சொல்லப்பட்டுள்ள இளைப்பாறுதல் என்பது நாம் சரீரப்பிரகாரமாக வேலை செய்து ஓய்ந்து இருக்கும் இளைப்பாறுதலைக் குறிப்பது அல்ல.

b) இந்த இளைப்பாறுதலை நமக்குரிய செல்வத்தினால் பெற்றுக்கொள்ள முடியாது. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள வேதவசனம் இதை நன்கு விளக்கும். **ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்து குடித்து பூரிப்பாயிரு என்று என் அத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி மதிகேடனே உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும் அப்பொழுது நீ சேர்த்தவைகள் யாருடையதாகும். என்றார் லூக்.12:19,20.**

அப்டியென்றால் இந்த இளைப்பாறுதல் எதைக்குறிக்கிறது? **அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல தானும் ஓய்ந்திருப்பான் எபே.4:10.**

நாம் இந்த உலகில் அனுபவிக்கிறதான பாடுகள், பிரயாசங்கள், உபத்திரவங்கள் இன்னும் இவ்விதமான எல்லா போராட்டங்களையும் முடித்து, கர்த்தரோடு நித்திய நித்தியமாக இருப்பதைத்தான் ஓய்ந்து இருப்பது என்று கூறப்பட்டுள்ளது. இந்த இளைப்பாறுதல் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப்பெற்று, நாற்பது வருஷம் வனாந்திர யாத்திரையை முடித்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் பிரவேசித்த அனுபவத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற பஸ்கா ஆடு அடிக்கப்பட்டு கதவு நிலைகளில் பஸ்கா ஆட்டின் இரத்தம் பூசப்படுவது அவசியமாக இருந்தது. பின்னர் செங்கடலை கடந்து நாற்பது வருஷம் வனாந்திர யாத்திரையை முடித்து, யோர்தானைக் கடந்து பின்னர்தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானை அடைந்தனர். ஆனால் இதில் நாம் அறியவேண்டியதான மிகமுக்கியமான காரியம் யாதெனில் எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறுலட்சம்

...களில் இரண்டுபேர் மட்டுமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் பிரவேசித்தனர் மற்றவர்கள் அந்த வாக்குத்தத்தத்தை பெற்றிருந்தும் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போயிற்று. ஏன் அவர்களால் கூமாமற்போயிற்று என்பதற்கும காரணம் தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ளது. தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் அவர்கள் பின்வாங்கிப் போனவர்களாய் காணப்பட்டதினால்தான் அவர்களால் கூடாமற்போயிற்று என்பதை தெரிந்துகொள்ளலாம்.

இஸ்ரவேல் ஜனங்கள் பின்வாங்கிப் போனவர்களாக காணப்பட்டார்கள் ... பொருள் என்ன என்பதை விபரமாக அறிந்துகொள்ளப்பார்ப்போம். ...புத்தகத்தில் பின்வாங்கிப்போவது என்பது ஆங்கில வேதபுத்தகத்தில் ... of என்று போடப்பட்டுள்ளது. இதில் சரியான அர்த்தம் இஸ்ரவேல் ... தேவன் எதிர்பார்த்த ஒரு நிலையிலிருந்து குறைவுள்ளவர்களாக ...பட்டார்கள் என்பதாகும். அவர்கள் எந்த காரியத்தில் குறைவுள்ளவர்களாக ...பட்டார்கள் என்று அதே அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. ...வாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போனார்கள் ... உபா.1:33; எண்.14:11; சங்.78:21. தேவன் அவர்களிடத்தில் ...பார்த்ததான விசுவாசம் அவர்களில் காணப்படவில்லை. நம்முடைய ...மாய ஜீவியத்திலும் விசுவாசம் நம்மில் காணப்படவில்லையென்றால் ... தேவ ஆசீர்வாதங்களை நாமும் இழக்க வேண்டிவரும். அல்லது ...மையை நம்மில் வெளிப்பட நமது அவிசுவாசம் தடையாக இருக்கலாம். ... கீழ்க்கண்ட வேதவசனங்கள் தெளிவுற விளக்கும். கர்த்தர் ...யையும், ஆரோனையும் நோக்கி...... நீங்கள் என்னை ...சியாமல் போனபடியினால் இந்த சபையாருக்கு நான் கொடுத்த ...துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார். ...20:12. அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் (இயேசு) ... அநேக அற்புதங்களைச் செய்யவில்லை மத்.13:58.

...மோசே கர்த்தருக்காகப் பல பெரியகாரியங்களைச் செய்தவர். சீனாய் ...யில் கர்த்தரின் சமூகத்தில் காத்திருந்து தேவ கற்பனைகளைப்பெற்று ...ளுக்கு அளித்தவர். ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் தவறினதினாலே ...தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியமான ...வதை இழந்துவிட்டார். ஆகவே நாம் எந்த அளவுக்கு ஆவிக்குரிய ...வியத்தில் வளர்ந்தவர்களாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு நாம் நமது ...சுவாசத்தைக் காத்துக்கொள்ள விழிப்போடு இருப்பது மிகவும் அவசியம். ...பால கர்த்தராகிய இயேசுவும் வியாதிகளை குணமாக்க. ...ங்களைச்செய்ய வல்லமையுடைவராக இருந்தாலும் ஜனங்களின் ...வாசத்தினால் அவரால் அநேக அற்புதங்களைச் செய்யமுடியவில்லை ...ப்பட்டுள்ளது.

நமது ஜீவியத்தில் அவிசுவாசம் உடையவர்களாக இருப்போம் என்றால் தேவவல்லமை நம்மில் வெளிப்பட முடியாதபடி நாம் தடையாக இருப்போம். நமது விசுவாச வாழ்க்கையில் ஒரு வளர்ச்சியற்றவர்களாக ஆகி சோதனைப் புயல் வீசும்போது நமது விசுவாசக்கப்பல் அங்கும் இங்கும் அலைய ஆரம்பிக்கும். ஒரு சமயம் நாம் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் விழுந்துபோகவேண்டிய நிலைவரலாம்.

இஸ்ரவேல் ஜனங்கள் அவிசுவாசம் உடையவர்களாக இருந்ததினாலே அவர்களில் தேவன் விரும்பாத சில பாவசுபாவங்கள் காணப்பட்டது. அந்த காரியங்கள் தேவனை மிகவும் கோபப்படுத்தினதாகவும் அதினால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் பிரவேசிப்பதில்லையென்று தேவன் ஆணையிட்டார் என்றும் **சங்.95:11ல்** கூறப்பட்டுள்ளது. அவர்களில் காணப்பட்ட பாவமான காரியங்களில் சிலவற்றைபற்றி அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

அவர்களில் காணப்பட்ட பாவமான காரியங்கள் :

a) கீழ்ப்பழயாமை : பின்னும் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக்குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் குறித்தல்லவா **எபி.3:18; 4:6,11.** இங்கு கீழ்ப்படியாதவர்கள். என்ற பதத்திற்கு ஆங்கில வேத புத்தகத்தில் அவிசுவாசம் (Unbelieve) என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் ஒருவன் தேவ காரியங்களைக்குறித்து அவிசுவாசம் உடையவனாய் இருந்தால் நிச்சயமாய் அவன் தேவனுடைய காரியங்களுக்கு கீழ்ப்படியமாட்டான். விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைப்பற்றி வேதம் இவ்விதம் கூறுகிறது. விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்திரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். **எபி.11:8.** நம்மில் விசுவாசம் இருந்தால்தான் நாம் கர்த்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய முடியும்.

b) கர்த்தருடைய வழியை அறியாதபழ வழுவிப்போகிற இருதயமுடையவர்கள் :

அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும் என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி. **சங்.95:10.**

இஸ்ரவேல் ஜனங்கள் வழுவிப்போகிற இருதயமுடைவர்களாய் இருந்ததினால் கர்த்தரின் வழியை அறியாதவர்களாய் இருந்தார்கள். இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் இவ்விதமாக வழுகிப்போகிற அல்லது மளுக்குப்போடுகிற கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு எவ்வளவுதான் வேதத்தின் மகத்துவங்களை விளக்கிச் சொன்னாலும். அவர்கள் எல்லாவற்றிற்கும் ஆம், ஆம் என்று சொல்வார்களே ஒழிய, தங்களுக்கு கூறப்பட்டதான வேத

சத்தியங்களுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க மாட்டார்கள். இவ்விதமாக அவர்கள் ஒருநாளும் கர்த்தரின் வழியில் வரமுடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரத்தின் வழியாக, வனாந்தரத்தின் வழியாக தேவனால் நடத்தப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களின் வழுவிப்போகிற நிலையினால் தங்களை கர்த்தரின் நடத்துதலுக்கு ஒப்புக்கொடுக்க முடியாமல் கர்த்தரின் வழியை அறிந்துகொள்ள மனதற்றவர்களாய், முறுமுறுத்தும், எதிர்த்தும், நின்றார்கள். நாம் அவர்களைப்போல அல்லாது கர்த்தரின் நடத்துதலுக்கு நம்மை பூரணமாய் ஒப்புக்கொடுத்தவர்களாய், அவர்காட்டும் வழியில் முழு இருதயத்தோடு செல்லப்பார்ப்போம்.

(ஈ) பொறாமை : அவர்கள் (இஸ்ரவேல் ஜனங்கள்) மோசேயின் மேலும் கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோன்மேலும் பொறாமை கொண்டார்கள். (சங்.106:16)

மோசேயும் ஆரோனும் தங்கள் மீது அதிகாரம் செலுத்துவதை விரும்பாத இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயும் ஆரோனும் கர்த்தரால் பெற்ற மேன்மையான நிலையைக்கண்டு பொறாமை கொண்டார்கள். அதினால் அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக பேச ஆரம்பித்தார்கள். இந்த செய்கையினால் கோராகின் கூட்டத்தாருக்கு ஏற்பட்ட அழிவைப்பற்றி எண்ணாகமம் 16ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது நமது சிந்தனைக்குரியதாகும் கிறிஸ்தவ ஜீவியத்தில் பொறாமையானது நமது ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துப்போடுகிறதாகவுள்ளது. பொறாமையோ எலும்புருக்கி நீதி.14:30. பொறாமையோவென்றால் அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார் நீதி.27:4. என்று கூறப்பட்டுள்ளது. ஆவிக்குரியவரங்களைப் பெற்ற ஊழியக்காரர்களைப் பற்றியோ அல்லது ஆவிக்குரிய நிலையில் நம்மைவிட உயரிய நிலையில் உள்ள விசுவாசிகளைக் குறித்தோ நாம் பொறாமை கொள்ள வேண்டாம். ஏற்றக் காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் 1பேது.5:6. என்ற தேவ ஆலோசனைக்கேற்றபடி கர்த்தரின் கைக்குள் அடங்கியிருப்போமாக.

(உ) கர்த்தரை மறப்பது : தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள் சங். 106:13. அவருடைய செயல்களையும், அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள் சங்.78:11.

நாம் ஒரு காரியத்தை மறப்பது என்றால் நாம் செய்யவேண்டியதான அந்தகாரியத்தை செய்யாமல் விட்டுவிட்டோம் அல்லது செய்யவேண்டிய அந்த காரியத்துக்குப் பதிலாக வேறொரு காரியத்தை செய்துவிட்டோம் என்பதுதான் பொருள். அதுபோலவே இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரையும், கர்த்தரின் அதிசய செயல்களையும் மறந்து வேறு காரியங்களை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள் என்பதுதான் பொருள். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை மறந்து செய்த

காரியங்கள் என்ன என்று பார்ப்போம்.

a) இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் இரட்சிப்பின் தேவனை மறந்து விக்கிரகங்களை நமஸ்கரித்தார்கள். சங்.106:19,28,35,36.

அன்றைய இஸ்ரவேல் ஜனங்களைப்போல் இன்றைய கிறிஸ்தவர்களிலும் அனேகர் கர்த்தரின் அதிசயமான, அற்புதமான நடத்துதல்களை மறந்தவர்களாய் அல்லது அவைகள்மீது நம்பிக்கையில்லாதவர்களாய் நாள்பார்ப்பது, குறிகேட்பது, இரகசியமாய் விக்கிரகங்களை பின்பற்றுவது போன்ற விக்கிரக ஆராதனையானக் காரியங்களை செய்கிறார்கள்.

b) கர்த்தரை மறந்து இச்சையினால் கர்த்தரை பரிட்சை பார்த்தார்கள்.

தங்கள் இச்சைகேற்ற போஜனத்தைக் கேட்டு தங்கள் இருதயத்தில் தேவனை பரிட்சை பார்த்தார்கள் சங். 78:18. அவர்கள் எவ்விதம் தேவனை பரிட்சைபார்த்தார்கள் என்று அதற்கு பின்னுள்ள வேதவனங்கள் விளக்குகிறது. அவர்கள் தேவனுக்கு விரோதமாய் பேசி, தேவன் வனாந்திரத்திலே போஜனப்பந்தியை ஆயத்தப்படுத்தக் கூடுமோ? ...... தம்முடைய ஜனத்திற்கு மாம்சத்தையும் ஆயத்தப்படுத்துவாரோ? என்றார்கள் சங்.78:19,20. தூதர்களின் அப்பத்தை மனிதன் சாப்பிட்டான், அவர்களுக்கு ஆகாரத்தை பூரணமாய் அனுப்பினார்...... மாம்சத்தை தூளத்தனையாயும் சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை மணலத்தனையாயும் வருஷிக்கப்பண்ணினார் சங்.78:25,27. அவர்கள் வனாந்திரத்தில் இச்சையுள்ளவர்களாகி அவாந்திர வெளியிலே தேவனைப் பரீட்சை பார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார் சங்.106:14,16.

இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் எவ்விதம் அதிசயமாகவும், அற்புதமாகவும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து செங்கடலைக் கடக்கச்செய்து மாராவின் தண்ணீரை மதுரமாக்கி இவ்விதமாக கர்த்தர் தங்களுக்கு செய்த எல்லா காரியங்களையும் மறந்து அவர்கள் தங்கள் இச்சைகேற்ற போஜனத்தையும் மாமிசத்தையும் கேட்டார்கள். கர்த்தர் அவர்கள் கேட்டதைக் கொடுத்தார். ஆனால் அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார் சங். 106:15. நமது தேவைகளுக்காக கேட்பது சரிதான் என்றாலும், இச்சையோடு கேட்பது பாவமாகும். எச்சரிக்கையாயிருப்போமாக!

கர்த்தரை மறந்து கர்த்தர் விரும்பாத காரியங்களைச் செய்கிறவர்களுக்கு வரும் தேவ தண்டனைகளையும் வேத புத்தகத்தின் மூலம் அறிந்து தேவ தண்டனையினின்று நம்மை நாம் காத்துக்கெள்வது நமக்கு நன்மையாக இருக்கும்.

...லை பிரயாசங்கள் சபிக்கப்பட்டதாக இருக்கும். ஏசா.17:10,11.

...து ...பிக்கை விருதாவாகும். யோபு 8:13.

...மையத்தனத்தின் அனுபவம். மற்றவர் நம்மீது அதிகாரம் ...செலுத்துவார்கள். 1சாமு.12:9; எரே.12:25; எசே.22:12-15.

...தேவ தண்டனைகள். சங்.50:22; ஓசி.8:14, 2:13.

...நரகத்தில் தள்ளப்படுவது. சங். 9:17.

...ஒரு மனிதன் எவ்வளவுதான் பிரயாசப்பட்டாலும் தங்கள் கையின் ...கள் சபிக்கப்பட்டதாகவே இருப்பதின் காரணத்தை சிறிது ...ங்கால் எவ்வளவு நலமாயிருக்கும் கர்த்தரை மறப்பது குறித்து ...ரிக்கையாயிருப்போமாக.

...ண்ணுவது : அவருடைய வார்த்தையை விசுவாசியாமல், ...டங்க தேசத்தை அசட்டை பண்ணினார்கள். சங். 106:24.

...ங்களுக்காக ஆயத்தம் செய்து வைத்திருந்த தேசத்தின் ...மையைபற்றி அவர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. ...எவ்வளவு சிறப்பானது என்று கீழ்க்கண்ட வேதவசனம் நன்கு ... அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ... ஊற்றுகளும், ஏரிகளுமுள்ள தேசம், அது கோதுமையும், ...மையும், திராட்சச் செடிகளும் அத்திமரங்களும், ...டிகளுமுள்ள தேசம். அது ஒலிவமரங்களும், எண்ணெயும், ...ன தேசம். அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும், ...உனக்குக் குறைவுபடாததுமான தேசம். அது கல்லுகள் ...ிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான ... பா. 8:7-9.

...ன் நம்மை ஆசீர்வதிக்கும்பொழுது பூரணமாக எந்தவித ...மில்லாதபடி ஆசீர்வதிப்பார். நாம் அவருடைய வாக்குத்தத்தமான ...ைதகளை உறுதியாய் பிடித்துக்கொண்டு நமது விசுவாசத்தை அறிக்கை ...களாக இருக்கவேண்டும்.

...டை செய்வது (Despise) என்ற வார்த்தைக்கு ஆங்கில வேதபுத்தகத்தில் ...படுத்தப்பட்டுள்ள டிஸ்ப்டைஸ் Despise என்ற வார்த்தையின் பொருள் ...றவது அல்லது நிந்திப்பது என்பதாகும். இன்று கிறிஸ்தவர்களில் அநேகர் ...பிக்குரிய மேலான சத்தியங்களாகிய மனந்திரும்புதல், ஞானஸ்நானம், ...த்தஆவியின் அபிஷேகம் பெறுதல், தேய்வீக சுகம், பரிசுத்தமான ஜீவி...தை வாஞ்சிப்பது போன்ற காரியங்களை இகழ்ந்து பேசுவதினாலே தேவன் ...நக்காக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் பரமக்கானானை சுதந்தரிக்கத் ...வர்களாகி விடுகிறார்கள். இன்றைய விசுவாசிகளில் பலரும் தேவ...விரும்புகிறதான பரிசுத்த ஜீவியத்தை நாடாது. உலகத்தாரைப்போல் உலக

வேஷங்களை உடையவர்களாக ஜீவிக்கிறார்கள். **பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை** எபி.12:14. என்ற வசனத்தை விசுவாசிகள் எப்போதும் ஞாபகத்தில் கொள்வது சாலச்சிறந்தது.

தேவன் நமக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் இளைப்பாறுதலை (பரலோக பாக்கியத்தை) அனுபவிக்க நாம் தகுதியுள்ளவர்களாகும்படி நமது விசுவாசத்தைக் காத்துக்கொள்ள நாம் நமது ஜீவியத்தைக் குறித்து பயம் உடையவர்களாக இருப்பது மிகவும் அவசியம். கர்த்தருக்குரிய பயம் நம்மில் காணப்படும் என்றால் இன்று அநேகர் விசுவாசத்தை விலைபேசுவது அல்லது அதை விட்டு பின்வாங்குவது போல நாம் செய்யமாட்டோம். ஆண்டவராகிய இயேசுசொன்னதுபோல் **ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக்காண்பாரோ என்றார்** லூக்.18:8. இன்று அநேகர் விசுவாசத்தைவிட்டு பின்வாங்குகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நாம் அவ்விதம் இல்லாமல் அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதுபோல் **நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிபட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக** கொலோ. 2:7. நாம் விசுவாசத்தில் பெருகுகிற அல்லது வளர்கிற அனுபவத்தில் இருப்பது மிகவும் அவசியம். அதற்கு நமது வாழ்க்கையில் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கவும், கர்த்தருடைய எல்லாவார்த்தைகளையும் பூரணமாக விசுவாசிப்பதும் மிகவும் அவசியமாகவுள்ளது. செய்வோமாக!

7) பரிசுத்தத்தில் பூரணமாக கர்த்தருக்கு பயப்படும் பயம் தேவை.

பிரியமானவர்களே மாமிசத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் 2கொரி.7:1.

பரிசுத்தத்தைக் குறித்து சில பொதுவான காரியங்களை இந்த பாகத்தில் அறிந்துகொள்ளப்பார்ப்போம்.

A) பரிசுத்தம் என்றால் என்ன?

பரிசுத்தம் என்றால் பிரித்தெடுப்பது அல்லது வேறுபடுத்தப்படும் அனுபவத்தைத்தான் பரிசுத்தம் என்று கூறப்படுகிறது.

B) பரிசுத்தம் நமக்கு ஏன் அவசியம்.

a. நாம் கர்த்தருடையவர்களாயிருக்க நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். எண்.23:13.

b. நாம் ஆராதிக்கிற தேவன் பரிசுத்தமுள்ளவர். ஆகவே நாமும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். லேவி.11:5; 20:26; 21:8; 1பேது.1:16.

c. நாம் பரிசுத்தமாக ஜீவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். 1தெச.4:7.

தேவனைக் காண்பதற்கு பரிசுத்தம் தேவை. எபி.12:14.

தேவனுக்கு ஊழியம் செய்ய பரிசுத்தம் தேவை. எபி.9:14.

அழிந்து போகாமல் சங்காரம்பண்ணாமலிருக்க நமக்கு பரிசுத்தம் தேவை. யாத் 19:22.

(C) யார் யார் எந்த எந்த காரியங்கள் நம்மை பரிசுத்தப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

கர்த்தராகிய தேவன் நம்மை பரிசுத்மாக்குகிறார். லேவி.20:8; 21:15,23; 22:16. 1இரா.9:3. 2இரா.7:16, எசே.20:12; 37:28.

b) தேவனின் நாமத்தினாலே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். 1கொரி.6:11.

c) கிறிஸ்துவின் பலி மரணம்/இரத்தம் சிந்துதல் நம்மை பரிசுத்தமாக்குகிறது. எபி.13:12; 10:29; 10:10.

d) பரிசுத்த ஆவியினால் நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். 2தெச.2:13.

e) வேதவசனம் நம்மை பரிசுத்தமாக்குகிறது. யோவா.17:19, எபே.5:26, 1தீமோ.4:5.

f) ஜெபம் நம்மை பரிசுத்தமாக்குகிறது. 1தீமோ.4:5.

(D) பரிசுத்தமாக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும்?

a) பரிசுத்தமாக்கப்பட நமக்கு நாட்டம் (விருப்பம்) வேண்டும். எபி.12:14.

b) பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளாக வேண்டும். ரோம.6:22.

c) நம்மை சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். 1கொரி.7:1, தீமோ.2:21.

(E) பரிசுத்ததில் பூரணபடுதல் என்றால் என்ன?

பரிசுத்தத்தில் பூரணப்படுதல் என்பது பரிசுத்தத்தில் முழு வளர்ச்சியடைவது என்பதாகும்.

(F) பரிசுத்ததில் பூரணவளர்ச்சியடைவது என்பது எதைச்சார்ந்தது?

பரிசுத்தத்தில் பூரணவளர்ச்சியடைவது என்பது நாம் எந்த அளவுக்கு பரிசுத்தமாக ஜீவிப்பதை விரும்புகிறோம். அல்லது வாஞ்சிக்கிறோம் என்பதை பொறுத்ததாகும். ஒரு உதாரணத்தின் மூலமாக இதை விளக்கப்பார்க்கிறேன்.

ரயில்வே என்ஜின் (Railway Engine) அல்லது கார் என்ஜின் (car engine) முதலிய இயந்திரங்களை பழுதுபார்க்கும் மனிதர்களின் (Machanics) உடைகளை பார்த்து இருப்பீர்கள், அந்த இயந்திரத்திலிருந்து வடியும் எண்ணெய் மற்றும் அசுத்தங்கள் எல்லாம் அந்த உடைகளில்பட்டு அவைகள் அழுக்காக இருக்கும். அவ்விதம் அழுக்கான உடையில் கொஞ்சம் (ink) ஊற்றினால் அந்த மை அந்த உடையில் பட்டதினால் உண்டான அழுக்கு அந்த உடைகளில் அதிகம் தெரியாது.

ஏனெனில் அந்த உடை ஏற்கனவே மிகவும் அழுக்காகத்தான் இருந்தது. ஆகவே அந்த வித்தியாசத்தை நம்மால் கண்டுகொள்ளமுடியாது. ஆனால் முழுவதும் வெண்மையாக உள்ள ஒரு சுத்தமான ஆடையில் ஒரு சொட்டு மை படும் என்றால் அந்த உடையை அணிந்துள்ள மனிதனுக்கு அது மிகவும் அசுத்தமாகத் தெரியும். எப்படியாவது அந்த மையினால் உண்டான கறையை அந்த உடையிலிருந்து அகற்ற முயற்சி செய்வான்.

மேற்கூறப்பட்ட உதாரணம் போலவே பரிசுத்தத்தில் விருப்பம் இல்லாது. எல்லா வித அசுத்தமான காரியங்களையும் துணிந்து செய்து தன் இஷ்டம்போல் ஜீவிக்கிற ஒரு மனிதனுக்கு பரிசுத்தமும் அசுத்தமும் ஒன்று போல்தான் தெரியும். பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் உள்ள வேறுபாட்டை அவனால் அறிந்துகொள்ள முடியாது. ஆனால் முழுவதுமாக பரிசுத்தமாக ஜீவிக்கவேண்டும் என்று நாட்டங்கொண்டு, வேதவசனத்தின் பிரகாரமாக தனது ஜீவியத்தை அமைத்துக்கொண்டு அவ்விதமாக வாழ்கிற ஒரு மனிதனுக்கு தன் ஜீவியத்தில் ஒரு சிறிய கறையான (பாவமான) காரியம் காணப்படும் என்றால், உடனே அந்த கறையான (பாவமான) காரியத்தை தன்னை விட்டகற்றி முற்றிலுமாக பரிசுத்தமான நிலையில் காத்துக்கொள்ள எப்பொழுதும் விழிப்புடன் இருப்பான். எவ்விதம் ஒளியும் இருளும் ஒரு இடத்தில் சேர்ந்து காணப்பட முடியாததுபோலவே பரிசுத்தமும் அசுத்தமும் நமது ஜீவியத்தில் சேர்ந்து காணப்பட முடியாது. ஒரு சமயம் முழுவதும் அசுத்தமாக ஜீவிக்கிற ஒரு மனிதன் தான் பரிசுத்தமாக ஜீவிப்பதுபோல் மனிதர் முன்நிலையில் மாய்மாலம் பண்ணலாம். ஆனால் அவ்விதகாரியத்தினால் அந்த மனிதனுக்கு சாபம்தான் வருமே ஒழிய அது ஆசீர்வாதமாக முடியாது. ஆகவே நமது ஜீவியத்தை முற்றிலுமாக பரிசுத்தமாகக் காத்துக்கொள்வது நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது.

G) பரிசுத்தத்தில் பூரணராவது.

தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ளது போல் மாமிசத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க என்றுக் கூறப்பட்டிருப்பது நமது மாமிசத்தில் உண்டாகிற பலவித இச்சையான காரியங்களையும் நமது ஆவியில் உண்டாகிற பலவித பாவச்சிந்தனைகளையும் குறிப்பதாகவுள்ளது. நம்மில் காணபடும் பாவ இச்சைகளும், பாவ சிற்றின்பங்களையும் நமது ஜீவியத்தைக் கறைபடுத்தும் காரியங்களாகவுள்ளது.

அப்படியென்றால் எவ்விதம் நமது ஜீவியத்தில் கறைகள் (பாவங்கள்) காணப்படாதபடி சுத்திகரிப்பது என்பதுப்பற்றி பார்ப்போம்.

a. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் 1யோவா.1:9.

b. தாம் அதை திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறார். எபே.5:26.

[illegible] கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும் எபி.9:22

[illegible] இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். 1யோவா.1:7.

[illegible] வசனங்களில் இருந்து நாம் நமது பாவங்களை தேவனிடம் [illegible] செய்யும்பொழுது தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார் என்றும், [illegible] இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கிறது என்றும் தமது [illegible] நம்மை பரிசுத்தமாக்குகிறார் என்பதையும் நாம் [illegible]

[illegible] நாட்களில் தீவிரத்தோடு நாம் கர்த்தருக்கு பயப்படும் பய[illegible] நம்மை முற்றிலுமாக வேதவசனத்தினாலும், கர்த்தர[illegible] இரத்தத்தினாலும் நம்மை சுத்திகரித்துக்கொண்டு [illegible] நாளுக்கு நாள் அதிகமாகிற [illegible] நம்மைக்காத்துக்கொள்வது மிகவும் [illegible]

[illegible] வழிகளில் நடக்கக் கர்த்தருக்குப் பயப்படும் பயம் [illegible]

[illegible] உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்பட்டு [illegible] வழிகளில் நடக்கும்படிக்கு... பலன் அளிப்பீராக. 2நாளா.6:31

[illegible] வசனத்தில் வழி என்பது பற்றி இந்த பகுதியில் சிந்தி[illegible]

[illegible] என்றால் என்ன? நாம் அமைத்துக்கொள்கிறதான தீவிர[illegible] வழி என்று கூறப்பட்டுள்ளது. இந்த உலகில் பிறந்தநாம் [illegible] இந்த உலகில் இருந்து கடந்து செல்ல வேண்டியவர்களாய் [illegible] வாழ்க்கை என்பது பாலம். அதைக்கடந்து செல்லுங்கள். [illegible] வீடு கட்டாதீர்கள் என்று ஒரு ஆங்கிலப்பழமொழி உண்டு. [illegible] பெரும்பாலான வர்கள் தாங்கள் இந்த உலகில் [illegible] இருக்கிறவர்கள் போல் சொத்துக்கு மேல் சொத்துசேர்ப்பதும், [illegible] வீடு கட்டுவதும், நிலத்துக்கு மேல் நிலம் வாங்குவதும் பணத்துக்கு [illegible] பற்றியதான சிந்தனையே சிறிதளவும் [illegible] உலகக் காரியங்களிலேயே தங்கள் முழுக்கவனத்தையும் [illegible] சிறிதளவும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் [illegible] செய்கிறார்கள். மரணம் ஒருநாள் இவர்களை [illegible] நாம் சேர்த்த இந்த பணமும், வீடும், நிலமும் [illegible] பரலோகத்துக்கு கொண்டு செல்லமுடியாது என்று அறிந்து

புலம்புவார்கள். அந்த நாள் அவர்களுக்கு ஒரு பயங்கரமான நாளாக இருக்கும். நிச்சயமாகவே அந்தநாளுக்கு அவர்கள் தப்பமுடியாது. ஆகவே இன்றே நாம் எந்த வழிகளில் செல்கிறோம். அல்லது நமது ஜீவியத்தை எவ்விதம் அமைத்துக்கொள்கிறோம் என்பதை அறிந்து சரியான வழியைத் தெரிந்துகொண்டு அதில் செல்கிறவர்களாக இருப்பார்களானால் அவர்கள் பாக்கியவான்களாயிருப்பார்கள்.

நாம் தெரிந்துகொள்வதற்கு இரண்டுவித வழிகள் உண்டு. ஒன்று கர்த்தரின் வழி என்று அழைக்கப்படுகிறது. இதற்குவேதபுத்தகத்தில் நித்திய வழி, ஜீவ வழி, பரிசுத்த வழி, சத்திய மார்க்கம், மரணத்திற்கு நீங்கலாக்கும் வழி என்று இவ்விதம் பல பெயர்களில் கூறப்பட்டு உள்ளது. சுருங்கச் சொல்லின் இந்த வழி நம்மைப் பரலோகம் அல்லது மோட்சம் கொண்டுசெல்லும் வழி என கூறலாம். இன்னொரு வழி மனிதன் தானாய் தெரிந்துகொள்ளும் வழி (நீதி.16:25) இந்த வழிக்கு மரணவழி, மாறுபாடான வழி, கேட்டுக்குப்போகிற வழி என்று இவ்விதம் வேத புத்தகத்தில் இதற்கு அநேகம் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழி நம்மை நரகத்திற்கு கொண்டு செல்லும் வழியாகும்.

இந்த பாகத்தில் நாம் கர்த்தரின் பாதையில் செல்வதற்காக கர்த்தர் செய்கிற காரியங்கள் என்ன என்றும் அவர் வழியில் செல்ல நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி சிறிது விளக்கமாக அறிந்துகொள்ளப்பார்ப்போம். எந்த ஒரு வழிக்கும் ஒரு துவக்கம் உண்டு. அதுபோலவே அதற்கு ஒரு முடிவும் உண்டு. அதுபோலவே நாம் கர்த்தரின் வழியை தெரிந்து கொள்கிறவர்களாக இருக்கிறோம் என்றால் அதற்கும் ஒரு துவக்கமும் முடிவும் உண்டு என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

அ) **கர்த்தரின் வழியின் துவக்கம்:** கர்த்தரின் வழியின் துவக்கம் என்பது நாம் எப்பொழுது நாம் நமது பாவமான ஜீவியமுறைகளைவிட்டு தேவன் விரும்புகிற வண்ணமாக, வேதவசனத்திற்கு ஏற்றபடி நமது ஜீவியத்தை அமைத்துகொள்ள ஆரம்பிக்கும்போது நமது வாழ்க்கையில் கர்த்தரின் வழி ஆரம்பமாகிறது. இதை கீழ்கண்ட வேதவசனம் நன்குவிளக்கும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் 2கொரி.5:17. நாம் நமது பாவஜீவியத்தை விட்டுத் தேவனிடமாக மனந்திரும்பி, ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறும்பொழுது மேற்கூறப்பட்ட வசனத்தில் கூறப்பட்டதுபோல் நாம் கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டியின் அனுபவத்திற்குள் வருகிறோம். எவ்விதம் ஒரு தாயின் வயிற்றிலிருந்து ஒரு குழந்தை பிறந்தவுடன் அதின் வயது ஆரம்பமாகிறதோ அதுபோலவே நமது வாழ்க்கையிலும் முன்கூறப்பட்டுள்ள மனந்திரும்புதல், ஞானஸ்நானம், பரிசுத்தாவியின் அபிஷேகம் போன்ற அநுபவங்களைப் பெறும் பொழுது நமது புதிய வழி ஆரம்பமாகிறது.

இந்த வழியின் துவக்கத்தில் இருந்து நாம் கர்த்தரின் வழியில் கடந்து செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த வழியில் உலகத்தின் அசுத்தத்தினின்று நம்மை காத்துக்கொண்டு பரிசுத்தமாக ஜீவிப்பது, பாடு சந்திப்பது, கிறிஸ்துவின்

...களை எல்லாருக்கும் சொல்லப்பார்ப்பது வேத வசனத்தின் மீது ...யுடையவர்களாய் அதை இரவுபகலாய் தியானிப்பது. விசுவாச ... வளர முயற்சிப்பது. இரட்சகராகிய இயேசுவின் வருகையை ...யோடு எதிர்நோக்கியிருப்பதுபோன்ற ஒரு புதியவாழ்க்கை ...ளாக கடந்து செல்வதாகும்.

... வழியின் முடிவு : முன் கூறப்பட்டுள்ளதுபோல் கர்த்தரின் வசனத்தின் ... நமது ஜீவியத்தை அமைத்துக்கொண்டு கர்த்தர் காட்டும் அந்தவழியில் ...வர்களாக ஜீவித்தோம் என்றால், இந்த நமது ஜீவியமாகிய வழி நமது ...ந்தில் அல்லது நம் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையில் ...

... உத்தமனை நோக்கி செம்மையானவனை பார்த்திரு. ...னுஷனுடைய முடிவு சமாதானம். சங்.37:37.

... போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன். ... சததை காத்துகொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக ...பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் ...ளிலே அதை எனக்குத் தந்தருள்வார். 2தீமோ.4:8. முன் ...டுள்ளதுபோல் நம் ஜீவியமாகிய வழி கர்த்தருக்குள் அமைந்ததாக ... என்றால் நம் வழியின் முடிவும் மேற்சொன்ன வசனங்களில் ...டுள்ளதுபோல் சமாதானமும், ஜெயதொனியோடும் முடிவதாக இருக்கும்.

நாம் கர்த்தரின் வழியில் செல்ல கர்த்தர் நமக்காக என்ன செய்கிறார் என்று பார்ப்போம்.

...தர் நமக்கு வழியை போதிக்கிறார். எந்த வழியைப் பற்றிப் போதிக்கிறார்?

...ான மார்க்கத்தை போதித்தேன். நீதி.4:11.

...ங்கு ஞானம் என்பது ஆண்டவராகிய இயேசுவைக் குறிக்கும் (1கொரி.1:31 பார்க்கவும்) ஆகவே தேவன் நமக்கு இயேசுவாகிய வழியைக் காட்டுகிறார். ... இரட்சகராகிய இயேசுதான் நமது வழி.

...க்கு வழியைப் போதிக்கிறார்? சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியை போதிக்கிறார். சங்.25:9.

...த்தருக்கு பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியை போதிக்கிறார். சங்.25:12.

கர்த்தர் .... பாவிகளுக்குத் தமது வழியைப் போதிக்கிறார். சங்.25:8.

கர்த்தர் வழியை காட்டுகிறார். சங்.32:8.

கர்த்தர் தமது வழியில் நடத்துகிறார். ஏசா.48:17, எரே.31:9, நீதி.4:11, சங்.23:3, யாத்.1:13, சங்.78:14.

4. நாம் செல்லுகிற வழி பற்றி நம்மை எச்சரிக்கிறார். சக.1:4, எரே.26:3.

5. நம் வழியை அகலமாக்குகிறார் ஏன்? நம் கால்கள் வழுவாமலிருக்க. சங்.18:36, 2சாமு.22:37.

6. வழியை செம்மைப்படுத்துகிறார். ஏசா.26:7.

7. வழியை செவ்வைப்படுத்துகிறார். சங்.18:32.

8. பாதையைக் காப்பாற்றுகிறார். நீதி.2:8, சங்.91:11.

9. ஒரே வழியை கட்டளையிடுகிறார். எரே.32:39.

நாம் கர்த்தரின் வழியில் நடக்கும்படி கர்த்தர் நமக்கு செய்கிறதான காரியங்களை மேற்கூறப்பட்டுள்ள வேத வசனங்கள் மூலமாக தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

d) நாம் கர்த்தரின் வழியை அறிந்து அதில் செல்ல என்ன என்ன காரியங்களை செய்யவேண்டும் என்றும் பார்ப்போம்.

1. கர்த்தரின் வழியை அறிய நாம் ஜெபிக்கவேண்டும். எவ்விதம்?

i) நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும். சங்.143:8, எரே.42:2, சங்.25:4, யாத்.33:13.

ii) வழியை எனக்கு போதியும். சங்.86:11; 119:33; 22:11; 2நாளா.6:27.

iii) வழியில் நடத்தும் சங்.27:11; 143:10; 5:8; 30:3; 139:24, நீதி.4:11.

iv) வழியை உணர்த்தும். சங்.119:27.

v) பொய் வழியை என்னைவிட்டு விலக்கும். சங்.119:29.

நாம் எத்தனையோ காரியங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆனால் நாம் ஒவ்வொருநாளும் கர்த்தரின் வழியை அறிந்து அதில் செல்ல எப்போதாவது ஜெபிக்கிறோமா? சிந்திப்போம்.

2) கர்த்தரின் வழியைக் கைக்கொள்ளவேண்டும். சங்.18:21, உபா.11:22, மல்.2:9; 3:14.

3) கர்த்தரின் வழியை நோக்க வேண்டும். நீதி.23:26.

4) கர்த்தரின் வழியைக் காக்கவேண்டும். 2சாமு.22:22, 1இரா.8:25, சங்.119:9, நீதி.8:32, நாகூம் 2:1.

5) நம் வழியைக் காக்கவேண்டும். 2நாளா.6:16, சங்.39:1.

6) நம் வழியை தீமையான காரியங்களுக்கு தூரப்படுத்தவேண்டும். நீதி.5:8.

7) நம் வழியை கர்த்தருக்கு ஒப்புவிக்க வேண்டும். சங்.37:5.

8) வழியை சீர்ப்படுத்தவேண்டும். எரே.7:3,5; 18:11; 26:13.

9) நம் வழிகளைபற்றி சிந்திக்கவேண்டும். சங்.119:59, செப்.15:7, நீதி.14:8.

10) கர்த்தரின் வழியில் நடக்கவேண்டும். உபா.8:6
11) நம் வழியில கர்த்தரை நினைக்கவேண்டும். நீதி.3:6
12) நம வழிகளை சோதித்துப்பார்க்கவேண்டும். உபா.8:6, நீதி.3:6, ஏசா.64:5.
13) நம வழிகளை சோதித்துப்பார்க்கவேண்டும். புல.3:40, ஆகாய்.1:7.
14) வழியை சுத்தம் பண்ணவேண்டும். சங்.119:9.
15) ஜாதிகளின் வழியில் நடக்கக் கூடாது. லேவி.20:23.
16) தீயோர் வழியில் நடக்க கூடாது. நீதி.14:14.
17) ஜாதியாருடைய வழியைக் கற்றுக் கொள்ளக்கூடாது. எரே.10:12.
18) பாவிகளுடைய வழியில் நிற்கக்கூடாது. சங்.1:1.

நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக கர்த்தரின் சரியான வழியை அறிந்து ஜெபித்து கர்த்தர் காட்டும் வழியில் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக சோதனையிலும், கஷ்டங்களிலும் முன்னேறிச் செல்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

8) கர்த்தரை சேவிக்க கர்த்தருக்குப் பயப்படும் பயம் தேவை.

பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள். சங்.2:11, 1சாமு.12:14,24.

கர்த்தரை சேவிப்பது குறித்து இந்த பாகத்தில் விவரமாக அறிந்துகொள்ள [illegible]

A) கர்த்தரை சேவிப்பது என்றால் என்ன?

i) வேலைக்காரராயிருந்து கர்த்தரை சேவிப்பது :

நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து எங்களை சேவிக்க வேண்டும் 1சாமு.17:9.

உலகப்பிரகாரமாக ஜனங்களை சேவிக்கிறவர்கள் வேலைக்காரராயிருந்து அவர்களை சேவிக்கவேண்டியுள்ளது. அதுபோலவே நாம் தேவனை சேவிக்கவேண்டும். என்றால் நாமும் அவருக்கு வேலைக்காரராயிருந்து அவரை சேவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு வேலைக்காரன் எதையும் தன் [illegible] செய்யமுடியாது. தனது எஜமான் விரும்புகிற வண்ணமாக மட்டும் தான் [illegible] முடியும். அதுபோலவே நாமும் தேவனுக்கு சித்தமானதை மட்டும் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ii) கர்த்தரின் வசனத்தின் பிரகாரம் எல்லாவற்றையும் செய்கிறவர்களாக கர்த்தரை சேவிக்க வேண்டும்.

அவரை (கர்த்தரை) உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் சேவிக்கிறதற்காக, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும், நியாயப்பிரமாணத்தின் படியேயும் செய்யும்படி மாத்திரம் வெகுசாவதானமாயிருங்கள் என்றான்

E) யார் கர்த்தரை பரலோகத்தில் சேவிப்பார்கள்?

இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரை சேவிக்கிறார்கள் வெளி. 7:14,15.

மேற்கூறபட்டுள்ள வசனத்தில் பரலோகத்தில் தேவனை சேவிக்கிறவர்களின் தகுதியான இரண்டு காரியங்கள் கூறபட்டுள்ளது.

a) மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்: வெளி.7:14.

இந்த உலகில் நாம் உண்மையாக தேவனை பின்பற்றுகிறவர்களாயிருந்தால் நிச்சயமாக நமக்கு உபத்திவங்கள் பல வரும். இதையே கீழ்க்கண்ட வேத வசனங்கள் நமக்கு தெளிவுபடுத்துவதாக உள்ளது. **நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள் அப்.14:22. உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு யோவா.16:33.** நமக்கு வருகிறதான உபத்திவங்களைக் குறித்து சோர்ந்துபோகாமல், இந்த உபத்திரவங்கள் நம்மை பரலோகம் கொண்டு செல்லும் வழியாக இருப்பதற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்கவேண்டும். ஆனால் இந்த உபத்திரவமானது நாம் தவறு செய்வதினால் வருகிறதாக இல்லாமல் கிறிஸ்துவுக்காக அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவப்படுகிறதாக இருக்கவேண்டும். **தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களை பொறுமையோடே சகித்தால் அதுவே பிரிதியாயிருக்கும் 2பேது.2:19.**

b) அங்கி ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுப்பது.

அங்கி ஆட்டுக்குட்டியானவரின் இரத்ததில் தோய்த்து வெளுப்பது என்பது நமது ஜீவியமானது ஒவ்வொரு நாளும் வேதவசனத்தின் வெளிச்சத்தில் ஆராயப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் கழுவப்பட்டு முற்றிலும் கறைதிறையற்றவர்களாய் காணப்படுவது மிகவும் அவசியமாகும்.

பரலோகத்தில் தேவனை சேவிக்கிறவர்கள் காரியமானது தேவனை ஸ்தோத்தரிப்பது மட்டுமாகும். அதுவல்லாது வேறு எதுவும் நாம் செய்யபோவதில்லை. ஆனால் இன்று அநேக கிறிஸ்தவர்கள் தேவனைத் துதிக்க வெட்கப்படுகிறார்கள். அல்லேலூயா ஸ்தோத்திரம் என்று சொல்வது பெந்தேகொஸ்தேகாரர்களின் கூச்சல் என்று சொல்லுகிறார்கள். இந்த உலகில் தேவனை சேவிக்க அறியாதவர்கள் பரலோகத்தில் எப்படி அவரை சேவிக்க முடியும். ஆகவே நாம் இந்த உலகில் இருக்கும் பொழுதே அவருக்குப் பயந்து அவரை சேவிக்கிறவர்களாக, அவர் சித்தம் செய்து, அவர் வார்த்தைகளைக் கைக்கொண்டு எப்பொழுதும், எல்லாநிலையிலும் அவரைத்

...மிழவர்களாயிருந்து இவ்விதமாக பரலோகத்திலும் நாம் அவரை சேவிக்க ...மை தகுதிபடுத்திக்கொள்வோமாக.

...) தன்னைத்தாழ்த்த கர்த்தருக்கு பயப்படும் பயம் தேவை:

அவன் (எசேக்கியா) கர்த்தருக்குப் பயந்து (தன்னைத்தாழ்த்தி) கர்த்தரின் ...கத்தை நோக்கி கெஞ்சினான் எரே.26:19.

அவரை (எசேக்கியாவும்) எருசலேமின் குடிகளும் தங்களைத் ...த்தினபடியினால் கர்த்தருடைய கடுங்கோபம் எசேக்கியாவின் ...களில் அவர்கள்மேல் வரவில்லை 2நாளா.32:26.

...றகுறைபட்டுள்ள சம்பவம் எசேக்கியா இராஜாவின் வாழ்க்கையோடு ...பட்டதாகும். எசேக்கியா வியாதிப்பட்டிருந்தபொழுது கர்த்தர் அவனுக்கு ... சுகம் கொடுத்தார். ஆனால் அவன் அதை மறந்து தன் ஐஸ்வரியத்தையும், ...தையும் குறித்து பெருமைக்கொண்டு பாபிலோனின் இராஜாவாகிய ...னின் குமாரனாகிய மெரோதாக்பலாதான் என்பவனின் மனிதர் தன்னிடம் ...து அவர்களுக்கு தன் பொக்கிஷங்கள் அனைத்தையும் காட்டினான். ... ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் எசேக்கியாவை எச்சரித்தார். உடனே ...ாராஜா கர்த்தருக்குப் பயந்து தன்னைத் தாழ்த்தி கர்த்தரிடம் ...ினான். அதினால் கர்த்தர் அவன் நாட்களில் சமாதானத்தைக் ...ளயிட்டார்.

...றிஸ்தவ ஜீவியத்தில் தாழ்மையின் அநுபவம் மிகவும் அவசியமாகவுள்ளது. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக இருந்தால்தான் நம்மில் தாழ்மை ...படட முடியும். ஆகவே இந்த பாகத்தில் ஏன் நம்மைத் தாழ்த்தவேண்டும்? ...தினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் எவை என்பது பற்றி சிறிது விபரமாக ...ந்து கொள்ளப்பார்ப்போம்.

... நம் சரீர அவயவங்களில் எதில் தாழ்மை காணப்படவேண்டும்.

நம் இருதயத்தில் தாழ்மைக் காணப்பட வேண்டும். லேவி.26:41.

மனதில் தாழ்மைக் காணப்பட வேண்டும். நீதி. 16:9.

இன்று அநேகர் வெளித்தோற்றத்தில் தாழ்மையுடையாவர்களாக ...டுகிறார்கள். ஆனால் தேவன் விரும்புவது நமது இருதயத்திலும், மனதிலும் ... தாழமையுடையவர்களாய் இருக்கவேண்டும் என்பதுதான்.

... ஏன் நமக்கு தாழ்மை வேண்டும்?

நாம் தாழ்மையாயிருக்கும்படி கர்த்தர் நம்மிடத்தில் கேட்கிறார். மீகா6:8.

கர்த்தரை சேவிக்க தாழ்மை வேண்டும். அப். 20:19; 2கொரி.11:7.

கர்த்தரே தேவன் என்று அறிய தாழ்மை வேண்டும். 2நாளா.33:12,13.

நமது பாவ நிலையை உணரவும், கர்த்தர் தம் செயல்களில் நீதியுள்ளவர் என்று அறிந்து கொள்ளவும் நமக்குத் தாழ்மை வேண்டும். லேவி. 26:41, 2நாளா.12:6.

இந்நாட்களில் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தாததினால்தான் தங்கள் பாவ நிலையைப் பற்றியும் கர்த்தரின் நீதியைப் பற்றியும் அறிந்துகொள்ள முடியவில்லை. அதுபோலவே ஊழியக்காரர்களும் தங்களைத் தாழ்த்தாததினால் தான் சரியான முறையில் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியவில்லை. இந்நாட்களில் கர்த்தர் முந்நிலையில் நம்மைத் தாழ்த்துகிறவர்களாக இருந்தால் நமது உண்மையான நிலையை அறிந்து செயல்பட முடியுமே.

C) தங்களைத் தாழ்த்துவதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்:

1. மேன்மைக்கு முன்னானது தாழ்மை. **நீதி.15:33; 18:12, மத்.23:12.**
2. தாழ்த்துவதினால் கர்த்தரின் கிருபையை பெறுகிறோம். **நீதி.3:34, யாக்.4:6, 1பேது.5:5.**
3. தாழ்மையுள்ளவர்ககளை கர்த்தர் உயர்த்துகிறார். **லூக்.1:52; 14:11, யாக்.4:10, யோபு 5:10, எசே.2:26, மத்.23:12.**
4. தாழ்மையுள்ளவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். **2நாளா.34:27, 1இரா.22:19.**
5. தாழ்த்தினால் கர்த்தரின் கோபம் நம்மை விட்டுத் திரும்பும். கர்த்தரின் தண்டனைக்கு தப்பலாம். **2நாளா.12:7-12, 1இரா.21:27-29.**
6. தாழ்த்தினால் கர்த்தர் பாவத்தை மன்னித்து சேமத்தைக் கொடுப்பார். **2நாளா.7:14.**
7. தாழ்மையுள்ளவர்களுக்கு ஐஸ்வரியம், மகிமை, ஜீவன் கிடைக்கும். **நீதி.22:19**

கிருபையாகக் கொடுக்கப் பட்டிருக்கும் இந்த நாட்களில் கர்த்தர் முன்பாக நம்மைத் தாழ்த்தி தேவனின் மன்னிப்பையும், ஆசீர்வாதங்களையும் பெற நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்வோம்.

II) நாம் பெற்ற இரட்சிப்பைக் காத்துக்கொள்ள கர்த்தருக்குப் பயப்படும்பயம் நமக்கு அவசியம்.

நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக்கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே, நல்லது. அவிசுவதசத்தினாலே அவைகளை முறித்துப் போடப்பட்டன. நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய். மேட்டிமை சிந்தையாயிராமல் பயந்திரு ரோம.11:19,20.

மேற்கூறபட்டுள்ள வேதவசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் ரோம சபையாரிடம் காணப்பட்டக் குறையை சுட்டிக்காட்டுகிறார். ஏனெனில் புறஜாதியாரில் இருந்து விசுவாசத்திற்குள் வந்ததான ரோம சபையினரில் சிலர், தேவ ஜனங்களாகிய யூதரை தேவன் புறக்கணித்து புறஜாதிகளாகிய தம்மை தமது

...ஜனமாக தெரிந்து கொண்டாரே என்றும், இது தங்கள் நீதியினால் கிடைத்த ...ரியம் என்றும் எண்ணி பெருமை கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே ...பாஸ்தலனாகிய பவுல் அவர்களை எச்சரித்து யூதர்கள் தங்கள் ...சுவாசத்தினால் தேவனுடைய இரட்சிப்பைப் பெற முடியாமற்போனார்கள். ...னால் புறஜாதிகளயாகிய நீங்களோ விசுவாசத்தினால் இந்த மேன்மையான ...சிர்வாதங்களைப் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே இது பற்றி மேட்டின்மையான ...தையாயிராதேயுங்கள் என்று ஆலோசனை கூறுகிறார். இதுபோல் ...பபோஸ்தலனாகிய பவுல் எபேசு சபையில் உள்ள விசுவாசிகளுக்கும் அவர்கள் ...ற இரட்சிப்பைப் பற்றி கீழ்க்கண்டவாறு ஆலோசனை கூறுகிறார். ...பையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பட்டீர்கள், இது ...ங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் ...ருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல ...பு.2:8,9.

நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றால் இது முற்றிலும் கர்த்தரின் ...பையினால்தான். நம்முடைய நீதியினாலோ, புண்ணியங்களினாலோ ...ல்லவே அல்ல. ஆகவே நாம் பெற்ற ஆவிக்குரிய நன்மைகளைக் குறித்து ...போதும் மேட்டிமை கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. ...ட்டிமைகொண்டால் என்ன நேரிடும் என்பது பற்றி வேத வசனம் ...றுவதைப்பார்ப்போம்.

மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். ...கையோடே கை கோர்த்தாலும் அவன் தண்டனைக்குத்தப்பான் ...தி.16:5.

அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது ...னமேட்டிமை. நீதி.16:18.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் ...ழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் யாக்.4:6, 1பேது.55.

மேட்டிமையானவைகள் தாழ்த்தப்படும் ஏசா.10:33, 2சாமு.22:28, ...சா.2:11; 25:11.

மேற்கூறபட்டுள்ள வேதவசனங்களில் இருந்தும் வாழ்க்கையில் மேட்டிமை ...ணபடும் என்றால் நாம் நம் ஆவிக்குறிய வாழ்க்கையில் பெற்ற மேலான ...னுபவங்கள் நஷ்டப்படும்படியாகவும் தேவன் நமக்கு விரோதமாக எதிர்த்து ...கும்படியாகவும் நேரிடும். ஆகவே நாம் கர்த்தரின் கிருபையினால் பெற்ற ...ரட்சிப்புகுறித்து பெருமை பாராட்டாதபடி கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு அதை ...த்துக்கொள்வது மிகவும் நல்லது.

அத்தியாயம் 4

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை எவ்விதம் பெற்றுக்கொள்வது

கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்கு ஏன் அவசியம் என்று இதற்கு முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம். கர்த்தருக்கு பயப்படும் பயத்தை நாம் எவ்விதம் பெற்றுக்கொள்வது என்று இந்த அத்தியாயத்தில் விபரமாகப் பார்ப்போம்.

A. நாம் வேதவசனங்களை கற்பத்தின் மூலம் கர்த்தருக்கு பயப்படும் பயத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி...... புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில் அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்துகொள்வாய் நீதி.2:2,4,5.

நாம் கர்த்தரின் வார்த்தைகளை நம்மில் ஏற்றுக்கொண்டு, அவர் கட்டளைகளை நம் இருதயத்தில் பத்திரப்படுத்தி, அதை புதையல்களைத் தேடுவதுபோல் கர்த்தரின் வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்களாக இருப்போம் என்றால் நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பெற்றுக்கொள்ள முடியும். அப்படியென்றால் யார் யார் வேதத்தைக் கற்கவேண்டும் என்று அறிந்துகொள்ளப்பார்ப்போம்.

a) நாம் வேதத்தைக் கற்கவேண்டும், நமது பிள்ளைகளுக்கும் அதை போதிக்க வேண்டும்.

அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளை (வேதத்தை) கற்றுக்கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள் உபா.4:9.

நாம் கர்த்தருக்கு பயப்படும் பயத்தை உடையவர்களாயிருக்க கர்த்தரின் வேதத்தைக் கற்க வேண்டும். அதுமட்டுமல்லாது நாம் கற்றுக்கொண்ட வேதசத்தியங்களை நமது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

இந்நாட்களில் நாம் எந்த அளவுக்கு வேத சத்தியங்களை கற்றுக்கொள்ள முக்கியத்துவம் கொடுக்கிறோம். **இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியான் சங்.1:2. என்று கூறப்பட்டுள்ளது. அந்தப்பட்டணத்தார் (பெரோயா பட்டணத்தார்) மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் அப்.17:11.** பெரோயா பட்டணத்தார்

வாஞ்சையாய் வேதத்தை அனுதினமும் ஆராய்ந்து பார்த்ததினாலே சாலிகளாயிருந்தார்கள். நாம் வேதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து லாக அதை தியானம் செய்கிறவர்களாக இருக்கிறோம் என்றால் நாம் மான தீமையான காரியங்களையும் செய்யாதபடி காத்துக்கொள்வோம். இன்றைய கிறிஸ்தவர்கள் பெயருக்காக வாசித்து பெயருக்காக கிறிஸ்தவ ஜீவியம் செய்து, கர்த்தருக்குப் பயம் சிறிதளவும் இல்லாதவர்களாக ஜீவிக்கிறார்கள். என்ன பரிதாபம் கள்.

கற்பது மட்டுமல்லாது நாம் கற்றுக்கொண்ட வேத சத்தியங்களை நமது களுக்கும் அவைகளை கற்றுக்கொடுக்கவேண்டும். இந்த நாட்களில் பிள்ளைகள் வேதத்தைக் கற்றுக்கொள்வதில் எந்த அளவுக்கு த்துவம் கொடுக்கிறோம். **பிள்ளையானவன் நடக்கவேண்டிய யிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்** 22:6. ஆம் நமது பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே வேதத்தை வாசிக்க க. கர்த்தருக்குப் பயந்து, தீமையான காரியங்களை வெறுத்து அவைகளை விலகி ஜீவிக்க கற்றுக்கொடுப்போம் என்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

ஒரு குடும்பத்தில் உள்ள எல்லலோரும் தெய்வபயம் உடையவர்களாக பார்களானால் அந்தக்குடும்பத்தில் எவ்வித தீமையான காரியங்களும் படாது. அந்த குடும்பத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு டிகிறவர்களாயிருப்பார்கள், மனைவி தன் புருஷனுக்கு எல்லா த்திலும் கீழ்ப்படிந்து நடப்பாள். புருஷன் தன்மனைவி பிள்ளைகளிடத்தில் புடையவனாய் அவர்களை நல்முறையில் பராமரிப்பான். அந்தக்குடும்பம் வதுமாக கர்த்தருக்குப் பிரியமானகுடும்பமாக **நானும் கர்த்தர் எனக்கு டுத்த பிள்ளைகளும், சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற னகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும், புதங்களாகவும் இருக்கிறோம்** ஏசா.8:18. என்ற வேத வசனத்திற்கேற்ப அற்புதமான குடும்பமாக விளங்குமே, அந்தக்குடும்பத்தில் கர்த்தரின் ன்னம் பூரணமாக விளங்குமே. இவ்விதக் குடும்பங்கள் உள்ள ஒரு யத்தில் அல்லது சபைகளில் சமாதானம் பூரணமாக விளங்குமே.

இன்று நம்முடைய குடும்பங்கள் என்ன நிலையில் உள்ளது. தவளை ணீருக்குள் இழுக்க ஓணான் கரைக்கு இழுக்க என்றல்லவா இருக்கிறது. ன் ஒன்றைச் சொன்னால் மனைவி அதற்கு நேர்மாறாக செயல்படுகிறாள். ம்பாலான குடும்பங்களில் ஸ்திரிகள் தங்கள் புருஷர்களை அடக்கி சிசெய்யவேண்டும் என்று எண்ணுகிறார்கள். பிள்ளைகள் தங்கள் றோருக்குக் கீழ்ப்படியாதவர்களாக, தங்கள் இஷ்டம்போல் அடங்காது கிறவர்களாக இருக்கிறார்கள். புருஷர்கள் தங்கள் மனைவி பிள்ளைகள் அனபில்லாதவர்களாகவும், குடும்பத்தில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தத் கிறவர்களாகவும் அல்லவா இருக்கிறார்கள்.

நம் தனிப்பட்ட ஒவ்வொருவர் ஜீவியத்திலும் சமாதானம் இல்லையென்றால் நம்குடும்பங்களில் எப்படி சமாதானம் நிலவும். நம் குடும்பங்களில் சமாதானம் இல்லையென்றால் நாம் ஐக்கியம் கொள்ளுகிற நமது சபைகளில் அல்லது நாம் குடியிருக்கிற சமுதாயங்களில் எப்படி சமாதானம் நிலவும். நமது சமுதாயங்களிடையே சமாதானம் இல்லையென்றால் நமது தேசத்தில் எப்படி சமாதானம் நிலவும் ஆகவே இன்று தேசத்தில் சமாதானம் இல்லையென்றால் அந்த தேசத்தில் குடியிருக்கும் ஒவ்வொருவரும் ஆண்டவராகிய இயேசுவின் மூலமாக வரும் சமாதானத்தை பெற்றவர்களாக இல்லாததினால்தான் என்பதை உணரவேண்டும்.

இன்றைய கிறிஸ்தவ குடும்பங்களில் பேருக்காக வேதம் வாசித்து, பேருக்காக ஜெபித்து, பேருக்காக கிறிஸ்தவ ஜீவியம் செய்கிறவர்களாக, கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்களாகத்தானே ஜீவிக்கிறார்கள். இன்று பெரும்பாலுமான கிறிஸ்தவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத்தரித்து அதின் பலனை (Power வல்லமை) மறுதலிக்கிறவர்களாக இருப்பார்கள். 2தீமோ.3:5) என்ற வேதவசனத்திற்கேற்ப பெயர் கிறிஸ்தவர்களாக, தேவ வல்லமையோ, விசுவாசமோ இல்லாதவர்களாக, நாள் பார்ப்பது, நட்சத்திரம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, குறிகேட்பது, விக்கிரகங்களை வணங்குவது, உலகத்தாரைப்போல பல சடங்காச்சாரமான காரியங்களைச் செய்வது, இன்னும் இவ்விதமான காரியங்களை துணிந்து செய்கிறார்கள். அதுமட்டுமல்லாது இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் விபசாரங்களும், கொலைகளும், குடிவெறியும், சினிமாவுக்கு போவதும், சிகரெட், பீடி, வெற்றிலைபாக்கு போடுவதும், இன்னும் இவ்வித பல கொடிய தீய செயல்களும், பாவப் பழக்கவழக்கங்களும் மிகச்சாதரணமாகக் காணப்படுகிறதே. உலக ஜனங்கள் கூட தீமையான காரியங்களை செய்ய பயப்படுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் மிகத்துணிகரமாக எந்தவித தீமையையும் பயமின்றி செய்கிறார்களே. தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே ரோமர்2:24. என்ற வேத வசனத்திற்கு ஏற்றவாறுதானே இன்றைய கிறிஸ்தவர்கள் ஜீவிக்கிறார்கள். ஏனெனில் அவர்களிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பது சிறிதளவும் கிடையாது.

இவ்வித கிறிஸ்தவ குடும்பங்களில் கர்த்தரின் பிரசன்னம் எப்படி விளங்கும். கர்த்தரின் சமாதானம், சந்தோஷம், ஆறுதல் எப்படி இந்த இடங்களில் இருக்கும். இன்றைய கிறிஸ்தவகுடும்பங்களில் அலறுதல்களும், கூக்குரலும்தானே காணப்படுகிறது. இதன் காரணம் என்ன என்று யாரும் சிந்திப்பதுண்டா, நமது குடும்பங்களில் கொஞ்சம் கஷ்டம் வந்தால் உடனே ஆண்டவன் எங்களை சோதிக்கிறான் என்றுதானே சொல்லுகிறார்கள். தங்கள் பாவந்தான் தாங்கள் அனுபவிக்கும் எல்லா வேதனைகளுக்கும் காரணம் என்பதை உணர்வதில்லையே. கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம் குடும்பங்களில்

[illegible] னால் எல்லாவித தீமையானகாரியங்களும் நமது குடும்பங்களில் [illegible] எல்லாவற்றையும் சிந்திப்பதில்லையே. நாமும் கர்த்தருக்குப் [illegible] பயத்தை கற்றுக்கொள்ளவில்லை அதை நமது பிள்ளைகளுக்கும் [illegible] கொடுக்கவில்லை.

[illegible] நாட்கள் முடிந்து [illegible] நாட்கள் ஆரம்பமாகப் [illegible] நாட்களில் இனிமேலாவது நமது ஜீவியத்தில் வேதத்துக்கு [illegible] கொடுத்து அதை சரியான முறையில் கற்று. அதின் மூலம் [illegible] பயத்தை உடையவர்களாயிருக்க நம் பிள்ளைகளுக்கும் [illegible] கற்றுக்கொடுப்போம். நமது குடும்ப பாரம்பரியங்கள், [illegible] மற்றும் அஞ்ஞான பழக்க வழக்கங்களை எல்லாம் [illegible] தள்ளிவிட்டு, வேதபுத்தகத்தின் மூலமாக கர்த்தர் நமக்குக்காட்டும் [illegible] நம் இரட்சகராகிய இயேசுவை மட்டும் நோக்கினவர்களாக, [illegible] நம் [illegible] முன் செல்லப் பார்ப்போம்.

[illegible] வேதத்தைக் கற்கவேண்டும்.

[illegible] இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், [illegible] கட்டளைகளையும் கைக்கொண்டு இவைகளின்படி செய்வதற்காக [illegible] தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளும் [illegible] அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற [illegible] பிரமாண நூலைப்பார்த்து, தனக்காக ஒருப் பிரதியை எழுதி [illegible] டத்தில் வைத்துக்கொண்டு தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை [illegible] க்கக்கடவன். இப்படிச் செய்வதினால் தானும் தன் குமாரரும் [illegible] வேலின் நடுவே தங்கள் இராஜ்ஜியத்திலே நீடித்து வாழுவார்கள் [illegible] 17:19,20.

[illegible] ராஜா தன் இராஜ்ஜியத்தை சரியான முறையில் பரிபாலனம் செய்ய [illegible] டும் என்றால் அவன் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை உடையவனாக [illegible] வேண்டும். ஆகவே கர்த்தருக்கு பயப்படும் பயத்தைக் கற்றுக்கொள்ள [illegible] யப்பிரமாண நூலை (வேத புத்தகத்தை) ஆசாரியனிடமிருந்து [illegible] வாங்கி தன்னிடத்தில் வைத்து அதை தன் ஜீவியகாலமெல்லாம் [illegible] த்துக்கொண்டே இருக்கவேண்டும். ராஜா கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை [illegible] டயவனாக இருந்தால் அவன் தன் ஜனங்களை நீதியோடும், நியாயத்தோடும் [illegible] சி செய்வான். அவனிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லையென்றால் [illegible] ஜனங்கள் மீது மேட்டிமை கொள்வான். அவன் அரசாட்சியில் குழப்பம்தான் [illegible] ணப்படுமேயொழிய சமாதானம் இருக்கமுடியாது.

இது இன்றைய தேசங்களின் அரசியல் நிலையை நன்கு விளக்கும். [illegible] றைய அரசியல் தலைவர்கள் தெய்வபயம் அற்றவர்களாக ஜனங்களுக்கு [illegible] மை செய்கிறோம் என்றுசொல்லிக்கொண்டு எல்லாவித தீமையான [illegible] யங்களையும் துணிந்து செய்கிறார்கள். அரசாங்கப் பணங்களை

துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இதினால் நாளுக்கு நாள் ஜனங்களின் வேதனைகள் பெருகிக்கொண்டு போகிறது. இன்றைய அரசியல் நிலைபற்றி வேதவசனம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

மனுபுத்திரரில் சண்டாளர் (Vilest men) உயர்ந்திருக்கும்போது துன்மார்க்கர் எங்கும் சுற்றித் திரிவார்கள் சங்.12:8. இதில் சண்டாளர் (Vilest men)என்ற பதத்திற்கு ஈனமானவர்கள் எந்தவித அந்தஸ்தையும் பெறதகுதியற்றவர்கள் என்று பொருள்படும். ஆம் இன்றைய அரசியலில் இவ்விதமான மனிதர்கள்தான் மிக உயரிய நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கென்று ஒரு கூட்டம் துன்மார்க்கரை (தெய்வபயம் இல்லாத மனிதர்) சேர்த்துக்கொண்டு அவர்கள் ஆலோசனையின்படி செயல்படுகிறார்கள். இந்த துன்மார்க்க ஜனங்கள் மத்தியில் எங்கும் சுற்றித்திரிந்து எல்லாவித தீமையான காரியங்களையும் துணிந்து செய்கிறார்கள். இதனால் எங்கும் குழப்பங்களும். அமைதியற்ற நிலையும் உண்டாகிறது. நம் தேவன் சத்தியமானவர். யோவா.8:26. நம் தேவனின் வார்த்தைகளும் சத்தியமானவைகள். சங்.119:142. அது ஒருபோதும் பொய்யுரையாது.

நமது பாரத தேசத்தின் தலைவர்கள் வேதபுத்தகத்தைக் கற்று, கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைப் பெற்றுக்கொண்டு தேசத்தை சமாதானமான நிலையில் பரிபாலனம் செய்வதை அறிந்துகொள்வார்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். இவ்விதமான ஒரு நிலை வர தேவ ஜனங்களாகிய நாம் ஊக்கமாக ஜெபிக்க கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

c) ஆசாரியன் (ஊழியக்காரர்) வேதத்தைக் கற்கவேண்டும்.

அவன் (ஆசாரியன்) எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்க வேண்டுமென்று இவைகளை (வேதத்தை) கட்டளையிட்டேன். அப்படியே அவன் என் சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது. அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை........... அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்....... வேதத்தை அவன் வாயில் தேடுவார்கள். அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன் மல்.2:5,6,7.

ஒரு இராஜா வேதத்தைக்கற்பது, தேசத்தை கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு பரிபாலனம் செய்ய. ஆனால் ஆசாரியன் வேதத்தைக் கற்பது கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு தேவனுடைய செய்தியை ஜனங்களுக்கு கூறுவதற்கு ஆகும். ஆசாரியன் (ஊழியக்காரன்) அநேகரை அக்கிரமத்தினின்று (பாவத்தினின்று) கர்த்தரிடமாக திருப்பவேண்டியவனாக இருக்கிறான். நம் தேவனின் வேதம் எப்பொழுதும் அவன் வாயில் இருக்கவேண்டும். ஏனெனில் ஜனங்கள் அவனிடம் எதிர்பார்ப்பது கர்த்தரின் வேதத்தைதான். மேற்கூறப்பட்ட வசனத்தில் கர்த்தர் கூறுகிறார். அவன் (ஆசாரியன்) என் நாமத்திற்குப் பயந்தும் இருந்தான். சத்திய வேதம் அவன் வாயில் இருந்தது. ஆசாரியன் கர்த்தருக்குப் பயந்தவனாக இருக்கும்பொழுது அவன் கர்த்தரின் வேதத்தை சரியாகக் கற்று

...தை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்கதாக எப்பொழுதும் வேதத்தை தன் ...கையில் உடையவனாக, ஆயத்தமாக இருப்பான்.

சமீபத்தில் ஒரு வயோதிப ஊழியக்காரர் தமிழ் நாட்டிலே ஊழியம் என்ற ...ரில் அட்டூழியங்கள் நடைபெறுகிறது என்று உள்ளக்குமுறலோடு எழுதியதை ...சித்தபோது எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. இன்றைய தேவ ...ழியர்கள் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறார்களா, அல்லது பிசாசுக்கு ஊழியம் ...ய்கிறார்களா என்று அறியமுடியாதபடி அவ்வளவுகுள்ளாக உலகத்தோடு ...டிப்போகிறார்கள்.

இன்று ஊழியக்காரர்கள் பணத்துக்காக பலவிதமான விபரீத ...தேசங்களைக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய தவறான ...தேசங்களுக்கும் வேதபுத்தகத்தைதான் மிகச்சிறப்பாக மேற்கோள் ...டுகிறார்கள். விசுவாசத்தில் சிறிது பலவீனமான எந்தவிசுவாசியும் இப்படிப்பட்ட ...தேசங்களினால் வழிதவற ஏதுவுண்டு. சமீபத்தில் ஒரு துண்டுப்பிரதியில் (tract) ... குமாரன் பரிசுத்த ஆவி இம்மூன்றும் கர்த்தராகிய இயேசுவைக் ...க்கின்றது. திரித்துவம் தவறு என்று கூறப்பட்டுள்ளது. இன்னும் இவ்விதமான ...விபரீத உபதேசங்கள் காட்டுத்தீபோல் பரவிக்கொண்டு வருகிறது.

இதோ நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும். ...காரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் ...ண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடையவசனம் கேட்கக்கிடையாத ...சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் ...மோ.8:11. மேற்கூறபட்டுள்ள வசனத்தைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் நான் ...திப்பதுண்டு. தேவனுடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சம் இந்நாட்களில் ...க்கூடுமோ? கடையில் சாமான்கள் வாங்கும்பொழுது அந்தப் பொருட்களைச் ...றியுள்ள தாள்கள் கிறிஸ்தவ பத்திரிக்கைகள் அல்லது புத்தகங்களில் உள்ளத் ...களாக இருப்பதைக் காணலாம். சில நேரம் வேதபுத்தகத்தின் தாளாக ...ருப்பதைக்கூட பார்க்கிறேன் இவ்விதம் கிறிஸ்தவ பத்திரிக்கைகள், புத்தகங்கள் ...ளமாக பிரசுரிக்கப்படும் இந்நாட்களில் வேதவசனம் கிடைக்காத பஞ்சம் ...ருவது சாத்தியமா என்றுயாரும் எண்ணக்கூடும். ஆனால் இன்றைய ...தேசக்குழப்படியில் புதிதாக யாரும் வேத சத்தியங்களை அறியமுயசித்தால் ...ர்கள் சத்தியத்தை அறியமுடியாதபடி அந்த அளவுக்கு தவறான ...தேசங்களைக் கொடுக்கும் பத்திரிக்கைகள், புத்தகங்கள் மலிந்து ...கின்றன. இன்று பெரும்பாலுமான ஊழியர்கள் போதிப்பது அவர்கள் சபை ...தேசமே ஒழிய வேத உபதேசமே கிடையாது. அவ்வித ஊழியர்கள் ஜனங்களை ...த்துவது தங்கள் சபைக்கு நேராகத்தானே ஒழிய தேவனுக்கு நேராக அல்லது ...லோகத்துக்கு நேராக அல்ல. கர்த்தரின் வருகையை பற்றிய எண்ணம் அநேக ...வஜனங்களிடத்தில் அறவே இல்லை. இன்றைய சபைகளின் விபரீதமான ...லையில் ஊழியக்காரர்கள் முதலாவது சரியான கர்த்தருக்குப் பயப்படும் ...நதைக் கற்றுக்கொண்டால் ஒழிய அவர்கள் வேதத்தை சரியான முறையில் ...னங்களுக்குப் போதிக்கமுடியாது. ஜனங்களை கர்த்தரின் வருகைக்காக

ஆயத்தப்படுத்தவும் முடியாது. சபை உண்டாக்கப்பட்டதின் நோக்கம் கர்த்தரின் வருகைக்காக ஒரு கூட்டம் ஜனங்களை ஆயத்தப்படுத்துவதுதான். மற்றபடி வேறொன்றுக்கும் அல்ல. இன்றைய ஊழியர்களின் விபரீத உபதேசங்களி னால் ஆத்துமாக்கள் தவறான வழியில் செல்கிறார்கள் என்றால் நிச்சயமாக அவர்கள் இரத்தப்பழி இன்றைய ஊழியர்களிடம் கேட்கப்படும் அவர்கள் தேவ தண்டனைக்குத்தப்ப முடியாது. எச்சரிக்கையாயிருப்போமாக.

d) அந்நியருக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் கர்த்தரின் வேதத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

உன் வாசல்களில் இருக்கும் அந்நிர்களும் கூட (வேதத்தை) கேட்டு கற்றுக்கொண்டு உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின் படியெல்லாம் செய்யக் கவனமாயிக்கும் படிக்கும், அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் ஜனத்தைக் கூட்டி (வேதத்தை) வாசிக்க வேண்டும் உபா.31:12,13.

தேவன் நமது ஜனங்கள், தாங்கள் வேதத்தைக் அறியும்படியாக அவர்களுக்கும் கூறவேண்டும், அதின்மூலம் நமது ஜனங்களைச் சுற்றி குடியிருக்கிற மற்ற ஜனங்களும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை உடையவர்களாக ஜீவியம் செய்யவேண்டுமென்று விரும்பினார். நமது இரட்சகராகிய இயேசுவும் இக்கட்டளையைத்தான் நமது சீஷர்களுக்குக் கொடுத்துவிட்டு சென்றார். நீங்கள் உலகமெங்கும்போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கிக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் மாற்.16:15,16. இவ்விதமாக சுவிசேஷத்தை பிரசங்கிப்பதுதான் தனது தலையாய கடமை என்று அப்போஸ்தலனாகிய பவுலும் கூறினார். சுவிசேஷத்தை பிரசங்கித்தும் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ 1கொரி.9:16.

ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் எந்த அளவுக்கு தேவனை அறியாத மற்றவர்கள் தேவனை அறிந்து அவருக்குப் பயப்படும்படியாக வேதத்தின் சத்தியத்தை அவர்களுக்கு போதிப்பது நமது மிக முக்கியமான கடமைகளில் ஒன்றாகும் என்று உணர்ந்து செயல்படுகிறோம் ? இன்றைய கிறிஸ்தவ சபைகள் சுவிசேஷ ஊழியத்தை வருஷத்திற்கு ஒருமுறை கொண்டாடும் பண்டிகையாக அல்லவா அதை சடங்காச்சாரமான முறையில் செய்கிறார்கள். நம்மை சுற்றியுள்ள ஜனங்களின் இரத்தப்பழி நம்மிடத்தில் கேட்கப்படும் என்பது பற்றி நாம் எப்போதாவது சிந்திப்பதுண்டா. நம்முடைய சாட்சிகளை கேட்கிற

..ள் நம் ஜீவியத்தையும் பார்க்கிறார்கள். ஆகவே அவர்கள் நம் ..தைப் பார்த்து இதுவா கிறிஸ்தவம் என்றுசொல்லி தேவனுடைய நாமம் ..கப்படும் அளவுக்கு நம்முடைய ஜீவியம் கேடுபாடுடையதாக இருக்கிறதா? ..வனைக் குறித்தும், அவரின் சுவிசேஷத்தைக் குறித்தும் நமக்கு ஒரு ..மையான வைராக்கியம் உண்டா?.

..ன்று உலகம் அழிவை நோக்கி மிகவேகமாக விரைந்து சென்று ..டிருக்கிறதே. இந்த உலகம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் கற்று அதின் .. அழிவுக்குத் தப்பவேண்டுமே. அதற்காக நாம் பிரயாசப்படவேண்டாமா? ..யாவது நமது ஆழ்ந்த நித்திரையை விட்டு எழுந்து, கர்த்தருக்காக ..ளையும், உபத்திரவங்களையும் சகித்து, நம் ஜீவியத்தின் மூலமாகவும், ..ரின் மூலமாகவும் நம் தேவனைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்கமுயற்சி ..வோமா?

..மது இரட்சகராகிய இயேசு வரக் காலமாகிவிட்டது. முதலாவது நம்மையும் ..ம்பத்தையும் ஆயத்தப்படுத்தி பின் நம்மை சுற்றியுள்ள, மற்றவர்களையும் ..ரின் வருகைக்காக ஆயத்தப்படுத்துவோம். கர்த்தர்தாமே கிருபை ..வாராக.

..ர்த்தருக்குப் பயப்படும்படிக்கு கற்பனைகளைக் கைக்கொள்ள ..ண்டும்.

கர்த்தருக்குப் பயப்படும்படிக்கு அவருடைய கற்பனைகளைக் ..க்கொள்ளக்கடவாய் உபா.8:6.

நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை உடையவர்களாயிருக்க நாம் ..தரின் கற்பனைகளை அதாவது வேதத்தைக்கைக்கொள் வேண்டும். ..கொள்வது என்றால் என்ன என்று கேட்கலாம். அதாவது வேத வசனம் .. போதிக்கிறதோ அல்லது தேவன் என்னகட்டளை கொடுத்திருக்கிறாரோ. ..ன்பிரகாரம் நம் ஜீவியத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். அதாவது வேத ..னம் போதிக்கிற வண்ணமாக மட்டும் நம் கிறிஸ்தவ ஜீவியம் அமைந்ததாக ..க வேண்டும். அதுவல்லாது வேறு எந்தவித உபதேச அடிப்படையிலும் நம் ..தவ ஜீவியத்தை அமைத்துக்கொள்ளக் கூடாது.

..கிறிஸ்தவ ஜீவியத்துக்கு அடிப்படையாக உள்ள காரியங்கள் ..னந்திரும்புதல் b) ஞானஸ்நானம் c)பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுவது ..கும். இன்று பெரும்பாலுமான சபைகளில் இந்தஅடிப்படை உபதேசத்தையே ..றிவிட்டார்கள். ஒரு மனிதன் கிறிஸ்தவகுடும்பத்தில் பிறப்பதினாலோ, ..ஸ்தவ ஆலயங்களுக்கு காணிக்கைகள் கொடுப்பதினாலே, பண்டிகைகள் ..ண்டாடுவதினாலோ, அவன் கிறிஸ்தவனாகிவிடுகிறதில்லை அவன் ..றிஸ்தவன் என்ற தகுதியைப் பெற 2கொரி.5:17ல் கூறபட்டுள்ள புது ..ருஷ்டியின் அநுபவத்திற்குள் வரவேண்டும் ஒருமனிதன் கிறிஸ்தவனாக மூன்று ..வித அநுபவங்களை பெற்றிருக்கவேண்டும். அவைகள் a)விடுதலை b) மீட்பு

c) இரட்சிப்பு என்பதாகும் இந்த மூன்று வித அநுபவங்களைப் பெற ஒரு மனிதன் மூன்று காரியங்கள் செய்ய வேண்டும். அவைகள் a) மனந்திரும்புதல் b) ஞானஸ்நானம் எடுத்தல் c)பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுதல் ஆகும். இந்த காரியங்கள் பற்றி எனது இரட்சிப்பு என்ற புத்தகத்தில் விபரமாக எழுதியுள்ளேன், அதை வாசித்து இந்தக் காரியங்களை தெளிவாக அறிந்துகொள்ள பார்க்கவும்.

இன்று கிறிஸ்தவர்கள் வேதவசனத்திற்கு மாறாக தங்கள் ஜீவியத்தை அமைத்துக்கொள்வதினால் கிறிஸ்தவர்களிடத்தில் காணப்பட வேண்டியதான பரிசுத்த ஜீவியம், விசுவாசத்தில் வளர்வது. கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்வது எல்லாக் காரியங்களிலும் தேறினவர்கள் ஆவது கர்த்தருடைய வருகையில் காணப்பட வேண்டும். என்ற வாஞ்சை முதலியவை சிறிதளவும் இல்லாதவர்களாக உலகத்தாரைப் போல் ஜீவிக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

இன்றுள்ள கிறிஸ்தவர்கள் மண்குதிரையை நம்பி ஆற்று வெள்ளத்தில் இறங்கிய மனிதனைப்போல் தாங்கள் தவறான உபதேசங்களை கைக்கொள்கிறவர்களாக இருந்து; தங்கள் வாழ்க்கையில் சோதனைகள், கஷ்டங்கள் வியாதிகள், மற்றவர்களின் விரோதங்கள் முதலான வெள்ளங்கள் வந்து தங்களைத் தாக்கும்பொழுது. தேவ வல்லமையை தேவனின் செயலை சிறிதளவும் அறிய இயலாதவராக விக்கிரகங்களிடத்தில் குறி கேட்பது, மனிதபலத்தை, பண பலத்தை சார்ந்திருப்பது போன்ற காரியங்களைச் செய்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் செய்து விடடு தங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லையென்றால் தேவன் எங்களைச் சோதிக்கிறார். எங்களுக்கு நல்ல நேரம் இல்லை, அல்லது யாரோ எங்களுக்கு செய்வினை வைத்து விட்டார்கள் அதினால்தான் இவ்விதமான கஷ்டங்கள் எங்களுக்கு வருகிறது என்கிறார்கள். இவர்கள் வேத வசனத்தைக் கைக்கொண்டு நடக்கிறவர்களாய் இருந்தால் எவ்வளவு நன்றாயிரக்கும்.

எல்லா கிறிஸ்தவரும் அறிந்துகொள்ளவேண்டியதான சில முக்கியமான காரியங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

a) வியாதி, கஷ்டம், மரணம், போன்ற பொல்லாங்கான காரியங்களினால் தேவன் நம்மை சோதிக்கிறவரல்ல. சோதிக்கப் படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக, தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும். **யாக்.1:13-15.**

b) நம் வாழ்க்கையில் கெட்ட நேரம் நல்ல நேரம் என்று ஒன்றும் கிடையாது. நம் வாழ்க்கையில் நமக்குநேரிடுகிறதான எல்லா காரியங்களும் நமது நன்மைக்காகவே என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில்

அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோம.8:28. நான் உபத்திரவப்பட்டது எனக்கு நலமது. அதினால் உமது பிரமாணங்களை கற்றுக்கொள்கிறேன். சங்.119:17. நான் உபத்திரவபடுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன். இப்பொழுது உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். சங்.119:67.

c) இன்று கிறிஸ்தவர்களில் அநேகர் சொல்கிறதான காரியம், யாரோ எங்களுக்கு செய்வினை வைத்து விட்டார்கள்; அதினால்தான் எங்களுக்கு இவ்விதமான எல்லா வியாதிகளும், கஷ்டங்களும் வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் கர்த்தரின் வேதம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை. இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை. எண்.23:23. சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது. லூக்.10:19.

தேவன் தமக்கு சத்துருவின் வல்லமையை மேற்கொள்ள அதிகாரம் கொடுத்திருக்கிறார். ஆனால் நமக்கு அந்த அதிகாரத்தை பயன்படுத்தத் தெரியவில்லை. பாம்பு, தேள் முதலானவைகள் நம்மைக் கடித்தால்கூட நமக்கு ஒரு சேதமும் வராமல் நம்மை காப்பதாக தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார். நம்மால் அவைகளை விசுவாசிக்க முடியவில்லையே. ஆகவேதான் வேதனைப்படுகிறோம்.

d) அநேக சந்தர்ப்பங்களில் பல மனிதர்களின் விரோதங்கள் நமக்கு ஏற்படுகிறது. நமக்கு எப்பொழுது ஆபத்து வருமோ என்று அஞ்சி நடுங்குகிறோம். இது பற்றி வேதவசனம் என்ன கூறுகிறது? உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்கிறார். ஏசா.54:17. உன்னை தொடுகிறவன் அவருடைய கண்மணியை தொடுகிறான். சக.2:8. ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமை படுத்துவாய். சங். 50:15.

மேற் கூறப்பட்டுள்ள வசனங்கள் எவ்வளவு அருமையான வாக்குத்தத்தங்கள் ஆகும். இன்னும் இவ்விதமான அநேக வசனங்கள் வேத புத்தகத்தில் நமக்காக கொடுக்கப்பட்டுள்ளது. நாம் ஏன் அவைகளை சரியாக கற்று சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு அந்த வசனங்களைப் பயன்படுத்தி நமது கஷ்டங்களில் இருந்து விடுதலைபெற முயற்சி செய்யக் கூடாது. கிறிஸ்தவ ஜீவியம் சௌபாக்கிய ஜீவியம் என்று பாடுகிறோம். ஆனால் உண்மையில் கிறிஸ்தவ ஜீவியம் எல்லாவித

தீமையும் நிறைந்த ஜீவியமாக இருக்கிறதென்றால் அதற்கு நாம்தானே காரணமாயிருக்கிறோம். சிறிது சிந்திப்போமா?

தேவனின் வார்த்தைகளை உபயோகிப்பது பற்றி சில காரியங்களை நாம் அறிந்திருக்க வேண்டும்.

i) நாம் பிள்ளைகளானால் (தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு) சுதந்திரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே. ரோம.8:17. மேற்கூறபட்டுள்ள வசனத்திலிருந்து நாம் பிள்ளைகளாயிருந்தால்தான் அவருடைய வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ள நமக்கு உரிமையுண்டு என்று அறியலாம். யார் அவருடைய பிள்ளைகள்? அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார். யோவா.1:12. நாம் கர்த்தராகிய இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால் மட்டுமே நாம் அவருடைய பிள்ளைகளாக முடியும். இல்லையென்றால் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரராக முடியாது. உண்மையிலேயே நாம் தேவனின் பிள்ளைகள்தானா? அல்லது பிள்ளைகள் போல் வேஷம் போட்டுக்கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோமா? சிறிது சிந்தித்துப்பார்ப்போம்.

ii) சுதந்திரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும் அவன் சிறுபிள்ளையாயிருக்கும் காலமளவும், அவனுக்கும் அடிமையாவனுக்கும் வித்தியாசமில்லை .... அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைபட்டவர்களாயிருந்தோம். கலா.4:13. நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ச்சியற்றவர்களாக இவ்வுலக பழக்க வழக்கங்களுக்கு ஏற்றபடி நாள் பார்ப்பது, சகுனம் பார்ப்பது இன்னும் இவ்விதமான பல சடங்காச்சாரமான காரியங்களை செய்கிறவர்களாக, வளர்ச்சியற்ற சிறுபிள்ளையைப்போல் இருப்போம் என்றால் நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க முடியாதவர்களாயிருப்போம். நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் ஆவிக்குரிய காரியங்களில் நாம் நாளுக்கு நாள் வளர்கிறவர்களாக இருக்கவேண்டும்.

iii) இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படுகிறது. கலா.3:22. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம் வாழ்க்கையில் சுதந்தரிக்கவேண்டும் என்றால் நமக்கு விசுவாசம் கட்டாயம் வேண்டும். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. மத்.13:58. நாம் அவிசுவாசம் உடையவர்களாய் இருந்தால் நாம் தேவனின் வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க முடியாது.

இந்த கடைசி நாட்களில் ஜீவிக்கிறதான நாம் வேதவசனத்திற்கு ஏற்றவாறு

...ியத்தை அமைத்துக்கொள்ள பார்ப்போம். கிறிஸ்தவ ஜீவியத்தில் ...வர்களாய் விசுவாசத்தோடு தேவன் நமக்காக வாக்குத்தத்தம் ...ள்ள ஆசீர்வாதமான காரியங்களை சுதந்தரித்துக்கொள்வோம்.

...தரின் கற்பனைகளைக் கைக்கொள்வதினால் நாம் பெற்றுக்கொள்ளக் ...ல ஆசீர்வாதங்களைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நீடிய ஆயுசு. உபா.6:1.

நாம் அவருக்குப் பரிசுத்த ஜனமாயிருப்போம். உபா.26:18,19.

நமது கையின் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படும். உபா.7:12,13.

நாம செய்வதெல்லாம் வாய்க்கும். உபா.29:9.

கர்த்தர் நம்மை உயர்த்துவார். சங்.37:34.

கர்த்தர் நம்மைக்குறித்து சந்தோஷமாயிருப்பது. உபா.30:10. சங்.19:11.

நமது வாழ்க்கையில் தீங்கு வராது. பிர.8:5.

மரணத்தைக் (நரகத்தை) காண்பதில்லை. யோவா.8:51.

...ந்த கடைசி நாட்களில் ஜீவிக்கிறதான நாம் கர்த்தரின் கட்டளைகளை ...க் கைக்கொண்டு ஜீவிப்போம். தேவன் நமக்காக வாக்குத்தத்தம் ...ியுள்ள எல்லாக் காரியங்களையும் சுதந்தரித்தவர்களாக, இவ்வுலகில் ...திக்கப்பட்ட ஜனங்களாக ஜீவிப்போம்.

...ற்பனைகளின்படி நடப்பது :

...ன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான ...திற்குப் பயப்படும்படிக்கு நீ இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த ...யப்பிரமான வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக்கடவாய். ... 28:58.

...ாம் கர்த்தருக்குப் பயப்படும்படிக்கு நியாயப்பிரமாண வார்த்தைகளின்படி ...து வேத வசனங்களின்படி வாழந்துகொள்வது என்பதுதான் நாம் வேத ...களின்படி நடப்பதாகும். வேதவசனத்தின்படி எவ்விதமாக நாம் வாழ்ந்து ...ளவேண்டும். எவ்விதமாக நாம் ஜீவிக்கக்கூடாது என்று திட்டவட்டமாக ...க்கிறது என்றால் நாம் அதின் பிரகாரம் மட்டும் ஜீவிக்கவேண்டுமே ஒழிய ...வசன உபதேசத்துக்கு மாறாக நாம் ஜீவிக்கக்கூடாது. உதாரணமாக ...ாரம் செய்யக்கூடாது என்று வேத வசனம் போதித்தால் நாமும் அவ்விதமாக ...கவேண்டுமே ஒழிய நாம் விபசாரம் செய்கிறவர்களாக ஜீவிக்கக்கூடாது.

இந்த அத்தியாயத்தில் இதுவரையில் மூன்று காரியங்களைப் பார்த்தோம். ...வது a) வேதத்தை கற்பபது b) வேதத்தைக் கைக்கொள்வது ...தத்தின்படி நடப்பது ஆகும். இந்த மூன்று பிரதானமானக் காரியங்களையும் ... செய்யவேண்டும் என்றுதான் தேவன் நமது கையில் தமது

வேதபுத்தகத்தைக் கொடுத்திருக்கிறார். வேத புத்தகத்தை சரியான முறையில் கற்பதும், எவைகளை நாம் நிறைவேற்றவேண்டும் என்று போதிக்கிறதோ அந்தக்காரியங்களை நிறைவேற்றவும் நாம் எவ்விதம் ஜீவியத்தை அமைத்துக் கொள்ளும்படியாக போதிக்கிறதோ அவ்விதமாக மட்டும் நமது ஜீவியமுறையை அமைத்துக்கொள்ளவும் வேண்டும்.

இன்றைய கிறிஸ்தவர்களில் சிலர் வியாதி நேரங்களில் வேத புத்தகத்தை தங்கள் தலைமாட்டில் வைத்துக் கொள்கிறார்கள். மற்ற நேரங்களில் அதைகுப்பைக்குள் எறிந்து விடுகிறார்கள். இது வேதத்தைப்பற்றி கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளதான மூட நம்பிக்கையாகும். நமது வியாதி நேரங்களில் வேதபுத்தகத்தை நமது தலைமாட்டில் வைப்பதினால் நமக்கு எவ்வித பயனும் கிடைக்காது. ஏனெனில் இவ்விதம் வேத புத்தகத்தை நமது தலைமாட்டில் வைக்கும்பொழுது, அந்த வேத புத்தகத்திலிருந்து எந்தவித வல்லமையும் வெளிப்படுவதில்லை. மாறாக வேதபுத்தகத்தை நாம் சரியாகக் கற்று வேத வசனங்களை நம் இருதயத்தில் பதித்துக்கொண்டு, நமது வியாதி நேரங்களில், துன்ப துக்க நேரங்களில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு கர்த்தாவே உம்முடைய வசனம் இவ்விதம் கூறுகிறதே, இப்பொழுது இந்த சூழ்நிலையில் இருந்து எங்களுக்கு விடுதலையளியும் என்றுக்கேட்டால் கர்த்தர் நிச்சயம் நமக்காக கிரியை செய்கிறவராய் நமக்கு விடுதலையளிப்பார். பிசாசும் வேதவசனத்திற்குத்தான் பயப்படுகிறானே ஒழிய நம்முடைய வெறும் ஜெபத்திற்கு அல்ல. ஆண்டவராகிய இயேசுவும் தனக்குப் பிசாசினால் சோதனை வந்தபோது வேத வசனங்களின் மூலமாகத்தான் சாத்தானை மேற்கொண்டார். நாமும் ஏன் இவ்விதம் முயற்சி செய்யக்கூடாது.

நாம் வேதவசனத்தை பயன்படுத்தும்பொழுது அதை சரியான முறையில் பயன்படுத்த அறிந்திருக்கவேண்டும். உதாரணமாக ஒரு வசனத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். **நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க்கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர்கட்டளைக்கு செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால் நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் யாத்.15:26.**

நமது வியாதி நேரங்களில் மேற்கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தை பயன்படுத்தி ஜெபிக்கலாம். ஆனால் அவ்விதம் ஜெபிக்குமுன் அந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள அவர் சத்தத்தைக் கேட்டு செம்மையானவைகளைச் செய்து, கட்டளைகளுக்குச் செவிகொடுத்து கைக்கொள்ளுதல் போன்ற நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோமா என்பதைஞாபகத்தில் கொள்ளவேண்டும். நாம் நிபந்தனைகளை நிறைவேற்றி அவரிடம் கேட்கும்பொழுது உடன்தானே சுகம் கொடுப்பார். கொஞ்சம் முயற்சிசெய்து பார்ப்போமா?

சிலநேரம் வியாதிக்காக ஜெபிக்கும்பொழுது, நாம் ஜெபித்து முடிந்தவுடன்

...பத்திற்கு போகவேண்டும் என்று ஏற்கனவே நமது மனதில் தீர்மானித்து ...போமானால், அது நமது அவிசுவாச நிலையைக் காட்டுவதாகவுள்ளது. ...வே நாம் அவிசுவாசத்தோடு ஜெபித்தால் நம் ஜெபத்திற்கு நாம் பலனை ...பார்க்க முடியாது.

இவ்வுலகின் கடைசி நாட்களில் ஜீவிக்கிறதான நாம் கர்த்தருடைய ...த்திற்கு ஏற்றபடி நம் ஜீவியத்தை அமைத்துக்கொள்ளப்பார்ப்போம், ...வகளைக் கைக்கொள்வோம். வேதவசனம் போதிக்கிறபடி நடப்போம். ...சனங்கள் எல்லாவற்றையும் முழுமையாக விசுவாசிப்போம். ...க்கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும் பயன்படுத்துவோம். ...ஜீவியம் செய்வோம். நம்தேவனின் மகத்தான நாமத்தை ...மைப்படுத்துவோம். அல்லேலூயா.

தசமபாகம் கொடுப்பதின்மூலம் கர்த்தருக்குப்பயப்படும் பயத்தை ...கிறோம்.

நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்போழுதும் பயந்திருக்கப் ...ும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் ...ளையும் எல்லாப்பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் தேவனாகிய ...த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே ...ன் தானியத்திலும், உன் திராட்சைரசத்திலும், உன் எண்ணையிலும் ...மபாகத்தை கொடுப்பாயாக. உபா.1422,23.

தசமபாகம் கொடுப்பதுபற்றி எழுதுவது சிறிது சிரமமான காரியமாகவுள்ளது. ...னில் கிறிஸ்தவ சபைகளின் ஊழியக்காரர்கள் தங்கள் சுய நலத்துக்காக அல்லது ...கள் வருமானத்துக்காக இந்த தசமபாகத்தைப்பற்றியதான உபதேசத்தை ...களுக்கு சாதகமாக மாற்றிப்போதிக்கிறார்கள். இது சரியா, தவறா என்பது பற்றி ...ன எதுவும் எழுதவிரும்பவில்லை. கர்த்தருடைய சமூகத்தில் நான் காத்திருந்து ...றுக்கொண்ட சிலக்காரியங்களை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

பழைய ஏற்பாட்டுக்கால தேவ ஜனங்கள் கைக்கொள்ளும்படியாய் தேவன் ... காரியங்களைக் கட்டளையிட்டிருந்தார். அவையாவன 1) விருத்தசேதனம், ...ய்வு நாள் ஆராதனை, 3) ஆசரிப்புக்கூடார ஆராதனை முறைமைகள் 4) ...செலுத்துவது 5) பண்டிகைகள் கொண்டாடுவது. இந்த ஐந்துகாரியங்களையும் ...ழைய ஏற்பாட்டு தேவ ஜனங்கள் சரீரப்பிரகாரமாக அநுசரித்தார்கள். ஆனால் புதிய ...றபாட்டு கால தேவ ஜனங்களாகிய நாம் அவைகளை ஆவிக்குரியபிரகாரமாக அநுசரிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். நமது இரட்சகராகிய இயேசு அவர் ...மது சரீரத்திலே நியாயப்பிரமாணத்தின் எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றி ...டித்து நமக்காக புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணியுள்ளார். எபி. 10:19. ஆகவே நாம் நியாயப்பிரமாண சட்டதிட்டங்களுக்கு உள்ளானவர்கள் அல்ல.

அதுபோலவே கர்த்தருக்கு தசமபாகம் கொடுப்பதுபற்றியும் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் திரும்ப திரும்ப கூறப்பட்டுள்ளது. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஒரு இடத்தில்கூட தசமபாகத்தை குறித்து கூறப்படவில்லை. இதிலிருந்து இந்த தசமபாக உபதேசமானது புதிய ஏற்ப்பாட்டுக்கால தேவ ஜனங்களுக்குரியதல்ல என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம். அப்படியானால் புதிய ஏற்பாட்டு தேவஜனங்கள் கர்த்தருக்கு எவ்விதம் கொடுக்கவேண்டும். என்று பார்ப்போம்.

i) நாம் கர்த்தருக்காக அதிகம் கொடுக்கவேண்டும்.

லூக்கா சுவிசேஷம் 19ம் அதிகாரத்தில் முதல் 14 வசனங்களில் தேவாலயத்துக்கு ஜெபம் செய்யப்போன இரண்டு மனிதர்களை பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் தேவனே நான் தசமபாகம் கொடுக்கிறேன். வாரம் இரண்டுமுறை உபவாசிக்கிறேன். என்றுச் சொன்னான். தான் தசமபாகம் கொடுப்பதின் மூலமாகவும் உபவாசிப்பதின் மூலமாகவும்தான் நீதிமானாக ஆகிறான் என்று எண்ணினான். பழைய ஏற்பாட்டு தேவ ஜனங்கள் தேவ நீதியைப்பெற தசமபாகம் கொடுத்தார்கள். நம் இரட்சகராகிய இயேசு சொன்னார். **வேதபாரகர்கள், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன்** என்றார். மத்.5:20.

நம்முடைய நீதியின் கிரியையானது வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதிக் கிரியைகளைவிட அதிகமாய் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். உதாரணமாக துவக்கத்தில் நமது வருமானத்தில் ஒரு பதினோரு சதவீதம் கர்த்தருக்குக் காணிக்கையாக கொடுக்கப் பார்ப்போம். நாம் ஆராதிக்கிற தேவன் ஐஸ்வர்ய சம்பண்ணர் ரோம.10:12. கர்த்தர் நம்மை அதினமூலம் அபரிதமாக ஆசீர்வதிப்பார். நாம் கர்த்தருக்காக அதிகமாக கூட்டிக் கொடுப்போம். என்றால் இன்னும் கர்த்தர் நம்மை அதிகமாக ஆசீர்வதிப்பார். இவ்விதமாக நாம் கர்த்தருக்காக அதிகமாகக் கூட்டிக்கொடுக்கப் பழக வேண்டும். முயற்சிசெய்வோமா? நாம் தசமபாகம் கொடுப்பதோடு நின்றுவிடக் கூடாது.

ii) தியாகத்தோடு கொடுப்பது. (லூக்.21:1-4)

மேற் கூறபட்டுள்ள வசனங்களில் ஏழைவிதவை காணிக்கை போட்ட சம்பவம் கூறப்பட்டுள்ளது. அநேகர் தங்கள் ஐஸ்வரியத்திலிருந்து எடுத்துக் காணிக்கை போட்டனர். ஆனால் ஒரு ஏழை விதவையோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்காக வைத்திருந்த இரண்டு வெள்ளிக் காசையும் போட்டு விட்டாள் என்றுக் கூறப்பட்டுள்ளது. ஐஸ்வர்யவான்கள் போட்டகாணிக்கையோடு ஒப்பிட்டு பார்த்தால் அந்த ஏழை விதவை போட்ட காணிக்கை மிகக் குறைவானதே. ஆனால் அவள்போட்ட காணிக்கையின் சதவீதத்தைப் பார்க்கும் பொழுது அது நூறு சதவீதம் ஆகிறது. இது அந்த ஏழை விதவையின் தியாகத்தைக் காட்டுகிறது.

[illegible]

...திலிருந்து பெற்ற எல்லா நன்மைகளையும் உணர்ந்து கர்த்தருக்கு ...பூர்வமாயும், மன உற்சாகமாகவும் கொடுப்போம்.

யாருக்கு கொடுப்பது எதற்கு கொடுப்பது

நாம் நமது காணிக்கைகளை யாருக்குக் கொடுக்கலாம் அல்லது எந்த எந்த காரியங்களுக்காக கொடுக்கலாம் என்றுபார்ப்போம்.

ஊழியர்களுக்கு கொடுப்பது

மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மையிலும் பகிர்ந்து கொடுக்கக் கடவன். கலா.6:6.

நமக்காக ஊழியஞ் செய்கிற தேவ ஊழியக்காரர் பட்டினியோடும், பசியோடும் இருந்து, ஐயோ கர்த்தாவே உமக்கு ஊழியஞ்செய்வதினால் நாங்கள்

பட்டினியோடும், பசியோடும் இருக்கவேண்டியதாகவுள்ளதே என்று கதறும்படியாக அல்ல, ஊழியக்காரர்கள் எல்லா வகையிலும் திருப்தியான நிலையில் இருந்து கர்த்தருக்கு ஊழியம்செய்ய நாம் நமக்குள்ளதெல்லா வற்றிலும் அவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது. உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்தபலியாக எப்பாப்பிராத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன். பிலி.4:18.

பவுல் அப்போஸ்தலன் திருப்தியடையும் படியாக பிலிப்பு சபையார் கொடுத்தனர். நாமும் நம் ஊழியக்காரர்கள் நமது பண உதவியினால் எல்லா வகையிலும் திருப்தியடையும்படியாகக் கொடுப்போம்.

b) கர்த்தரின் ஊழியங்களுக்கக் கொடுப்பது

ஆலயத்திலே ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களை யெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள் அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். மல்.3:10.

இங்கு கர்த்தரின் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி என்பது கர்த்தரின் வேலைக்கு எவ்விததடையும் இல்லாதபடி கர்த்தரின் ஊழியங்களுக்காக நாம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்பதாகும். இந்த நாட்களில் யார் கர்த்தரின் ஊழியத்தைச் செய்கிறார்கள், அவர்கள் ஊழியத்தின் தேவை என்ன என்று அறிந்து நாம் கர்த்தரின் மகிமைக்காக சரியான முறையில் செய்யப்படும் ஊழியங்களைத் தாங்கப் பார்க்கவேண்டும்.

c) விசுவாசிகளுக்கு அல்லது சபையில் ஏழ்மையான நிலையில்உள்ளவர்களுக்கு உதவுவது:

சமயத்துக்கு தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம். கலா.6:10.

நாம் ஊழியங்களுக்கு, ஊழியர்களுக்கு என்று மட்டுமல்ல சபையில் ஏழையான நிலையில் உள்ள விசுவாசிகளுக்கும் நாம் கொடுக்கவேண்டும். அதாவது நாம் நல்ல நிலையில் இருக்கும்போது, நமது சபையில் உள்ள இன்னொரு சகோதரனோ, சகோதரியோ தரித்திரநிலையில் இருக்கக்கூடாது. அவ்வித ஏழ்மையான நிலையில் உள்ள சகோதரர்களும் நல்ல நிலைக்கு வர உதவி செய்யவேண்டும். கம்யூனிஸ்டுகளின் பொதுவுடைமைக் கொள்கை என்பது வேதபுத்தகத்தின் உபதேசத்திலிருந்து திருடியக்கொள்கையாகும். (அப்4:32) ஆகவே நமது சபைகளில் ஏற்றதாழ்வுகள் இல்லாதபடி சம நிலையில்

[illegible]

[illegible]

[illegible]

[illegible] கர்த்தரின் உக்கிரத்தை அறிவதினால் நமக்குப் பயம் உண்டாகிறது.

உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்கவிதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்? சங்.90:11.

நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உடையவர்களாயிருக்க கர்த்தரின் உக்கிரத்தைப் பற்றி நாம் அறிந்தவர்களாயிருக்க வேண்டும். இந்த பாகத்தில் கர்த்தரின் உக்கிரம் உண்டாவதற்குரிய காரணங்களையும், இது குறித்து தேவ ஊழியர்களின் கடமையும் என்ன என்று பார்ப்போம்.

a) கர்த்தரின் உக்கிரம் எதினால் உண்டாகிறது?

1) ஜனங்கள் அந்நிய தேவர்களை சேவிப்பதால் கர்த்தரின் உக்கிரம் உண்டாகிறது. உபா.29:26, 2நாளா.34:25, எரே.44:5.

2) ஜனங்கள் கர்த்தரின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லையென்றால் கர்த்தரின் உக்கிரம் உண்டாகிறது. 2இரா. 22:13, எரே.44:5.

3) ஜனங்கள் கர்த்தரின் வார்த்தையை அசட்டை செய்வதால் கர்த்தரின் உக்கிரம் உண்டாகிறது. 2நாளா.36:16.

4) ஜனங்கள் கர்த்தரின் வார்த்தையைக் கைக்கொள்ளாததினால் கர்த்தரின் உக்கிரம் உண்டாகிறது. 2நாளா.34:21.

5) ஜனங்கள் கர்த்தரின் ஊழியக்காரர்களை நிந்திப்பதினால், பரியாசம் பண்ணுவதினால் உக்கிரம் உண்டாகிறது. 2நாளா.36:16.

b) கர்த்தரின் உக்கிரம் எத்தன்மையுடையது?

அவருடைய (கர்த்தருடைய) உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள். எரே.10:10.

c) கர்த்தரின் உக்கிரத்தினால் உண்டாகும் தண்டனை.

கர்த்தரால் வெறுக்கப்படுவது 2இரா.23:26,27.

கர்த்தரின் உக்கிரம் உண்டாகும்பொழுது அதை ஜனங்கள் சகிக்கமுடியாது. கர்த்தரால் வெறுக்கப்பட்டு வாழ்க்கையில் எல்லாவித வேதனைகளையும் அனுபவிக்கவேண்டிவரும் ஆகவே நாம் எச்சரிக்கையுடன் இருந்து அந்நிய தெய்வங்களை சேவிக்காமலும், கர்த்தரின் ஊழியக்காரர்களை நிந்தித்து, பரியாசம் செய்யாமலும், கர்த்தரின் வார்த்தைக்கு செவிகொடுத்து. அதைக் கைக்கொண்டு ஜீவிப்போம் என்றால் பாக்கியவான்களாயிருப்போம்.

d) கர்த்தரின் உக்கிரமும் ஊழியர்களின் பொறுப்பும்

கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள் மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன் கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார் உபா.9:19.

அன்று மோசே தேவனுடைய உக்கிரத்தை அறிந்து தனது ஜனங்களுக்காக நாற்பது நாள் புசியாமலும், குடியாமலும் இருந்து கர்த்தரின் சமூகத்தில் மன்றாடினான். அதுபோல நாமும் தேவ ஜனங்கள் மத்தியில் காணப்படும் சோம்பல், அசதி நிற்விசாரம் போன்றக்காரியங்களுக்காகவும், மனுக்குலத்தின் மீது தேவன் கொண்டுள்ள உக்கிரத்தை தேவன் மாற்றும் படியாகவும் தேவ ஜனங்களுக்காகவம், அழியும் மனுக்குலத்துக்காகவும் தேவ ஊழியர்கள் பயத்தோடு கர்த்தரை நோக்கி மன்றாடவேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது.

F) கர்த்தருக்கு பயப்பட இருதயம் பக்குவப்பட வேண்டும்.

மனிதர் கர்த்தருக்குப் பயப்பட அவர்கள் இருதயம் பக்குவப்பட வேண்டும், எவ்விதம் நமது இருதயம் பக்குவப்படுவது என்று பார்ப்போம்.

i) ஒரே இருதயம்:

அவர்கள் தங்களுக்கும் தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகுப்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தை .... கட்டளையிடுவேன் எரே.32:39.

நாம் கர்த்தருக்குப் பயப்படும்படிக்கு தேவன் நமக்கு ஒரே இருதயத்தைக் கொடுப்பதாக வாக்குக்கொடுக்கிறார் நமக்கு ஒரே இருதயம் ஏன் அவசியம் என்றுக்கேட்கலாம். இதற்கு கீழ்க்கண்ட வேதவசனம் விளக்கம் தருவதாக உள்ளது.

விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் மனமும் முள்ளவர்களாயிருந்தார்கள் அப்.4:32. ஆதித்திருச்சபையில் திரள்கூட்டமான ஜனங்கள் ஒரே இருதயம் உடையவர்களாக ஒன்றுபோல்

ங்கள் நாமும் தேவனோடு ஒன்றுபோல் இணைந்து செயல்பட்டால் னுக்குப் பயந்தவர்களாக தேவனின் சித்தத்தை பூரணமாக யவும் இந்த ஒரே இருதயத்தை தேவனே நமக்குக் கொடுப்பதாக கொடுக்கிறார் யாருக்கு தேவன் ஒரே இருயத்தைக் கொடுப்பார்? வின் சிறையிருப்பில் இருந்து கர்த்தர் திருப்பிக்கொண்டுவரும் ருக்கு என்பது எரே.32:27. ஐ வாசிக்கும்பொழுது புலனாகும்.

ஒவான் என்பது பாவத்தையும் விக்கிரக ஆராதனையையும் யுள்ளது. ஜனங்கள் பாவமான ஜீவியத்தையும், விக்கிரக ஆராதனைக் யையும் விட்டுவிடும்பொழுது கர்த்தருக்குப் பயப்படக்கூடிய ஒரே யை கர்த்தர் நமக்குத்தருவார்

ருதயம் ஒருமுகப்படுவது

ன உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை படுத்தும் சங்.86:11.

கூறப்பட்டுள்ள வசனத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது ராஜா தேவனை தேவனே நான் உமக்குப் பயப்படும் படிக்கு என் இருதயத்தை படுத்தும் (Unite) என்று தேவனிடம் வேண்டுகிறான். இங்கு படுத்தும் என்பது ஒன்று சேர்வது அல்லது இணைவது என்ற பொருளில் ருள்ளது. அல்லது நமது இருதயம் கர்த்தரோடு ஒன்று சேரவேண்டும் நமது இருதயம் உலகக்காரியங்களில் இருந்து அல்லது தேவனுக்கு லாத காரியங்களில் இருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும். நம் அவ்விதம் விடுதலை பெறவில்லையென்றால் தேவனோடு இணைந்து முடியாது.

து சரீர அவயவங்களில் இருதயானது மிகவும் முக்கியமானது ஆகும். மதான் எல்லா வித யோசனை சிந்தனை இவற்றிற்கு ாகவுள்ளது. நமது வாயில் பிறக்கும் வார்த்தைகளுக்கும் இருதயம்தான் ாயுள்ளது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல ன இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை க்காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத ஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான் .34,35. நம் இருதயம் எத்தன்மையுடையதாக இருக்கிறதோ மாகத்தான் நமது வாயின் வார்த்தைகளும் இருக்கும்.

ாதுவாக மனிதர்களின் இருதயம் எத்தன்மையுடையதாகவுள்ளது த கீழ்க்கண்ட வேதவசனங்கள் நன்கு விளக்கும்

அவன் (மனிதனின்) இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் டம பொல்லாததே என்று கர்த்தர் கண்டார் ஆதி.6:5.

எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ள மகாக்கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யா எரே.17:9.

சகோதரரே ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவா அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளு இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் எபி.3:12.

தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளு என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளு சங்.139:23.

இந்நாட்களில் நம் இருதயத்தின் நிலை என்ன என்று அறிந்து, நம் இருதய கர்த்தரோடு இணைந்து கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு இருக்க தாவீ போல் ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

G) கர்த்தரின் நியாயத்தீர்ப்பு குறித்த அறிவு நமக்கு பயத்தை உண்டாக்குகிறது.

உமக்குப்பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்க்கிறது. உம நியாயத்தீர்ப்புகளுக்கு பயப்படுகிறேன் சங்.119:120.

நாம் கர்த்தருக்குரிய பயம் உடையவர்களாயிருக்க கர்த்தரின் நியாயத்தீர் குறித்த அறிவு நமக்கு வேண்டும். கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் நாள் மிகவு நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து கர்த்த யார் யாரை நியாயந்தீர்ப்பார் எந்த எந்தக் காரியங்களைக்குறித் நியாயந்தீர்ப்பார் என்று அறிந்திருப்பது நல்லது.

a) யார் யாரை கர்த்தர் நியாயந்தீர்ப்பார்?

1. சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பா பிர.3:17.
2. அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர் நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் 2பேது.2:9.
3. வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பா எபி.13:4.
4. ஆகையால் மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே யாரானாலும் சரி போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை. குற்றமாக தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால் நீ மற்றவர்களை குறித்துச் சொல்லுகி தீர்ப்பினாலே உன்னைதானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய் இப்படிபட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென் அறிந்திருக்கிறோம் ரோம.2:1,2.
5. சத்தியத்தை அறியும் அறிவைஅடைந்தபின்பு நாம் மனப்பூர்வமா

பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால் பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் விரோதிகளை பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் எபி.10:26,27.

கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயத்தீர்ப்பார் என்று சொன்னவர் இன்னாரென்று அறிவோம் எபி.10:30.

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும் 1பேது.4:17.

இப்பொழுது இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது. இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான் யோவா.12:31.

பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்புக்கு வைத்திருக்கிறார் 2பேது.2:4.

தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகாவேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில்பழிவாங்கினாரே என்றார்கள் வெளி.19:2.

அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலன் அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் 2கொரி.5:10.

சிலர் நாம் சன்மார்க்க முறையிலே ஜீவிப்பதினால் தேவனுடைய ...யாயத்தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணுகின்றனர். ஒருவன் ...மார்க்க முறையில் ஜீவிப்பதினால் தேவதண்டனைக்குத் தப்பமுடியாது ...றைய விசுவாசிகளில் அனேகர் நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ...றிருக்கிறோம் ஆகவே நமக்கு நியாயத்தீர்ப்பு இருக்காது என்று ...னாதானோவென்று ஜீவிக்க ஆரம்பிக்கிறீர்களா? இது ஆபத்தானது. ...யத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் அதாவது தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ...லலது சபையின் மத்தியில்தான் துவங்குவதாகவுள்ளது. பாவஞ்செய்த ...தர்கள் கூட தப்பமுடியாதபடி நியாயத்தீருர்ப்புக்காக பாதாளத்திலே ...டைத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாது பிசாசின் ...திகாரத்திற்குள்ளிருக்கும் இந்த உலகின் ஜனங்கள் எல்லாருக்குமே ...யாயத்தீர்ப்பு உண்டு. நம் தேவனின் மகத்தான வேதசத்தியங்களை பிசாசின் ...தேசங்களாகமாற்றி, இவ்விதமான வேசித்தனமான உபதேசங்களாக மாற்றி, ...விதமான வேசித்தனமான உபதேசங்களால் கிறிஸ்தவர்கள் என்று பேர்

வைத்துக்கொண்டு விக்கிரகத்தை வணங்குகிறவர்களும் நிச்சயமாக நியாயத்தீர்ப்படைவார்கள். தேவன் யார்யாருக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்று மிகத்தெளிவாக எழுதிக்கொடுத்திருக்கிறார். நாம் கவலையற்றவர்களாயிருந்தால் நிச்சயமாக நாம் தேவ தண்டனைக்குத் தப்பமுடியாது. நமது தூக்கநிலையை விட்டு எழுந்து கொஞ்சம் புத்தியுள்ளவர்களாக கெட்டகுமாரனைப்போல் சிந்தித்து செயல்படுவோமா? தேவன்தாமே கிருபை செய்வாராக.

b) எந்தெந்தக் காரியங்களைக் குறித்து கர்த்தர் நியாயந்தீர்ப்பார்?

1) நம்முடைய அந்தரங்கமான எண்ணங்கள் செய்கைகள் பற்றி நியாயந்தீர்ப்பார்.

சகல எண்ணங்களையும், சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்கும் காலம் இனி இருக்கிறது பிர.3:17.

தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும் ரோமர் 2:16.

2) நமது வழிகளின்படி கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார்

உன்னை உன் வழிகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்ப்பேன் எசே.7:8.

3) நமது கிரியைகளுக்கு ஏற்றப்படி கர்த்தர் நியாயந்தீர்ப்பார் :

பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாக தொழுதுகொண்டு வருகிறபடியால் .... பயத்துடனே நடந்துகொள்ளுங்கள் 1பேது.1:17, வெளி.20:12,13.

ஒவ்வொருக் கிரியையும் அந்தரங்கமான ஒவ்வொருக் காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலேக் கொண்டுவருவார் பிர.12:14.

4) நம்முடைய நடவடிக்கையின்படி கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார்.

அவர்களுடைய நடக்கையின்படியேயும், ... அவர்களை நியாயந்தீர்த்தேன் எசே.36:19.

நம் இருதயத்தின் யோசனைகள், சிந்தனைகள் நாம் தெரிந்துகொள்ளும் வழி அதாவது நாம் அமைத்துக்கொள்ளும் ஜீவியமுறைகள், நமது கிரியைகளாகிய செய்யும் தொழில் உத்தியோகம் இவை யாவின்படியும் நமக்கு நியாயத்தீர்ப்பு உண்டு. நம் தேவன் நம்கையில் கொடுதிருக்கும் வேதபுத்தகம் எவ்வளவு தெளிவாக ஒவ்வொருக் காரியங்களையும் கூறுகிறது என்பதுபற்றி எண்ணும்போது, அது மிகவும் ஆச்சரியமாகவுள்ளது. கர்த்தர் கிருபையாகக் கொடுத்திருக்கும் இந்த நாட்களில் கர்த்தரின் நியாயத்தீர்ப்புக்குப் பயந்து இந்த உலகின் அழிவிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள கிருபை செய்வாராக.

நாம எவ்விதம் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு நாளில் தேவனின் தண்டனைக்குத் தப்புவது என்றும் கீழ்க்கண்ட வேதவசனங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் 1கொரி.11:31,32. அன்றியும் என் மகனே கர்த்தருடைய சிட்சையை அர்ப்பமாக எண்ணாதே. அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக்கொள்கிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்கு சொல்கிறதுபோல உங்களுக்கு சொல்லியிருக்கிற புத்தியை மறந்தீர்கள் எபி.12:5,6.

அனுதினமும் நம்மை ஆராய்ந்து பார்த்து, கர்த்தரின் சிட்சையை அற்பமாக எண்ணாமலும், சோர்ந்து போகாமலும் இருந்து நம் ஜீவியத்தைக் காத்துக்கொண்டால் நாம் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தேவனின் தண்டனைத்தீர்ப்புக்குத் தப்பமுடியும். நாம் கர்த்தரின் நியாயத்தீர்ப்பைக் குறித்து நன்றாக அறிந்துகொண்டால் கர்த்தருக்குரிய பயம் நம்மில் தானாகவே உண்டாகும்.

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பரிசுத்த ஆவியானவர் அருளுகிறார்.

கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் ஏசா.11:2,4.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளுவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த பரிசுத்த ஆவியானவரைப் பற்றி சிலக்காரியங்களை இந்த பாகத்தில் அறிந்துகொள்ளப் போம்.

இந்நாட்களில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி பலவிதக் காரியங்கள் பேசப்படுகிறது. பரிசுத்த ஆவி என்று ஒன்று கிடையாது. பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல. பரிசுத்த ஆவியின் கிரியை ஆதித்திருச்சபையின் காலத்தில்தான் இருந்தது. இப்பொழுது அது கிடையாது என்று இவ்விதமாக பல விபரீதக் கருத்துக்கள் இன்றைய கிறிஸ்தவ சபைகளில் நிலவுகிறதைக் காணலாம். அவைகளைப்பற்றி நான் ஒன்றும் எழுத விரும்பவில்லை, இந்த பரிசுத்த ஆவியானவரை நாம் பெறுவதின் மூலம் என்ன என்ன ஜீவிய மாற்றங்கள் உண்டாகிறது என்றும், இந்த பரிசுத்த ஆவியை நாம் எவ்விதம் பெற்றுக் கொள்வது என்பது பற்றியும் இந்த பகுதியில் குறிப்பிட விரும்புகிறேன்.

பரிசுத்த ஆவியினால் நம்மில் உண்டாகும் ஜீவிய மாற்றங்கள்

பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறக்கும் அநுபவத்தைப் பெறுகிறோம் யோவா.3:5,6,8, ரோம.2:29.

2) பரிசுத்த ஆவியினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் ரோம.8:15,17,19.

3) பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்கிறார் ரோம.8:9.

4) பரிசுத்த ஆவி நமக்கு அச்சாரமாக (Earnest) நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்த கொடுக்கப்படுகிறது 2கொரி.1:22; 5:2.

5) பரிசுத்த ஆவி நமது மீட்கப்படும் நாளுக்கு முத்திரையாக கொடுக்கப்படுகிறது எபே.1:13; 4:30.

6) பரிசுத்த ஆவியினால் கழுவப்படுகிறோம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் நீதிமான்களாக்கப்படுகிறோம். 1கொரி.6:11

7) பரிசுத்த ஆவியை பெறுவதின் மூலமாக மட்டும் நாம் தேவனின் சரீரமாகிய சபையில் அங்கமாகிறோம் 1கொரி.15:13.

8) பரிசுத்த ஆவியானவர் தமது சத்துருவுக்கு எதிராக ஜெயம் கொடுக்கிறார் ஏசா.59:19.

9) தேவன் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்கு கொடுத்திருக்கும் பரிசுத்த ஆவியின் மூலமாக அறிகிறோம் யோவா.3:54.

10) பரிசுத்த ஆவியானவர் நம்மை பலப்படுத்திடுவார் மீகா.3:8, அப்.1:8, ரோம.15:18, 2தீமோ.1:7 (இன்று அனேகர் பெலகீனம் என்றுச்சொல்லி பல டானிக்குகள் குடிக்கிறார்கள், இவர்கள் பரிசுத்த ஆவியால் பலப்பட்டால் நலமாயிருக்குமே)

11) பரிசுத்த ஆவியானவர் சபைகளை ஆறுதல்படுத்துகிறார் அப்.9:31.

12) பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதின்மூலம்தான் நாம் ஒரு முழுமையான இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வருகிறோம் தீத்து3:5.

13) பரிசுத்த ஆவியானவர் நாம் பெற்ற இரட்சிப்பைக் காத்துக்கொள்ள உதவிசெய்கிறார் 2தீமோ.1:14.

14) பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவனுடைய சாயலுக்கொப்பாய் மறுரூபப்படுத்துகிறார் 2கொரி3:18.

15) பரிசுத்த ஆவியானவர் கர்த்தரின் ஊழியம் செய்ய நம்மைத் தகுதிபடுத்துகிறார் அப்.1:8; 6:3.

பரிசுத்த ஆவியானவர் தேவ ஜனங்களை எச்சரிக்கிறார். 1தீமோ.4:1.

பரிசுத்த ஆவியானவர் வருங்காரிங்களைப்பற்றி அறிவிக்கிறார். 1பேது.1:11.

இதே பரிசுத்த ஆவியானவர் தாம் நமக்கு கர்த்தருக்கு பயப்படும் ...த்தையும் கொடுக்கிறார். இந்த பரிசுத்த ஆவியானவர் நமக்கு அவசியமா ...வரை பெற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை நீங்களே நிதானித்துக் ...ள்ளுங்கள்

பரிசுத்த ஆவியானவரை நாம் எவ்விதம் பெறுவது?

நமது இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுக்கிறார். அப்.15:8. (நம் இருதயம் கர்த்தரின் பார்வையில் செம்மையாயிருக்க வேண்டும்)

பரிசுத்த ஆவியைப் பெறவேண்டும் என்ற தாகம் (விருப்பம்) வேண்டும். யோவா.7:37.

பரிசுத்த ஆவியை பெற நமக்கு விசுவாசம் வேண்டும். கலா.3:2,14.

மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கவேண்டும். அப்.2:38.

நாம் பரிசுத்த ஆவியைப் பெறக் கர்த்தரிடம் கேட்கவேண்டும் (ஜெபம் செய்ய வேண்டும்) லூக்.1:13.

தேவனுக்கு கீழ்ப்படியவேண்டும். அப்.5:22.

வேனுடைய அப்போஸ்தலர் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவியை ஜனங்கள் பெற்றார்கள். அப்.8:15,16,17.

நீங்கள்இதுவரையில் பரிசுத்த ஆவியை பெறவில்லையென்றால் ...ந்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவர்களாகி, உங்கள் பாவ ஜீவியத்தை விட்டு ...னந்திரும்பி, கர்த்தரின் வார்த்தையின் பிரகாரம் ஞானஸ்நானம் பெற்று ...ருதயத்தை செம்மையாக்கி தாகத்தோடு விசுவாசத்தோடும் கர்த்தரிடம் கேட்டால் ... தேவன் உங்களுக்கு தமது பரிசுத்த ஆவியை நிச்சயமாக தந்தருள்வார். அவர் ...ாய்யுரையாத சத்தியமுள்ள தேவன் *நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை ...ாதபடி கர்த்தருடைய வருகையில் காணப்படவே முடியாது என்பதை ...வட்டமாக அறிந்து இருக்கவேண்டும்.*

இந்நாட்களில் பரிசுத்த ஆவியின் உதவியோடு கர்த்தருக்குப் பயப்படுகிற ஜனங்களாக கர்த்தருடைய வருகைக்கென்று ஆயத்தப்படுவோம். கர்த்தர் தாமே கிருபை செய்வாராக.

அத்தியாயம் 5

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் செய்யவேண்டியது

கர்த்தருக்குப் பயப்படுகிற ஜனங்கள் என்ன என்னக் காரியங்கள் செய்யவேண்டும் என்று இந்தப் பகுதியில் பார்ப்போம்.

1. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரை ஸ்தோத்தரிக்கவேண்டும்.

கர்த்தருக்குப் பயந்தவர்களே கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். சங்.135:20.

a) கர்த்தரை ஸ்தோத்தரிப்பது என்றால் என்ன?

கர்த்தரை ஸ்தோத்தரிப்பது என்ற பதத்திற்கு ஆங்கில வேதபுத்தகத்தில் Bless, Blessed, Thanks giving என்ற பதங்கள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. அதன் பொருள் கர்த்தரை வாழ்த்துவது. அல்லது நன்றி சொல்வது என்பதாகும். அதாவது கர்த்தர் நமக்கு செய்த எல்லா நன்மைகளையும் எண்ணி அவருக்கு நன்றி சொல்வது அல்லது அவரை வாழ்த்துவது நமது கடமையாகவுள்ளது.

b) கர்த்தரை ஸ்தோத்தரிப்பது என்றால் என்ன செய்கிறோம்?

i) தேவனை மகிமைப்படுத்துகிறோம் : ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை (தேவனை) மகிமைப்படுத்துகிறான். சங்.50:23. நாம் கர்த்தரை ஸ்தோத்தரிப்பதின் மூலம் அவரை மகிமைப்படுத்துகிறோம், அவரை மகிமைப்படுத்துவதற்காவே நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். (ஏசா.43:7) (என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது)

ii) கர்த்தர் செய்த நன்மைகளை மறவாமல் இருப்பது.

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. சங்.103:2.

கர்த்தர் நமக்கு செய்த எல்லா உபகாரங்களையும் மறவாமல் அவருக்கு நன்றி சொல்வது நமது கடமையன்றோ.

c) நாம் ஏன் அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும்?

அல்லது நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்கும்படியாக அவர்.... நமக்கு என்ன செய்திருக்கிறார்?

i) கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் நல்ல தேசத்திற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். உபா.8:10.

நமக்கு விரோதமாக எழும்பிய ஜனங்களிடமிருந்து கர்த்தர் நமக்கு விடுதலை கொடுத்ததற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். யாத்.18:10. சங்.124:6.

கர்த்தர் நம் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டதினால் நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்கவேண்டும். சங்.28:6; 66:20.

கர்த்தர் தமது கிருபையை நம்மிடத்தில் விளங்கச்செய்ததினால் நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்கவேண்டும். சங்.31:21; 66:20.

கர்த்தர் தமது ஜனங்களுக்கு பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர் ஆகவே அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். சங்.68:35.

நம் கர்த்தர் அதிசயங்களைச் செய்கிறவர் நம்குடும்பங்களில் அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். சங்.72:18.

கர்த்தர் தமது ஜனங்களிடையே வேறுபாடுகள் உண்டாகாதபடி, அல்லது குழப்பங்கள் உண்டாகாதபடி செய்வதினால் நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். யோசு.22:33.

இந்நாட்களில் கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக, கர்த்தர் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரை ஸ்தோத்தரிப்பதினால் கர்த்தரை மகிமைப்படுத்துவோம் என்றால் அது எவ்வளவு மேன்மையுள்ளதாக இருக்கும்.

. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரை துதிக்க வேண்டும்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே கர்த்தரை துதியுங்கள். சங்.22:23.

a) கர்த்தரை துதிப்பது என்றால் என்ன?

கர்த்தரை துதிப்பது என்ற பதத்திற்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Prsise) என்ற பதம் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. இந்தவார்த்தையின் பொருள் கர்த்தரை புகழ்வது அல்லது போற்றுவது என்பதாகும். ஆம் நாம் கர்த்தரைத் துதிப்பதன் மூலம் கர்த்தரைப் போற்றுகிறோம். அவரைப் புகழுகிறோம். வேதத்தை வாசித்து பார்க்கும்பொழுது பெரும்பாலும் ஸ்தோத்திரம் என்ற பதம் நாம் கர்த்தரிடம் இருந்து பெற்றுகொண்ட சரீரப்பிரகாரமான நன்மைகளுக்காக நாம் கர்த்தருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக ஸ்தோத்திரம் என்றபதம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கர்த்தரைத் துதிப்பது என்பது நாம் கர்த்தரிடம் இருந்து பெற்ற ஆவிக்குரிய நன்மைகளுக்காக நாம் கர்த்தரை புகழுவது அல்லது போற்றுவது என்றபொருளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

b) கர்த்தரை துதிப்பது என்றால் நாம் என்ன செய்கிறோம்?

கர்த்தரை துதிப்பது என்றால் நாம் கர்த்தரை உயர்த்திச் சொல்வதாகும்

(சங்.149:8) அதாவது கர்த்தரை உயர்த்திச் சொல்வது புகழந்து பேசுவது என்பதாகும். இன்று அரசியல்வாதிகள் தங்கள் தலைவர்களை காவல் தெய்வம் என்றும், இதய தெய்வம் என்றும், உயர்த்தி பேசுகிறார்கள். நமக்கு எல்லா வகையிலும் நன்மை செய்து வருகிற தேவனை நாம் எவ்வளவாக உயர்த்திக் கூறவேண்டும்.

c) நாம் ஏன் கர்த்தரை துதிக்கவேண்டும்?

அல்லது நாம் கர்த்தரை துதிக்கும்படியாக கர்த்தர் நமக்கு என்ன செய்திருக்கிறார்?

i) கர்த்தர் நமது தேவன். ஆகவே நாம் அவரை துதிக்கவேண்டும். சங்.110:28.

ii) நமது தேவன் நமது துதிக்குப் பாத்திரர். சங்.18:3

iii) கர்த்தரைத் துதிப்பது நல்லது, இன்பமானது, ஏற்றது. சங்.92:6; 52:9; 147:1.

iv) கர்த்தர் நமக்கு நல்லவராக இருக்கிறார். ஆகவே நாம் அவரைத் துதிக்க வேண்டும். சங்.136:1.

v) நமது தேவன் இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசஞ்செய்கிறார். சங்.22:3.

vi) துதி செய்வது செம்மையானவர்களுக்கு தகும். சங்.33:1.

vii) நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் கர்த்தரை துதிப்பேன். சங்.139:14.

viii) கர்த்தரின் வல்லமைக்காக கர்த்தரைத் துதிப்பேன். சங்.150:1,2.

ix) கர்த்தரின் இரட்சிபுக்காக (பாதுகாப்புக்காக) கர்த்தரை துதிக்கவேண்டும். சங்.42:5,11; 43:5,11; 118:21.

x) கர்த்தரின் கிருபைகளுக்காக கர்த்தரைத் துதிக்க வேண்டும். சங்.107:9,21,31, அப்.3:8.

xi) கர்த்தர் செய்த அதிசயமானக் காரியங்களுக்காக துதிப்பது. சங்.107:9,16,21.

xii) கர்த்தர் நமது விண்ணப்பங்களுக்கு வேண்டுதல்களுக்கு செவிகொடுத்ததினால் நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். சங்.118:21.

xiii) கர்த்தரின் ஆலோசனைக்காக கர்த்தரைத் துதிப்பது. சங்.16:7.

xiv) கர்த்தர் நமது கன்மலை (பாதுகாப்பு) ஆகவே நாம் அவரைத் துதிக்க வேண்டும். சங்.18:46.

xv) கர்த்தருடைய நீதி நியாயங்களுக்காக கர்த்தரைத் துதிப்பது. சங்.7:17; 119:162,164.

[illegible]

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரின் கிருபை என்றுமுள்ளது என்று சொல்வது.

கர்த்தர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக. சங்.118:4

கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய பெற்றுக்கொள்ளவேண்டிய மிக முக்கியமானக் காரியம் கிருபை ஆகும். ஆகவே இந்தப் கிருபையைப்பற்றி சிறிது விபரமாக இந்தபகுதியில் அறிந்துகொள்ளப் போவோம்.

கிருபை என்றால் என்ன?

நாம் தேவனிடமிருந்து ஒன்றை பெற தகுதியற்றவர்களாயிருக்கும் பொழுது, தேவன் நமது தகுதியைபாராது நமக்கு இலவசமாக அருளும் ஈவுக்கு கிருபை என்றுக் கூறப்படுகிறது. நாம் தேவனிடம் இருந்து பெற்ற எல்லா ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான நன்மைகளுக்கு நாம் சிறிதளவும் தகுதியானவர்கள் அல்ல. ஆனால் தேவன் தமது கிருபையால் அவைகளை நமக்கு இலவசமாகக் கொடுக்கிறார்.

(i) கர்த்தரின் கிருபையினால் நாம் பெற்றக்காரியங்கள் எவைகள் என்றுப் பார்ப்போம்

A. ஆவிக்குரிய நன்மைகள்

1) நாம் கர்த்தரிடம் வர கர்த்தர் கிருபை அவசியம். சங்.36:7
2) கர்த்தர் கிருபையினால் நம்மை அழைத்தார். கலா.6:15.
3) கிருபையினால் நமது பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. எபி.8:12.

4) கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம். எபே.2:5,8, தீத்து.2:11.

5) கிருபையினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். ரோம.5:12; 3:24, தீத்து 3:6

6) கிருபையினால் நாம் தேவனுடைய சுதந்திரமாகிறோம். ரோம.4:16.

7) கிருபையினால் கர்த்தரின் இரக்கத்தைப் பெருகிறோம். ஏசா.60:6.

8) கிருபையினால் வரங்கள் அளிக்கப்படுகிறது. ரோம.12:6.

9) கிருபையினால் நாம் கிறிஸ்துவுக்கு சம்பூரணமுள்ளவர்களாகிறோம். 1கொரி.5:6.

10) கர்த்தரின் கிருபை நாம் எவ்விதம் ஜீவிக்க வேண்டும் என்றும் கர்த்தரின் வருகைக்காக நாம் காத்திருப்பது பற்றியும் நமக்குப் போதிக்கிறது. தீத்து 2:11,12,13

11) கிருபையினால் மாசற்றவர்களாய் நடப்போம். 2கொரி.1:12.

12) ஊழியம் செய்யக் கர்த்தர் கிருபை அளிக்கிறார். ரோம.15:16, 1கொரி.5:10, எபே.3:7,11.

13) தேவனை ஏற்ற விதமாய் ஆராதிக்க கர்த்தரின் கிருபை வேண்டும். சங்.5:7, எபி.12:28.

14) கிருபையினால் கர்த்தர் நம்மை உயிர்ப்பிக்கிறார். சங்.199:88.

15) நமக்கு சகாயஞ்செய்யும் கிருபை. எபி.4:16.

16) கிருபையின் பரிபூரணத்தினால் இயேசுவோடு ஆளுகை செய்வது. ரோம.5:17.

B. கர்த்தரின் கிருபையினால் நாம் சரீரப்பிரகாரமாக பெறும் நன்மைகள்

i) கிருபையினால் கர்த்தர் நம் தேவைகளை சந்திப்பார். சங்.59:10.

ii) கர்த்தரின் கிருபை நம்மைத் தாங்குகிறது. சங்.94:18.

iii) கர்த்தரின் கிருபை நம்மைக் காக்கிறது. சங்.40:11.

iv) கர்த்தரின் கிருபை நம்மைக் திருப்தியாக்குகிறது. சங்.90:14.

v) கர்த்தரின் கிருபை நம்மைத் தேற்றுகிறது. சங்.119:76.

vi) கிருபையினால் கர்த்தர் நம் சத்தத்தை (ஜெபத்தை) கேட்கிறார். சங்.119:149.

vii) கிருபையினால் மனிதரின் தயவு நமக்குக் கிடைக்கும்படிச் செய்கிறார். ஆதி.39:21.

viii) நாம் நிர்மூலமாகாதிருக்கிறது (அழிந்துப்போகாமலிருப்பது) கர்த்தரின் கிருபைதான். புல.3:22.

கர்த்தரின் கிருபை நம்மைக் கர்த்தருக்குக் கொடுக்கச் செய்கிறது. 2கொரி.8:1 (இன்று அநேகருக்கு கர்த்தரின் கிருபை இல்லாததினால் தான் கர்த்தருக்கு கொடுக்க மனமற்றவர்களாயிருக்கிறார்கள்)

கர்த்தரின் கிருபையினால் நம் பெலவீனங்களில் அவர் பெலன் விளங்குகிறது. 2கொரி.12:9, 2தீமோ.2:11.

கிருபையினால் இருதயம் ஸ்திரப்படுகிறது. எபி.3:9.

கர்த்தரின் கிருபையை எவ்விதம் பெறுவது?

கர்த்தரை அறிந்தவர்களுக்குக் கர்த்தரின் கிருபை அளிக்கப்படுகிறது. சங்.36:10.

கர்த்தருக்குப் பயப்படுவர்களுக்கு அவர் கிருபை பெரிதாயிருக்கிறது. சங்.103:11,17.

நன்மையை யோசிக்கிறவர்களுக்கு கிருபை உண்டு. நீதி.14:52.

கர்த்தரில் அன்புகூர்ந்து கர்த்தரின் கற்பனையை கைக்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் கிருபையைக் காக்கிறார். தானி.9:4.

கர்த்தரை நம்புகிறவர்களுக்கு கிருபை கிடைக்கிறது. சங்.32:10.

கர்த்தர் தமது சித்தத்தின்படி கிருபையை அருளுகிறவர். யாத்.33:19, ஆதி.6:8,21,39.

கிறிஸ்துவினால் கிருபையை பெறுகிறோம். யோவா.1:6, 1கொரி.1:6, எபே.1:7,24.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களுக்குக் கிருபை அளிக்கப்படுகிறது. சங்.147:11.

தாழ்மையுள்ளவர்களுக்குக் கர்த்தர் கிருபையளிக்கிறார். யாக்.4:6.

கிருபையை பெற கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும். (ஜெபிக்க வேண்டும்) எபி.4:16.

கர்த்தர் கிருபையாகக் கொடுத்திருக்கும் இந்நாட்களில் நாம் கர்த்தரின் கிருபையை மட்டும் சார்ந்துகொண்டவர்களாக கர்த்தரின் கிருபை என்றும்முள்ளதென்று சொல்வோமாக, கர்த்தரின் கிருபையை பெற்றுக்கொள்ளும் வழியை அறிந்து அதை பெற்று இவ்விதமாய் அவர் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவோம். கர்த்தர் தாமே கிருபை செய்வாராக.

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் கர்த்தரை மகிமைபடுத்த வேண்டும்.

தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். வெளி.14:7;11:13.

தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள் என்று ஆலோசனை கொடுக்கப்படுகிறது. நாம் கர்த்தரை மகிமைப்படுத்துவது குறித்து சில காரியங்களை அறிந்துகொள்ளப்பார்ப்போம்.

a) நாம் ஏன் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்?

நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து என் நாமம் தரிக்கப்பட்டவர்கள். ஏசா.43:7; 11:13.

நாம் தேவனை மகிமைப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் தேவன் நம்மை இந்த உலகில் சிருஷ்டித்து, நமக்காகப் பல காரியங்களைச் செய்துள்ளார். நமக்கு வரும் ஆபத்துகளில் நாம் அவரை நோக்கி கூப்பிட்டால் அவர் உடனே நம்மை விடுவிப்பதாகவும், அதின் மூலம் நாம் அவரை மகிமை படுத்தவேண்டும் என்றும் சங்.50:15ல் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான மனிதர் தங்கள் ஆபத்தான நேரத்தில் தேவனை நோக்கி கூப்பிடுவதற்குப் பதிலாக உலக மனிதரையோ விக்கிரகங்களையோ நோக்கி கூப்பிடுகிறார்கள். ஆகவே அவர்கள் விடுதலை பெற முடியாதவர்களாய் இருக்கிறார்கள்.

சிலர் தங்கள் ஆபத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். விடுவிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்த மறந்து விடுகிறார்கள். நமக்கு ஆபத்துக்கள் வரும்பொழுது நாம் கர்த்தரை மட்டும் நோக்கிக் கூப்பிட வேண்டும், கர்த்தர் நமது ஆபத்துகளில் இருந்து நம்மை விடுவிக்கும்பொழுது நாம் அவரை மகிமைப்படுத்த மறக்கக் கூடாது.

ஆண்டவராகிய இயேசு ஒரு நாள் ஒருகிராமத்திற்குச் சென்றார். அங்கே பத்து குஷ்டரோகிகள் இருந்தனர். அவர்கள் அவரிடத்தில் வந்து அவர் தங்களுக்கு இரங்கி தங்களுக்கு சுகம் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அவர் அவர்களுக்கு நீங்கள் போய் உங்களை ஆசாரியனுக்குக் காண்பியுங்கள் என்றார். அப்படியே அவர்கள் அவர் வார்த்தையை நம்பிப்போனார்கள் அவர்கள் போகும் வழியிலேயே தாங்கள் தங்கள் குஷ்டம் நீங்கி சுகம் பெற்றிருப்பதை உணர்ந்தனர். சுகம் பெற்ற பத்து பேரில் ஒருவன் மட்டும் திரும்பிவந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரை மகிமைப்படுத்தினான். அவன் ஒரு யூதனல்லாத புறஜாதி மனிதனாக இருந்தான். ஆண்டவராகிய இயேசுவும் இந்த புறஜாதி மனிதரைத் தவிர மற்றவர்கள் தம்மை மகிமைப்படுத்த வரவில்லையே என்று ஆச்சரியப்பட்டார். (லூக்.17:11-19)

b) கர்த்தர் மகிமைப்படும்படியாக நாம் செய்ய வேண்டியக் காரியங்கள்.

1. கர்த்தரை ஸ்தோத்தரிப்பதின்மூலம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம்.

ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். சங்.50:23.

2) நாம் எதைச் செய்தாலும் கர்த்தரின் மகிமைக்கென்று மட்டும் செய்யவேண்டும்.

நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச்செய்தாலும்

எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் 1கொரி.10:31.

எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப் படும்படியே செய்வீர்களாக 1பேது.4:11.

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்து வினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாயிருங்கள் பிலி.1:10.

புற ஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவைகளினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் 1பேது.2:12, மத்.5:16.

இந்நாட்களில் நாம் நம் வாழ்க்கையில் எதைச்செய்தாலும் கர்த்தரின் நாமம் ...படும்படியாக மட்டும் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். தவிர நம் ...மானது கனிகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். கனி அது காய்க்கின்ற ...ற்கு பயன்படுவதில்லை. மாறாக அதை புசிப்பவர்களுக்கே அது ...படுகிறது. அதுபோல நமது ஜீவியமும் நமெக்கென்றல்ல ...வர்களுக்கென்று ஜீவிக்கவேண்டும். இன்று நமது முன்மாதிரியான ...யத்தைப்பார்த்து அநேகர் இவர்கள் பைத்தியக்கார, புத்தியில்லாதவர்கள் ...கம் அறியாதவர்கள் என்று பலவாறு கூறுகிறார்களே, அவர்கள் கர்த்தரின் ...கையில் நமது மேலான ஜீவியத்தைப்பற்றி நமக்கு சாட்சியாக இருப்பார்கள் ...பது.2:12 பார்க்கவும்).

இன்றைய கிறிஸ்தவர்களின் ஜீவியம் எப்படியிருக்கிறது? இன்று உலக ...ங்களில் காணப்படும் எல்லாவித பாவமானக்காரியங்களும் கிறிஸ்தவர்கள் ...தியில் அதிகம் காணபடுகிறதே. பீடி, சிகரெட் குடிப்பது, வெற்றிலைபாக்குப் ...டுவது, சினிமா பார்ப்பது, கள்ள சாராயம்குடிப்பது அதை விற்பது, ...பாரத்தில் கலப்படம். கள்ளத்தராசு இன்னும் இவ்விதமான எல்லாத் ...யானக் காரியங்களையும் துணிந்து உலக ஜனங்களைவிட அதிகமாகச் ...யகிறார்கள். அநேகருடைய ஜீவியத்தில் பரிசுத்தம் இல்லை. இவ்வித ...ஸ்தவர்கள் தேவநாமத்தை மகிமைப்படுத்துவது எப்படி? ரோம.2:24ல் ...றியுள்ளபடி தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே (நமது ஜீவியத்தின் ...மாக) தூஷிக்கப்படுகிறதே.

கர்த்தருக்குக் பயப்படும் பயத்தோடு கர்த்தரை நாம் மகிமைப்படுத்த ...வண்டும் என்ற எண்ணம் உடையவர்களாய் ஜீவிப்போம் என்றால் நிச்சயமாக ... வாழ்க்கையில் கர்த்தர் விரும்பாத தீமையானக் காரியங்கள் நம்மில்

காணப்படாதபடி நம்மைக்காத்துக் கொள்வோம். அதுபோலவே எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை ஸ்தோத்தரித்து அதின்மூலம் கர்த்தரை நாம் மகிமைப்படுத்திக் கொண்டேயிருப்போம்.

5. **கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.**

உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து அவருக்கே ஆராதனை செய்வாயாக உபா.6:13.

நாம் எவ்விதம் கர்த்தருக்குப் பயந்து கர்த்தரை ஆராதிப்பது என்பதுபற்றி இந்தப் பாகத்தில் பார்ப்போம்.

a) கர்த்தரை எவ்விதம் ஆராதிப்பது?

கர்த்தரை ஆராதிப்பது என்றால் கர்த்தருக்குப்பலி செலுத்துவது என்று சொல்லலாம்; இது தவிர உபவாசிப்பதும் ஜெயிப்பதும் தேவனை ஆராதிப்பது என்று லூக்.2:37ல் கூறப்பட்டுள்ளது. தேவனை ஆராதிக்கிறவர்களிடத்தில் சிலக்காரியங்கள் காணப்டுவது அவசியம். அவைகளைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

1. தேவனை ஆராதிக்கிறவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவது அவசியம்.

கர்த்தரை ஆராதிக்க விரும்பிகிற மனிதன் முதலாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையவேண்டும் அதாவது நாம் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றிருக்க வேண்டும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்துகொண்டு கர்த்தருக்குப் பலியிடுவது, எகிப்தின் அருவருப்பை பலியிடுவதாக இருக்கும். யாத்.8:26. அதுபோலவே நாமும் பாவத்தில் தொடர்ந்து ஜீவித்துக்கொண்டு தேவனை ஆராதிப்பது கர்த்தர் பார்வையில் அருவருப்பாய்யிருக்கும். **துன்மார்க்கரின் பலி கர்த்தருக்கு அருவருப்பானது நீதி.15:7,8.** இன்று பெரும்பாலுமான கிறிஸ்தவர்கள் துணிகரமாக பாவத்தில் ஜீவித்துக்கொண்டு ஆலயம் செல்வது காணிக்கைகள் கொடுப்பது, பண்டிகைகள் கொண்டாடுவது முதலானவைகளை செய்து, அவைகளில் திருப்திப்பட்டுக் கொண்டு ஜீவிக்கிறார்கள். இது கர்த்தருக்கு அவருவருப்பானக் காரியம் என்பதை அறியாமலிருக்கிறார்கள்.

2. ஆசரிப்புக் கூடாரம்.

பழைய ஏற்பாட்டுக்கால தேவ ஜனங்கள் தேவனை ஆராதிக்க ஆசாரிப்புக் கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்து. ஆனால் புதிய ஏற்பாட்டுக்கால தேவ ஜனங்களாகிய நாமே (நம்முடைய சரீரமே) தேவனுடைய ஆலயமாகவுள்ளது. என்று 1கொரி.6:19ல் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டுக் கால ஆசாரிப்புக் கூடாரத்தை ஞான இருதயமுடையவர்கள் உண்டாகினார்கள். **யாத்.36:9.** நாமும் நமது சரீரமாகிய ஆலயத்தைக் கட்ட ஞான இருதயமுடையவர்களாவது அவசியமாகவுள்ளது. இதை அறிந்துதான் கர்த்தருடைய தாசனாகிய மோசே

...ங்கீதத்தில் நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் ...ளை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதியும் சங்.90:12. என்று ...கிறார் இன்றைய ஜனங்கள் ஞானமற்றவர்களாக வீட்டுக்குமேல் வீடு, ...ங்குமேல் சொத்து சேர்ப்பது என்று இரவு பகலாக பண ...டையவர்களாய். ஏதோ தாங்கள் இந்த உலகில் நிரந்தரமாக ஜீவிக்கப் ...வர்கள்போல எல்லாவிதமான காரியங்களையும் செய்கிறார்களே. நமது ...நாள் எவ்வளவு நிலையற்றது. நமது மரணம் சடிதியில் நேரிடும் என்றால் ...த்தியத்தை எங்கேக் கழிப்போம். என்று சிறிது சிந்திப்பார்களென்றால் ...ள ஞான இருதயமுடையவர்களாகி தங்கள் சரீரமாகிய ஆலயத்தைக் ...காள்ள முயற்சி செய்வார்களே.

...லிசெலுத்துவது:-

...ழைய ஏற்பாட்டுத் தேவ ஜனங்கள் தேவனை ஆராதிக்க பலவிதமான ...ளை செலுத்தினார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டு தேவ ஜனங்களாகிய நாம் ...களைப்போல மிருகங்களைக் கொண்டு பலிசெலுத்துவதில்லை. ...வராகிய இயேசு தம்மையே நமக்காக பலியாக செலுத்தித் தீர்த்து விட்டார். ...செலுத்தக்கூடியதான பலிகள் என்ன என்று வேத வசனம் தெளிவாகக் ...றது. **நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் ...முமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய ...கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன் ரோம.12:1. ...டைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர ...யை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம் ...13:15.**

...ம்முடைய சரீரத்தையே நாம் கர்த்தருக்கு ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க ...டும். இதைத்தான் நம் தேவன் நம்மிடம் விரும்புகிறார். அதுமட்டுமல்லாது ... உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்பொழுதும் ...னுக்குச் செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். சிலருக்கு தங்கள் ...யத் திறந்து கர்த்தரைத் துதிப்பது எவ்வளவு கடினமாகவுள்ளது. கர்த்தருக்கு ...த்திரம் என்று சொல்வதை கூச்சல்போடுகிறார்கள் என்று அல்லவா அநேகக் ...தவர்கள் பழித்துச் சொல்கிறார்கள். இவர்கள் தேவகோபாக்கினைக்குத் ...ர்களோ?

தேவனை ஆராதிக்கிறவர்களிடத்தில் காணப்பட வேண்டியக் காரியங்கள்

அந்நிய தேவர்களை ஆராதிக்கக்கூடாது. எரே.25:6. அந்நிய தேவர்களை ...திப்பது கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகும். அந்நியதேவர்களை ...ற்றுவதால், சேவிப்பதால் ஆராதிப்பதால் நாம் தேவனுக்கு எரிச்சல் ...கருகிறோம். உபா.32:16. இன்று கிறிஸ்தவர்களில் அநேகர் ...பார்ப்பது, குறி கேட்பது, சகுணம் பார்ப்பது போன்ற பல தீமையானக்

காரியங்களைச் செய்கிறார்கள். இன்னும் இவ்விதமான பல அஞ்ஞான கிரியைகளும் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது. தேவஜனங்கள் இவைகளைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

II) கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் கர்த்தரின் கிருபையைப் பற்றிக் கொள்ளவேண்டும்.

ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தை பெறுகிறவர்களாகிய நாமே பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்த்தரை ஆராதிக்கிறவர்களிடத்தில் காணப்படவேண்டிய முக்கியமான நான்குக் காரியங்கள் கூறப்பட்டுள்ளது.

a) பயம்: கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது தீமையை வெறுப்பதும் அவைகளை விட்டு விலகுவது என்று துவக்கத்திலேயே பார்த்தோம். நமது வாழ்க்கையில் தீமையாகத்தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் நாம் வெறுத்து அவைகளை விட்டு விலகவேண்டும்.

b) பக்தி: இன்று அநேகரின் கிறிஸ்தவ ஜீவியத்தில் பக்தியின் வேஷம் காணப்படுகிறது, ஆனால் உண்மையான பக்தியில்லை. உண்மையான பக்தி என்ன என்று வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிப்பதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துகொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது யாக்.1:27. நம் உதவியை நாடி அதைப்பெறத் தகுதியாக உள்ளவர்களுக்கு அதைச் செய்வதும், உலகத்தின் ஆசை வேஷம் உலகத்தோடு ஒத்துப்போவது போன்ற எல்லாவிதமானக் காரியங்களினாலும் நாம் நம் ஆவிக்குறிய பிரகாரமாக கறைபடுத்திக்கொள்ளாதபடிக் காத்துக்கொள்வது மிகவும் அவசியமாகவுள்ளது.

c) தேவனுக்குப் பிரியமான ஆராதனை:

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். எபி.11:6. நாம் கர்த்தருக்குப் பிரியமானவர்களாக இருக்கவேண்டும் என்றால் நம் ஜீவியத்தில் விசுவாசம் நிச்சயமாகக் காணப்படவேண்டும். விசுவாமில்லாமல் நாம் கர்த்தரிடமிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளவும் முடியாது.

d) கிருபையைப் பற்றிக்கொள்வது:

இந்த உலகில் நாம் கர்த்தரிடம் இருந்து பெறும் எல்லாவித சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய நன்மைகளுக்கு நாம் தகுதியானவர்கள் அல்ல. ஆனால் கர்த்தரின் கிருபையினால் மட்டுமே நாம் அவைகளை கர்த்தரிடம் இருந்து பெறத் தகுதியுள்ளவர்களாகிறோம். ஆகவே நாம் தேவனை ஆராதிப்பதிலும் நமது பக்தியையோ, பரிசுத்தத்தையோ சார்ந்து நிற்காதபடி கர்த்தரின் கிருபையை மட்டும்

சார்ந்து நிற்பது மிகவும் அவசியமாயுள்ளது.

ஆவியினால் தேவனுக்கு ஆராதனை செய்வது :

ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து கிறிஸ்து சுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதன முள்ளவர்கள் 3:3.

நம்முடைய ஆராதனை முறைமைகள் யாவும் ஆவியானவரின் துதலுக்கு கீழ் அடங்கியதாய் இருக்க வேண்டும் மனுஷீகப் பிரகாரமான ங்களுக்கு நமது ஆராதனைகளில் இடமிருக்கக்கூடாது மனிதனுக்குப் ாய் பேசுவது, மனிதர்களை நம் பக்கம் இழுக்க முகஸ்துதி செய்வது போன்ற ங்கள் கர்த்தர் அறுவறுக்கும் காரியங்களாகும். நமது ஆராதனைகளை ானவரே நடத்தித் தர வேண்டும். முயற்சிசெய்வோமா?

சுத்த மனச்சாட்சி:

என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே தித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன் 2தீமோ.1:4. சாட்சி என்பது நமது மனது நம்மைப் பற்றிகொடுக்கும் சாட்சியாகும். களுடைய மனச்சாட்சியும் கூட சாட்சியிடுகிறதினாலும் குற்றமுண்டு மில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றை ஒன்று றது ரோம.2:15. நமது மனது நம்மைப்பற்றி குற்றமுண்டு என்று சாட்சி ப்பதாக இருக்கக் கூடாது. நமது மனது நம்மைப்பற்றிக் கொடுக்கும் யானது குற்றமற்றதாக இருக்கவேண்டும்.

இந்நாட்களில் நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு கர்த்தரை திக்கிறவர்களாக நம் ஜீவியத்தை கர்த்தருக்குப் பூரணமாக ஒப்புக்கொடுத்து; சித்தம் செய்வோம். நம் வாழ்க்கையில் எப்பொழுதும் நமது உதடுகளின் களாகிய ஸ்தோத்திர பலியை தேவனுக்கு நம் இரட்சகராகிய இயேசுவின் ாக ஏறெடுத்துக்கொண்டே இருப்போமாக.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரை விசுவாசிக்க ண்டும் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும்:

நீ அவனை புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் க்காக ஒப்புக்கொடுத்தபடியால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று பொழுது அறிந்திருக்கிறேன் ஆதி.22:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஆபிரகாமைப்பற்றி தேவன் கொடுக்கும் யை பார்க்கிறோம். ஆபிரகாம் தன் ஏக சுதனாகிய ஈசாக்கை கர்த்தருக்காக கொடுத்தபடியால் தேவன் ஆபிரகாமைப்பற்றி மேற்கண்டவாறு சாட்சி க்கிறார். ஆபிரகாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாக இருந்தபடியினால் னிடத்தில் கீழ்ப்படிகிற சுபாவம் காணப்பட்டது என்று 18ம் வசனத்தில்

காண்கிறோம். அதுமட்டுமல்லாது ஆபிரகாம் விசுவாசத்தினால் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்தான் என்று எபி.11:8.ல் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவென்றால் ஒரு மனிதன் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாக இருந்தால் அவனிடத்தில் விசுவாசம் காணப்படவேண்டும். அந்த விசுவாசம் கீழ்ப்படிதல்மூலம் வெளிப்படவேண்டும் என்று அறிந்து கொள்ளலாம். ஆகவே இந்த பாகத்தில் விசுவாசத்தைப் பற்றியும், கீழ்ப்படிதலை பற்றியும் சிறிது விரிவாக அறிந்துகொள்ளப்பார்ப்போம்

A. விசுவாசம் :

கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் கர்த்தரிடமிருந்து எந்த ஒரு நன்மையும் பெற நமக்கு விசுவாசம் மிகவும் அவசியமாகிறது. விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருக்க முடியாது. எபி.11:6. விசுவாசத்தின் மூலம் நாம் பெறக்கூடிய காரியங்கள் எவை என்று பார்ப்போம்.

1. விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகள் ஆகிறோம். யோவா.1:12, 1யோவா.5:10,11.
2. விசுவாசத்தினாலே கிருபையை பெறுகிறோம். ரோம.5:2; 4:16.
3. விசுவாசத்தினாலே வேதவசனம் நம்மில் பெலன் செய்கிறது. 1தெச.2:13.
4. விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுகிறோம். அப்.26:18; 10:43.
5. விசுவாசத்தினாலே விடுதலைக் கிடைக்கிறது. அப்.13:39.
6. விசுவாசத்தினாலே இரட்சிப்பு கிடைக்கிறது. ரோம.1:16; 10:10; 13:1, 2கொரி.1:21, எபே.2:8, 1தீமோ.3:15.
7. விசுவாசத்தினாலே கிறிஸ்து நம் இருதயங்களில் வாசஞ்செய்கிறார். எபே.3:17.
8. விசுவாசத்தினாலே தேவ நீதியை பெறுகிறோம். ரோம.4:5,9,13,24; 10:4,6, கலா.5:5, பிலி.3:9.
9. விசுவாசத்தினால் நீதிமானாகிறோம். அப்.13:9, ரோம.1:3,10,25,28, 30,31; 4:3; 5:1, கலா.2:15; 3:14,18,24.
10. விசுவாசத்தினாலே நித்திய ஜீவனைப் பெறுகிறோம். யோவா.3:36; 6:40,47; 20:31, அப்.13:48, 1தீமோ1:16, 1யோவா11:20.
11. விசுவாசத்தினாலே தேவனுடைய மகிமையைக் காண்கிறோம். யோவா.11:40.
12. விசுவாசத்தினாலே பரிசுத்த ஆவியை பெறுகிறோம். கலா.3:20.
13. விசுவாசிக்கிறவர்கள் தாகமடைவதில்லை. யோவா.6:35.
14. விசுவாசத்தினாலே கிறிஸ்துவோடு எழுந்திருக்கிறோம். கொலோ.2:12.
15. விசுவாசத்தினாலே இளைப்பாறுதலில் பிரவேசிக்றோம். எபி.4:3.

விசுவாசத்தினாலே சுதந்திரத்தைப் பெறுவது. அப்.26:18, ரோம4:13,16.

விசுவாசத்தினாலே வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம். எபி.6:11, கலா.3:22.

விசுவாசத்தினாலே ஆக்கினைத்தீர்ப்புக்கு தப்பலாம். ரோம.3:18.

விசுவாசத்தினாலே பெரிய காரியங்களை நம்மால் செய்யமுடியும். யோவா.14:13.

விசுவாசத்தினாலே அற்புத அடையாளங்கள் செய்வது. மாற்.16:17.

கர்த்தருக்கு ஊழியம் செய்ய விசுவாசம் தேவை. அப்.6:5.

விசுவாசத்தினாலே தேவனிடத்திலிருந்து நற்சாட்சி பெறுகிறோம் எபி.11:2,39.

விசுவாசத்தினாலே கர்த்தரிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம். எபே.3:12.

விசுவாசத்தினாலே உலக ஜனங்களைப் பற்றிய பயம் இல்லாமல் போகிறது. எபி.11:27.

விசுவாசத்தினாலே பக்திவிருத்தி உண்டாகிறது. 1தீமோ.1:3.

நம் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும். 1யோவா.5:4.

விசுவாசத்தினாலே கர்த்தரைப் பற்றிக்கொள்கிறோம். அப்.14:23.

விசுவாசத்தினாலே நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் நிற்கிறோம். ரோம.11:20, 2கொரி.1:24.

விசுவாசத்தினாலே ஜெபத்திலே கேட்பதை பெற்றுக்கொள்கிறோம். மத்.21:22.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். யோவா.11:25, அப்.10:38, ரோம.1:17, கலா.2:20; 3:11.

விசுவாசத்தினாலே சந்தோஷம், சமாதானம் பெறுகிறோம். ரோம.15:13.

விசுவாசத்தினாலே ஆறுதலை பெறுகிறோம். ரோம.1:11.

விசுவாசத்தினாலே சுகம் பெறுகிறோம். மத்.9:22, மாற்.5:34; 10:52, லூக்.7:50; 8:48,50; 17:19; 18:42, அப்.3:16, கலா.3:5.

விசுவாசிக்கிறவர்கள் வாழ்க்கையில் வெட்கம் அடைவதில்லை. ரோம.9:33; 10:11, 1பேது.2:6.

விசுவாசத்தினாலே தேவனோடு ஒப்புரவாகிறோம். கொலோ.1:21,22.

மேற்கூறப்பட்டுள்ளக் காரியங்களில் இருந்து நாம் நம் விசுவாசத்தின் மூலமாக தேவனிடமிருந்து நமக்கு தேவையான எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அறிந்துகொள்ளலாம்.

நாம் யாரை விசுவாசிப்பது என்றும் இந்த விசுவாசத்தை எவ்விதம் பெறுவது என்று பார்ப்போம். நாம் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்.

2தீமோ.1:12 நாம் தேவனை விசுவாசிக்கிறோம் என்றால் அவரைப் பற்றி சரியாக அறிந்து விசுவாசிக்க வேண்டும். தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். எபி.11:6.

நாம் எவ்விதம் கர்த்தரைப் பற்றிய விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வது என்றுப்பார்ப்போம்.

1. கண்டு விசுவாசிப்பது : குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவான் யோவா.4:48. இயேசுவைக் காண்பது என்பது கர்த்தர் நம் மத்தியிலே கிரியை செய்கிறார் என்று கண்டுகொள்ளமுடியும். இது பற்றி ஆண்டவராகிய இயேசு சொன்னது நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் யோவா.4:48. இந்நாட்களிலும் கர்த்தர் தமது ஊழியக்காரர்கள் மூலமாக அற்புதங்களையும், அடையாளங்களையும் நடத்திக்கொண்டு வருகிறார். ஜனங்கள் அவைகளைக் கண்டும் விசுவாசிக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

2. கேட்டு விசுவாசிப்பது : அவருடைய உபதேசங்களை நாங்கள் கேட்டு அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள் யோவா.4:42. விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் ரோம.10:17.

மேற் கூறப்பட்ட வசனங்களிலிருந்து நாம் தேவ ஊழியக்காரர்கள் மூலமாகவோ, வேத வசனங்களை வாசித்து தியானிப்பது மூலமாகவோ விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிந்துகொள்ளலாம்.

B. கீழ்ப்படிதல்:

நாம் கர்த்தரை விசுவாசிக்கிறோம் என்றால், அந்த விசுவாசத்தைக் கீழ்ப்பிதல் மூலம் காட்டவேண்டும். ஆபிரகாமின் ஜீவியத்தில் விசுவாசம் காணப்பட்டது. அந்த விசுவாசத்தை தன் கீழ்ப்படிதலின் மூலம் வெளிப்படுத்தினான். இவ்விதம் தன் கீழ்ப்படிதல், விசுவாசத்தின் மூலமாகத்தான் தான் கர்த்தருக்குப் பயப்படுகிறவன் என்று விளங்கப்பண்ணினான்.

கீழ்ப்படிதல் என்றால் என்ன என்று நம் இரட்சகராகிய இயேசுவின் வாழ்க்கையின் மூலமாக நாம் கற்றுக்கொள்ள முடியும். நம் இரட்சகரின் கீழ்ப்படிதல் பற்றி வேத வசனம் கூறம் காரியங்களை சிறிது ஆராய்வோம்.

a) அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார் பிலி.2:8. ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே நம்மைப்போல சாதாரண மனுஷனாகப் பிறந்து, அவர் முழுவதுமாக பிதாவாகிய

ுக்கு கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாழ்த்தினார். அவர் தம்மைத் த்தினதினால் அவருக்கு நடந்தது என்ன? அவர் தன்னைத் தாழ்த்தினபோது டைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அப்.8:33. ஆண்டவராகிய இயேசு கு விரோதமாக எதிர்த்து நின்ற யூதர்களோடு போராடியிருக்கலாம் அல்லது ன சிலுவையில் அறைந்த அனைவரையும் ஒருவினாடியில் அழித்து க்கமுடியும். ஆனால் அவர் அவ்விதம் செய்யாது தன்னை முழுவதுமாக த்தினதினாலே அவருடைய நியாயம் எடுபட்டுப்போயிற்று. அங்கு அவருக்கு பஞ்சொல்ல யாருமில்லை.

இந்த கொடிய நாட்களில் ஆவிக்குரிய தேவ ஜனங்களாகிய நாம் உலக வகளை விட மேலான நிலையில் உள்ளவர்களாக இருந்தாலும் நாம் மைத் தாழ்த்தும்போது நியாயம் கிடையாமற்போய்விடுகிறது. அல்லது வர்கள் நம்மைப் பரிகசிக்கும்படியான நிலையாகிறது. மிகவும் கொடிய லையில்தான் நாம் நமது விசுவாசத்தைக் கீழ்ப்படிலின் மூலம் வெளிப்படுத்த டியவர்களாயிருக்கிறோம். இது மிகவும் கசப்பான அனுபவமாக நமக்கு கலாம். ஆனாலும் நமது இரட்சகர் கடந்து சென்ற அதே பாதையில் நாமும் செல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். உலக ஜனங்கள் நமக்கு நியாயம் வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நமக்கு அநீதிதான் இந்த உலகில் லனாக கிடைக்கும்.

அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் க்கொண்டு தாம் பூரணரானபின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் ப்பை அடைவதற்குக் காரணமானார் எபி.5:8,9.

நமது இரட்சகராகிய இயேசு பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் ண்டு அதில் பூரணரானார் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால். ளும். உபத்திரவங்களும் நம்மை பூரணத்தின் பாதையில் நடத்துகிறது தை நாம் மறக்கக்கூடாது. இந் நாட்களில் பாடுகளும் உபத்திரவங்களும் பொழுது நாம் மிகவும் சோர்ந்துபோய்விடுகிறோமே. நாம் நம் சகரைப்போல நமக்கு உண்டாகும் பாடுகளில், உபத்திரவங்களில் படிகிறவர்களாக நம்மைத் தாழ்த்துவோம் என்றால் எவ்வளவு நன்றாக தும். நம் இரட்சகர் கீழ்ப்படிதல் மூலம் பூரணரானது நமது கீழ்ப்படிதலும் கர் இரட்சிப்பைப்பெற ஏதுவாக இருக்குமே! முயற்சி செய்வோமா?

ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அனேகர் நீதிமான்களாக்கப்படு கள் ரோம.5:19. நமது இரட்சகராகிய இயேசுவின் கீழ்ப்படிதலின் மூலம் னகர் நீதிமான்களாக்கப்பட்டார்கள். நாமும் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர் க அனேகரை நமது கர்த்தரின் நீதிக்கு நேராக வழிநடத்தவேண்டியவர்களா கிறோம்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தரை நம்பவேண்டும்:

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள். சங்.115:11.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள், தங்கள் வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் கர்த்தரை நம்புகிறவர்கள் கர்த்தரிடம் இருந்து ஒருக்காரியத்தை பெறும்வரை பொருமையோடு காத்து இருக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. கீழ்க்கண்ட வேதவசனங்கள் இதை நன்கு தெளிவுபடுத்தும். நான் கர்த்தருக்கு காத்திருந்த நம்பிக்கையும் அழிந்துபோயிற்று புல.3:18. ஆவியின் முதற்பலன்களை பெற்ற நாமும் கூட நம்முடைய சரீர மீட்பாகிய சுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம். அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் ரோம.8:23,24.

அ) நாம் எந்த எந்தக் காரியங்களை நம்பவேண்டும் என்று பார்ப்போம்.

1) கர்த்தர் நமக்குக் கொடுக்கும் பாதுகாப்பை நம்புவது. 2கொரி.1:10, சங்.27:3; 115:9,10,11, ஏசா.24:4.

2) கர்த்தரின் வாக்குத்தத்தங்களை நம்புவது. அப்.26:8.

3) கர்த்தரின் இரக்கத்தை நம்புவது. தானி.9:18.

4) கர்த்தரின் கிருபையை நம்புவது. சங்.52:8.

5) கர்த்தரின் இரட்சிப்பைபற்றி நம்புவது. அப்.15:1.

6) நாம் அடையப்போகும் தேவமகிமையைப் பற்றி நம்புவது. ரோம.5:2; 8:20.

7) உயிர்த்தெழுதல், நித்தியஜீவன் இவைகளைப்பற்றி நம்புவது. அப்.24:15, தீத்து 3:6

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களை குறித்து நாம் எந்த அளவுக்கு கர்த்தரை நம்புகிறோம்?

ஆ) கர்த்தரை நம்புகிறவர்களிடத்தில் காணப்படவேண்டிய காரியங்கள்

1) கர்த்தரை நம்புகிறவர்களிடத்தில் சுய நம்பிக்கை காணப்படக் கூடாது. 2கொரி.1:9.

2) கர்த்தரை நம்புகிறவர்கள் கர்த்தரை மட்டும் சார்ந்துகொள்ளவேண்டும். ஏசா.50:10

3) கர்த்தரை நம்புகிறவர்கள் எதுகுறித்தும் கவலைப்படாமல் ஸ்திரமாக நிற்கவேண்டும். சங்.125:1; 26:1; 56:4,11; 112:7, எபி.10:23.

4) கர்த்தரை நம்புகிறவர்கள் பொறுமையாயிருக்கவேண்டும். ரோம.8:25, எபி.6:12.

5) கர்த்தரை நம்புகிறவர்கள் தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். 1யோவா.3:3.

6) கர்த்தரை நம்புகிறவர்கள் விக்கிரகங்களை வெறுக்கவேண்டும். சங்.31:5; 40:4.

நாம் கர்த்தரை நம்புகிறவர்கள் என்றால் நம்மில் காணப்படும்

நம்பிக்கையை விட்டு விட்டு கர்த்தரை மட்டும் சார்ந்துகொண்டு றைப்பட்டுள்ள சுபாவங்களை உடையவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தரை நம்புகிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்கள்:

கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சங்.34:8; 40:4.

கர்த்தரின் கிருபையை பெறுகிறோம். சங்.28:7.

கர்த்தரிடத்தில் சகாயம் பெறுகிறோம். சங்.28:7.

கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான். நீதி.28:25.

கர்த்தரை நம்புகிறவன் உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான். நீதி.29:25.

கர்த்தரை நம்புகிறவனை கர்த்தர் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்கிறார். ஏசா.26:3.

கர்த்தரை நம்புகிறவன் தேசத்தை சுதந்தரித்து கர்த்தரின் பரிசுத்தப் பர்வதத்தில் காணியாட்சிக்காரனாயிருப்பான். சங்.27:13.

கர்த்தர் நமக்காக வைத்திருக்கும் மேலான காரியங்களை நம்பி அவைகளுக்காக காத்திருந்து அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்ற விசுவாசத்தோடு கர்த்தரை ஸ்தோத்தரிப்போம் என்றால் பாக்கியவான்களாயிருப்போம். ஆம் நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் என்றால் நாம் நிச்சயமாக நமது எல்லாக்காரியங்களிலும் கர்த்தரை நம்புகிறவர்களாயிருப்போம்.

கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சங்.112:1.

நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாய் ஜீவிக்கிறோம் என்றால் அவருடைய கட்டளைகளில் அதாவது வேதத்தில் பிரியமாயிருக்க வேண்டும். நாம் ஏன், எவ்விதம் அவர் கட்டளைகளில் பிரியமாயிருப்பது என்பதுபற்றி சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்க வேண்டும்.

ஏன் கர்த்தரின் வேதத்தில் நாம் பிரியமாயிருக்க வேண்டும்.

உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன் சங்.119:140, நீதி.30:5.

புடமிடுவது என்றால் பொன், வெள்ளிபோன்ற உலோகங்கள் நெருப்பினால் நன்றாக சூடுபடுத்தி அது எந்த அளவுக்கு சுத்தமாகவுள்ளது என்று அறிகிறார்கள் இவ்விதம் செய்வதினால் 1) அதில் உள்ள களிம்பு (அசுத்தம்) நீங்குகிறது 2) அந்த உலோகத்தின் கடினத்தன்மை போய் தட்டான் விருப்பத்திற்கு ஏற்றபடி

வளைத்துகொடுக்கும் (Flexi bilitey) தன்மையையும் பெறுகிறது. பொதுவாக பொன்னோ, வெள்ளியோ புடமிடப்படும்பொழுது அது எந்த அளவுக்கு களிம்பு (அசுத்தம்) இல்லாமல் சுத்தமாகவுள்ளது என்று கண்டு கொள்ள முடியும். அப்படியென்றால் எவ்விதம் கர்த்தரின் வேதத்தை புடமிடமுடியும் என்று கேட்கலாம் தேவனை பின்பற்றுகிற மனிதர்களின் ஜீவியத்தில் கர்த்தரின் வசனம் கிரியை செய்வதின் மூலமாகத்தான் கர்த்தரின் வசனம் புடமிடப்படுகிறது என்று அறியலாம். எவ்விதம் ஆதி தேவ மனிதர்களின் வாழ்க்யையின் மூலம் கர்த்தரின் வசனம் புடமிடபட்டு அது உண்மையானது, சத்தியமானது என்று புடமிடப்பட்டது அல்லது நிருபிக்கப்பட்டது என்று அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனை புடமிட்டது சங்.105:19.

மேற்கூறப்பட்டுள்ள வசனம் யோசேப்பின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்டது. கர்த்தர் யோசேப்புக்கு சொப்பனங்களின் மூலமாக அவன் தன் தகப்பனாகிய யாக்கோபின் குடும்பத்தில் ஒரு பெரிய மனிதனாக இருப்பான் என்றுக்கூறியிருந்தார். ஆனால் தேவன் யோசேப்புக்கு வெளிப்படுத்தியக் காரியங்களுக்கு மாறாக தன் சகோதரரால் பகைக்கப்பட்டான். எகிப்தின் சிறைவாசத்தை அனுபவித்தான் யோசேப்புக்கு சம்வித்தக் காரியங்கள் கர்த்தர் அவனுக்கு வெளிப்படுத்தியக்காரிய்ங்கள் பொய் என்று சொல்லும்படி கர்த்தர் வாக்குத்தத்தத்திற்கு மாறாகவே சம்பவித்தன. இன்னும் இவ்விதமான ஒரு சூழ்நிலை நம்மில் அனேகருக்கு நேரிடும்பொழுது நாம் கர்த்தரின் வார்த்தைகளை விசுவாசியாது பின்வாங்கிவிடுகிறோம். ஆனால் யோசேப்பு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை உறுதியாக பற்றிக்கொண்டு நின்றான். ஆனால் யோசேப்பின் வாழ்க்கையில் கர்த்தரின் முடிவு எப்படியிருந்தது. அவன் எவ்விதம் எகிப்தின் இராஜாவுக்கு இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கும் அளவுக்கு தேவனால் உயர்த்தப்பட்டான் என்பதையும் நாம் அறிவோம். அது மட்டுமல்லாது கானானில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தில் தன் தகப்பன் குடும்பம் முழுவதையும் போஷித்து காப்பாற்றுகிற இரட்சகனாவும் விளங்கினான் என்பதையும் நாம் நன்கு அறிவோம். அதுபோலவே ஆதி தேவதாசகர்களாகிய ஆபிரகாம், தாவீது போன்ற மனிதர்களுடைய வாழ்க்கையிலும் கர்த்ருடைய வசனம் அவர்களை எவ்விதம் புடமிட்டது, கர்த்தரின் செயலில் முடிவு எப்படியிருந்தது என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

மேற் கூறப்பட்டுள்ளக் காரியங்களில் இருந்து நாம் அறிவது என்னவென்றால் தேவன் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தின் நேரத்திலிருந்து அது நிறைவேறும் நேரம்வரையுள்ள கால இடைவெளியில் நடக்கும் சம்பவங்கள் நமக்கு புடமிடும் அனுபவமாகவுள்ளது. இந்த கால இடைவெளியில் கர்த்தர் நமக்குக் கொடுத்த வாக்குத்தத்ததிற்கு நேர் எதிர்மாறாக பல காரியங்கள் நமக்குச்

...கலாம். ஆனால் நாம் அறியவேண்டிய மிகமுக்கியமானக் காரியம் ...ளில் நமக்கு வாக்குத்தத்தம் செய்த தேவன் உண்மையுள்ளவர். ... 23) அவர் பொய்யுரையாத தேவன் (தீத்து1:2) ஆகவே கர்த்தர் நாம் ...ளதை நிச்சயமாகவே நிறைவேற்றுவார்.

...வ்வித புடமிடும் அனுபவங்கள் நமக்கு நேரிடும்பொழுது நாம் ...மையுள்ளவர்களாயிருந்து நமது விசுவாச நிலையில் உறுதியாக நிற்கும் ...மானது கர்த்தருடைய வசனம் நம்மூலமாக புடமிடப்படுகிறதாக உள்ளது. ...தவ மனிதர்களான ஆபிரகாம், யோசேப்பு, தாவீது போன்றவர்களின் ...ன விசுவாச வாழ்க்கையின் மூலமாக வேதவசனமானது புடமிடப்பட்டு, ...முற்றும் உண்மையானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. நாமும் நம் ...தின் மூலமாகக் கர்த்தரின் வார்த்தைகள் உண்மையானது என்று ...துக்காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

...வ்வித அனுபவத்தை விளக்கத்தான் சங்கீதக் காரனாகிய தாவீது ராஜா ...ண்டவாறு கூறுகிறார். கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழு ... உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த ...களாயிருக்கிறது சங்.12:6. எவ்விதம் வெள்ளியானது மண்குகையில் ...கி புடமிடப்படும்பொழுது அதின் சுத்தமான நிலை நிரூபிக்கப்படுகிறதோ ...தமாகவே மண்குகைகளாகிய ஆதிமனிதர்களின் ஜீவியத்தின் மூலமான ...ரின் வார்த்தை புடமிடப்பட்டு, அது முற்றிலும் சுத்தமானது (உண்மையானது) ... நிரூபித்து காட்டப்பட்டுள்ளது. அதுபோலவே நம் ஜீவியத்தின் மூலமாகவும் ...த்தின் ஒவ்வொரு வார்த்தையையும் உண்மையானது என்று நிரூபித்து காட்ட ...டியவர்களாய் இருக்கிறோம். ஜீவித்துக்காட்டுகிறோமா, இன்றும் நிலைமை ...ன? புடமிடும் சமயங்களில் விழுந்து விடுகிறோமே, பின்வாங்கிவிடுகிறோமே, ...னையில்லாத குறுக்கு வழிகளைத் தேட ஆரம்பித்துவிடுகிறோமே, என்ன ...பம் பாருங்கள்.

...கட்டளைகளில் பிரியப்படுவது என்றால் எதில் ...ியப்படுவது:

உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும், நான் அதில் ...யமாயிருக்கிறேன் சங்.110:35. நாம் கர்த்தரின் கற்பனையில் அல்லது ...த்தரின் வேதத்தில் பிரியமாயிருக்கிறோம் என்றால் அந்தக்கற்பனையின் ...தையில் பிரியமாயிருக்கவேண்டும். அதாவது கர்த்தரின் வேதம் காட்டும் ...ழியில் செல்ல விருப்பம் உடையவர்களாயிருக்கவேண்டும். இன்று அநேகர் ...த புத்தகத்தை இரவு பகலாக வாசிக்கிறார்கள். ஆனால் அதில் தெளிவாக ...ப்பட்டுள்ள மனந்திரும்புதல், ஞானஸ்நானம் எடுத்தல் பரிசுத்த ஆவியின் ...ஷேகம்பெறுதல் பரிசுத்தமாக ஜீவிப்பது போன்ற காரியங்களில் கடந்து செல்ல ...ற்றவர்களாயிருக்கிறார்கள். பெரும்பாலானவர்களுக்கு இந்தக் ...யங்கள் ஒரு மறைப்பொருளாகவே இருக்கிறது. சிலர் இந்தக் காரியங்களை

புரிந்துகொண்டாலும் சபைக்கட்டுபாடு, குடும்பக் கௌரவம் உத்தியோகம் போன்ற காரியங்களினால் கட்டுப்பட்டவர்களாக வேதம் காட்டும்பாதையில் செல்ல விருப்பம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அப்படிபட்டவர்கள் கர்த்தரின் கற்பனையின் பாதையில் இல்லை என்றே சொல்லலாம். என்ன பரிதாபம் பாருங்கள். நமது சபை கட்டுப்பாடுகளோ, நமது குடும்பக் கௌரவமோ, நமது உத்தியோகமோ நம்மை பரலோகம் கொண்டுசெல்லாது. நமது வேதவாசிப்போ, ஆலய ஆராதனையில் பங்கெடுப்பதோ காணிக்கைகள் கொடுப்பதோ மற்றும் எந்த விதமான நற்கிரியைகளோ நம்மை பரலோகம் கொண்டு செல்லாது. பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. மத்.7:21. ஆகவே கர்த்தரின் வேதத்தின் பாதையில் பிரியமாயிருந்து, அதின்படி செல்லப்பார்ப்போம்.

C) வேதத்தில் பிரியமாயிருக்கிறோம் என்றால் வேதத்தில் நாம் எப்படியிருக்கவேண்டும்?

1. நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின் பேரில் மனமகிழ்ச்சியாயிப்பேன் (சங்.119:47)

தேவனுடைய பிள்ளைகள் பிரியப்படுகிற கர்த்தரின் கற்பனை (வேதம்) அவர்களுக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இந்த மனமகிழ்ச்சியினால் நாம் பெறும் காரியங்கள் என்ன என்று பார்ப்போம்.

a. உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் தூக்கத்திலே அழிந்திருப்பேன். சங்.119:92.

கர்த்தரின் வேதம் நமக்கு மனமகிழ்ச்சியாயில்லையென்றால் நிச்சயமாகவே சங்கீதக்காரன் கூறுவதுபோல் நமக்கு நேரிடும் துக்கமான சூழ்நிலைகளில் நாம் அழிந்துபோயிருப்போம். இந்த உலகத்தில் நமக்கு எத்தனையோ விதமான பாடுகளும் உபத்திரவங்களும் உண்டு நமது விசுவாச ஜீவியத்தில் நமக்கு பலவிதமான போராட்டங்கள் உண்டு. அவ்வித சூழ்நிலைகளில் எல்லாம் நம்மை ஆற்றித் தேற்றி நம்மை மகிழ்ச்சியாக இருக்கச்செய்வது, நமது தேவன் நமக்கு கொடுத்திருக்கும் விலைமதியா பொக்கிஷமாகிய வேதபுத்தகம்ஒன்றுதான்.

b. மனமகிழ்ச்சி நல்ல ஔசதம். (Medicine) நீதி.17:22.

கர்த்தரின் வசனம் நமக்கு மனமகிழ்ச்சியாயிருக்கிறது என்றால் அந்த மனமகிழ்ச்சி நமக்கு சிறந்த ஔசதமாக (மருந்தாக) இருந்து நமது சரீர பலஹீனங்களில் நம்மை பலப்படுத்துகிறது.

c. மனமகிழ்ச்சி முகமலர்ச்சியை தரும். நீதி.15:13.

ர்த்தரின் வேதம் நமக்கு மனமகிழ்ச்சியை கொடுக்கிறது என்றால் அந்த மகிழ்ச்சியானது நமக்கு முகமலர்ச்சியைக்கொடுத்து நமது மனதின் ச்சியை முகத்தில் பிரதிபலிக்கிறதாகவுள்ளது. வேதனைகள் க்கொண்டு வரும் இந்நாட்களில் கர்த்தரின் வேதம் நமக்கு மகிழ்ச்சியாயிருந்து நம்மை நமது எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாகக் காக்கொள்வோம் என்றால் பாக்கியவான்களாயிருப்போம்.

நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது ணைகளில் பிரியப்படுகிறேன் (சங்.119:127)

பொன், பசும்பொன் ஆகிய இவைகள் உலகப்பிரகாரமான ஐஸ்வரியத்தைக் துறாகவுள்ளது. ஆனால் உலகப்பிரகாரமான ஐஸ்வரியத்தைவிட முடைய ஜனங்கள் விரும்பவேண்டியது கர்த்தருடைய வேதம்தான் என்பதை க்கூடாது.

நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளுக்கு கையெடுப்பேன். து பிரமாணங்களை தியானிப்பேன் (சங்.119:48)

நமது மதிப்பிற்குரிய பெரியவர்கட்கு நாம் கையெடுத்து (கைகூப்பி) வந்தனம் கிறோம். அதாவது நாம் அவர்கட்கு மதிப்புக்கொடுக்கிறோம். அதுபோல ம் வேதத்துக்கு மதிப்புக் கொடுத்து அதை எப்பொழுதும் ிக்கிறவர்களாக இருக்கவேண்டும். நாம் எந்த அளவுக்கு வேதத்தை னிப்பதற்கு நமது வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த வுக்கு நாம் தேவ ஆசீர்வாதத்தை பெறமுடியும்.

வேதத்தில் பிரியமாயிருக்கிறவர்கள் செய்யவேண்டியது:

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் வதும் அது என் தியானம் சங்.119:97.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய தத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் சங்.1:2.

நாம் கர்த்தரின் வேதத்தில் பிரியமாயிருக்கிறவர்கள் என்றால் நிச்சயமாக இரவு பகலாக கர்த்தரின் வேதத்தை தியானிக்கிறவர்ளாக இருப்போம். அநேக கிறிஸ்தவர்களுக்கு வேதம் வாசிப்பது என்பது ஒரு ாச்சாரமானக் காரியமாகவே இருக்கிறது. ஏதோ பேருக்காக ஒரு சில ங்களை வாசித்துவிட்டு பின் என்ன வாசித்தோமென்று சிறிதளவும் கத்தில் இல்லாதவர்களாக தங்கள் இஷ்டப்படி ஜீவிக்கிறார்கள். ஆகவே கள் வாசித்த வசனங்கள் அவர்களுக்கு பிரயோஜனமற்றவைகளாகி றது. சிலருக்கு வேதபுத்தகத்தை கையில் எடுப்பதே மிகவும் கசப்பான ரிமாகவுள்ளது. கிறிஸ்தவ ஜீவியத்துக்கு உயிர்நாடியாக உள்ள வேத பை சரியான முறையில் செய்து, அதற்கேற்றபடி நமது ஜீவியத்தை ததுக்கொள்ளுவோம் என்றால் நிச்சயமாகவே நாம் பாக்கியவான்களாய் போம்.

E) கர்த்தரின் வேதத்தில் பிரியமாயிருக்கிறவர்கள் எதை வெறுக்க வேண்டும் அல்லது எதை அவர்கள் செய்யக்கூடாது.

i) வீண் சிந்தனைகளை நான் வெறுத்து உமது வேதத்தில் பிரியமாயிருக்கிறேன் சங்.119:113.

நாம் கர்த்தரின் வேதத்தில் பிரிமாயிருக்கிறோம் என்றால் நாம் வெறுக்கவேண்டிய முக்கியமானக் காரியம் வீண் சிந்தனையாகும். வீண் சிந்தனை என்றால் என்ன என்று கீழ்க்கண்ட வேதவசனம் நன்கு விளக்கும். மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு தங்கள் இருதயக்கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து உணர்வில்லாதவர்களாய் சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி தங்களை காமவிகாரத்திற்கு ஒப்புகொடுத்திருக்கிறார்கள் எபே.4:17,18,19. இங்கு வீணான சிந்தனை என்பது அசுத்தமானக் காரியங்களை செய்ய காமவிகாரத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுப்பது என்றுக் கூறப்பட்டுள்ளது. கர்த்தரின் வேதத்தில் பிரியமாயிருகிற மனுஷன் இவ்வித அசுத்தமானக் காரியங்களைச் செய்யக் காரணமாகவுள்ள. வீணான சிந்தனைகளை வெறுத்துத் தன்னை பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறான்.

வேதத்தில் பிரியமாயிருக்கிறவர்கள் செய்யக் கூடாதக் காரியங்கள்:

ii) துன்மார்க்கனின் ஆலோசனையில் நடக்கக் கூடாது.

துன்மார்க்கனின் ஆலோசனைகள் சூதானவைகள் நீதி.12:5. என்றும் அது இரகசிய ஆலோசனை. சங்.64:2. என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த துன்மார்க்கரின் ஆலோசனை யாருக்கு விரோதமாக இருக்கும். அது எவ்விதமானவைகள். என்று சங்.4:5ல் கூறப்பட்டுள்ளது.

அதாவது உத்தமர்களை கெடுப்பதற்கு மறைவாகக் கண்ணிகளை வைப்பது. நியாயக்கேடானக் காரியங்களைக் செய்ய தந்திரமான யோசனைகள் நிறைவேற பிரயத்தனம் பண்ணுவதுமாகவுள்ளது என்றுக்கூறப்பட்டுள்ளது. நாம் துன்மார்க்கரின் ஆலோசனையில் நடப்போம் என்றால் நிச்சயமாக நாமும் துன்மார்க்கருக்கு வரும் தேவதண்டனையில் பங்கடையவேண்டியதாக இருக்கும்.

iii) பாவிகளின் வழியில் நிற்கக்கூடாது.

பாவிகளின் வழி எத்தன்மையுடையது என்று நீதி.1:19 முதல் இறுதிவரையுள்ள வசனங்களில் நன்கு கூறப்பட்டுள்ளது. அதாவது குறுக்கு வழியில் பணம் சேர்க்க இரத்தம் சிந்துதல் (கொலை செய்வது) போன்றக் காரியங்களை செய்வதாகக் குறிப்பதாகவுள்ளது. இதை பொருளாசைக்காரர் வழி என்று 19ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்விதமான பாவிகளின் வழியில் நாமும் நிற்போம் என்றால் நாமும் நிச்சயமாக நாசத்தை அடைவோம்.

) பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காரக் கூடாது. சங்.1:1.

பரியாசக்காரர் யார்? அகங்காரமும் இடும்புமுள்ளவனுக்கு பரியாசக்காரன் ...றும் பெயர். நீதி.21:24. இந்த கடைசி நாட்களில் பரியாசக்காரர் செய்யும் ...ரியங்கள் பற்றியும் வேதபுத்தகத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கடைசி ...களில் பரியாசக்காரர் வந்து தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து ...ளர் வருவார் என்று சொல்கிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் ...திரையடைந்த பின் சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த ...மாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். 2பேது.3:4. ஆம் ...யாசக்காரர் கர்த்தரின் வருகையைப் பற்றி பரியாசம் செய்கிறவர்களாயிருப் ...கள்.

கிறிஸ்துவ ஜீவியத்தில் விசுவாசத்திற்கு அடிப்படையாக உள்ளக் காரியம் நம் ...ராகிய இயேசுவின் இரண்டாம் வருகையாகும். ஆனால் நாம் பரியாசக்காரர் ...காரும் இடத்தில் உட்காருகிறவர்களாய் இருந்தால் நாமும் பரியாசக்காரரைப் ...ல் பரியாசம் செய்ய ஆரம்பித்துவிடுவோம். இது நமது ஆவிக்குரிய ஜீவியத்தை ...ிலுமாக அழித்துவிடும். ஆகவே நாம் கர்த்தரின் வேதத்தில் ...மாயிருக்கிறவர்களாக மேற்கூறப்பட்டுள்ளதானக் காரியங்கள் நம்மில் ...ளவும் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது மிகவும் ...சியமாகவுள்ளது.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் நிதானமாய் நடக்க வேண்டும்:

நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான் நீதி.14:2.

நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் என்றால் நிதானமாய் நடப்பது ...சியமாகவுள்ளது. நிதானம் என்ற வார்த்தையின் பொருள் எதையும் ...சரப்பட்டு அல்லது ஆத்திரப்பட்டு செய்யாமல் தீரயோசித்து, பொறுமையுடன் ...ல்படுவது என்பதாகும்.

நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் சில நேரம் காற்றடைத்த பலூண்போல ...யத்தில் பறக்கிறவர்களாக தங்களை எண்ணிக்கொண்டு சிலர் ...ல்படுவார்கள். அந்த நேரங்களில் நான் கர்த்தருக்காக அதைச் செய்வேன் ...து இதைச் செய்வேன் என்று பல பெரிய தீர்மானங்களைச் செய்வார்கள். ...ல் மறுநாள் பல கஷ்டங்கள், சோதனைகள் வரும்பொழுது உடைந்த ...னபோல மிகவும் சோர்ந்துபோய் எல்லாம் முடிந்துவிட்டது என்று ...க்குரிய ஜீவியத்தில் விழுந்துபோன நிலையில் காணப்படுவார்கள் ஆனால் ...னிதன் நிதானமாய் நடக்கிறவனாயிருந்தால் எப்பொழுதும் ஒரே நிலையில் ...ல்படுவான்.

நமக்கு எந்த எந்தக் காரியங்களில் நிதானம் அவசியம் என்று சிறிது ...ந்து பார்ப்போம்.

நிதானமாய் பேசுவது.

நிதானமாய்ப் பேசுகிறவனில் ராஜாக்கள் பிரியப்படுவார்கள் நீதி.16:13.

நாம் நிதானமாய்ப் பேசுகிறவர்களாயிருந்தால் நிச்சயமாக மற்றவர்கள் நம்மிடம் பிரியம் வைப்பார்கள். மாறாக நம் வாயில் வந்த எல்லா வார்த்தைகளையும் நம் இஷ்டம்போல் பேசுகிறவர்களாயிருந்தால் நிச்சயமாக நாம் கலங்கவேண்டிய தருணங்கள் வரும். தன் உதடுகளை விரிவாகத் திறக்கிறவனே கலக்கமடைவான் நீதி.13:3.

B) நிதானமாய் போதிப்பது

சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்... ஜாக்கிரதையாயிரு 2தீமோ.2:15.

இன்று ஊழியர்கள் போதிப்பதில் பல விபரீதமானக்காரியங்கள் காணப்படுகிறது. பணக்காரனுக்கு ஒரு போதனை ஏழைக்கு ஒரு போதனை தன்னை விரும்புகிறவர்களுக்கு ஒரு போதனை, தன்னை விரும்பாதவர்களுக்கு ஒரு போதனை என்றும், அயல் நாட்டுப்பணத்திற்காக சத்தியத்தை மாற்றி போதிப்பது போன்றக் காரியங்களும் காணப்படுகிறது அப்போஸ்தலனாகிய பவுல் நாம் எவ்விதம் போதிக்கவேண்டும் என்று கூறியுள்ளார். எந்த மனுசனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம் கொலோ.1:28.

நம்மால் போதிக்கப்படுகிற ஜனங்கள் கர்த்தரைப் பற்றிய எல்லாக் காரியங்களிலும் நன்கு கற்றுத்தேறினவர்களாக கர்த்தருடைய வருகையில் அவர் சந்நிதானத்தில் அவர்கள் நிற்கவேண்டும் என்ற உண்மையான வாஞ்சையோடு போதிக்க வேண்டுமே ஒழிய மற்றபடியல்ல இதற்கு ஊழியர்கள் இரவு பகலாக கர்த்தரின் வேதத்தை ஆராய்ந்து பார்த்து கர்த்தரின் சமூகத்தில் அதிகநேரம் காத்து இருக்கவேண்டும்.

இன்றைய ஊழியர்கள் இதையா செய்கிறார்கள் பிரசங்கங்களில் மற்ற சபைகளைபற்றி குறை கூறுவதும் கட்டுக்கதைகள், கப்சால், அரசியல் போன்றவைகளையல்லவா பிரசங்கிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழியர்கள் நமது கர்த்தரின் வருகையில் தங்கள் எஜமானிடமிருந்து என்ன வெகுமானத்தைப் பெறப்போகிறார்களோ? ஊழியர்கள் போதிக்கும் முறையில் அவர்களுக்கு நிதானம் தேவை.

C) நிதானமாய் நடப்பது.

நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான் நீதி.14:2.

இது நமது ஜீவியத்தை எவ்விதம் நடத்துகிறோம் என்பதை குறிக்கும். முன் கூறியதுபோல் உற்சாகமாய் இருக்கும்போது ஒருவிதமான ஜீவியம். சோர்ந்துபோன நிலையில் இருக்கும்போது ஒரு விதமான ஜீவியம் என்றல்ல

நேரங்களிலும் தங்கள் ஜீவியத்தைபற்றி விழிப்புடையவர்களாய் ...களையோ சூழ்நிலையையோ வேறு எந்தகாரியத்தையும் பாராது. நம் ... நம் கர்த்தரைமட்டும் நோக்கியதாக இருக்க வேண்டும். இதை கீழ்க்கண்ட வசனம் நன்கு விளக்கும்.

...கையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை ...கொண்டிருக்க, பாரமானயாவற்றையும் நம்மை சுற்றி நெருங்கி ... பாவத்தையும், தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும், ...றிறவருமாயிருக்கிற இயேசுவைநோக்கி நமக்கு நியமித்திருக்கிற ...தில் பொறுமையோடே ஓடக்கடவோம் எபி.12:1.

...ந்த நிதானத்தை எவ்விதம் பெறுவது? இவைகளால் (வேதபுத்தகத்தின் ...) .... நிதானம் என்பவைகளைப் பற்றிய உபதேசத்தை அடைவோம் ...2,3.

...வேதபுத்தகத்தை சரியாக கற்பதின் மூலம் நம் வாழ்க்கையில் நிதானத்தைப் ...று நாம் செய்கிற எல்லாக்காரியங்களிலும் நிதானம் உடையவர்களாக ...படமுடியும். இந்த கடைசி நாட்களில் வேதத்தைக் கற்போமா? நிதானத்தைக் ...வோமா? நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறஜனங்கள் என்றால் நிச்சயமாக ...த்தைக் கற்று அதின்மூலம் நிதானத்தை அறிந்து நமது வாழ்க்கையில் ...க்காரியத்திலும் நிதானமாக செயல்பட முடியும்.

...ர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் நியாயஞ் செய்யவேண்டும்.

...ர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது. ...க்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள். உங்கள் தேவனாகிய ...ரிடத்திலே அநியாயமும் முகத்தாட்சண்யமும் இல்லை. பரிதானமும் ...டத்திலே செல்லாது 2நாளா.19:7.

...ங்கு யோசபாத் என்கிறதான யூதாவின் அரசன் தனது ராஜ்யத்தில் ...ாதிபதிகளை நியமித்து அவர்கள் எவ்விதம் நியாயஞ்செய்யவேண்டும் என்று ...ளை கொடுக்கிறதைப் பார்க்கிறோம். அதாவது நியாயஞ்செய்கிற ...ர்களிடத்திலே முகத்தாட்சண்யமோ பட்சபாதமோ இருக்கக்கூடாது. ...னில் நாம் ஆராதிக்கிற தேவன் அப்படிப்பட்டவரல்ல.

இன்று நமது சமுதாயங்களிலோ அல்லது அரசாங்கத்தால் ...டுத்தப்பட்டுள்ள நீதிமன்றங்களிலோ (Courts) எந்தவித நியாயத்தையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இந்த இடங்களில் ஏழை பணக்காரன் என்ற ...பாடுகளும் பணத்திற்காக நியாயத்தை புரட்டுவதையும் நாம் கண்கூடாகக் ...ணலாம். ஆகவே தேவஜனங்களுக்கு இவ்வுலக ஜனங்களாலான ...சாயத்துக்களிலோ, நீதிஸ்தலங்களிலோ நாம் சிறிதளவும் நியாயத்தை ...பார்க்க முடியாது, இவ்விடங்களிலே தேவ ஜனங்களாகிய நம்மை உலக ...களாகிய அவர்கள் அவமானப்படுத்த நினைப்பார்களே ஒழிய நமக்கு ...யம் செய்யமாட்டார்கள். நாம் இவ்வித இடங்களுக்கு நமது நியாயத்திற்காகப்

போகவும் கூடாது. சிலர் இவ்விதமான காரியங்களை அறியாதபடி பஞ்சாயத்துக்களுக்கும், நீதிஸ்தலங்களுக்கும் போய் அந்த இடங்களில் அவமானப்பட்டு வருவதைக் கண்கூடாகக் காணலாம். ஒரு சமயம் நாம் பலவந்தமாக மற்றவர்களால் இவ்வித இடங்களுக்கு போகும்படியான நிலை ஏற்படும் என்றால் அவ்விதமான சூழ்நிலைகளில் கர்த்தர் நமக்காகக் கிரியை செய்யும்படி அவருடைய ஒத்தாசைக்காக மன்றாட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இவ்வித சூழ்நிலைகள் நமக்கு ஏற்படும்பொழுது நமது இரட்சகராகிய இயேசுவின் மாதிரியின்படி நடந்துகொண்டால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். அவர் காட்டிய மாதிரியைப் பற்றி கீழ்க்கண்டவாறுக் கூறப்பட்டுள்ளது அவர் வையப்படும்போது பதில் வையாமலும் பாடுபடும்போது பயமுறுத்தாலும் நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் 1பேது.2:23. ஆண்டவராகிய இயேசு சிலுவையில் அறையபட கொண்டுபோகபடுமுன் அவர் பிலாத்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கொண்டு போகப்பட்டார். ஆனால் அங்கு அவருக்காக பரிந்துபேசவோ, நியாயஞ்சொல்லவோ யாரும் இல்லை. ஆண்டவராகிய இயேசு எண்ணியிருந்தால் தமது ஒருவார்த்தையினால் அவர்கள் எல்லாரையும் அழித்து இருக்கமுடியும். ஆனால் அவர் அவ்விதம் செய்யவில்லை. மாறாக நியாயமாய்த் தீர்ப்பு செய்கிற தமது பிதாவாகிய தேவனுக்குத் தம்மை பூரணமாக ஒப்புக்கொடுத்தார். தம்மைக் கொடுமைப்படுத்திய ஜனங்களுக்காக பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் லூக்.23:34.

ஆனால் பிதாவாகிய தேவன் எவ்விதம் அந்த ஜனங்களுக்கு நியாயம் செய்தார் என்பதையும் ஓரளவு நாம் அறிவோம். ஆண்டவராகிய இயேசுவை கொலைசெய்யும்படி ஒப்புக்கொடுத்த இஸ்ரவேலர் தங்கள் தேசத்தை இழந்து உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டனர். பலவிதமான நிந்தனைகளையும், அவமானங்களையும் சுமார் 1880 வருஷகாலமாக அனுபவித்தனர். அதுபோல் இன்று நம்மை வேதனைப்படுத்துகிற உலக ஜனங்களையும் தேவன் நிச்சயமாகவே தமது நித்திய நியாயத்தீர்ப்பில் தேவனைக்குட்படுத்துவார். ஆகவே நாமும் அவருடைய வேளைக்காகப் பொறுமையுடன் காத்திருப்போம். இந்த வேளையில் கர்த்தரின் வாக்குத்தத்தமும் எச்சரிப்புமான வார்த்தையை மனதில் கொள்வது நல்லது.

அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ சீக்கிரமாய் (நியாயத்தீர்ப்புக்கொடுக்க) வருகிறேன் வெளி.22:11.

ஆம் ஆண்டவராகிய இயேசு நிச்சயமாகவே வெகுசீக்கிரம் வரப்போகிறார்.

...களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், ...த்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடுகூட இளைப்பாறுதலையும் ...பலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறது. 2தெச.1:6. ...து கூறப்பட்டுள்ளதுபோல் நம்மை அவமானப்படுத்துகிற நிந்திக்கிற ...ங்களை நித்திய வேதனைக்குள்ளாக்குவார். நாம் சிறிது பொறுமையோடு ...ப்போம். கவலைப்படவேண்டாம். தேவ ஜனங்கள் பஞ்சாயத்துக்கோ, போலீஸ் ...ஷனுக்கோ, நீதிமன்றங்களுக்கோ எந்தக்காரணத்தை முன்னிட்டும் ...க்கூடாது. அவைகள் நமக்காக ஏற்படுத்தப்பட்டவைகள் அல்லவே அல்ல.

ஆனால் தேவ ஜனங்களாகிய நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக ...வர்ளுக்கு நியாயஞ்செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். இதுபற்றிக் ...ண்ட வேத வசனங்களை மனதில் கொள்வது நல்லது. ...யனுக்காகவும், திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக் ...வும் உன் வாயை திற. உன் வாயைத்திறந்து நீதியாய் நியாயந்தீர்த்து, ...மையும், எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய். நீதி.31:8,9. ...ழக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து சிறுமைபட்டவனுக்கும் ...ற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும், எளியவனையும், ...வித்து துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள் ...82:3,4. வேதபிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் ...மார்க்கரைப் புகழ்கிறார்கள், வேத பிரமாணத்தைக் ...க்கொள்ளுகிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள் ...28:4.

இந்த நாட்களில் தேவ ஜனங்களாகிய நாம் துன்மார்க்கரான உலக ...ங்களோடு அவர்கள் பணத்க்காக அல்லது ஆள் பலத்துக்காக ...ந்துகொண்டு அவர்களோடு ஒத்துப்போகக்கூடாது. நிச்சயமாக ஏழை ...யவர்களுக்காக நாம் போராடவேண்டும். நியாயத்தைச்சொல்ல என்றுமே ...ங்கக்கூடாது. பட்சபாதம் முகத்தாட்சண்யம் என்பதும் நம்மில் சிறிதளவும் ...ணப்படக்கூடாது. இது குறித்து கூறப்பட்டுள்ள தேவ எச்சரிப்பும் ...லோசனையுமான வேதவசனத்தைக் கவனிப்பது நல்லது. தீமைசெய்ய ...ான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக. வழக்கிலே நியாயத்தைப் ...ட மிகுதியானவர்களின் பட்சத்தில் சாய்ந்து உத்தரவு ...ால்லாதிருப்பாயாக யாத்.23:2. எந்த சூழ்நிலையிலும் நாம் நியாயத்தை ...லபேசக்கூடாது.

தேவஜனங்களாகிய நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக நியாயத்தை ...லா இடங்களிலும் சொல்லவேண்டும். நியாயவிசாரணையில் அநியாயம் ...யாதிருங்கள். சிறியவனுக்கு முகத்தாட்சண்யம் செய்யாமலும் ...ரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும் நீதியாக பிறனுக்கு ...யாயந்தீர்ப்பாயாக லேவி.19:15.

11. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களின் ஐக்கியம் :

உமக்கு பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன் சங்.119:63.

நான் உம்முடைய வசனத்திற்குக் காத்திக்கிறபடியால் உமக்குப் பயந்தவர்கள் என்னைக்கண்டு சந்தோஷப்படுவார்கள் சங்.119:74. உமக்குப் பயந்து உமது சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள் என்னண்டைக்குத் திரும்புவார்கள் சங். 119:79.

இந்த நாட்களில் பல்வேறு சபைப்பிரிவுகள் இருக்கிறது. ஒரு சபையைச்சேர்ந்த விசுவாசிகள் மற்றச் சபையைச் சேர்ந்த விசுவாசிகளைக் கண்டால் ஏதோ சத்துருக்களைக் காண்பதுபோல் பார்க்கிறார்கள். ஊழியர்கள் பற்றியும் அவர்கள் உபதேசங்கள் பற்றியும் குறை கூறுகிறவர்களாயிருக்கிறார்கள். இவ்விதவேறுபாடுகள் தேவஜனங்கள் மத்தியில் காணப்படுவதினால் தேவனுடைய நாமம் தேவஜனங்கள் மூலமாக மகிமைப்படுவதற்கு பதிலாக தூஷிக்கப்படுகிறதாயிருக்கிறது. தேவனுடைய சத்தியத்தை நம்மால் தைரியமாய் போதிக்கமுடிகிறதில்லை. என்னபரிதாபம் பாருங்கள்.

ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் இருந்தபொழுது கீழ்க்கண்டவாறு ஜெபித்தார். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் யோவா.17:21,22.

நம் இரட்சகராகிய இயேசுவின் வாஞ்சை நாம் எல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் நமக்கோ நமது ஊழியருக்கோ இவ்வித வாஞ்சையுண்டா? நாம் நமது சபைகளில் அங்கத்தினரை அல்லது நமது சகோதர விசுவாசிகளை பகைக்கிறோமே என்ன பரிதாபம் பாருங்கள்.

சங்கீதக்காரனாகிய தாவீது ராஜா யார்யார் கர்த்தருக்குப் பயந்து அவர் கட்டளைகளை கைக்கொள்கிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் நான் தோழன் என்றுக் கூறுகிறார். நாம் தேவனுடைய பிள்ளைகள் எல்லோரையுமே நமது தோழர்களாக கருதுகிறோமா?

அடுத்தாற்போல் தாவீது ராஜா சொல்வது உமக்குப்பயந்தவர்கள் என்னைக் கண்டு சந்தோஷப்படுவார்கள் என்கிறார். இன்று கர்த்தருக்குப் பயந்து நடக்கிற மற்ற சபைஊழியங்களையோ, விசுவாசிகளையோ கண்டால் நமக்கு சந்தோஷம் உண்டாகிறதா? மாறாக நமக்கு கசப்பு அல்லவா உண்டாகிறது. அதுமட்டுமல்லாது உமக்குப் பயப்படுகிறவர்கள் உமது சாட்சிகளை அறிந்திருக்கிறப்படியால் என்னண்டைக்குத் திரும்புவார்களாக என்றும் சங்கீதக்காரன் சொல்கிறார். அதாவது உமது வேதத்தை அறிந்தவர்கள் என்னிடம் வரட்டும் அல்லது

...ளோடு ஐக்கியப்படட்டும் என்று கூறுகிறார். நமக்கு கர்த்தருக்குப் பயப்படும் ...ம் கிடையாது. கர்த்தரின் வேதமும் சரியாகத் தெரியாது. நம்மால் கர்த்தரின் ...களோடு ஐக்கியப்படவும் முடியாது. நமது இவ்வித நிலையில் நாம் ...ருடைய வருகையில் காணப்படவும் முடியாது. இந்தக்கடைசி நாட்களில் நமது ...ன ஆவிக்குரிய நிலையை நாம் அறிந்துகொள்ள கர்த்தர்தாமே கிருபை ...யவாராக. சங்கீதக்காரனாகிய தாவீது ராஜா கூறியுள்ள கீழ்க்கண்ட ...பவங்கள் நம்மிடம் காணப்படும் என்றால் நாம் ...கியவான்களாயிருப்போம்.

கர்த்தருக்குப் பயந்தவர்களை கனம் பண்ணுவது:

...ர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான் சங்.15:14.

...ர்த்தருக்குப் பயப்படுகிற தேவ ஜனங்களை (அவர்கள் எந்த சபையைச் ...ந்தவர்களாக இருந்தாலும் சரி) நாம் கனம்பண்ணவேண்டும். நாம் ...கப்பிரகாரமாக அந்தஸ்தும், ஐஸ்வரியமும், அதிகாரமும் உடைய உலக ...ங்களை மிகவும் அதிகம் கனம்பண்ணுகிறோம். ஆனால் கர்த்தருக்குப் ...படுகிற தேவ ஜனங்களை கனவீனம் பண்ணினால் மத்.25:45ல் ...பட்டுள்ளதுபோல நாம் கர்த்தரையே கனவீனம் பண்ணுவதாகும்.

கர்த்தருக்குப் பயபடுகிறவர்களின் சபையில் ஐக்கியங்கொள்வது:

அவருக்குப் பயந்தவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் ...த்துவேன் சங்.22:25.

நாம் நமது பொருத்தனைகளை அல்லது காணிக்கைகளைச் செலுத்துவது ...தரின் ஆலயத்தில் அல்லது கர்த்தரின் சபையில் ஆகும். அப்படியென்றால் ...தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக நமது பொருத்தனையை ...த்தவேண்டும் என்பது நமது நாம் ஐக்கியம் கொள்கிற சபையானது ...ருக்குப் பயப்படுகிற ஜனங்களால் ஆனதாக இருக்கவேண்டும். கர்த்தருக்குப் ...படுகிற ஜனங்கள் என்றால் கர்த்தரின் வசனத்தின்படி தங்கள் ஜீவியத்தை ...மத்துக்கொண்டவர்களாக இருக்கவேண்டும். நாம் ஐக்கியம் கொள்ளுகிற ... இவ்விதம் கர்த்தருக்குப் பயந்து கர்த்தரின் வசனத்தின்படி தங்கள் ஜீவித்தை ...மத்துக்கொண்ட ஜனங்களால் ஆன சபைகள்தானா? என்று ...திருக்கவேண்டும். கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்ததினால் கிறிஸ்தவர்கள், ...கை வரி, சங்க வரி கொடுப்பதினால் கிறிஸ்தவர்கள் என்று ...லிக்கொண்டு கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் தங்களுக்கும் எந்தவித ...தமும் இல்லையென்றும் தங்கள் ஜீவியத்தின் மூலமாக வெளிப்படுத்துகிற ...களைக்கொண்ட ஒரு கூட்டத்தில் சேர்ந்து நாம் ஐக்கியம் கொண்டால் அது ... ஆவிக்குரிய ஜீவியத்தை முற்றிலுமாக நஷ்டப்படுத்தி விடும்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மத்தியில் சாட்சி சொல்வது:

கர்த்தருக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள் ... என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன் சங்.66:16.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது ராஜா கர்த்தருக்குப் பயந்த ஜனங்களை, கர்த்தர் தன் ஆத்துமாவிற்கு செய்த நன்மைகளை அவர்களிடம் சொல்வதற்காக அழைக்கிறார். நாமும் கர்த்தருக்குப் பயந்த ஜனங்களாலான கர்த்தருடைய சபையில் கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளைக் குறித்து சாட்சி சொல்ல, வெட்கப்படக் கூடாது.

இந்த நாட்களில் நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக மற்ற தேவ ஜனங்களோடு ஐக்கியப்பட்டிருப்போம். அவர்களோடு கொள்ளும் ஐக்கியம் நமக்கு சந்தோஷமாக இருக்கட்டும். தவறான உபதேசங்களை கைக்கொள்கிற ஜனங்களோடு ஐக்கியம் கொள்ளவேண்டாம். இது நமக்கு ஆபத்தாக முடியும்.

காதுகேளாதோரை நிந்தியாமலும், பார்வையற்றோருக்கு முன்னே தடுக்கலை வையாமலும் உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக. நான் கர்த்தர் லேவி.19:14.

உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக் கூடாது. உன் தேவனுக்குப் பயப்படவேண்டும் லேவி.25:17. நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல் உன் தேவனுக்குப் பயந்து உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக லேவி.25:36.

நரைத்தவனுக்கு முன்பாக் எழுந்து முதிர்வயதுள்ளவன் முகத்தை கனம் பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக, நான் கர்த்தர் யாத்.19:22.

நீ அவனை கொடூரமாய் ஆளாமல் உன் தேவனுக்குப் பயந்திரு லேவி.25:43.

இதற்கு முந்திய பாகத்தில் நாம் யாரோடு தோழமை அல்லது ஐக்கியம் கொள்ளவேண்டும் என்றுப் பார்த்தோம். கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் செல்கிறதான தேவ ஜனங்களோடு மட்டும் நாம் ஐக்கியம் கொள்கிறவர்களாக இருக்கவேண்டும் என்று பார்த்தோம். இந்தப்பகுதியில் நம்மை சுற்றியுள்ள தேவனை அறியாத ஜனங்களானாலும் சரி அல்லது விசுவாசிகளானாலும் சரி நாம் எவ்விதம் அவர்களோடு இடைப்பட வேண்டும் என்று இந்த பாகத்தில் பார்ப்போம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் நம்மைச் சுற்றியிருக்கும் அக்கம்பக்கத்தினருக்கு அன்பு பாராட்டுகிறவர்களாக, அவர்களிடம் இரக்கம் உடையவர்களாக அவர்களுக்கு அநியாயம் செய்யாதபடி அவர்களை துன்புறுத்துகிறவர்களாயிராமல், கனம்பண்ணி மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்நாட்களில் பொதுவாக உலக ஜனங்களாயிருந்தாலும் சரி கிறிஸ்தவர்களாய் இருந்தாலும்சரி மற்றவர்களுக்கு தீமை செய்வது என்றால்

ழ்ச்சியோடும் வைராக்கியத்தோடும் செய்கிறார்கள். ஆனால் துன்பத்தில் ட ஒரு மனிதனுக்கு அல்லது கொடிய ஏழ்மையான நிலையில் உள்ள னுக்கு சிறிது உதவி செய்ய வேண்டும் என்றால் அவர்களுக்கு மனம் இல்லை. வயதில் பெரியவர்களை மதிப்பதும் கிடையாது. மற்றவர்களுக்கு யம் செய்து. தங்கள் அருகிலுள்ள ஏழை எளியவர்களை மிகவும் கிறவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு தீமைசெய்வதே வாழ்க்கையின் இலட்சியம் என்றெண்ணி அநேகர் ஜீவிக்கிறார்கள். ரில் அவர்களுக்கு தெய்வபயம் சிறிதும் கிடையாது. ஆகையினால்தான் மாய் செய்கிறார்கள்.

ம் கர்த்தருக்குப் பயப்படுகிற ஜனங்கள் என்றால் நிச்சயமாக நாம் களுக்கு இரக்கம் பாராட்டுகிறவர்களாக, எப்பொழுதும் அவர்களுக்கு செய்கிறவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்களுக்குத் தீமை செய்வது சிறிதளவும் காணப்படக்கூடாது. வட்டிக்குக் கொடுப்பதும் படக்கூடாது. வட்டிக்குக் கொடுப்பதும் தவறான காரியமாகும். கிகளாகிய தேவ ஜனங்கள் தங்கள் வாழ்க்கையில் இவ்விதமானக் கள் தங்களில் காணப்படாதபடி தங்களை காத்துக்கொள்வது நல்லது.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனிதரின் தீமையானக் ங்களுக்குப் பயப்படக்கூடாது.

மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால் எகிப்தின் ராஜா னுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல் ஆண்பிள்ளைகளையும் ராடே காப்பாற்றினார்கள் யாத்.1:17.

ந்த சம்பவம் பற்றி நம்மில் அநேகருக்கு நன்றாகத் தெரியும். எகிப்தில் வந்ததான இஸ்ரவேல் ஜனங்களின் பெருக்கத்தைக் கண்டு பொறாமை ட எகிப்தின் அரசனான பார்வோன் இஸ்ரவேலின் ஜனங்களுக்கு வச்சிகளாக இருந்த ஸ்திரிகளைப் பார்த்து நீங்கள் இஸ்ரவேல் களின் ஸ்திரிகளுக்கு குழந்தைகள் பிறக்கும்பொழுது அது ஆண் தயாக இருக்கும் என்றால் அதை உடனேக் கொன்றுபோடுங்கள் என்று கொடுத்திருந்தான். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களின் ஸ்திரிகளுக்கு மைம் பார்த்த மருத்துவச்சிகள் கர்த்தருக்கு பயப்படுகிறவர்களாக ததினால் அரசனின் கட்டளைக்கு பயப்படாமல் ஆண்பிள்ளைகளையும் டு வைத்தார்கள்.

றகூறப்பட்டுள்ள சம்பவத்திலிருந்து நாம் உலக அதிகாரங்களுக்கும் வேண்டும். ஆனால் அது வேத நியமனங்களுக்கு எதிரானதாக இருக்கும் அவ்விதமானக் கட்டளைகளுக்குப் பயப்படக் கூடாது. நம் வாழ்க்கையில் ன் கட்டளைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இவ்வித அனுபத்தை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற யூத வாலிபர்களின் வாழ்க்கையிலும் காணலாம். நேபுகாத்நேச்சார், தான் உண்டாக்கியிருந்த பொற்சிலையை வணங்கும்படியாக அவர்கள் கட்டளை பெற்றபோது அவர்கள் அந்த சிலையை வணங்க முழுவதுமாக மறுத்துவிட்டார்கள். அதற்காக அவர்கள் தீச்சூளையில் போடப்பட்டபோது, அவர்கள் தங்கள் தேவனுக்கு பயந்தவர்களாக அரசக்கட்டளைக்குப் பயப்படாததினால் தேவன் அவர்களை அக்கினிச் சூளையிலிருந்து அதிசயவிதமாக தப்புவித்தார். அதுபோலவே எகிப்தில் மருத்துவச்சிகளின் குடும்பங்களையும் தழைக்கும்படிச்செய்தார் (யாத்.1:21).

இந்நாட்களில் நாமும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக தேவனுக்கு விரோதமான மனுஷக்கட்டளைகளுக்குப் பயப்படாமல் செயல்படுவோ மென்றால், அதினால் நமக்கு ஆபத்துக்கள் வந்தாலும் தேவன் அந்த ஆபத்தான சூழ்நிலையிலிருந்து நம்மை பூரணமாகப்பாதுகாப்பார். அதுமட்டுமல்லாது தேவனின் நாமம் நம் மூலமாக மகிமைப்படும் நாமும் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம். செயல்படுவோமா?

14. மற்றவர்கள் கர்த்தருக்குப் பயப்படுவதற்கு அவர்கள் கர்த்தரை அறியும்படியாகச் செய்யவேண்டும்.

உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார், இந்த ஆலயத்துக்கு நேராக நின்று விண்ணப்பம் பண்ணினால் உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக்கேட்டு பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலைப்போல உம்முடைய நாமத்தை அறிந்து உமக்குப் பயப்பட்டு, நான் கட்டின இந்த ஆலயத்திற்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கு அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியே தேவரீர் செய்வீராக 2நாளா.6:32,33.

உலக ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்பட வேண்டும் என்றால் அவர்கள் கர்த்தரின் வல்லமையைக் குறித்து அறிந்து இருக்கவேண்டும். அப்பொழுது தான் அவர்களுக்கு கர்த்தரைக் குறித்ததான பயம் உண்டாகும், ஆகவே கர்த்தரை அறிவது என்றால் என்ன? கர்த்தரை எப்படி அறிவது என்பது பற்றி இந்த பாகத்தில் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

A. கர்த்தரை அறிவது என்றால் என்ன?

1. தேவன் ஒருவரே, வேறொரு தேவன் இல்லையென்று அறிவது.

நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் வேறொருவர் இல்லையென்றும் அறிந்து கொள்வீர்கள் யோவே.2:27.

இதோ நான் மாமிசமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் ...ர.32:27.

பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் ...ருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். நானே தேவன், ...றொருவரும் இல்லை ஏசா.45:2; 44:6.

கர்த்தரை அறிவது என்றால் கர்த்தரின் வழியை அறிவதாகும்.

நான் உம்மை அறிவதற்கும்.... உம்முடைய வழியை எனக்கு ...றிவியும் யாத்.33:13.

மனுஷருடைய ராஜ்யத்தில் கர்த்தர் ஆளுகைசெய்து மனுஷரில் ...ழந்தவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று அறிவது:

உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்து ...க்குச் சித்தமானவனுக்கு அதைக்கொடுத்து மனுஷரில் ...ழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் ...றியும்படிக்கு.... தானி.4:17.

கர்த்தர் ஜனங்களை நியாயந்தீர்க்கிறவர் என்று அறிவது:

கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்று சொன்னவர் ...ன்னாரென்று அறிவோம் எபி.10:30.

இயேசு நமக்குள் இருப்பதை அறிவது.

இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே ...றியீர்களா 2கொரி.13:5.

இந்நாட்களில் தேவன் ஒருவரே என்றும், இந்த உலகில் தேவர்கள், ...வதைகள் என்னப்படுபவைகள் தேவர்களே அல்ல, அவைகள் பிசாசின் ...விகள் என்று அறிவதும், கர்த்தரின் வழி எது, அது எத்தன்மையுடையது, அதில் ...படி செல்வது, செல்வதினால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன ...றும், நம் இரட்சகராகிய இயேசு நமக்குள் இருப்பதை நாம் அறிவதும் நமக்கு ...கவும் அவசியமாகவுள்ளது.

... எப்படி தேவனைப் பற்றி அறிவது.

தேவனைப்பற்றி அறிவது நமது உள்ளத்திலேயேக் ...கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே ...வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தி ...ருக்கிறார் ரோம.1:19.

கர்த்தராகிய இயேசு பிதாவாகிய தேவனை வெளிப்படுத்த வேண்டும்.

குமாரன் எவனுக்கு அவரை (பிதாவாகி தேவனை) வெளிப்படுத்த

சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவரும் பிதாவை அறியான் மத்.11:27, லூக்.10:22.

3. பரிசுத்த ஆவி தேவனை வெளிப்படுத்துகிறார்.

தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான் 1கொரி.2:11.

4. கேட்டு அறிவது

இயேசுவிலுள்ள சத்தியத்தின்படியே நீங்கள் அவர்டத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்கள் எபே.4:21, 1யோவா.5:20.

5. அமர்ந்திருந்து கர்த்தரை அறிவது, அதாவது கர்த்தரின் செயலை அல்லது கர்த்தரின் வல்லமையை கண்டு அறிவது.

நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்துகொள்ளுங்கள் சங்.46:10.

நாம் தேவனைப்பற்றி அறிய வேண்டும் என்பது நமது உள்ளத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. மானானது நீரோடைகளை வாஞ்சிக்கிறது போல தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது சங்.42:1; 63:1. என்று சங்கீதக்காரன் சொல்வதுபோல் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் எல்லாருமே தேவனைப் பற்றி அறிய வாஞ்சையுடையவர்களாய் இருக்கிறார்கள். தேவன் இல்லையென்று சொல்கிறதான கம்யூனிஸ்வாதிகள் கூட தேவனை குறித்த தாகம் தங்களுக்கும் உண்டென்பதை பலசந்தர்ப்பங்களில் அவர்களை அறியாமலே தேவனே காப்பாற்றும் தேவனே இரங்கும் என்றும் இன்னும் இவ்விதமான வார்த்தைகள் தங்கள் வாயிலிருந்து வருவதின் மூலமாய் தங்களுக்கும் தேவனைக் குறித்த தாகம் உண்டு என்பதை வெளிப்டுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். ஆனால் நாம் சரியான முறையில் கர்த்தரை அறிய கர்த்தர் நமக்கு உதவி செய்யவேண்டும் ஆண்டவராகிய இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் நாம் தேவனைப் பற்றி அறிய நமக்கு உதவிசெய்கிறார்கள்.

இந்நாட்களில் இந்த உலகின் ஜனங்கள் எல்லாரும் கர்த்தரை அறிந்து, அவருக்குப் பயந்தவர்களாக அவர் காட்டும் வழியில் செல்ல ஆயத்தமாயிருப்பார்கள் என்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

15. கர்த்தருடைய வழியில் நடக்கிறவர்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு நடக்கவேண்டும்.

இப்பொழுதும் இஸ்ரவேலே நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் எல்லாம் நட உபா.10:12

கர்த்தரின் வழியில் நடக்க கர்த்தருக்குப் பயப்படும் பயம் அவசியம் என்று முந்திய பாகங்களில் பார்த்தோம். ஆனால் மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில்

[illegible]

[illegible] இருந்தான். ராஜா என்றும் தனது பெயரை விசுவாசிகளின் [illegible] ஆபிரகாம் என்ற பெயராக மாற்றிக்கொண்டான்.

ஆபிரகாமிற்கு அநேகம் பிள்ளைகள் பிறந்தனர். பிள்ளைகள் நன்கு கற்றனர். ஆபிரகாம் வாழ்க்கை உண்மையிலேயே எல்லாவிதத்திலும் [illegible]திக்கப்பட்டதாகவே இருந்தது. ஆபிரகாமின் மூத்தமகன் தனது படிப்பை [illegible]து வேலையும் கிடைக்கிறதாக இருந்தது. லஞ்சம் கொடுத்தால்தான் அந்த [illegible] வேலை கிடைக்கும். ஆபிரகாமிற்கு லஞ்சம் கொடுப்பது பாவம் [illegible]துதெரியும். ஆனால் இது தனது மகனின் வருங்காலத்தைப் [illegible]கக்கூடியக்காரியம். சிறிது யோசித்தார். இந்த வேலையை விட்டுவிட்டால் [illegible]து இவ்வித ஒரு நல்ல வேலை கிடைப்பது கஷ்டம். ஆகவே லஞ்சம் கொடுத்து [illegible]மகனை வேலையில் சேர்த்துவிட்டார். ஆபிரகாமின் மனச்சாட்சி அவரை நீ [illegible] செய்துவிட்டாய் இப்படி என்று கேட்பதாக இருந்தது. இது ஆபிரகாமுக்கு [illegible]ம கஷ்டமாக இருந்தது.

[illegible]கொஞ்ச நாள் கழிந்தது. தனது மகளின் திருமணக்காரியம் வந்தது. [illegible]பிள்ளை ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, நன்கு கல்விகற்று, நல்ல [illegible]யோகத்தில் உள்ளவனாக இருந்தான். விசுவாசி ஆபிரகாமின் வீட்டாருக்கு [illegible] மாப்பிள்ளை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் ஒரே ஒரு பிரச்சினை. [illegible]வது மாப்பிள்ளை வீட்டார் பெயர்க்கிறிஸ்தவர்கள். ஆகவே மாப்பிள்ளை [illegible]ர் நகை, ரொக்கம் போன்றவைகள் கேட்டனர். விசுவாசி ஆபிரகாம் தனது [illegible]ின் நல்வாழ்வுக்காக இவை எல்லாவற்றையும் கொடுக்க சம்மதித்தார். [illegible]ண நாள் வந்தது. மாப்பிள்ளை விட்டார். பெயர்க்கிறிஸ்தவர்கள் (பெயருக்கு [illegible] கிறிஸ்தவர்கள்) என்பதினால் அவர்களுக்காக பல சடங்காச்சாரமானக் [illegible]ங்கள், பிசாசின் கிரியைகள் இவைகளை செய்யவேண்டியதாய் இருந்தது. [illegible]வற்றையும் தனது மகளின் நல்வாழ்வுக்காக என்று எண்ணி விசுவாசி [illegible]ரகாம் செய்துமுடித்தார். திருமணம் இனிதாக முடிந்தது மகளும் தனது [illegible]ன் வீடு சென்றுவிட்டாள்.

விசுவாசி ஆபிரகாம் உட்கார்ந்து சிறிது சிந்திக்க ஆரம்பித்தார். தன்னுள் [illegible] ஒன்றை இழந்துவிட்டதாக உணர்ந்தார். உலகப்பிரகார,

வெளித்தோற்றத்தில் விசுவாசி ஆபிரகாமின் வாழ்க்கை நன்றாகவே இருந்தது. ஆனால் தனது உள்ளத்தில் ஒரு வெற்றிடத்தை உணர்ந்தார். அதிகநேர சிந்தனைக்குப்பின் தன் உண்மை நிலையை உணர்ந்தார். அதாவது தனக்கும் தன்னை ஆட்கொண்ட தேவனுக்கும் இடையே இருந்த உறவை இழந்துவிட்டதை உணர்ந்தார். தனது உள்ளத்தில் தேவன் அருளியிருந்த சந்தோஷம் சமாதானம் இவைகளை இழந்துவிட்டதை உணர்ந்தார். கர்த்தர் தனக்குக் காட்டிய பரிசுத்தமான பாதையிலிருந்து தான் அதிகம் பின்வாங்கி விட்டதாக உணர்ந்தார். இவ்விதமாக தன் விசுவாச ஜீவியத்தையே கெடுத்துக்கொண்டதை உணர்ந்தார். என்ன பரிதாபம் பாருங்கள்.

இன்று விசுவாசிகள் அநேகரின் நிலை இப்படித்தானே இருக்கிறது. உத்தியோகத்துக்காக விசுவாசத்தை விலைப்பேசுவது. உறவுக்காக விசுவாத்தைவிட்டு பின்வாங்குவது போன்ற காரியங்கள் நடைபெறுவதை நாம் கண்கூடாகக் காணலாம். விசுவாசி ஆபிரகாமின் வாழ்க்கையில் கர்த்தரின் வழியில் செல்ல ஆரம்பிக்கும் முன் இருந்த கர்த்தருக்கு பயப்படும் பயம் அதற்கு பின்னும் இருக்கும். லஞ்சம் கொடுப்பது, ரொக்கம் போன்ற தீமை யானக்காரியங்களைச் செய்யாதபடி தன் ஜீவியத்தை காத்துக் கொண்டிருக்கலாமே?

நமது ஜீவியத்திலும், வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் கர்த்தருக்கு பயப்படும்பயம் நம்மில் காணப்படும் என்றால், நமக்கு எவ்வளவுதான் கஷ்டம் நஷ்டம் வந்தாலும் நாம் கர்த்தர் நமக்குக் காட்டிய வழியிலிருந்து ஒருநாளும் பின்வாங்கமாட்டோம். செத்த மீன் ஆற்று வெள்ளத்தின் போக்கில் அடித்துப் போகப்படும். ஆனால் உயிருள்ள மீன் ஆற்று வெள்ளத்திற்கு எதிராக நீச்சல் அடித்துச் செல்லும். நாம் உயிருள்ளவர்கள் என்றால் செத்த மீன்களைப்போல் உள்ள பெயர் கிறிஸ்தவர்களைப்போல் நாள் பார்ப்பது, சகுனம் பார்ப்பது குறிகேட்பது, லஞ்சம் கொடுப்பது, லஞ்சம் வாங்குவதுபோன்ற செத்த கிரியைகளைச் செய்யமாட்டோம். மாறாக உயிருள்ள மீன்களைப்போல் இவ்வித பாவமான பழக்க வழக்கங்களுக்கு எதிராக போராடி ஜெயங்கொள்கிறவர்களாக இருப்போம். நாம் செத்த கிறிஸ்தவர்களா அல்லது உயிருள்ள கிறிஸ்தவர்களா? இந்நாட்களில் நாம் நம்மைப் பற்றி சரியாக அறிந்து கொள்வது நல்லது.

16. கர்த்தரை சேவிக்க்கிறவர்கள் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு அவரை சேவிக்க வேண்டும்.

பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள் சங்.2:11.

நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை ..... சேவியுங்கள் யோசு.24:14.

நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு எவ்விதம் அவரை சேவிக்கவேண்டும் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கப்பார்க்கிறேன்.

மனோகர் சிறு வாலிபன் கர்த்தருக்குப் பயந்தவனாக ஜீவித்தான். னுக்கு கர்த்தர் நல்ல வழியைக் காட்டினார். மனந்திரும்பி, ஞானஸ்நானம் று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்று இவ்விதமாக கர்த்தரின் யில் சேவை ஆரம்பித்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார் நன்கு கல்வி கற்றான். ஒரு நல்ல உத்தியோகமும் கிடைத்தது. தன் அந்தஸ்துக்கேற்ற ஒரு ல பெண்ணை மணம்புரிந்து தன் வாழ்க்கையை சந்தோஷமாகவும், கர்த்தர் பற்றிய வல்லமையாகவும் நடத்திக்கொண்டு வந்தான். மனோகர் தன் விசுவாச வாழ்க்கையில் மிகவும் உண்மையுடையவனாகவும், உறுதியாயும் இருந்தான்.

ஏற்ற நேரத்தில் கர்த்தர் மனோகரைத் தம் ஊழியத்துக்காக அழைத்தார். லும் கர்த்தரின் ஊழியத்துக்கென்று தன்னை ஒப்புக் கொடுத்து, கர்த்தரின் ஊழியத்தை உண்மையும், உத்தமுமாய்ச் செய்ய ஆரம்பித்தான். கர்த்தரின் சமூகத்தில் பல மணி நேரம் காத்திருந்து, கர்த்தர் தனக்கு உணர்த்தும் காரியங்களை மட்டும் ஜனங்களுக்கு தேவச்செய்தியாகச் சொல்லுவான்.

கொஞ்ச நாள் ஆனது. சத்தியத்தைச் சொன்னதினால் சத்துருவானேனோ என்பதுபோல் சபையாருக்கும், ஊழியக்காரர்களுக்கும் இவர் கர்த்தரின் நாமத்தில் பாவங்களைக் கண்டித்துச் சொல்லும் முறைபிடிக்கவில்லை: ஆகவே இவரைத் தங்கள் சபைகளில் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். பாவம், ஊழியக்காரர் மனோகர் கர்த்தருக்காகத் தனது நல்லவேலையை ராஜினாமா செய்தவர். இப்பொழுது எந்தவித வருமானமும் இல்லாமல் தன் குடும்பத்தையும் கவனிக்க முடியாதபடி தவிக்க ஆரம்பித்தார். இந்த நிலையில் தன்னை அழைத்த தேவனை மட்டும் நோக்காதபடி மனிதரைப் பார்க்க ஆரம்பித்தார். இதினால் தனது ஊழியத்தை கஷ்டப்படுத்துகிறவராக இருந்தார். தனக்கு எந்தவித வருமானமும் இல்லாததினால் பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டி வந்தது.

ஒரு நாள் அருகில் உள்ள ஒரு பெயர்க்கிறிஸ்தவ சபையில் சென்று பிரசங்கித்தால் தனக்கு ஏதாவது கிடைக்குமே என்று எண்ணினார். அதற்காக அந்த சபையின் போதகரை அணுகி அவரிடம் உத்தரவு கேட்டுக்கொண்டார். ஆனால் பாவப்பட்டபிரசங்கியாருக்கு பெயர்க்கிறிஸ்தவ சபைகளில் பிரசங்கிப்பது புதிது பிரச்சனையாக இருந்தது. ஏனெனில் பெயர்க்கிறிஸ்தவ சபையின் ஜனங்கள் சத்தியத்தைக் கேட்கமாட்டார்களே. அது மட்டுமல்லாது பத்து அல்லது பதினைந்து நிமிஷத்துக்கு மேல் பிரசங்கிப்பதை விரும்பமாட்டார்களே என்று எண்ணினார். ஆகவே அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி பேச வேண்டும் என்று தீர்மானித்தார். அவ்விதமாகவே குறிப்பிட்ட நாளில் அவர்கள் ஆலயம் சென்றார். பிரசங்க நேரம் வந்தபோது பிரசங்கிக்க ஆரம்பித்தார். எவ்விதம் பிரசங்கித்தார் பாருங்கள்.

பிரசங்க வாக்கியம் :-

நான் **உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன். யோவா.8:12.**

ஒளி நம் வாழ்க்கையில் எவ்விதம் பயன்தருகிறது என்பது பற்றி ஒரு கதை மூலம் விளக்க விரும்புகிறேன் என்று ஆரம்பித்தார். ஒரு ஊரிலே ஒரு போதகர் இருந்தார். ஒரு நாள் மாலைமயங்கும் வேளையில் தன் வீட்டுப் பக்கத்தில் உள்ள புதரில் ஒரு கறுத்த ஆடு நிற்பதை எப்படியோ அந்த இருட்டு வேளையிலும் கண்டுவிட்டார். உடனே அவர் மனதில் ஒரு எண்ணம் உதயமாயிற்று . அதாவது இந்த புதரில் நிற்கும் ஆட்டை யாருக்கும் தெரியாமல் பிடித்துக் கொண்டுவந்தால் நன்றாக சமையல் பண்ணிச் சாப்பிட்டலாமே, ஆட்டுக்கால்களை நன்றாக சூப் போட்டுக் குடிக்கலாமே என்று எண்ணினார். உடனே செயல்பட ஆரம்பித்தார் மெதுவாக தரையில் உட்கார்ந்து தவழ்ந்து போய் அந்த ஆட்டை மெதுவாகப் பிடித்தார். ஆனால் அதே நேரத்தில் அவருக்கு எதிர்புறத்தில் இருந்து அவரைப் போலவே ஒரே சிந்தனையோடு தனது உபதேசியாரும் அந்த ஆட்டை நோக்கி வந்ததை போதகர் பார்க்கவில்லை. அவர்கள் இருவரும் ஒரே சமயத்தில் ஆட்டின் இரண்டு கால்களை பிடித்தவுடன் ஆடு மேய் என்று அலறல் குறலை எழுப்பியது.

ஆட்டின் அலறல் கேட்டவுடன் அந்த இடத்திற்குப் பக்கத்தில் குடியிருந்த அந்த சபையின் தலைவர் யாருடா அவன் ஆட்டைப்பிடிக்கிறவன் என்று கத்திக்கொண்டே தன் வாயிலிருந்து வந்த எல்லா விதமான தூஷணமான வார்த்தைகளையும் சொல்லிக்கொண்டு தன் வீட்டில் இருந்து வெளியே வந்தார். அந்த சபையின் தலைவர் எப்பொழுதும் தன் வாயைத் திறந்தாலும், அவர் வாயிலிருந்து எல்லா விதமான அசுத்தமான வார்த்தைகள் தான் வரும். அவர் ஆலயத்தில் பாடம் வாசிக்கும் ஒரு நேரத்தைத் தவிர மற்ற எந்த நேரத்திலும் அவர் வாயிலிருந்து தூஷணமான வார்த்தைகள்தான் வரும். தலைவர் கையில் இருந்த நன்கு ஒளி கொடுக்கக்கூடிய டார்ச் லைட்டின் உதவியோடு அந்தப்புதர் பக்கம் சென்றுப் பார்த்தால் அங்கே அவர்கள் சபையின் போதகரும், உபதேசியாரும் ஆட்டின் இரண்டுக் கால்களைப் பிடித்துக்கொண்டு திருதிரு வென்று முழித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றனர்.

எவ்விதம் அந்தசபையின் தலைவர் கையில் இந்த டார்ச்லைட் அந்த இருட்டு நேரத்திலே பயன்பட்டதோ அவ்விதமாகவே ஆண்டவராகிய இயேசுவும் நமக்கு ஒளியாக இருந்து பயன்தருவார் என்று பேசி முடித்தார். தொடர்ந்து அந்தசபையின் போதகரும் தனது சுருக்கச் ஜெபங்களை வாசித்து முடித்து ஆசீர்வாதத்தையும் கூறிமுடித்தார்.

ஆராதனை முடிந்தபின் சபையார் எல்லாருமே பிரசங்கியாரின் பிரசங்கத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். சிலவாலிபர்கள் இந்த பிரசங்கியார் ஐயா எவ்வளவு அழகாக நமது போதகரின் திருட்டுபுத்தியை சொல்லிக்காட்டிவிட்டார் என்றார்கள். தன் வாழ்நாள் முழுவதுமே தன் வீட்டிலே விளக்குவைக்காது தெருவிளக்கிலேயே தன் காரியங்களைச் சம்மாளித்த மிக

..னமாக வாழ்கிற ஒரு வயோதிப அம்மாள் இயேசுவை எப்படி நம்வீட்டில் ..னடுவந்து வைப்பது. நமக்கு மண்ணெண்ணெய் செலவு மிச்சமாகுமே .. கேட்க ஆரம்பித்தார்கள் இவ்விதமாக சபையார் பிரசங்கத்தைக் குறித்து ..று பேசினர்.

பிரசங்கியார் மெதுவாக போதகர் ஐயா இருக்கும் அறைக்குள் நுழைந்தார். ..ங்கியாரைப்பார்த்தவுடன் போதகர் ஐயா எண்ணெயில் போட்டக் கடுகுபோல ..ய ஆரம்பித்தார். ஓய்பிரசங்கியாரே நீர் என்ன எண்ணிக்கொண்டு ..க்றீர். நாங்கள் எல்லாம் திருடர்கள் நீங்கள் தான் பூரண பரிசுத்தவான்கள் .. எண்ணமோ. உங்கள் ஊழியர்கள் அநாதைப்பிள்ளைகள் விடுதி ..கிறோம் என்றுச்சொல்லி அயல்நாட்டுப் பணத்தை ..ச்சாப்பிட்டுக்கொண்டு இருப்பது எங்களுக்குத் தெரியாதா என்ன? விசுவாச ..ம் என்றுச் சொல்லிக்கொண்டு உங்கள் ஊழியர்கள் வீடு வீடாகப்போய் பிரித்துக்கொண்டு அலைவது எங்களுக்குத்தெரியாதோ என்று பொரிய ..பித்தார். பாவம் பிரசங்கியாருக்கு என்ன சொல்வதென்றேப் புரியவில்லை ..ு வெட்டப்போய் பூதம் கிளம்பியது என்றது போல் பாவப்பட்ட பிரசங்கியார் .. ஒன்றைக்கூற அது வேறுவிதமாய் ஆகிவிட்டதே என்று அங்கலாய்த்தவராக ..நோக்கி நடக்க ஆரம்பித்தார். வீட்டிற்குப் பணம் ஏதும் இல்லாமல் ..ங்கையோடு போனால் தன் மனைவி எரிமலைபோல் எரிந்து விழுவாளே ..ு எண்ணியவுடன் பிரசங்கியார் என்ன செய்வதென்றேப் புரியாமல் ..தியுடன் வீடுநோக்கி நடந்து கொண்டிருந்தார்.

..இன்று அநேக ஊழியர்களின் நிலை இப்படித்தானே இருக்கிறது. தங்களை ..ழைத்த தேவனை மட்டும் நோக்காது கர்த்தர் கொடுக்கும் செய்தியை மட்டும் ..யாது இன்றைய ஊழியர்கள் பல திசைகளை பார்க்கிறார்களே. இதினால் ..தர் தங்களுக்கு கற்றுக்கொடுத்த விலைமதியா வேதசத்தியங்களை ..லபேச வேண்டிய நிலை வந்துவிடுகிறதே என்னபரிதாபம் பாருங்கள். ..ரின் ஊழியத்தை கர்த்தருக்குரிய பயத்தோடு செய்தால் அக்கம் பக்கம் .. கர்த்தரை மட்டும் பார்க்கிறவர்களாய் கர்த்தருக்காக செயல்பட முடியுமே .. நாட்டு பணத்திற்காக கள்ளக் கணக்குகள் எழுத வேண்டாமே. ..சிகளின் சில காசுக்காக அவர்களிடம் முகஸ்துதி செய்ய வேண்டிய ..வராதே. இந்நாட்களில், நம் ஊழியர்களுக்கு கர்த்தர் தாமே பிரகாசமுள்ள ..கண்களைக் கொடுக்கவேண்டும்.

அத்தியாயம் 6

கர்த்தருக்குப் பயந்து ஜீவித்த மனிதர்கள்

வேதபுத்தகத்தில் கர்த்தருக்குப் பயந்து ஜீவித்த மனிதர்கள் யார் யார் என்றும் அவர்கள் எவ்விதம் தங்கள் ஜீவியத்தை அமைத்துக் கொண்டார்கள் என்றும், கர்த்தர் அவர்களுக்காக என்ன என்ன காரியங்கள் செய்தார் என்பது பற்றியும் இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

A. யோபு :-

யோபு கர்த்தருக்குப் பயந்து ஜீவித்த மனிதன் என்று வேதபுத்தகம் அவரைப் பற்றி சாட்சிகொடுக்கிறது அவரிடத்தில் காணப்பட்ட பல நல்ல சுபாவங்களைப் பற்றி யோபு முதலாம் அதிகாரம் முதலாம் வசனத்தில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அவன் a) உத்தமன் b) சன்மார்க்கன் c) தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவ்விதமாகவே தேவனும் யோபுவைப்பற்றி முதலாம் அதிகாரம் 8ம் வசனத்தில் சாட்சி கொடுக்கிறார். அவ்வளவு சிறப்பான மனிதன் யோபு.

கர்த்தர் யோபுவுக்கு சில விசேஷித்த பாதுகாப்பையும். ஆசிர்வாதங்களையும் கட்டளையிட்டிருந்தார் என்று முதல் அதிகாரம் பத்தாம் வசனத்தில் காணலாம். ஆனால் இவ்வித விசேஷித்த பாதுகாப்பையும், ஆசிர்வாதங்களையும் பெற்ற ஒரு மனிதனின் ஜீவியத்தில் பிசாசு சோதிக்க ஆரம்பித்து, சரீரப்பிரகாரமாக பெரும் நஷ்டத்தை அவன் வாழ்க்கையில் ஏற்படுத்திவிட்டான். என்ன பரிதாபம் பாருங்கள். இதன் காரணம் என்ன என்று சிறிது ஆராய்ந்துபார்த்தால் நலமாயிருக்கும்.

வேத வசனம் பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள். எபே.4:27. என்று சொல்கிறது. அப்படியென்றால் நாம் பிசாசுக்கு இடங்கொடுத்தால் பிசாசு நம்மை சோதிக்க ஆரம்பிப்பான் என்பது தெளிவாகிறது. அப்படியென்றால் யோபுவின் வாழ்க்கையில் எவ்விதம் அவன் பிசாசுக்கு இடங்கொடுத்தான் என்று பார்ப்போம். நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. யோபு 3:25. யோபுவுக்குத் தன் வாழ்க்கையைப் பற்றி, தன் குடும்பத்தினரைப் பற்றி அவர்களுக்கு என்ன சம்பவிக்குமோ? ஏது சம்பவிக்குமோ என்று அவனிடத்தில் ஒரு பயம் காணப்பட்டது. பிசாசு இந்த பயத்தை பயன்படுத்தி யோபுவின் வாழ்க்கையில் பெரும் நஷ்டத்தையும், வேதனையையும் உண்டாக்கிவிட்டான் பாருங்கள்.

ஆனால் யோபுவைத் தனக்காத் தெரிந்தெடுத்த தேவன் யோபுவுக்கு உண்மையுள்ளவராக இருந்து யோபுவுக்கு வந்த சோதனையை அவனுக்கு இரட்டிப்பான ஆசிர்வாதம் பெறும் வாய்க்காலாக மாற்றிக்கொடுத்தார். யோபுவுக்கு ஏற்பட்ட சோதனையில் தேவன் யோபுவைக் கைவிடவில்லை என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் நம்மைக்கைவிட மாட்டார்.

இன்று யோபுவை விட அதிகமாக வேதனைகளை சகித்த தேவ ஜனங்கள்

..கள் உண்டு. விசேஷமாக கம்யூனிச நாடுகளில் கர்த்தருக்காக மிகக் ..ரமான வேதனைகளை சகித்த தேவ ஜனங்கள் உண்டு. ஆகவே இப்பொழுது .. கடந்து செல்லும் சோதனையின் பாதையைக் குறித்து சிறிதளவும் ..ந்துபோக வேண்டாம். யோபுவைக் கைவிடாத தேவன் நம்மையும் கைவிடாது ..யமாக ஆசீர்வதிப்பார்.

கொர்நேலியு :-

அப்போஸ்தல நடபடிகள் 10ம் அதிகாரத்தில் இந்த கொர்நேலியு என்ற ..நனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவன் கர்த்தருக்குப் பயந்தவனாக ..ந்தான் என்றுக் கூறப்பட்டுள்ளது. இவன் யூதனல்லாத புறஜாதி மனிதன். ..னிடத்தில் காணப்பட்ட சில நல்ல குணங்களைப் பற்றி வேத புத்தகம் ..கண்டவாறு சாட்சி கொடுக்கிறது. (10ம் அதிகாரம் 2ம் வசனம் பார்க்கவும்) ..தவ பக்தியுள்ளவன். (2) தன் வீட்டாரோடு தேவனுக்குப் பயந்து ஜீவித்தவன். ..ஜனங்களுக்கு மிகுந்த தான தருமங்களைச் செய்தவன். (4) எப்பொழுதும் ..னை நோக்கி ஜெபம் செய்து கொண்டிருந்தவன்.

ஒரு தேவனுடைய மனிதனிடத்தில் காணப்பட வேண்டிய மிக சிறப்பான ..வங்கள், தேவனை அறியாத இந்த புறஜாதி மனிதனிடத்தில் காணப்பட்டது ..பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். இந்த மனிதனைப்பற்றி மனிதர் .. கண்டவாறு கொடுத்த சாட்சியையும் 22ம் வசனத்தில் காணலாம். ..திமான். (2) தேவனுக்கு பயப்படுகிறவன். (3) நல்லவன்

இன்று தேவ ஜனங்களாகிய நம்மைப்பற்றி உலக ஜனங்கள் இவ்விதம் சாட்சி ..டுப்பார்களா? இந்த ஜனங்கள் உண்மையிலே தேவனுக்குப் பயந்து ..க்கிறவர்கள். மிகவும் நல்லவர்கள் என்று சொல்லும் அளவுக்கு நமது ஜீவியம் ..சியின் ஜீவியமாக இருக்கிறதா? அல்லது ஐயோ இவர்கள் மகா ..சமானவர்கள், எந்தத் தீமையையும் துணிந்து செய்கிறவர்கள். வேஷம் ..டுகிற கிறிஸ்தவர்கள் என்று பேரெடுக்கிறோமா? நம் மூலமாக தேவனின் ..ம் மகிமைப்படுகிறதா அல்லது தூஷிக்கப் படுகிறதா? நாம் தேவனுக்கு ..ந்தமாயிருக்கிறோமா? அல்லது துர்கந்தமாக இருக்கிறோமா? இந்நாட்களில் .. நிலையை சரியாக அறிந்து கொள்வது நல்லது.

கொர்நேலியு ஜீவியத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளவேண்டிய மிக ..கியமான காரியம் என்னவென்றால், அவனில் காணப்பட்ட சிறப்பான ..ங்கள் அவனுக்கு இரட்சிப்பாக இருக்கவில்லை என்பதுதான். நமது ..பான வாழ்க்கைமுறையோ, நாம் செய்யும் தான தருமங்களோ, அல்லது .. எந்த விதமான மேலானக் காரியங்களோ நமக்கு இரட்சிப்பாக இருக்காது ..பதை நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இன்று அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியமுறைகளைத்தான் தங்கள் இரட்சிப்பாக எண்ணிகொண்டு ..க்கிறார்கள். இது மிகவும் பரிதாபமான காரியம் ஆகும்.

கொர்நேலியு கர்த்தருக்கு பயப்படுகிற மனிதனாக இருந்ததினால் வேத வசனம் கூறுகிறபடி கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்கு தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார். சங்.25:12. என்ற வசனத்தின்படி கொர்நேலியுவுக்கு கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட வழியை தமது ஊழியக்காரனாகிய பேதுருவின் மூலம் கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் போதிக்க சித்தங்கொண்டார்.

கர்த்தரின் ஊழியக்காரனாகிய பேதுரு கொர்நேலியுவின் வீட்டுக்கு அழைக்கப்பட்டான். பேதுரு கர்த்தரின் சரியான வழியைப் பற்றி கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்த ஜனங்களுக்குப் போதித்துகொண்டிருந்த போது கர்த்தரின் பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த பிரகாரமாக அங்கு கூடியிருந்த எல்லார் மேலும் பொழிந்தருளப்பட்டார். கர்த்தரின் ஊழியக்காரனாகிய பேதுரு அவர்களிடம் நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றால் போதும் ஞானஸ்நானம் அவசியமில்லை என்று சொல்லிவிடவில்லை, மாறாக அவர்கள் எல்லாருக்குமே ஞானஸ்தானம் கொடுக்கும்படிக்கு கட்டளை கொடுத்தான் என்று பார்க்கிறோம்.

கொர்நேலியுவின் வாழ்க்கையின் மூலமாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவெனில் நாம் ஞானஸ்நானம் எடுப்பதும் பரிசுத்த ஆவியைப் பெறுவதும் நாம் நிறைவேற்ற வேண்டிய மிக முக்கியமான காரியங்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. கொர்நேலியு கர்த்தருக்கு பயப்படுகிற மனிதனாக இருந்தான். அவன் மூலமாக ஒரு கூட்டம் ஜனங்கள் தேவனுடைய இரட்சிப்பை பெறக் காரணமாக இருந்தான். இன்று நாமும் கர்த்தருக்குப் பயந்து கர்த்தரின் வசனத்துக்கு கீழ்ப்படிந்து சரியான இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோமா? அதின் மூலம் அநேகர் நம் மூலம் தேவனின் இரட்சிப்பை பெற ஏதுவாக இருப்போமா? அல்லது கர்த்தருக்குப் பயப்படும் பயம் அற்றவர்களாக கர்த்தரின் வசனத்திற்கு எதிர்த்து நிற்போமா? அதின்மூலம் நமக்கு அருமையானவர்களின் இரட்சிப்புக்கு தடையாக இருப்போமா? இப்பொழுதே சிந்திப்போம். செயல்படுவோம், கர்த்தர் நம் மூலமாக அநேகரை இரட்சிப்புக்குள்ளாக நடத்த முதலாவது நாம் கர்த்தருக்கு பயந்து கர்த்தரின் வசனங்களுக்கு கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று இவ்விதமாக ஒரு முழுமையான இரட்சிப்பின் அனுபவத்துக்குள் வருவோம். அதின் மூலம் அநேகர் இரட்சிப்பை பெற கருவியாக இருப்போம், கர்த்தர் தாமே கிருபை செய்வாராக.

அத்தியாயம் 7

பிரயோஜனம் இல்லாத பயம்

லவரை கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பது பற்றி பலகாரியங்களைப் பார்த்தோம். நம்மில் லும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் காணப்படலாம். ஆனால் அது நமக்கு பிரயோஜனம் றதாயும் இருக்கலாம் என்பதையும் நாம் அறியவேண்டும். அதாவது நம்மில் காணப்படும் க்குப் பயப்படும் பயமானது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதற்கு பதிலாக த்தையும், தேவ தண்டனையையும் கொண்டு வருவதாக இருக்கலாம். ஆகவே எவ்விதமான ள் நமக்கு தேவ சாபத்தையும், தேவ தண்டனையையும் கொண்டுவரும் என்று அறிந்து மான பயங்கள் நம்மில் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது நமக்கு யாயிருக்கும்.

ஆதாமின் பயம்:

ான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்திலேக் கேட்டு நான் ாணியாயிருப்பதினால் பயந்து ஒளிந்துகொண்டேன் என்றான் 3:10.

தேவனால் தேசாயலில் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாம் ின் கட்டளையை மீறி சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு புசிக்கவேண்டாம் என்று ளால் விலக்கப்பட்ட கனியை புசித்ததினால் தன் கண்கள் திறக்கப்பட்டு ும், தன் மனைவியும் நிர்வாணிகள் என்று அறிந்தான்.

பகலில் குளிர்ச்சியான வேளையில் கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு ஆதாமும், ளும் தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்துகொள்கிறார்கள் வரையில் தங்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்கிய தேவனின் சத்தம் ாழுது அவர்களுக்கு பயத்தை உண்டு பண்ணியது. ஏனெனில் அவர்கள் ாணிகாளாயிருந்தனர். நிர்வாணிகள் என்றால் 2கொரி.5:3.ன் படி ுவிட்டவர்கள் என்பது பொருளாகும். அதாவது தேவனோடுள்ள உறவை, ாக மேன்மையை அல்லது தேவனுடைய மகிமையை இழந்து விட்டார்கள் துதான் பொருள்.

ஏனெனில் அவர்கள் தேவனுடைய கட்டளையை அறிந்தும் அதை னார்கள். **சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்ளாயிருந்தால் பாவங்களினிமித்தம் த்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று டுதோடே எதிர் பார்க்குதலும் விரோதிகளை பட்சிக்கும் பாக்கினையுமே இருக்கும் எபி.** 10:26,27. மேற் கூறப்பட்ட த்தின்படி நாம் அறிந்தும் துணிகரமாக பாவஞ் செய்தால் தேவனுடைய பாக்கினைதான் நமக்குக் கிடைக்கும் நாம் தப்பவே முடியாது.

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய தண்டனையை பெற்று தேவ சமூகத்திலிருந்து துரத்திவிடப்பட்டார்கள். அவர்களிடத்தில் காணப்பட்ட பயம் அவர்களுக்கு நன்மையை கொடுக்கவில்லை. மாறாக தேவ தண்டனையையும் தேவ சாபத்தையும்தான் கொண்டுவந்தது. ஆகவே நாம் துணிந்து பாவஞ்செய்து விட்டு, பின்பு ஐயோ கர்த்தரின் தண்டனை நமக்குக் கிடைக்குமே என்று பயப்டுவதை விட நாம் கர்த்ருக்குப் பயப்படுகிறவர்களாக நம்மில் எந்த விதமான தீமையானக் காரியங்களும் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

B. ஒரு தாலந்தை பெற்றவனின் பயம்:

ஆகையால் நான் பயந்துபோய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன், இதோ உம்முடையதை வாங்கிக் கொள்ளும் என்றான் மத்.25:25.

மேற் கூறப்பட்டுள்ள சம்பவத்தைப் பற்றி நாம் நன்கு அறிவோம், ஒரு மனுஷன் தான் புறதேசம் போகுமுன், தன் ஊழியக்காரரை அழைத்து அவர்களின் திறமைக்கு ஏற்றவாறு ஐந்து தாலந்து, இரண்டு தாலந்து, ஒரு தாலந்து என்று கொடுத்துவிட்டு போனான்.

ஐந்து தாலந்தை வாங்கினவன் போய் வியாபாரம் செய்து வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தான். அதுபோலவே இரண்டு தாலந்தை வாங்கினவனும் வியாபாரம் செய்து வேறு இரண்டு தாலந்தை சம்பாதித்தான், ஆனால் ஒரு தாலந்தை பெற்றவன் அதை மண்ணுக்குள் புதைத்து வைத்து விட்டான்.

ஒரு தாலந்தை வாங்கினவனிடத்தில் தன் எஜமானைக் குறித்த பயம் இருந்தது. ஆனால் அந்த பயம் அவனுக்கு பிரயோஜனமற்றதாகவே இருந்தது. அவனுக்குள் தன் எஜமானைக் குறித்து ஒரு சரியான பயம் இருந்திருக்கும் என்றால் அவன் அவ்விதமாக தான் பெற்ற தாலந்தை சரியான முறையில் பயன்படுத்தியிருப்பான். இங்கு மண்ணுக்குள் புதைத்து வைப்பது என்பது தான் பெற்ற தாலந்தை தனக்குள்ளாக அடக்கிவைத்து கொள்வதைக் குறிப்பதாகவுள்ளது.

நமது ஆண்டவராகிய இயேசு இவ்வுலகத்தை விட்டு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன் தமது சீஷர்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டளை கொடுத்தார். **நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்** மாற்.16:15. இந்த கட்டளை நமது இரட்சகராகிய இயேசுவின் சீஷர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளையல்ல. இந்த கட்டளை தேவ ஜனங்கள் எல்லாருக்குமே அவரால் கொடுக்கப்பட்ட கட்டளையாகும். ஆகவே சுவிசேஷத்தை சர்வ சிருஷ்டிக்கும் சொல்வது கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமையாக இருக்கிறது. நம்மில் ஆராதனைகள், வேதம் வாசிப்பது, காணிக்கைகள் கொடுப்பது போன்ற எல்லாக் காரியங்களும் இருந்து, கர்த்தருக்கு ஊழியம் செய்வது என்பது இல்லையென்றால்

..யமாகவே தேவன் நம்மை பொல்லாதவனும் சோம்பலுமான ..பக்காரனே. (மத்.25:26) என்று தான் அழைப்பார்.

சிலர் ஐயா நான் ஊழியத்துக்காக நிறைய கொடுக்கிறேன் என்று ..ல்லலாம். சிலர் ஐயா நான் ஊழியங்களுக்காக இரவு பகலாக ஜெபிக்கிறேன் ..று சொல்லலாம். இவைகள் நல்ல காரியங்கள்தான். ஆனால் ஆண்டவரின் ..ளை நீங்கள் புறப்பட்டுப்போய் சுவிசேஷத்தைச் சொல்லுங்கள் என்பது தான். .. எல்லாருமே கிறிஸ்துவின் போர்க்களத்துக்கு போகவேண்டியவர்கள் ..தைக் குறிப்பதாகும். இந்தப்போர்களத்தில் வயதானோர் சிறுபிள்ளைகள், ..ண், பெண் என்று வித்தியாசமே இல்லை. நாம் எல்லாருமே கிறிஸ்துவுக்காக ..ர் செய்ய வேண்டியவர்கள் என்பதை மறக்கக் கூடாது. நாம் எல்லாருக்குமே ..லந்துக்கள் கொடுக்கப்படவில்லையென்றுச் சொல்லமுடியாது. நாம் ..வதண்டனைக்குத் தப்பவேண்டும் என்றால் நிச்சயமாகவே நாம் தேவனுடைய ..சேஷத்தை சர்வ சிருஷ்டிக்கும் அறிவிக்கவேண்டியது மிகவும் ..சியமாகவுள்ளது.

இந்நாட்களில் நாம் ஒரு உண்மையான கர்த்தருக்குப் பயப்படும் பயம் ..டையவர்களாய் கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள தாலந்துகளை சரியான ..றையில் பயன்படுத்தி கர்த்தரின் சுவிசேஷத்தை சர்வ சிருஷ்டிக்கும் அறிவிக்க ..ற்சிசெய்வோம், கர்த்தரின் கட்டளையை நிறைவேற்றுவோம்.

மனித உபதேசத்தால் உண்டாகும் பயம்:

அவர்கள் எனக்குப் பயப்படும் பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட ..ற்பனையாயிருக்கிறது.

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைப் பெற்றுக்கொள்ள கர்த்தரின் வேதத்தைக் ..றுக்கொள்ள வேண்டும் என்று துவக்கத்தில்பார்த்தோம். ஆனால் இந்தக் ..த்தருக்குப் பயப்படும் பயம் மனித போதனையால் வருகிறதாக இருக்கக்கூடாது. ..ந்த மனித போதனை என்ன என்று. மத்.15:5-9.ல் நம் இரட்சகராகிய இயேசு ..தளிவுபடுத்துகிறார். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் ..ாதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா ..க்கத்தரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான் என்றார் மத்.15:9.

வேதத்தை மாற்றி போதிக்க எந்த மனிதனுக்கும் அதிகாரம் கிடையாது. ..வதத்தை மாற்றிப் போதித்தால் வரும் தண்டனை என்ன என்றும் வேத ..தகத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒருவன் இந்தத் தீர்க்க தரிசனப் ..ஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால் ஜீவ ..ஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்து இந்தப் புஸ்தகத்தில் ..ழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடையப் பங்கைத் தேவன் ..டுத்துப்போடுவார் வெளி.22:19. ஆகவே வேத வசனம் என்ன ..ாதிக்கிறதோ அதின்படி நம் ஜீவியத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இன்று கிறிஸ்தவ சபைகளில் வேத வசனங்களுக்கு முற்றிலும் மாறாக உபதேசங்கள் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்தவ உபதேசத்தில் முதல் உபதேசம் மனந்திரும்புதல் ஆகும். மத்.3:2; 4:17; 9:13, மாற்.6:12,13, எபி.6:1. வசனங்களைப் பார்க்கவும்.

மனந்திரும்புதல் என்றால் நம் மனதைத்திருப்புவது. என்பதாகும். மனந்திரும்புதல் என்ற பதத்திற்கு ஆங்கில வேத புத்தகத்தில் Repentance என்ற வார்த்தை உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. இதன்பொருள் நாம் செய்த தவறுக்காக துக்கப்படுவது அல்லது மனஸ்தாபப்படுவது என்பதாகும். இந்தத் தமிழ், ஆங்கில ஆகிய இரண்டுவார்த்தைகளையும் சேர்த்து மனந்திரும்புதல் என்ற பதத்திற்கு, நாம் செய்த பாவங்களுக்காக நாம் துக்கப்பட்டு அல்லது மனஸ்தாபப்பட்டு நம் மனதை தேவனிடமாகத் திருப்புவது என்பதாகும். இதுதான் மனந்திரும்புதல் என்ற வார்த்தையின் சரியான பொருளாகும்.

மனந்திரும்புதலின் அவசியம்:

எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானோம் ரோம.3:23. என்தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் சங்.51:5. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது ஏசா.59:2. பாவஞ் செய்கிறவன் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் யோவா.8:34.

நாம் பாவஞ்செய்தவர்களாக தேவ மகிமையை இழந்து, தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களாக பாவத்துக்கு அல்லது பிசாசுக்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கிறோம். நாம் கிறிஸ்தவக் குடும்பங்களில் பிறப்பதினாலோ, காணிக்கைகள் கொடுப்பதினாலோ அல்லது வேறு எந்தவித நற்கிரியைகளினாலோ நம்மால் நமது பாவ நிலையை மாற்றிக்கொள்ள முடியாது. ஆகையினால்தான் நமது பாவங்களை மன்னிக்க வல்லவராகிய நமது தேவனிடம் நாம் மனந்திரும்பவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்ததின் நோக்கம் இதுவேயாகும். பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் மத்.9:13.

இன்று சில சபைகளின் ஊழியர்கள் சபையின் மூப்பர்கள் சொல்வது என்னவெனில் ஐயா நீங்கள் பண்டிகைவரி முதலியவைகளை கொடுத்துவிடுங்கள். மற்றப்படி நீங்கள் எந்த விக்கிரக ஆலயத்திற்கோ, வேறு எந்த இடத்திற்கானாலும் நீங்கள் போய்க்கொள்ளலாம். நாங்கள் ஒன்றுமே சொல்லமாட்டோம் என்கிறார்கள். சபைகளின் இவ்வித நிலையிலிருந்து நாம் அறிந்துக்கொள்வது என்னவென்றால் இவ்வித சபைகளின் ஊழியர்களுக்கோ மூப்பர்களுக்கோ மனந்திரும்புதல் பற்றியோ, ஆத்தும இரட்சிப்புப்பற்றியோ அவர்கள் சிறிதளவும் அறியாத குருடர்கள் என்பது தெளிவாகிறது அல்லவா.

சபைகள் ஏற்பட்டதின் நோக்கம், ஜனங்களை கர்த்தரிடமாக மனந்திரும்ப வைத்து, தேவனுடைய சத்தியங்களைக் கற்றுக்கொடுத்து. அவர்கள்

…னஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று வேதத்தின் …மா சத்தியங்களையும் கற்று, கைக்கொண்டு தேறினவர்களாக கர்த்தரின் …கையில் அவர்களை அவர்முன் நிறுத்தவே பிரயாசப்பட வேண்டும் …பதாகும். (கொலோ. 1:28 பார்க்கவும்) இன்றையசபைகள் இதை …ய்கிறதா?

இன்றைய கிறிஸ்தவர்கள் நாள் பார்க்குதல், சகுனம் பார்க்குதல் போன்ற …லாவித விக்கிரக ஆராதனையானக் காரியங்களை செய்கிறார்கள். …லாவித தீமையானக் காரியங்களையும் துணிந்து செய்கிறார்கள். இன்றைய …ங்கள் மத்தியில் தீமையைக் குறித்த வெறுப்பு இல்லை. இன்றைய …ஸ்தவர்கள் உலக ஜனங்களைவிட மிகவும் துணிந்து தீமையானக் …ரியங்களை செய்கிறார்கள். இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு …ண்மையான மனந்திரும்புதலின் அனுபவம் இல்லாததினால்தான் இவ்விதமான …டிய் தீமையானக் காரியங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது …பதை யாரும் எளிதில் அறிந்துகொள்ள முடியும்.

கிறிஸ்தவ உபதேசத்தில் இரண்டாவது உபதேசம் ஞானஸ்நானம் ஆகும். …னஸ்நானம் என்பது தேவனின் ஞானத்தைவிளங்கச்செய்யும் ஸ்நானம் …பதாகும். ஸ்நானம் என்பது தண்ணீரில் மூழ்கி எழுந்திருப்பதையே நாம் …நானம் என்று கூறுகிறோம். ஞானஸ்நானம் என்ற வார்த்தைக்கு …லபாஷையாகிய கிரேக்க பாஷையில் BAPTISMO பாப்டிஸ்மோ என்ற …ர்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் ஒரு திடப்பொருளை …ண்ணீரில் அமிழ்த்தி பின் எடுத்து விடுவது என்பதாகும். இதுபோலவே …னஸ்நானம் என்பதும் தண்ணீரில் மூழ்கி ஸ்நானம் எடுப்பதையே …ிப்பதாகவுள்ளது. இந்த ஞானஸ்நானத்தை பெற தகுதியுடையவர்கள் …ரெனில் தங்கள் பாவ ஜீவியத்தை விட்டு தேவனிடமாக மனந்திரும்பியவர்கள் …டுமே. (அப்.2:38 பார்க்கவும்) இன்று கிறிஸ்தவ சபைகளில் குழந்தை பிறந்த …ரு மாதத்தில் அல்லது இரண்டு மாத குழந்தைகளைப் பிடித்து அவர்கள் மேல் …ரண்டு மூன்று சொட்டுத் தண்ணீரைத் தெளித்து இதுதான் ஞானஸ்நானம் என்று …றிவிடுகிறார்கள். இது எவ்வளவு கொடிய பிசாசின் வஞ்சகம் என்று …றியாதிருக்கிறார்கள்.

கிறிஸ்தவ உபதேசங்களில் மூன்றாவது உபதேசம் பரிசுத்த ஆவியின் …பிஷேகத்தை குறித்த உபதேசமாகும். (அப்.2:38 பார்க்கவும்) இன்றைய …பைகளில் பரிசுத்த ஆவியை பெறுவதை சடங்காச்சாரமான காரியமாக …ண்டாடி பின் பரிசுத்த ஆவியின் அனுபவம் சிறிதளவும் இல்லாமலேயே …சுத்த ஆவி நடத்துகிறார். பரிசுத்த ஆவியை பெறுவது என்பது ஏதோ ஒரு …ற்பனையான காரியமல்ல. பிசாசின் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மனிதன், …சாசின் வல்லமையினால் எவ்வளவு பயங்கரமாக தன் சரீரத்தை அசைக்கிறான்

பாருங்கள். இவ்விதமாக ஒரு மனிதன் பரிசுத்தாவியை பெறும்பொழுது அவன் தேவ வல்லமையை பெற்றவனாக அந்தமனிதன் சரீரம் அசைவு கொடுப்பதை காணலாம். ஒரு மனிதன் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கும்பொழுது மற்றவர்கள் அதை எளிதில் அறிந்துகொள்ள முடியும். அப்.2:33. பிசாசு இந்த அடிப்படை உபதேசங்களை மாற்றி கிறிஸ்தவர்களை தேவனுடைய ராஜ்யத்துக்கு அபாத்திரராக ஆக்கிவிட்டான். இவ்விதமனித உபதேசங்களுக்கு இடங்கொடாமல் வேத வசனத்தின் பிரகாரம் நமது ஜீவியத்தை அமைத்துக்கொண்டால் நாம் பாக்கியவான்களாய் இருப்போம். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை மத்.7:21. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான், ... ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன் யோவா.3:3,5.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் பரலோக ராஜியத்தில் பிரவேசிக்க தேவனுடைய சித்தம் செய்யவேண்டும் என்றும், தேவனுடைய சித்தம் செய்வது என்பது நாம் மனந்திரும்பி, ஜலத்தினாலும், ஆவியினாலும் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றும் தெளிவாக அறிந்து கொள்ளலாம் இன்று மனித உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவதை விட்டுவிட்டு வேத வசனத்திற்கு கீழ்படிந்து அதின்படியே செய்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

D. பிசாசுக்கும் தேவனுக்கும் பயப்படுவது:-

அவர்கள் கர்த்தருக்குப் பயந்ததுமின்றி, மேடைகளிலுள்ள கோவில்களில் ஆராதனை செய்கிறதற்கு, தங்களுக்குள் ஈனமானவர்களை ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தினார்கள் 2இரா.17:32 தங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் பாவஞ்செய்து, அந்நிய தேவர்களுக்குப் பயந்து நடந்தார்கள் 2இரா.17:7.

இன்றைய உலக ஜனங்கள் கூறுகிறதான ஒரு பழமொழி யாதெனில் நோய்க்கும் பார், பேய்க்கும் பார் என்பதாகும். இதன் அர்த்தம் ஒருவன் நோய் கொண்டிருந்தால் அந்த நோய்க்காக மருந்தும் கொடுக்கவேண்டும், அதே நேரத்தில் பிசாசு கோபப்பட்டு விடாதபடி இருக்க பேய்களுக்கும் காணிக்கைகளை செலுத்திவிட வேண்டும். இல்லையென்றால் பிசாசு நம்மை வேதனைப்படுத்தும் என்பதுதான். இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் காரியம், நாம் தேவனுக்கும் பயப்படவேண்டும். அதே நேரத்தில் பிசாசுக்கும் பயந்து அதற்கு செய்ய வேண்டியவைகளையும் செய்யவேண்டும் என்பதாகும். இது வெறும் மனித வார்த்தைகளே ஒழிய தேவ ஆலோசனை அல்ல.

ஆவ ஆலோசனையாக வேதம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் யாக்.4:7. இந்நாட்களில் நாம் தேவனுக்குமட்டும் பயப்பட வேண்டுமே ஒழிய பிசாசுக்கு ஒருபோதும் பயப்படக் கூடாது.

விக்கிரகங்களுக்கு நாம் என்ன செய்யவேண்டும் என்று வேதவசனம் கீழ்க்கண்டவாறு நமக்கு ஆலோசனை கூறுகிறது. அவகைள் (விக்கிரகங்கள்) பனையைப்போல் நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்படவேண்டும், அவைகளுக்கு பயப்படவேண்டாம் எரே.10:5. நீங்கள் அந்நிய தேவர்களுக்குப் பயப்படாமலும், அவைகளைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், பலியிடாமலும் உங்களை மகாவல்லமையினாலும் ஓங்கிய புயத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருக்கேப் பயப்படுங்கள் 2இரா.17:35-36.

இன்று உலக மனிதர்களில் சிலர் பல குறுக்குவழிகளில் பணம் சேர்க்கிறார்கள் ஏழை எளியவர்களிடம் வட்டிக்குப் பணம் கொடுப்பது, அரசாங்கத்தை, பொதுமக்களை ஏமாற்றி பணம் சேர்ப்பது போன்ற பல குறுக்கு வழிகளில், துரிதகதியில் மிக அதிகமாக பணம் சேர்க்கிறார்கள். இவ்விதமாக சேர்த்த பணங்களில் கொஞ்சத்தை தங்கள் தேவ, தேவதைகளுக்கு கொடுக்கிறார்கள். இன்னும் கொஞ்ச பணத்தை கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் கொடுக்கிறார்கள். அவர்களின் இவ்வித செய்கைகளினால் தாங்கள் செய்கிற சகலவித அக்கிரமங்களும் அநியாயங்களும் மன்னிக்கப்படும் என்று எண்ணுகிறார்கள். இது முற்றிலும் தவறான ஒரு எண்ணமாகும்.

நமது புண்ணியக் கிரியைகளினாலோ, பண்ணிய யாத்திரைகளினாலோ எந்தப் பாவ மன்னிப்புக் கிடைப்பதில்லை. இதை கொர்நேலியு என்ற மனிதனின் வாழ்க்கையைப் பற்றி வாசிக்கும்பொழுது இதைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

தேவன் நமது காணிக்கைகளை அல்ல நமது இருதயத்தையே கேட்கிறார். தேவன் நமது பணத்தை அல்ல, ஒரு பரிசுத்த ஜீவியத்தையே நம்மிடம் எதிர்பார்க்கிறார். இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் சாதாரண வைசூரி வியாதி வந்தால் கூட அம்மன் சாமி வந்துவிட்டது. என்றுசொல்லி வேப்பிலையை தங்கள் வாசல்நிலைகளில் சொருகி வைப்பதைக் காணலாம், இன்னும் சிலர் தங்களுக்கு வியாதி வந்தால் அவர்கள் விக்கிரகக் கோவில்களுக்குச் சென்று காணிக்கைகள் செலுத்துவதைக் காணலாம். தங்கள் வீடுகளில் சாந்திக்கழிப்பு முதலானவை செய்துவிட்டு ஆலயத்திலும் வந்து கர்த்தர் எனக்குப் பெரிய காரியங்களைச் செய்தார். எங்கள் வியாதிகளை நீக்கினார் என்று சாட்சி சொல்லுகிற கிறிஸ்தவர்களும் உண்டு.

இவ்விதமாக இந்நாட்களில் அந்நிய தேவர்களுக்குப் பயந்து அவைகளை

ஆராதித்துக் கொண்டும் அதே நேரத்தில் தேவனை ஆராதிப்பதையும் நாம் பெரும்பாலுமானக் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணலாம்.

அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும் சங்.16:4.

இன்று பெரும்பாலுமான கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களுக்குக் பயந்து அவைகளை நமஸ்கரிக்கிறவர்களாகவும், நாள் பார்க்கிறவர்களாகவும், சகுனம் பார்க்கிறவர்களாகவும் இன்னும் இவ்விதமான பிசாசின் கிரியைகளைச் செய்வதினால் தங்கள் வாழ்க்கையில் சொல்லொண்ணா வேதனைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதை அறியாமலிருக்கிறார்களே. என்ன பரிதாபம் பாருங்கள்.

இவர்கள் இந்நாட்களில் விக்கிரகங்களுக்குப் பயப்படுவதை விட்டு விட்டு ஜீவனுள்ள தேவனுக்கு மட்டும் பயந்து ஜீவிப்பார்கள் என்றால் எவ்வளவு நன்றாய் இருக்கும். அவர்கள் அனுபவிக்கிற வேதனைகளினின்று விடுதலை பெற்று சந்தோஷமாக வாழ முடியுமே. செய்வார்களா?

E. கிரியையில்லாத பயம்;

அவர்கள் எல்லா வார்த்தைகளையும் கேட்கையில் பயந்தவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து, பாருக்கை நோக்கி இந்த எல்லா வார்த்தைகளையும் ராஜாவுக்கு நிச்சயமாய் அறிவிப்போம் என்றார்கள் எரே.36:16.

அவன் (பவுல்) நீதியையும், இச்சையடக்கத்தையும் இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான் அப்.28:35. (ஜனங்கள்) இயேசுவினிடத்தில் வந்து லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்..... தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள் மாற்.5:15,17.

நம்மில் கர்த்தரைக் குறித்ததான பயம் காணப்படலாம். ஆனால் அது கிரியைகள் மூலம் வெளிப்படவில்லையென்றால் அது பிரயோஜனமற்றதாகும். அதினால் நாம் தேவதண்டனைக்குத் தப்ப முடியாது என்பதை நாம் திட்டவட்டமாக அறிந்திருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள மூன்று விதமான மனிதர்களைப் பார்க்கிறோம். முதலில் குறிப்பிட்டுள்ள வசனத்தில் எரேமியாவின் மூலமாக எழுதப்பட்ட தேவனின் எச்சரிப்பின் வார்த்தைகளைக் பாருக் என்ற சம்பிரதியின் மூலமாக வாசிக்கக் கேட்டபொழுது, அந்த வார்த்தைகளைக் கேட்ட ஜனங்களுக்குப் பயம்

[illegible] ஆனால் அந்த பயம் அவர்கள் ஜீவியத்தில் [illegible] [illegible] அவர்கள் [illegible]

[illegible] வசனத்தில் [illegible] என்ற ரோம [illegible] பவுலினால் [illegible] வார்த்தைகளைக் [illegible] அவனுக்கு பயம் உண்டாயிற்று. ஆனால் அந்த பயம் [illegible] கர்த்தரின் வழியில் [illegible] முடியவில்லை. மாறாக [illegible] இருந்து லஞ்சம் எதிர்பார்த்தான். இன்றும் உலக மனிதர்கள் தேவ [illegible] இருந்து லஞ்சம் எதிர்பார்க்கிறார்கள். உலக மனிதர்கள் தேவ [illegible] தங்களுக்குக் கிடைக்கப் பார்க்கிறார்கள். என்ன பரிதாபம் [illegible]

[illegible] குறிப்பிட்டுள்ள வசனத்தில் அநேக பிசாசுகள் பிடித்திருந்த [illegible] லேகியோனால் இயேசுவினால் பிசாசுகள் நீங்கி சுகம் பெற்று [illegible] இருப்பதைக்கண்ட ஜனங்கள் கர்த்தரின் வல்லமையைக் கண்டு [illegible] ஆனால் அவர்களில் காணப்பட்ட பயம் இயேசுவை தங்களிடம் [illegible] பதிலாக, தங்கள் எல்லையை விட்டுப் போகும்படி அவரை [illegible] தொடங்கினார்கள். அன்றைய ஜனங்கள் இயேசுவைவிட [illegible] தான் முக்கியத்துவம் கொடுத்தார்கள். இன்றும் அநேகர் [illegible] உலகப் பிரகாரமான செல்வங்களையும், அந்தஸ்தையும் தானே [illegible]. கர்த்தரின் வல்லமையானக் காரியங்களைப் பார்க்கும்பொழுது [illegible] பயம் உண்டாகிறது. ஆனால் அவர்கள் உலகப் பொருள்களுக்கு [illegible] கொடுப்பதினால் அவர்களிடத்தில் காணப்பட்ட பயம் [illegible] பிரயோஜனப்படவில்லை.

இந்நாட்களில் நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக கர்த்தரின் [illegible] சத்தத்தைக் கேட்கும்பொழுது உடனே கர்த்தருக்குப் பயந்தவர்களாக [illegible] வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோம். உலகப் பொருள்களைவிட [illegible], தேவனுடைய வார்த்தைக்கும் நம் வாழ்க்கையில் முக்கியத்துவம் [illegible]போம்.

அத்தியாயம் 8

கர்த்தருக்குப் பயப்படாத மனிதர்கள்

இதுவரையில் கர்த்தருக்குப் பயப்படுவதை குறித்ததான காரியங்களைப் பார்த்தோம். [illegible] அத்தியாயங்களில் யார் யார் கர்த்தருக்குப் பயப்படுவதில்லை. ஏன் அவர்கள் கர்த்தருக்கு [illegible] அவதில்லை. அவ்விதம் கர்த்தருக்குப் பயப்படாதவர்கள் செய்யும் காரியங்கள் என்ன என்று [illegible] அத்தியாயத்தில் விளக்கமாகப் பார்ப்போம்.

A. துன்மார்க்கர் கர்த்தருக்குப் பயப்படாதவர்கள்:

துன்மார்க்கனுடைய துரோகப் பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும். அவன் கண்களுக்கு முன் தெய்வபயம் இல்லை சங்.36:1.

இந்த பாகத்தில் கர்த்தருக்குப் பயப்படாத துன்மார்க்கரைப் பற்றி சிறிது ஆராய்ந்து பார்ப்போம். இந்த துன்மார்க்கர் பற்றி முதல் அத்தியாயத்தில் அநேகக் காரியங்கள் எழுதியுள்ளேன். இன்று நாம் வாழ்கிறதான இந்த உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது என்றும், அதினால்தான் எல்லாவிதமான தீமையானக் காரியங்களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது என்றும், அதினால் மனிதர்கள் அனுபவிக்கும் வேதனைகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

வேத வசனம் சொல்கிறது **துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்கிறார் ஏசா.48:22.** அப்படியென்றால் துன்மார்க்கரால் நிறைந்த இந்த உலகத்திற்கு சமாதானமே இருக்காது என்பதாகும். தேவன், துன்மார்க்கரால் நிறைந்த இந்த உலகத்திற்கு சமாதானம் இல்லையென்று சொல்லும்பொழுது மனிதர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் இந்த உலகில் சமாதானத்தை நிலை நாட்டவே முடியாது. மாம்சமாகிய **ஒன்றுக்கும் சமாதானம் இல்லை எரே.12:12. என் சமாதானத்தை..... இந்த ஜனத்தை விட்டு எடுத்துப் போட்டேன் எரே.16:5. சமாதானத்தை தேடுவார்கள் ஆனாலும் கிடையாது எரே.7:25.**

மேற்கூறப்பட்டுள்ள வேதவசனங்கள் இன்றைய சமாதானமற்ற உலகத்தின் நிலையையும் சமாதானத்துக்காக உலகத்தலைவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தும் அதைப்பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதையும் நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். வேதப்புத்தகம் சத்தியம். அது தேவனால் கொடுக்கப்பட்டது என்பதற்கு மேற்கூறப்பட்டுள்ள வசனங்கள் ஒரு சிறந்த சான்றாகும்.

B. துன்மார்க்கரின் கிரியைகள் :-

துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமைப்பட்டவனை கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான் சங்.10:2. சிறுமையும் எளிமையுமானவனை மடிவிக்கவும், செம்மை மார்க்கத்தாரை விழப்பண்ணவும் துன்மார்க்கர் பட்டயத்தை உருவி தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள் சங்.37:14.

அவன் (துன்மார்க்கன்) இருதயத்திலே திரியா வரமுண்டு இடைவிடாமல் பொல்லாப்பை நினைத்து வழக்குகளை உண்டுபண்ணுகிறான் நீதி.6:14.

துன்மார்க்கன் நீதியின் வழியைப் புரட்ட மடியிலுள்ள பரிதானத்தை வாங்குகிறான் நீதி.17:23.

மேட்டிமையான பார்வையும் அகந்தையான மனமுள்ள [illegible]ார்க்கர் போலும் வெளிச்சம் பாவமே நீதி 21:4.

இன்று துன்மார்க்கரான உலக ஜனங்கள் பொறுமை கொண்டவர்களாக [illegible] விதத் தீமையானக் காரியங்களையும் ஏழ்மையையும் சிறுமையானவர்களை [illegible]படுத்தி அவர்களை அழிப்பதற்காக பிரயத்தனங்கள் செய்வதைக் [illegible] பார்க்கலாம். அதுமட்டுமல்லாது மற்றவர்களுக்கு தீமையானக் [illegible]ங்கள் செய்வதற்காக எல்லாவித வழக்குகளையும் [illegible]டுகிறார்கள். வழக்குகளைப் புரட்டுவதற்காக லஞ்சம் [illegible]வதையும் வாங்குவதையும் கண்கூடாகக் காண்கிறோம். துன்மார்க்கர் [illegible]யும் வெளிச்சம் என்பது அவர்கள் செய்யும் நன்மையானக்காரியங்களை [illegible]கும். ஆம் இவ்விதமான துன்மார்க்கர் நாங்கள் ஜனங்களுக்கு நன்மை [illegible]கிறோம் நன்மை செய்கிறோம் என்று பறை சாற்றிவிட்டு அவ்விதமானக் [illegible]ங்களினால் தங்கள் சுய நலனுக்காகவே எல்லாவிதக் காரியங்களையும் [illegible]வதைக் காணலாம்.

துன்மார்க்கரின் நினைவுகள்:-

அவன் (துன்மார்க்கன்) தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை [illegible]சிக்கிறான் சங்.36:4.

துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய் தீங்கு நினைக்கிறான் [illegible].37:12.

அயலானுக்கு சமாதான வாழ்த்துதலை சொல்லியும் தங்கள் [illegible]ருதயங்களில் பொல்லாப்பை வைத்திருக்கிற துன்மார்க்கர் [illegible].28:3.

துன்மார்க்கன் தேவனை அசட்டை பண்ணி நீர் கேட்டு [illegible]சாரிப்பதில்லை என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொள்வானேன் [illegible].10:13.

நான் (துன்மார்க்கன்) அசைக்கப்படுவதில்லை. தலைமுறை தலைமுறை [illegible]நாறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் [illegible]சால்லிக் கொள்கிறான் சங்.10:6.

அவன் (துன்மார்க்கன்) நினைவுகளெல்லாம் தேவன் [illegible]ல்லையென்பதே சங். 10:4.

துன்மார்க்கரின் நினைவுகள் அல்லது யோசனைகள் எப்பொழுதும் [illegible]ற்றவர்களுக்கு விரோதமாக தீமையானதாகவும், வஞ்சகமானதாகவும்தான் [illegible]ருக்கும் என்பதை மேற்கூறப்படுள்ள வேத வசனங்களின் மூலம் [illegible]றிந்துகொள்ளலாம். இது மட்டுமல்லாது நான் எப்பொழுதும் நிலைத்திருப்பேன். [illegible]ங்கு ஒரு நாளும் என்னை அணுகாது என்றும், தேவன் இல்லையென்பதும்தான்

அவன் இருதயத்தின் எண்ணமாயிருக்கிறது. இன்றைய உலகின் துன்மார்க்க ஜனங்களின் நினைவுகள் தீமையானது. அது தேவன் இல்லை யென்பதும்தான் என்றால் அவர்களின் கிரியைகளும் நிச்சயமாகவே தீமையானதாகத்தான் இருக்கும். இன்றைய மனித சமுதாயம் மற்றவர்களுக்கு தீமை செய்கிறதாகத்தானே இருக்கிறது. வேத புத்தகம் சத்தியமானது.

D. துன்மார்க்கருக்கு வரும் தண்டனைகள்:-

துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும், தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான் நீதி.5:22.

துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு சங்.32:10.

துன்மார்க்கரை துன்மார்க்கம் விடுவிக்கமாட்டாது பிர.8:8.

பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் (தேவன்) தண்டிப்பேன் ஏசா.13:11.

தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரை சங்கரிப்பார் ஏசா.11:4.

தீங்குநாளுக்காகத் துன்மார்க்கனையும் (தேவன்) உண்டாக்கினார் நீதி.16:4.

துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள் சங்.9:17.

இன்று துன்மார்க்கராகிய உலக ஜனங்கள் தங்கள் ஐஸ்வரியத்தையும், தங்கள் சுகவாழ்வையும் பற்றி பெருமை பாராட்டுகிறவர்களாயிருந்தாலும் நிச்சயமாகவே அவர்களுக்கு பெரும் வேதனைகளுண்டு. அவர்களுடைய துன்மார்க்கம் அவர்களை தேவ தண்டனையிலிருந்து விடுவிக்க மாட்டாது. துன்மார்க்கரையும், தேவனை மறக்கிற எல்லாஜாதிகளையும் நிச்சயமாக தேவன் நரகத்திலே தள்ளும் நாட்கள் வெகு சமீபமாயிருக்கிறது. மறந்துபோக வேண்டாம்.

E. துன்மார்க்கனைக் குறித்து கர்த்தர் கொண்டுள்ள விருப்பம்:-

துன்மார்க்கன் என்றால் தீமை செய்கிறவன். தெய்வ பயம் இல்லாதவன், நரகத்தில் பங்கடையப் போகிறவன் என்று முந்திய பாகத்தில் பார்த்தோம். ஆனால் தேவன் துன்மார்க்கனின் அழிவை அல்ல அவன் தன் பாவ ஜீவியத்தை விட்டுத் திரும்பி தேவன் அருளும் புதிய வாழ்க்கைக்குள்ளாக வரவேண்டும். என்பதுதான் தேவனின் வாஞ்சையும், விருப்பமுமாக இருக்கிறது என்பதை கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ, அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பி பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார் எசே.18:23,33. துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும், நீதியையும் செய்வானேயாகில் அவன் பிழைக்கவே பிழைப்பான். அவன் சாவதில்லை எசே.18:21.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1. கர்த்தருக்குப் பயப்படாதவர்கள்: யூதாவின் ராஜாக்களும் அவன் ஊழியக்காரரும்.

ராஜாவாயினும் அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக்காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை எரே.36:2.

ஒரு ராஜாவானவன் கர்த்தருக்குப் பயந்தவனாய் நியாயத்தோடும், நீதியோடும் ஜனங்களை ஆட்சி செய்யவேண்டியவன். ஆனால் இங்கு அந்த ராஜாவுக்கோ அவனுடைய ஊழியக்காரருக்கோ கர்த்தரின் எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்டபொழுது அவர்களில் எந்தவித பயமும் உண்டாகவில்லை. அன்றைய யூத ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயம் அற்றவர்களாக ஜீவித்ததினால் தங்கள் ராஜ்யத்தை இழந்து பாபிலோனிய அரசர்கட்கு அடிமைகளானார்கள்.

இன்று பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் கர்த்தர் அருளும் நன்மைகளை அனுபவித்துக்கொண்டு, தேவனை மறந்தவர்களாய், தெய்வப்பயம் அற்றவர்களாய் எல்லாவித தீமையானக் காரியங்களையும் துணிந்து செய்கிறார்கள். தேவ ஊழியர்கள் தேவனுடைய வசனத்தைக்கொண்டு எச்சரித்தால் இப்படியா பிரசங்கிப்பது, இந்த பிரசங்கத்தையா கேட்கவந்தோம் என்று கோபப்பட ஆரம்பித்துவிடுகிறார்கள். ஊழியர்களும் இவ்வித ககை குணமுடைய ஜனங்களை சந்தோஷப்படுத்த எண்ணி கர்த்தரின் எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்வதற்குப் பதிலாக கட்டுக்கதைகளான வார்த்தைகளைச்

சொல்லி ஜனங்களை சந்தோஷப்படுத்தப் பார்க்கிறார்கள். இவர்களின் இவ்வித செய்கையினால் அந்த ஜனங்களின் அழிவிற்கு அவர்களும் காரணமாகிவிடுகிறார்கள்.

இந்நாட்களில் கர்த்தரின் ஊழிக்காரர்கள் கர்த்தரின் வசனத்தைக் கொண்டு நம்மை எச்சரிக்கும்பொழுது நாம் கர்த்தருக்குப்பயந்தவர்களாக நம்மில் காணப்படும் எல்லாவித தீமையானக் காரியங்களையும் விட்டு நமது தேவனிடம் திரும்புவோம் என்றால் பாக்கியவான்களாய் இருப்போம். செய்வோமா?

அத்தியாயம் 9

ஏன் கர்த்தருக்குப் பயப்படும் பயம் மனிதரில் இல்லாமற் போய்விடுகிறது

துர்க்கிரியைக்குத் தகுந்த தண்டனை சீக்கிரம் நடவாதபடியால் மனுப்புத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது பிர.8:11.

இன்று அநேகர் என்னவெனில் நாம் என்ன அக்கிரமம் பண்ணினாலும், என்ன அநியாயம் பண்ணினாலும் நமக்குத் தேவ தண்டனை கிடைக்கிறதில்லையே. எல்லாம் நமக்கு நன்றாய்தானே இருக்கிறது என்று எண்ணுகிறார்கள்.

A. மாறுதல்கள் நேரிடாததினால் பயம் இல்லாமற்போய்விடுகிறது:

அரசாங்கத்தை ஏமாற்றுவது, பொதுமக்களை ஏமாற்றுவது, வட்டிக்குக் கொடுத்து பணம் சம்பாதிப்பது, கள்ளத்தராசு, கள்ளச் சந்தை, கலப்படம் இன்னும் இவ்விதமாக பல குறுக்கு வழிகளில் பணங்களைச் சேர்க்கிறவர்கள் தங்கள் செல்வ நிலையைக் கண்டு பெருமை கொண்டவர்களாக நமக்கு எல்லாம் நன்றாகத்தானே இருக்கிறது, நமக்கு ஒரு தீமையும் வரவில்லையே என்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை அறியாமலிருக்கிறார்கள். அதாவது தேவன் நமது பாவங்களுக்குத் தக்கதாக உடனுக்குடன் நம்மை அழிப்பார் என்றுச் சொன்னால் இப்பொழுது இந்த உலகிலே ஒரு மனிதர் கூட உயிருடன் இருக்க முடியாது.

உலகப்பிரகாரமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தவறு செய்யும்பொழுது நாம் உடனே அவர்களைக் கொன்று விடுவதில்லை. அவர்களை அடித்து, சிட்சித்து, பல நல்ல ஆலோசனைகள் சொல்லி இவ்விதமாக நாம் அவர்களை நல்லவழியில் நடத்தப்பார்க்கிறோம். சாதாரண மனிதர்களாகிய நாம் நமது பிள்ளைகளுக்கு இவ்விதம் செய்கிறோம் என்றால் மனுக்குலம் அனைத்தையும் சிருஷ்டித்து பரிபாலித்து வரும் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் தமது கையின் சிருஷ்டிகளாகிய மனிதர் மீது எவ்வளவு அன்பு உடையவராக அவர்கள் தங்கள் பாவ வழிகளைவிட்டு மனந்திரும்பி தம்மிடம் வரவேண்டும் என்று ஆவலுடன் இருப்பார் என்று சிந்தித்துப்பாருங்கள்.

…வரும் கெட்டுப்போகாமல் (நரகத்திற்குப் போகாமல்) எல்லாரும் …திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய …மையுள்ளவராயிருக்கிறார் 2பேது.3:9. ஆனால் மனிதர் இதை …வதில்லை.

…மக்குக் கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்நாட்களில் நமது …ான வாழ்க்கை முறைகளைக் குறித்தோ நம் செல்வ நிலையைக் குறித்தோ … பெருமை கொண்டவர்களாக, எல்லாம் சரியாக இருக்கிறது என்று …ணாதபடி கர்த்தருக்குப் பயந்தவர்களாக நமது பாவ ஜீவியத்தை விட்டு …திரும்பி தேவனிடம் சேர்வோமாக. தேவன் இரக்கமுள்ளவர். அவர் …ிக்கிறதற்கு தயை பெறுத்திருக்கிறார்.

கர்த்தர் மௌனமாயிருப்பதால் பயம் இல்லாமற்போய்விடுகிறது.

நான் வெகுகாலம் மௌனமாயிருந்தேன் அல்லவா? ஆகையால் …க்குப் பயப்படாதிருக்கிறாய் ஏசா.57:11.

கர்த்தர் நம் பாவங்களுக்குத் தக்கதாக நம்மை தண்டியாமல் நம்மைப் பற்றி … மௌனமாயிருக்கிறார் என்றால் இதற்கு முந்திய பகுதியில் …பட்டுள்ளதுபோலவே கர்த்தர் மௌனமாயிராமல் அவர் நம்மீது மிகவும் …சையுடையவராய் நாம் அவரிடம் நமது பாவமான ஜீவிய முறைகளை …விட்டு மனந்திரும்பி வரவேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் கர்த்தர் …னமாயிருக்கிறார் என்று சொல்லிக்கொண்டு நமது பாவ நிலையில் நாம் …ிந்து நிற்போம் என்றால் நாம் நிச்சயமாகவே தேவதண்டனைக்குத் …முடியாது. எச்சரிக்கையாயிருப்போமாக.

இதயம் கடினப்படுவதால் பயம் இல்லாமற் போய்விடுகிறது:

எங்கள் இருதயத்தை உமக்குப் பயப்படாத படிக்குக் …னப்படுத்துவானேன் ஏசா.63:17.

நாம் கர்த்தருக்குப் பயப்பட தடையாக இருக்கும் காரியம் நம் இருதயம் …னப்படுவது என்றுக் கூறப்பட்டுள்ளது. இருதயம் ஏன் கடினப்படுகிறது? இக் …ள்விக்கு கீழ்க்கண்ட வேத வசனம் விடையளிக்கிறது.

உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே …னப்பட்டுப் போகாதபடிக்கு... எபி.3:11.

நாம் பாவம் செய்ய ஆரம்பிக்கும்பொழுது நமது மனச்சாட்சி நம்மை …ணர்த்துகிறது. ஆனால் நாம் துணிந்து அந்தப் பாவத்தை மீண்டும் மீண்டும் …வோம் என்றால் அந்தப் பாவத்தின் வஞ்சனையினால் நம் இருதயம் …னப்பட்டு விடுகிறது. நம் இருதயம் கடினப்படுவதால் நாம் பாவத்தின் கொடூரத் …மையை நம்மால் அறியமுடியதவர்களாகி விடுகிறோம்.

ஆனால் இங்கு தேவன் நம் இருதயத்தைக் கடினப்படுத்துவதாகக் …ப்பட்டுள்ளது. ஏன் கர்த்தர் நம் இருதயத்தை கடினப்படுத்துகிறார் என்று

வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதின் காரணத்தை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

தேவன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது யாத்.4:21,7,3,13. முதலிய வசனங்களை பார்க்கவும்) ஏன் தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்த வேண்டும்? அல்லது கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தும் படியாக அவனில் காணப்பட்ட தவறானக் காரியம் என்ன என்று பார்க்கும்பொழுது வேத வசனம் இவ்விதமாக கூறுகிறது. மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் வந்து உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய் யாத்.10:3. கர்த்தர் முன்பாக பார்வோன் தன்னைத் தாழ்த்த மனமற்றவனாக இருந்தான் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் தன்னைத் தாழ்த்த வேண்டும் என்றால் அவன் இருதயம் எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும் என்று கீழ்க்கண்ட வேத வசனம் விளக்குகிறது. இந்த ஸ்தலத்திற்கு அதின் குடிகளுக்கும் விரோதமாகத் தேவன் சொன்ன அவருடைய வார்த்தைகளை நீ கேட்கையில் உன் இருதயம் இளகி எனக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி எனக்கு முன்பாக பணிந்து 2நாளா.34:27.

பாவத்தின் வஞ்சனையினால் இருயதம் கடினப்படுகிறது என்றுப்பார்த்தோம் அது போலவே கர்த்தருக்கு கீழ்ப்படிய கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்த நம் இருதயம் இளகியதாக இருக்கவேண்டும். மேற்கூறப்பட்ட வசனத்தில் யோசியா என்கிறதான யூதாவின் ராஜா கர்த்தரின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசித்து கர்த்தரின் எச்சரிப்பின் வார்த்தைகளை அறிந்துகொண்டபோது அவன் இருதயம் இளகி கர்த்தர் முன்பாகத் தன்னைத் தாழ்த்தி கர்த்தரைப் பணிந்துகொண்டான். யோசியாவின் இருதயம் இளகியதாக இருந்ததால் அவன் தன்னை தாழ்த்தினான். பாவத்தின் வஞ்சனையினால் நம் இருதயம் கடினப்பட்டதாகக் காணப்படாதபடி எந்தவிதமான பாவமானக் காரியங்களுக்கும் நமது ஜீவியத்தில் இடங்கொடாதபடி இருக்க நம் இருதயத்தை இளகியதாகக் காத்துக்கொண்டால், நாம் கர்த்தர் முன்பாக நம்மைத் தாழ்த்தி கர்த்தரின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து கர்த்தர் விரும்பும் காரியங்களை மட்டும் செய்கிறவர்களாக இருக்கமுடியும். அப்படியென்றால் நம் வாழ்க்கையில் பாவம் என்பது சிறிதளவும் காணப்படாதபடி நம்மை காத்துக்கொள்வது நல்லது.

இந்நாட்களில் நம் இருதயத்தைக் கடினப்படுத்தினால் பார்வோனுக்கு சம்மபவித்தது போல நமக்கும் அழிவுதான் காத்திருக்கும். ஆகவே கர்த்தர் சமூகத்தில் நம்மை தாழ்த்துவோம். பாவம் நம் ஜீவியத்தில் குடி கொள்ளாதபடி நம்மைக் காத்துக்கொள்வோம்.

[illegible] இல்லை, ஆகவே அவர்களுக்கு [illegible] [illegible]யிருக்கிறது.

[illegible]கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற [illegible] ஜனங்களே, இதைக் கேளுங்கள் [illegible] எரே. 5:21,22.

[illegible] அறிவில்லாதவர்களுக்கு [illegible] உண்டு ஆனால் காணமுடியாது. காதுகள் உண்டு ஆனால் கேட்க [illegible] அவர்களுக்கு இவ்வித நிலை வந்தது என்று கீழ்க்கண்ட வேத [illegible] விளக்குகிறது இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது மத் 13:15.

இவ்வாறு உலகின் ஜனங்களின் இருதயம் கொழுத்த நிலையில் இருப்பதால் அவர்கள் தேவனிடமாக மனந்திரும்ப முடியாதபடி கண்கள் இருந்தும் காணமுடியாதவர்களாகவும் காதுகள் இருந்தும் கேட்கமுடியாதவர்களாகவும் இருக்கிறார்கள் எவ்விதம் இந்த உலகின் ஜனங்கள் இவ்வித கொழுத்த நிலைக்கு வருகிறார்கள் என்றும் அவர்கள் என்ன செய்வார்கள் என்றும் வேத வசனம் தெளிவுபடுத்துகிறது பசுவின் வெண்ணெயையும், ஆட்டின் பாலையும் பாசானில் மேயும் ஆட்டுக்குட்டிகள் ஆட்டுக்கடாக்கள் இவைகளுடைய கொழுப்பையும் கொழுமையான கோதுமையையும், இரத்தம் போன்ற சிவப்பான திராட்ச ரசத்தையும் சாப்பிட்டாய். யெஷூரன் கொழுத்துபோய் உதைத்தான். கொழுத்து ஸ்தூலித்து, நிணந்துன்னியபோது தன்னை உண்டாக்கின தேவனை விட்டு தன் இரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணினான் உபா.32:14,15.

தேவன் அளிக்கும் நன்மைகளை புசித்து அதிகமான செல்வங்களை பெற்றவுடன், தங்களில் கொழுத்தவர்களாகி தேவனை அசட்டை செய்கிறார்கள். தேவனை அசட்டை செய்வது என்றால் என்ன என்று கீழ்க்கண்ட வேத வசனம் விளக்குகிறது. அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டை பண்ணி ஒருவன் தன் வயலுக்கும் ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டான். அதாவது கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடாமல் தங்கள் சொந்த காரியங்களாகிய வயலுக்கும் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். அதுபோலவே இந்த உலககின் ஜனங்களும் தேவன் கொடுக்கும் நன்மைகளினால் திருப்தியாகி கொழுதுப்போய் தங்களை சிருஷ்டித்துக் காப்பாற்றி வரும் தேவனை அசட்டை செய்து தெய்வபயம் அற்றவர்களாகி தங்கள் இஷ்டம்போல் ஜீவிக்கிறார்கள். இவ்விதம் ஜீவிப்பதினால் பின்னர் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் குறைவுபடத் தொடங்கி பல தீமையான காரியங்களை அனுபவிக்கிறார்கள். ஏன் அவர்கள் இவ்விதம் பல குறைகளை அனுபவிக்கிறார்கள். அதின் காரணம் என்ன என்று கீழ்கண்ட வேத வசனங்கள்

நன்குவிளக்கும். சகலமும் பரிபூரணமாயிருக்கையில் நீ மனமகிழ்ச்சியோடும், களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரை சேவியாமற்போனதினிமித்தம் சகலமும் குறைவுபட்டு பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும் கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களை சேவிப்பாய் உபா.28:47,48.

கர்த்தர் நமக்குப் பல ஆசீர்வாதங்களை கொடுத்திருக்கும்போது நாம் மகிழ்ச்சியோடும் கர்த்தரை சேவிக்கிறவர்களாக கர்த்தருக்கு கீழ்படிய மனமற்றவர்களாகி நம் இஷ்டம்போல் ஜீவித்தால் நிச்சயம் நாம் குறைவுபடத் தொடங்கி எல்லாவித வேதனைகளையும் அனுபவிக்க வேண்டிய நிலை வரும். இவ்விதமான ஜனங்களைப் பார்த்து தான் தேவன் அறிவில்லாதவர்கள் என்று கூறுகிறார்.

இந்நாட்களில் நாம் அறிவுள்ளவர்களா அல்லது அறிவில்லாதவர்களா என்று அறிந்துகொள்வது நல்லது. சிலருக்கு எவ்வளவுதான் இவ்வித வசனங்களை விளக்கிச் சொன்னாலும், அவர்கள் அனுபவிக்கும் வேதனைக்கு, தரித்திரத்துக்கு அவர்கள் தான் காரணம் என்று சொன்னாலும் அவர்கள் அதை புரிந்துகொள்ள முடியாத அறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

E. கர்த்தருக்குப் பயப்படும் பயப்படுதலை தெரிந்துகொள்ளவில்லையென்றால் அவர்களுக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்காது.

கர்த்தருக்குப் பயப்படுதலை தெரிந்து கொள்ளாமற்போனார்கள் நீதி.1:29.

கர்த்தருக்குப் பயப்படுதலை தேவன் தானாக நமக்குக் கொடுப்பதில்லை நாம் தான் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொண்டு கர்த்தரின் வழியில் செல்கிறவர்களாக. கர்த்தருக்குப் பிரியமானபடி ஜீவித்து, தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கர்த்தருக்குப் பயப்படுதலை அசட்டைசெய்து நம் இஷ்டம்போல் ஜீவித்து நமது அழிவைத் தேடிக்கொள்ளலாம்.

நாம் எதைத் தெரிந்துகொள்வது, சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

அத்தியாயம் 10

கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்கள் செய்யும் காரியங்கள்

இன்றைய மனித சமுதாயம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் சிறிதளவும் இல்லாதவர்களாக ஜீவிக்கிறார்கள். கிறிஸ்தவர்களிலும் அநேகர் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்களாக ஜீவிக்கிறார்கள். ஆகவே கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்கள் என்ன என்னக்

...ரியங்களைச் செய்வார்கள் என்று இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

A. மற்றவர்களைக் கெடுப்பதற்காக வஞ்சகமான வார்த்தைகளை பேசுவது :-

(துன்மார்க்கர்) மறைவுகளில் உத்தமன் மேல் எய்யும் பொருட்டுக் கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றுகிறார்கள். ...ற்றும் பயமின்றிச் சடுதியில் அவன் மேல் எய்கிறார்கள் சங்.64:4.

இன்று உலக ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்களாக ...றவர்களை கெடுக்கும்படி தங்கள் வஞ்சகமான வார்த்தைகளை ...யோகிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். எவ்விதம் ஒரு அம்பை ...யதால் அது படுகிற மனிதனைக் காயப்படுத்தி அவனுக்கு மிகுந்த வேதனையை ...ண்டுபண்ணுமோ அதுபோலவே கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாத ...ன்மார்க்கரான மனிதர்களின், வஞ்சகமான வார்த்தைகளினால் அநேகக் ...டும்பங்களில் சமாதானமற்றநிலை, நண்பர்களுக்குள்ளே பகை, ...முதாயங்களிடையேக் கலவரம், ஜாதிச்சண்டைகள் போன்றக் கொடுந்தீமைகள் ...ற்படக் காரணமாகவுள்ளது. ஆனால் மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில், ...த்தமர்கள் அதாவது கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருக்குப் பிரியமானபடி ...ஜீவிக்கிறதான ஜனங்கள் மீது தங்கள் அம்புகளாகிய வார்த்தைகளை ...ரயோகிக்கிறார்கள் என்றுக் கூறப்பட்டுள்ளது. இன்று உலக ஜனங்களானாலும் ...ரி, பெயர்க் கிறிஸ்தவர்களானாலும் சரி, சில நேரங்களில் தேவ ஊழியர்கள், ...விசுவாசிகள் கூட கர்த்தருடைய பார்வையில் உத்தமர்களாக விளங்குகிற தேவ ஜனங்கள் பற்றி தங்கள் சகப்பான வார்த்தைகளைப் பேசி அவர்களைக் கெடுக்கப் ...பார்க்கிறார்கள். ஏன் இவ்விதம் செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாததினால் தான் இவ்விதம் செயல்படுகிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்

B. மற்றவர்களுக்குத் தீமை செய்வது:

எனக்கு (கர்த்தருக்குப்) பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்கிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன் மல்.3:5.

அதற்கு ஆபிரகாம் இவ்விடத்தில் தெய்வபயம் இல்லை யென்றும் என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்று போடுவார்கள் என்றும் நான் நினைத்தேன் ஆதி.20:11.

(இஸ்ரவேல்) எகிப்திலிருந்து புறப்பட்டுவருகிற வழியிலே அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் ..... உன் பாளையத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் உபா.25:17.

கர்த்தருக்குப் பயப்படும் பயம் மனிதரில் காணப்படவில்லையென்றால் நிச்சயமாக மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளதுபோல் ஜனங்கள்

எல்லாவித தீமையானக் காரியங்களையும் துணிந்து செய்வார்கள். ஏழை எளியவர்களை ஒடுக்குவது, அவர்கள் நிலங்களை அபகரிப்பது, கூலிக்காரரின் கூலியைக் கொடாமல் இருப்பது, இன்னும் கொலைகள், கொள்ளை, விபசாரம் போன்றக் காரியங்களையும் துணிந்து செய்வார்கள்.

இன்று மனித சமுதாயத்தில் தீமையானக்காரியங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு போகிறது என்றால் ஜனங்களில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாத, தேவன் இல்லையென்று சொல்கிறதான துன்மார்க்கரான மனிதர்கள் நாளுக்கு நாள் பெருக்கிகொண்டு போவதினால்தான் என்பதை நாம் தெளிவாக அறியவேண்டும். ஆனவே இன்றைய மனிதசமுதாயம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக மாறுவார்கள் என்றால் இன்று மனிதரிடையே காணப்படும் எல்லாவிதத் தீமையானக் காரியங்களும் போய்விடும். மனிதர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக இருந்தால் நிச்சயமாக மற்றவர்களுக்குத் தீமையானக் காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

C. தேவனுக்கு எதிர்த்து நிற்பது:

ஆகிலும் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னும் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன் யாத்.9:30.

பார்வோனும் அவன் ஊழியக்காரரும் கர்த்தருக்குப் பயப்படாததினால் தான் கர்த்தரின் ஜனங்களை தங்கள் தேசத்திலிருந்து போகவிடாது தேவனுக்கு எதிர்த்து நின்று அவர்களே தங்கள் அழிவைத் தேடிக்கொண்டார்கள்.

இன்றும் அநேகர் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாமல் தேவ நியமங்களுக்கு எதிர்த்து நிற்கிறவர்களாக அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்துக்கும் தீவிரமான அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். இந்நாட்களில் நாம் அவர்களைப்போல் இராமல் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக கர்த்தரின் காரியங்களுக்கு எதிர்த்து நிற்காது தேவசித்தம் நம்மில் நிறைவேற நாம் இடங்கொடுத்தால் பாக்கியவான்களாய் இருப்போம். செய்வோமா?

D. வேசித்தனம் பண்ணுவது:

யூதா என்கிற துரோகி பயப்படாமல் இவளும் போய் வேசித்தனம் பண்ணினாள். இதை நான் கண்டேன் எரே.3:8.

தேசம், சபை இவை இரண்டையும் வேத புத்தகத்தில் ஸ்திரீக்கு உவமிக்கப்பட்டுக் கூறப்பட்டுள்ளது. ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் படாத ஸ்திரீ ஒரு மனிதனோடு தவறாக உறவு கொண்டால் அதை வேசித்தனம் என்றும், ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டவள் இன்னொரு மனுஷனோடு தவறாக உறவு கொள்வதை விபசாரம் என்றும் கூறப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் யூதா என்பது யூதா தேசத்திலுள்ள தேவ ஜனங்கள், தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் இந்த உலகத்துக்கு ஒத்து வேஷம் போடாது கர்த்தருக்குப் பயப்படும் பயம் உடையவர்களாக முற்றிலும்

வேறுபட்டவர்களாக ஜீவிக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. நாம் உலகத்தாரோடு ஒத்துப்போகிறவர்களாக காணப்படுவோம் என்றால் நாமும் வேசித்தனம் செய்கிறவர்களாகக் காணப்படுவோம். உலகத்தில் உறவு நம்மில் சிறிதளவும் காணப்படக்கூடாது.

எவ்விதம் கடலின் தண்ணீரில் உப்புத்தன்மை காணப்பட்டாலும், அதேக் கடலில் வாழும் மீனில் அந்த உப்புத்தன்மைக் காணப்படுவதில்லை. அதுபோலவே நாமும் இந்த உலகில் ஜீவிக்சிறவர்களாக இருந்தாலும் இந்த உலகின் அசுத்தமானக் காரியங்கள் மூட பழக்க வழக்கங்கள், சடங்காச்சாரமான காரியங்கள் போன்றவை நம்மில் சிறிதளவும் காணப்படக்கூடாது. நம்மைக் காத்துக்கொள்வோமா?

E. தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்வது:

இவர்கள் உங்களன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து பயமின்றி கூடவிருந்துண்டு தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்கிறார்கள் யூதா.12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாத ஒருக்கூட்டம் தேவ ஜனங்களின் ஜீவியமுறையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் பக்கவழியாய் நுழைந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளதையும் காண்கிறோம். இங்கு விருந்து என்பது தேவ ஜனங்களின் ஐக்கியத்தைக் குறிப்பதாகவுள்ளது. கர்த்தரின் திருவிருந்தில் அல்லது அப்பம் பிட்குதலில் பங்கு கொள்ளுகிறவர்கள் கர்த்தரோடும், தேவ ஜனங்களோடும், ஐக்கியப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆவிக்குரிய தேவ ஜனங்களின் மத்தியிலும் கர்த்தருக்குப் பயப்படாமல் தங்கள் இஷ்டம்போல் ஜீவிக்கிறதான ஒருகூட்டம் ஜனங்கள் உண்டு என்பதை இந்த வசனம் தெளிவாக விளக்குவதாகவுள்ளது.

இவ்விதம் தங்கள் இஷ்டம்போல் ஜீவித்துகொண்டு சபையிலும் ஐக்கியம் உடையவர்களாய் இருப்பதினால் நம் தேவனின் பரிசுத்தமான நாமம் உலக ஜனங்களால் தூஷிக்கப்பட ஏதுவாகிறது. ஓர் வெண்மையான சட்டையில் சிறிது கறைபிடித்தால் அக்கறையானது அந்த சட்டையின் முழு அழகையும் கெடுத்துவிடும். தவிர அந்த சட்டையைப் பார்க்கிறவர்களுக்கு அந்த கறை தான் பளிச்சென்று தெரியுமே ஒழிய அந்தச்சட்டையின் வெண்மைத்தன்மை தெரியாது. அதுபோலவே கறைகளாயிருக்கிற சில விசுவாசகள், ஊழியக்காரர் இவர்களின் வாழ்க்கை முறைகளைப் பார்த்து பரிசுத்தவான்களின் சபைகளே இப்படித்தான் என்று அநேகர் கணித்து விடுகிறார்கள். இது எவ்வளவு தவறானது என்று பாருங்கள். இவர்கள் எத்தன்மையுடையவர்கள் என்று சிறிது ஆராய்ந்துபார்ப்போம்.

1. தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறவர்கள்.

மேய்த்துக்கொள்வது என்பது நடத்திப்பு அல்லது போதிக்கப்படுவது என்பதைக் குறிக்கும். ஒரு ஊழியக்காரனுக்கு கர்த்தர் போதிக்கவேண்டும். கர்த்தர் ஆவியானவரின் உணர்த்துதல் மூலமாகவோ வேத வசனங்களின்

மூலமாகவோ அல்லது மற்ற ஊழியர்கள் மூலமாகவோ ஊழியர்களுக்குப் போதிக்கலாம். சிலநேரம் சில விசுவாசிகள் மூலமாகக்கூட கர்த்தர் ஊழியர்களுக்குக் கற்றுக்கொடுக்கலாம். ஊழியக்காரன் தேவ ஜனங்களை நடத்த வேண்டியவனாக இருக்கிறபடியால் அவன் எப்பொழுதும் கர்த்தர் சமூகத்தில் காத்திருக்கிறவனாக இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது. அதுபோலவே வேதவசனங்களையும் அதிகமாக ஆராய்ந்துபார்க்க வேண்டியவனாக இருக்கிறான். இவ்விதமாக தேவஊழியர்கள் தேவகாரியங்களைக் கர்த்தர் சமூகத்தில் கற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலோடு தேவ ஜனங்களுக்குப் போதிக்க முற்பட வேண்டும். இதுவல்லாது சிலஊழியக்காரர்கள் இங்கும் அங்குமாக சிலக்காரியங்களை அறிந்துகொண்டு தங்கள் சுய ஞானத்தை சார்ந்தவர்களாக ஜனங்களை வஞ்சகமான வார்த்தைகளால் ஏமாற்றப் பார்க்கிறார்கள். இவர்கள்தான் தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிற ஊழியக்காரர்கள். இவர்களிடம் ஆவியானவரின் நடத்திப்பு சிறிதளவும் இருக்காது.

அதுபோலவே விசுவாசிகளும் சரியான தேவ ஊழியக்காரர்களால் போதிக்கப்படுகிறார்கள். தாங்களும் கர்த்தரின் சமூகத்தில் காத்திருந்து வேத வசனங்களை ஆராய்ந்துபார்த்து சரியானமுறையில் வேதத்தைக்கற்று கொள்ளவேண்டும். ஆனால் சில விசுவாசிகள் தங்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியர்களுக்கு அடங்கி இருக்காது. தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று தங்கள் சுயஞானத்தைச் சார்ந்தவர்களாக தங்கள் இஷ்டம்போல் ஜீவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எப்பொழுதும் ஊழியர்களுக்கு எதிர்த்து நிற்கிறவர்களாகவும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்கிறவர்களாகவும் இருப்பார்கள்.

2. காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகம்:

மேகம் மழை பொழிவதற்காக உள்ளது. மேகம் தன்னில் மழை பெய்வதற்கேற்ற தண்ணீர்த் துளிகளை உடையதாக இருக்க வேண்டும். அவ்விதம் அல்லாது காற்றினால் அந்த மேகம் அங்கும் இங்கும் அடியுண்டோடுகிறதாக இருக்கும் என்றால் அதினால் எந்தவித பிரயோஜனமும் இருக்காது. எவ்விதம் மேகம் மழையைபொழிகிறதோ அதுபோலவே ஊழியக்காரராயினும், விசுவாசிகளாயினும் அவர்கள் இருக்கும் சபைகளுக்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டும். அதாவது ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவர்களாய் இருக்கவேண்டும், அவ்விதமல்லாது மனுஷருடைய சூதும், வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவிதக்காற்றினாலே எபே.4:14. அடிப்பட்டு; அலைகிறவர்களாய் இந்த சபை உபதேசம் நல்லதா அந்த சபை உபதேசம் நல்லதா, இந்த ஊழியக்காரர் எப்படி பேசுகிறார் என்றுபார்த்துகொண்டு அலையாதபடியும், ஊழியக்காரர்களும் யார் நமக்கு அதிகம் பணம் கொடுப்பார்கள் அல்லது வெளிநாட்டிலிருந்து பணம் வருமா என்றும், அதற்காக வேத சத்தியங்களை மாற்றிப் போதிக்கிறவர்களாகவும்

இருக்கக்கூடாது. இவ்விதமான நிலையில் இருப்பவர்கள் யாருக்கும் ஆசீர்வாதமாக இருக்க முடியாது. மாறாக அவர்கள் மூலமாக வேத சத்தியங்களை அறியாதவர்கள் மத்தியில் நம் தேவனின் பரிசுத்தமான நாமம் தூஷிக்கப்படும்.

3. வேரற்றுப்போன மரங்கள்:

மரங்கள் சில நேரங்களில் பட்டுவிடும், ஆனால் அதின் வேர்பாகத்தில் பசையிருந்து (உயிர் இருந்து) மழை பெய்யும்போது அதின் வேர் பாகங்களில் இருந்து மீண்டும் துளிர்விட்டு வளர்ந்துவருவதைப் பார்க்கலாம். இவ்விதம் மரமும் செத்ததாக எண்ணப்பட்ட மரங்கள் மீண்டும் துளிர்விட்டு வளர்வதைக்காணலாம். ஆனால் அந்த மரத்தின் வேர்பாகம் முழுமையாகச் செத்து அழுகிவிட்டது அல்லது காய்ந்து போய்விட்டது என்றால் அந்த மரம் எவ்வளவுதான் மழை பெய்தாலும் மீண்டும் துளிர்விட முடியாது. இவ்விதம் செத்த மரங்களிலிருந்து யாரும் கனியை எதிர்பார்க்க முடியாது.

எவ்விதம் மரத்தின் வேர் பூமிக்கு அடியில் மறைந்து இருந்து பூமியின் சாரத்தை உறிஞ்சி மரத்திற்கு அனுப்பி அதை பசுமையுடன் காத்துக்கொள்கிறதோ அதுபோலவே நமது ஆவிக்குரிய ஜீவியத்திலும் மற்றவர்களுக்குக் காணப்படாத அல்லது நம்மில் மறைவாக இருக்கின்றதான வேதவாசிப்பு, ஜெபம்போன்றக் காரியங்கள்தான் நமது ஆவிக்குரிய ஜீவியத்தைச் செழிக்கச்செய்கிறது. நம்மில் வேதவாசிப்பு, ஜெபம் இல்லையென்றால் நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன என்பதை நாம் அறியமுடியாது. தேவ ஆலோசனையை நாம் அறியமுடியாது. கர்த்தரின் எச்சரிப்பின் சத்தத்தை நாம் கேட்கமுடியாது. கர்த்தரின் காரியங்களில் நாம் தேறினவர்களாக காணப்பட முடியாது. அதுபோலவே நம்மில் ஜெபம் இல்லையென்றால் ஜெயம் இல்லை. தேவனோடுள்ளதான தொடர்பு இல்லை ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாதவீடு என்பார்கள். இன்று நம் நிலமை என்ன?

இன்று சில விசுவாசிகள், ஊழியக்காரர்கள் வேதவாசிப்பு ஜெபம் போன்றக் காரியங்கள் இல்லாமலேயே தங்கள் பேச்சுத் திறமையினால் எல்லாவற்றையும் சமாளிக்கப் பார்க்கிறார்கள். இவ்விதக் காரியங்களினால் அவர்களுக்கோ அல்லது அவர்கள் இருக்கும் சபைகளுக்கோ எவ்வித நன்மையும் இருக்காது என்பதை அவர்கள் அறிவதில்லை. இவ்வித ஊழியர்கள், விசுவாசிகளைத்தான் வேரற்றுப்போனவர்கள் என்றுக் கூறப்பட்டுள்ளது.

4. அமளியான கடலலை:

எவ்விதம் கடலில் அலைகள் காற்றினால் உண்டாகிறதோ அதுபோல் சபைகளில், எபே.4:14ல் கூறப்பட்டுள்ளதுபோல் பலவித உபதேசங்களாகிய காற்றுகள் வீசும்பொழுது சபைகளில் குழப்பங்களாகிய அலைகள் ஏற்படும். அப்பொழுது இந்த பக்கவழியாய் வந்தவர்கள் தங்கள் உள்ளத்தில் மறைந்து இருக்கும் அசுத்தங்களாகிய பிரிவினை உண்டாக்குவது, ஊழியக்காரர்,

விசுவாசிகளிடையே பகை உண்டாக்குவது இன்னும் இவ்விதமான பல அவமானத்துக்குரிய காரியங்களை வெளிப்படுத்துவார்கள். இவர்களின் மூலமாக சபைகளில் குழப்பங்கள்தான் உண்டாகும்.

5. மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள்:

நட்சத்திரங்களுக்கு ஒரு மார்க்கம் உண்டு நட்சத்திரங்களை வைத்துக் காலங்களைக் கணிக்கிறார்கள். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே பிறந்தபொழுது ஒரு நட்சத்திரம் கிழக்கேயிருந்து மூன்று சாஸ்திரிகளை இயேசு பிறந்த இடத்துக்கு நேராக நடத்திக்கொண்டு வந்தது. மத்.2:2. அதுமட்டு மல்லாது வேத புத்தகத்தில் தேவ ஊழியர்களையும் நட்சத்திரங்களுக்கு உவமித்துக் கூறப்பட்டுள்ளது. (வெளி.1:20. பார்க்கவும்) அனேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் தானி12:3. நட்சத்திரங்களை பற்றி நாம் அறிய வேண்டிய முக்கியமானக் காரியம் யாதெனில் அது மிகவும் உயரத்தில் உள்ளது.

ஆவிக்குரிய தேவ ஜனங்களும் மற்ற ஜனங்களைவிட ஒரு உயரிய நிலையில் உள்ளவர்களாக தங்களில் உள்ளதான ஒளியினால் மற்றவர்களையும் தேவனுக்கு நேராக நடத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தங்களுக்கு நியமிக்கப்பட்ட மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்தில் செல்லும் நட்சத்திரமானது தவறான வழியைக் காட்டுகிறதாக இருக்கும். அதுபோலவே கிறிஸ்தவர்களிலும் அனேகர் தங்கள் தவறான ஜீவியமுறைகளினால் மற்றவர்களை தவறாக வழி நடத்துகிறவர்களாக இருக்கிறார்கள். அதுபோலவே இன்றைய தேவ ஊழியர்களும் சத்தியத்துக்கு மாறானவைகளைப் போதித்து அனேகர் விசுவாசத்தினின்று இடறும்படியாகச் செய்வதுதான் தங்களின் சிறப்பான ஊழியம் என்கிறார்கள். நமது தவறான ஜீவிய முறைகளினாலோ, அல்லது நமது தவறான உபதேசங்களினாலோ யாரும் இடறும்படியான நிலை வராதபடி நம்மைக் காத்துக்கொள்வது மிகவும் நல்லது.

அத்தியாயம் 11

மற்றவர்கள் கர்த்தருக்குப் பயப்பட நாம் செய்யவேண்டியது

கிறிஸ்தவர்களில் நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக இருப்பது மட்டுமல்லாமல் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக மாற என்ன செய்யவேண்டும் என்று இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

1. நமது ஜீவிய மாற்றத்தை மற்றவர்கள் கண்டு அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக மாறவேண்டும்:

பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னை தூக்கியெடுத்து, என் கால்களை கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிபடுத்தி, நமது தேவனை துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள் சங்.40:2,3.

மேற் கூறப்பட்டுள்ள வேதவசனம் நம்மில் உண்டாகும் உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தை அல்லது ஜீவிய மாற்றத்தைக் குறிப்பதாகவுள்ளது. நாம் ஒரு நாள் அழிவின் குழியில் இருந்தோம். பலவிதமான பாவ சுபாவங்களாகிய சேற்றில் சிக்கியவர்களாக நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாதவர்களாய், இரட்சிப்பின் வழியை அறியாதவர்களாய் தவித்துக் கொண்டிருந்தோம். ஆனால் நம் தேவன் தமது அளவற்றக் கிருபையால் தமது அன்பின் கரத்தை நீட்டி நம்மை அந்த அழிவின் குழியிலிருந்து தூக்கியெடுத்து கன்மலையாகிய இயேசுவின்மேல் நிறுத்தி, நமது அடிகள் வழுவாதபடி அல்லது நாம் தவறான வழியை தெரிந்துகொள்ளாதபடி, கர்த்தரின் வழியில் உறுதியாக நிற்கச்செய்து நமது தேவனை நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து துதிக்கும்படியாக ஒரு புதியபாட்டை நமது வாயில் கொடுத்தார்.

இவ்விதமான ஜீவிய மாற்றத்தை நம்மில் காண்கிறதான உலக ஜனங்கள் நிச்சயமாக நமது தேவனின் வல்லமையை உணர்ந்து அல்லது நமது தேவன் இவ்வித ஜீவிய மாற்றத்தைக் உண்டுபண்ண வல்லவர் என்று அறிந்து நமது தேவனுக்கு பயந்து கர்த்தரை நம்புவார்கள்.

இன்றைய கிறிஸ்தவர்களிடம் இவ்வித ஜீவிய மாற்றம் உண்டா? கர்த்தரை துதிக்கும் துதி எப்பொழுதும் நமது வாயில் இருக்கிறதா? இன்று அல்லேலூயா ஸ்தோத்திரம் என்று சொன்னால் இது பெந்தேகோஸ்தேக்காரர்கள் போடும் கூச்சல் என்றல்லவா கூறுகிறார்கள். நம்மில் ஒரு உண்மையான ஜீவிய மாற்றம் காணப்படும் என்றால் நிச்சயமாக நமது வாயில் கர்த்தரை துதிக்கும் துதியாகிய புதுப் பாட்டு காணப்படும். நம்மைக் காண்கிறதான மற்றவர்கள். ஓ இந்த மனிதன்

எவ்வளவு அசுத்தமாக ஜீவித்தான் எல்லாவிதமான அசுத்தமான வார்த்தைகள் அல்லவா இவன் வாயில் இருந்து வந்தது. இப்பொழுது அவன் ஜீவியம் எவ்வளவு நல்ல ஜீவியமாக இருக்கிறது. இப்பொழுது எந்த நேரமும் கர்த்தரைத் துதித்துகொண்டல்லவா இருக்கிறான் என்றுக் கண்டு இவ்வித ஜீவியமாற்றத்தை மனிதனில் உண்டுபண்ண வல்லவராகிய தேவனுக்குப் பயந்து அவரை விசுவாசிக்க ஆரம்பிப்பார்கள்.

இன்று இவ்வித ஜீவிய மாற்றம் கிறிஸ்தவர்களில் காணப்படுகிறதா? அல்லது நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். அதனால் நான் கிறிஸ்தவன். அல்லது பணத்துக்காகவோ கலியாணத்துக்காகவோ, வேலைக்காகவோ, நாம் நமது பெயரை மட்டும் கிறிஸ்தவ பெயராக மாற்றிக்கொண்டு நமது பழைய பாவ ஜீவியத்தில் தொடர்ந்து ஜீவிக்கிறவர்களாக இருக்கிறோமா? நமது நிலைமை என்ன? மற்றவர்கள் நமது ஜீவிய மாற்றத்தை பார்த்து நமது தேவனை நம்ப ஆரம்பிக்கிறார்களா? அல்லது நமது பாவமான ஜீவியத்தைப் பார்த்து நமது பரிசுத்தமான தேவனின் மகத்தான நாமத்தை தூஷிக்கிறார்களா? சிறிது சிந்திப்போம்.

B. தீமையான காரியங்களை நம்மை விட்டு விலக்கும்போது மற்றவர்கள் கர்த்தருக்குப் பயப்படுவார்கள்.

இவ்விதமாய் தீமையை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக. மற்றவர்களும் அதை கேட்டுப் பயந்து இனி உங்களுக்குள்ளே அப்படிப்பட்ட தீமையைச் செய்யாதிருப்பார்கள். **உபா.19:19; 20:17-13.**

நாம் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள் என்றால் தீமையானக் காரியங்கள் நம்மில் சிறிதளவும் காணப்படக்கூடாது. நமது சமுதாயத்தில், அதாவது தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ஏதாவது தீமையானக் காரியங்கள் காணப்படுகிறது என்றால் அவைகளை உடனே நம்மை விட்டு விலக்கிவிடவேண்டும். அல்லது அந்த ஒரு தீமையானக் காரியம் நம்மில் பலத்தீமையானக் காரியங்கள் உருவாக காரணமாவிடும். ஆகவே தீமையானக்காரியங்கள் எவை என்றும் அவைகளை எப்படி நம்மைவிட்டு விலக்குவது என்பதுபற்றியும் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்

1. **எவைகள் தீமையானக் காரியங்கள்?**

a. ஊழியக்காரர்களின் வார்த்தைகளைக் கேளாமலிருப்பது தீமையாகும். **உபா.17:13.**

b. கர்த்தரை தவறான முறையில் ஆராதிப்பது, அதாவது கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்காமல் தங்கள் இஷ்டம்போல் நடந்து கொண்டு கர்த்தருக்குப் பலியிடுவது தீமையாகும். **பிர.5:1.**

c. சபைகளில் வேறுபாடுகள் காணப்படுவது தீமையாகும். **1கொரி.11:27.**

d. பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது தீமையாகும். **உபா.21:18-21.**

e. பொய்சாட்சி சொல்வது தீமையாகும். உபா.19:16,20.

f. மற்றவர்களுக்கு உயிர்ச் சேதம் உண்டாக அல்லது நஷ்டம் உண்டாக எண்ணுவது தீமையாகும். ஆதி.50:20.

g. அந்நிய தேவர்களை பணிந்துகொள்வது தீமையாகும். எரே.1:16; 25:6, உபா.13:7,11.

h. மற்றவர்கள் கர்த்தருடையக் காரியங்களிலிருந்து இடறும்படிச்செய்வது தீமையாகும். ரோம.14:20.

j. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர். 1தீமோ.6:10.

2. தீமையை எவ்விதம் நம்மை விட்டு விலக்குவது:

பழைய ஏற்பாட்டு காலத்தில் தீமை செய்தவர்கள் அல்லது தீமையானக் காரியங்கள் செய்யக் காரணமாயிருப்பவர்கள் கொலைசெய்யப்பட வேண்டும். உபா.13:7,11; 17:12,13. ஆனால் இந்த நாட்களில் யாரையும் தீமை செய்ததற்காக கொலைசெய்ய முடியாது. ஏனெனில் குற்றம் செய்தவர்களை தண்டிக்க இந்நாட்களில் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் (courts) உண்டு. ஆனால் கர்த்தருக்குள் மறுபடியும் பிறந்தவர்கள் அல்லது தேவனால் பிறந்தவர்கள் பாவம் (தீமை) செய்யாமல் தங்களை காத்துக்கொள்வார்கள். 1யோவா.5:18. தீமை அவர்களை ஆட்கொள்ளாது. இவ்விதம் தீமையானக் காரியங்கள் நம்மில் காணப்படவில்லையென்றால் நம்மைப் பார்க்கிற உலக ஜனங்கள், இந்த ஜனங்கள் எந்தவித தீமையும் செய்யாதபடி எவ்விதம் தீமைக்கு விலகி ஜீவிக்கிறார்கள் என்று அறிந்து கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக தங்களில் காணப்படும் தீமையானக் காரியங்களை விட்டுத் திரும்பப்பார்ப்பார்கள்.

C. மற்றவர்களுக்குத் தீமை செய்கிறவர்களின் அழிவினால் ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படுவார்கள்.

அவர்கள் (துன்மார்க்கர்) தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும். அவர்களைக் காண்கிற யாவரும் ஓடிப்போவார்கள். எல்லா மனுஷரும் பயந்து தேவனுடைய செயலை அறிவித்து அவர் கிரியையை உணர்ந்து கொள்வார்கள் சங்.64:8,9.

இன்று துன்மார்க்கராகிய உலக ஜனங்கள் துணிந்து தீமை செய்கிறார்கள். ஏனெனில் தாங்கள் செய்யும் தீமைகளுக்கு உடனுக்கு உடன் தண்டனை கிடைக்காததினால்தான் அவர்கள் அவ்விதம் துணிந்து செய்கிறார்கள். ஆனால் இங்கு கர்த்தரின் வசனம் சொல்கிறது அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்குமாம். அதாவது அவர்கள் மற்றவர்களுக்கு விரோதமாக தீமையாகப் பேசுகிற பேச்சே அவர்கள் அழிவுக்குக் காரணமாக இருக்குமாம். இன்று அநேகர் மற்றவர்களைக் கெடுத்து பேசுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டு ஜீவிக்கிறார்கள். ஆனால் ஒருநாள் அவர்கள் பேசுகிற வஞ்சகமானப் பேச்சே

அவர்களுக்குக் கண்ணியாக இருந்து அவர்களுக்கு அழிவை உண்டுபண்ணும் என்பதை அவர்கள் அறிவதில்லை.

இவ்வித தீமையானவைகளைப் பேசி மற்றவர்களைக் கெடுக்கிற துன்மார்க்கர் அழியும்போது நிச்சயமாகவே அவனைக் காண்கிறவர்கள் கர்த்தருக்குப் பயந்து ஆஹா இந்த மனிதன் தன் கொடிய வஞ்சகத்தினால் எத்தனை பேரைக் கெடுத்தான், இன்று அவன் பேச்சுகளே அவனுக்கு அழிவை உண்டுபண்ணிவிட்டதே என்று கண்டு இதின்மூலம் தேவனின் செயலை மற்றவர்களுக்கு அறிவித்து கர்த்தர் எவ்விதம் கிரியை செய்கிறார் என்று அவர் கிரியைகளை உணர்ந்துகொள்வார்கள். கர்த்தர் தமது கிரியைகளில் வல்லவர்.

D. கர்த்தரின் காரியங்களில் பொய் சொல்லுகிறவர்களின் மரணத்தினால் ஜனங்களுக்குப் பயம் உண்டாகிறது.

அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் பயம் உண்டாயிற்று அப்.5:5.

மேற் கூறப்பட்டுள்ள சம்பவத்தைப் பற்றி நமக்கு நன்கு தெரியும். ஆதித்திருச்சபையில் ஜனங்கள் தங்கள் காணியாட்சிகளை விற்று அவைகளின் பணத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலரின் பாதத்தில் வைத்தார்கள். அனனியா என்ற மனிதனும் அவன் மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்று அவைகளின் பணத்தை அப்போஸ்தலரிடம் கொண்டு வரும்பொழுது கொஞ்சப் பணத்தை வஞ்சித்து வைத்துக்கொண்டு அது பற்றி அப்போஸ்தலரிடம் பொய் சொன்னார்கள், அதினால் அவர்கள் இருவருக்கும் மரணம் உண்டாயிற்று அதைக் கண்ட ஜனங்களுக்குப் பயம் உண்டாயிற்று.

இன்றைய நாட்களில் இவ்விதம் ஒரு மரணம் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் ஆலயப் பணங்களுக்கு கள்ளக்கணக்கு எழுதியவர்கள் தங்கள் வாழ்க்கையில் பலவிதமான வேதனைகளை அனுபவிப்பதைக் கண்கூடாகக் காணலாம். ஊழியக்காரரிலும் அநேகர் கர்த்தரின் ஜனங்களிடம் இருந்து வாங்கும் பணங்கள் தங்கள் இஷ்டம் போல் செலவு செய்கிறார்கள். அதினால் பின்னர் அவர்கள் வாழ்க்கையில் பலவித உபத்திரவங்கள் வந்து கஷ்டங்கள் அனுபவிப்பதைக் காணலாம். நாம் இந்நாட்களில் கர்த்தருக்குரிய காரியங்களில் மிகவும் உண்மையுடன் இருந்தும் நம்மைக் காத்துக் கொள்வது நல்லது.

E. பாவம் செய்தவர்களைக் கடிந்துகொள்ளும்போது பயம் உண்டாகும்.

மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்வார். 1தீமோ.5:20.

கடிந்துகொள்ளுதல் பற்றி இதற்கு முன்பே விபரமாக எழுதியுள்ளேன். ஊழியக்காரர்களின் ஊழியத்தின் ஒரு பாகம் தேவ ஜனங்கள் மத்தியில் பாவம் காணப்படும்பொழுது உடனே அதைச் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாக

கடிந்துகொள்ளவேண்டும். அப்பொதுதான் மற்றவர்களுக்கும் பாவம் செய்யக் கூடாது என்று பயம் உணடாகும். இன்றைய ஊழியர்கள் மனிதர்களின் செல்வாக்குக்கு அல்லது அந்தஸ்துக்குப் பயந்து அவர்களை கடிந்துகொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள். ஏனெனில் இவ்விம மனிதர்கள் கொஞ்சம் அதிகம் பணம் கொடுப்பதினால் அவர் கொடுக்கும் பணம் தங்களுக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம் அவர்களில் உண்டாகிவிடுகிறது.

ஊழியக்காரர்கள் தங்களைத் தெரிந்துகொண்ட தேவனுக்குத்தான் பயப்படவேண்டுமே ஒழிய மனிதர்கள், அவர்கள் எந்த உயரிய நிலையில் இருந்தாலும் சரி, அவர்களுக்குப் பயப்படக் கூடாது. ஊழியர்கள் ஏன் ஜனங்களை கடிந்துகொள்ள வேண்டும் என்று வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும். லேவி.19:17.

இந்த நாட்களில் கர்த்தர் நமது பொறுப்பில் கொடுத்திருக்கும் ஆத்துமாக்கள் மீது பாவம் சுமராதபடியிருக்க அவர்களை சரியான முறையில் அவர்களிடம் காணப்படும் பாவமானக் காரியங்கள் குறித்து ஊழியக்காரர்கள் கண்டிப்பாக கடிந்துகொள்ளவேண்டும். அதினால் கடிந்துகொள்ளப் படுகிறவர்கள் ஊழியக்காரர் மூலம் தேவ எச்சரிப்புப் பெற்று தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைக் காத்துக்கொள்ள முடியும். சபையும் பக்திவிருத்தியடையும். ஊழியர்களும் தேவ ஆசீர்வாதம் பெறுவார்கள்.

F. நாம் கர்த்தருக்காக வைராக்கியமாக இருப்பதின் மூலம் மற்றவர்கள் கர்த்தருக்குப் பயப்படும் நிலை உண்டாகும்.

என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது தானி.6:26.

மேற்கூறப்பட்டுள்ள வார்த்தையை தரியு என்ற ராஜா தன் ஜனங்களுக்குக் கட்டளையாகக் கொடுக்கிறதைக் காண்கிறோம். இங்கு நமது தேவனுக்கு தானியேலின் தேவன் என்ற பெயர் தரியுவினால் கொடுக்கப்படுகிறதைக் காண்கிறோம். நாம் தேவஜனங்கள் என்றால் நம்மைக் காண்கிற ஜனங்கள், இவர்களின் தேவன் தான் பயப்படத்தக்கவர் என்று சொல்லவேண்டும்.

இன்றையக் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் உலகத்தோடு ஒத்துப்போவதையே விரும்புகிறார்கள், நமது அருகில் வசிக்கிற மற்றவர்கள் துக்கப்படக் கூடாது. என்று அவர்கள் விக்கிரகங்களுக்குப் படைத்தப் பொருட்களை வாங்கிப் புசிக்கிறார்கள், அவர்களின் விக்கிரகக்கோவில்களுக்குச் சென்று திருவிழாக்கள் காண்கிறார்கள், குறி முதலானவைகள் கேட்கிறார்கள். நண்பர்களை பிரியப்படுத்த அவர்களோடு சினிமா செல்கிறார்கள், சிகரெட், பீடி குடிக்கிறார்கள், மதுபானம் அருந்துகிறார்கள். வேலை செய்யும் அலுவலகங்களில் உள்ள உயர் அதிகாரிகளை பிரியப்படுத்த பல தவறான காரியங்களைச் செய்கிறார்கள். இன்னும் இவ்விதமாக தங்கள்

நண்பர்களை, அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை, மேலதிகாரிகளைப் பிரியப்படுத்த பலக்காரியங்களைச் செய்கிறார்கள். தங்களுக்கும் உலக ஜனங்களுக்கும் இடையே எந்தவித வித்தியாசமும் இல்லாமல் ஜீவிக்கிறார்கள். தாங்கள் கர்த்தருக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் ஜீவிய முறையைப் பார்க்கிற மற்ற ஜனங்கள் நிச்சயமாகக் கிறிஸ்தவர்கள் தங்களை விட ஒரு உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் என்று அவர்கள் தங்கள் வாயால் சொல்லவேண்டும். கிறிஸ்தவர்கள் முழுவதும் கர்த்தரையே சார்ந்து ஜீவிப்பதைப் பார்த்து கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்கள் கிறிஸ்தவர்களின் தேவன் ஒருவரே வல்லமையுள்ளவர் என்றுச் சொல்லவேண்டும். ஆனால் இன்றைய கிறிஸ்தவர்கள் உலக ஜனங்களைவிட மிகவும் மோசமாக அல்லவா ஜீவிக்கிறார்கள். உலக ஜனங்கள் செய்ய விரும்பாத பாவச்செயல்களையும் இன்றைய கிறிஸ்தவர்கள் துணிந்து செய்கிறார்களே. அப்படியென்றால் இன்றைய கிறிஸ்தவர்கள் தாங்கள் மற்றவர்களைவிட மேலானவர்கள் என்று எப்படிக் கூறமுடியும்.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்கள் இன்றையக் கிறிஸ்தவர்களுக்கு தேவனைக் குறித்த சரியான அறிவோ, வைராக்கியமோ கிடையாது என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. தேவனைக்குறித்த சரியான அறிவோ வைராக்கியமோ இன்றைய கிறிஸ்தவர்களிடம் காணப்படும் என்றால் நிச்சயமாகவே அவர்கள் அவ்விதமாகவே வாழ்ந்துகாட்டுவார்கள், எந்த சூழ்நிலையிலும் விக்கிரகங்களை நாடமாட்டார்கள். அதுமட்டுமல்லாது தங்கள் தேவனுக்காக எந்தவிதக் கஷ்டங்களையும் சகிக்க ஆயத்தமாய் இருப்பார்கள்.

தானியேல் தன் தேவனுக்காக வைராக்கியமுடையவராக இருநதார். தன் தேவனை ஆராதிப்பதற்குத் தடை உள்ளது என்பதை அறிந்தபோதும் அது பற்றிக் கவலைப் படாமல் முன்போலவே தன் தேவனை நோக்கி ஸ்தோத்தரித்து, ஜெபம் செய்துகொண்டிருந்தார். அவர் தான் சிங்கக் குகையில் போடப்படுவது பற்றிக் கவலைப்படாமல் தன் தேவனுக்காக வைராக்கியமுடையவராகவும் உண்மையுள்ளவராகவும் இருந்தார். தேவனும் தானியேலுக்காக வைராக்கியமுடையவராகவும் உண்மையுள்ளவராகவும் இருந்து தானியேல் சிங்கக் குகையில் போடப்பட்டபொழுது சிங்கங்கள் தானியேலுக்கு சேதம் உண்டாக்காதபடி தேவன் அவைகளின் வாயைக் கட்டிப்போட்டுவிட்டார். தானியேலுக்காக சிங்கங்களின் வாயை கட்டிய தேவன், தமக்காக வைராக்கியமாகவுள்ள தேவ ஜனங்களை எல்லாவித ஆபத்துக்களிலுமிருந்து காத்துக்கொள்ளமாட்டாரா? சிறிது சிந்திப்போம் செயல்படுவோம்.

ஆதி தேவ ஜனங்களுக்கு வைராக்கியமாகவும் உண்மையாகவும் இருந்த தேவன் இன்றும் அவ்விதமாகவே இருக்கிறார். தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். எபி.13:8. என்ற வேத வசனத்தை ஒரு போதும் மறக்கக்

[illegible]

அத்தியாயம் 12

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்கள்

இதுவரையில் கர்த்தருக்குப் பயப்படுவது பற்றிய பலகாரியங்களைப் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்கள் என்ன என்றும் பார்ப்போம்.

1. **கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தின் மூலம் ஞானத்தை பெற்று அதின்மூலம் தீமையான காரியங்களை விட்டு விலகுகிறார்கள்.**

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். சங்.111:10, நீதி.1:7.

கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும். நீதி.15:33.

ஆண்டவருக்குப் பயப்படுதலே ஞானம். யோபு. 28:28.

ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான். நீதி.14:16.

கர்த்தருக்குப் பயப்படும் பயமானது மனித வாழ்க்கையில் ஞானத்தின் ஆரம்பமாக இருந்து, தொடர்ந்து ஞானத்தைப் போதித்து முற்றும் ஞானம் உடையவர்களாய் மாற்றி அந்த ஞானத்தினாலே அவர்களை தீமையினின்று விலகச் செய்கிறது.

2. **கர்த்தருக்குப் பயப்படுதல் பொக்கிஷம்**

பூரண இரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும். கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம் ஏசா.33:6.

3. **கர்த்தருக்குப் பயந்தவர்களிடத்தில் கர்த்தரின் இரகசியம் இருக்கிறது.**

கர்த்தருடைய இரகசியம் அவர்க்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது சங்.25:14.

4. கர்த்தருக்குப் பயந்து ஜீவித்தால் சத்துருக்களின் கையினின்று தப்புவிக்கப்படுவோம்.

உங்கள் தேவனாகிய கர்த்தருக்கேப் பயந்து நடப்பீர்களாக. அப்பொழுது அவர்உங்கள் எல்லா சத்துருக்களின் கைக்கும் உங்களைத் தப்புவிப்பார். 2இரா.17:39.

5. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு கர்த்தரின் இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது.

கர்த்தருடைய இரட்சிப்பு அவர்க்கு பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறது. சங்.15:9; 145:19.

6. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு கர்த்தர் இரங்குகிறார்.

கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இரங்குகிறார். சங்.103:13, லூக்.1:50.

7. கர்த்தருக்குப் பயப்படுவதினால் கர்த்தரின் கிருபையை பெறுகிறோம்.

பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. சங்.103:17.

8. கர்த்தருக்குப் பயந்தவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

தமக்கு பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். சங்.147:11, அப்.10:35.

9. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு கர்த்தர் தமது வழியைபோதிப்பார்.

கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியை போதிப்பார். சங்.25:12.

10. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களில் கர்த்தரின் கிரியை ஆரம்பமாகிறது.

ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். மல்.4:2.

11. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு கர்த்தர் ஜெய வாழ்க்கையை கொடுக்கிறார்.

சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக, உமக்குப் பயந்து

படக்கிறவர்களுக்கு ஒருக்கொடியைக் கொடுத்தீர். சங்.60:4.

12. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்காக ஞாபகபுஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும், அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகபுஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. மல்.3:16.

13. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு கர்த்தர் தமது சுதந்திரத்தைத் தருகிறார்.

உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்திரத்தை எனக்குத் தந்தீர். சங்.61:5.

14. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு திடநம்பிக்கையும் அடைக்கலமும் உண்டு.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குத் திடநம்பிக்கையுண்டு. அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும். நீதி.14:26.

15. கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கு ஏதுவானது.

கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று. அதினால் மரணக்கண்ணி களுக்குத் தப்பலாம். நீதி.14:27.

கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது. அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான், தீமை அவனை அணுகாது. நீதி.19:23.

16. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குக் கர்த்தரின் ஆசீர்வாதம் கிடைக்கிறது.

கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். சங்.115:13; 112:1; 128:1-4.

17. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு குறைவில்லை.

கர்த்தருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சங்.34:9.

18. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுக்கிறார். இன்றும் கொடுப்பார்.

தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். சங்.111:5.

19. **கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களின் குடும்பங்களைத் தழைக்கச் செய்கிறார்.**

மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால் அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படிச் செய்தார் யாத்.1:21.

20. **கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் வாழ்க்கையில் நன்றாயிருப்பார்கள்.**

தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள். பிர.8:12, உபா.5:29.

21. **கர்த்தருக்குப் பயப்படும் பயப்படுதலோடு கூடிய கொஞ்சப்பொருளே போதும்.**

கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம். நீதி.15:16.

22. **கர்த்தருக்குப் பயப்டுகிறவனே பலனடைவான். நீதி.13:13.**

23. **கர்த்தருக்குப் பயப்படுவதினால் ஆயுசு நாட்கள் பெருகும். நீதி.10:27.**

24. **பயந்து இருக்கிறவன் பாக்கியவான் நீதி.28:14.**

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நமது சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்க்களையும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்காக கர்த்தர் வாக்களித்திருக்கிறார் என்று அறிந்துகொள்ளலாம். நாம் கர்த்தருக்குப் பயப்படுதலை கற்று அதில் தேர்ச்சியடைந்து கர்த்தரின் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று இந்த உலகத்திலும் செழிப்புடன் வாழ்ந்து மறுமையிலும் பரலோக பாக்கியத்தைப் பெற்று ஆனந்திக்க என் தேவன் உங்களுக்குக் கிருபை செய்வாரா. ஆமென்.

முடிவுரை

காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக: தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர்மேலும் விழுந்தகடமை இதுவே. பிர.12:13.

இந்த உலகின் கடைசி நாட்களில் ஜீவிக்கிறதான நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக, எல்லாத் தீமையான காரியங்களையும் வெறுத்து, அவைகளை விட்டு விலகி, கர்த்தரின் எல்லாக் கற்பனைகளையும் கைக்கொள்கிறவர்களாக இருந்தால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

இந்த புஸ்தகத்தை வாசித்த எனக்கு அருமையான சிநேகிதர்களுக்கு நான் கூற விரும்பும் தேவ அறிவுரைகளை வாசிக்கையில் நீங்கள் இதுவரையில் உங்கள் பாவ ஜீவியத்தை விட்டு தேவனிடமாக மனந்திரும்பவில்லையென்றால், (மனந்திரும்பவில்லையென்றால்) உடனடியாக மனந்திரும்பி, உங்கள் பாவம் மன்னிக்கப்படும்படியாக சரியான முறையில் ஞானஸ்நானம் எடுங்கள். காத்திருந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இந்த உலகில் இருக்குமளவும் பரிசுத்தமாக ஜீவிக்கவும் கர்த்தரின் காரியங்கள் குறித்து விழிப்புடன் இருக்கிறவர்களாகவும், கர்த்தரின் வருகையை ஆவலோடு எதிர் நோக்கியவர்களாகவும் இருப்பது மிகவும் அவசியமானதாகும்.

வேத புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை எல்லாருக்கும் ஞாபகப்படுத்துவது அவசியம் என்று எண்ணுகிறேன்.

துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள். சங்.9:17.

இனி காலம் செல்லாது வெளி. 10:6. அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறது வெளி.22:11,12.

கர்த்தராகிய இயேசுவின் கிருபை உங்களோடிருப்பதாக ஆமென்.

(ஒரு வேண்டுகோள் :- தாங்கள் இந்த புஸ்தகத்தை வாசித்தபின் மற்றவர்களும் இந்தப் புஸ்தகத்தை வாசிக்கும்படி ஜெபத்துடன் அவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். அநேகர் இந்த புஸ்தகத்தை வாங்கி பயனடையும்படி அவர்களுக்கு இந்த புஸ்தகத்தைப் பற்றி அறிமுகப்படுத்தி வையுங்கள். நன்றி)

மனித வாழ்க்கையை சரியாக அமைத்துக்கொள்ள அவசியமான எட்டுக்காரியங்கள்

1) கர்த்தருக்குப் பயப்படும் பயம் வேண்டும்.
2) கர்த்தர் காட்டும் வழியில் செல்ல வேண்டும்.
3) கர்த்தரின் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4) கர்த்தரின் புத்தி வேண்டும்.
5) கர்த்தரின் அறிவு வேண்டும்.
6) கர்த்தரின் விவேகம் வேண்டும்.
7) கர்த்தரின் வனா வேண்டும்.
8) கர்த்தரின் உணர்வு வேண்டும்.

மேற் கூறப்பட்டுள்ளக் காரியங்களை கர்த்தரிடமே கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உலகின் எல்லா மனிதரும் கைக்கொள்ளவேண்டிய பத்துக் காரியங்கள்

1) பாவமான ஜீவியத்தை விட்டு தேவனிடம் மனந்திரும்ப வேண்டும்.
2) செய்த பாவங்கள் மன்னிக்கப்பட மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்
3) பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4) இடைவிடாது வேதம் வாசித்து தியானம் செய்ய வேண்டும்.
5) எப்பொழுதும் ஜெபம் செய்ய வேண்டும்.
6) வாழ்க்கையின் எல்லாக்காரியகளுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும்.
7) கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடும், பரிசுத்தமாகவும் ஜீவியம் செய்ய வேண்டும்.
8) தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும்.
9) எல்லா மனிதரிடமும் அன்பாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.
10) கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

வேதத்தின் சத்தியங்களை தெளிவாகக் கற்றுக்கொள்ள உதவும் எமது மற்ற புத்தகங்கள்

ஆசிரியர் வெளியிட்டுள்ள மற்ற புத்தகங்கள் :

மனந்திரும்புதல்	ரூ. 02.50
ஞானஸ்நானம்	ரூ. 02.00
இரட்சிப்பு	ரூ. 20.00

இந்த புத்தகங்கள் கிடைக்குமிடம் :

சகோ. S. செல்லத்துரை	Bro. S. CHELLADURA
மனற்காடு	Manarkadu
மேலப்பாட்டம் (P.O.)	Melapattam (P.O.)
பர்கிட்மா நகர் (VIA)	Barkitmanagar (VIA)
திருநெல்வேலி - 627 351.	Tirunelveil - 627 351.
தொலைப்பேசி : 0462 - 2950570	Tel. : 0462 - 2950570
கைப்பேசி : 9943135231	Cell : 9943135231

ஆக்கியோனை பற்றி சில வரிகள்.....

நான் இந்திய விமானப்படையில் வேலை செய்துவந்தேன். நான் எனது நல்ல வேலையை விட்டுவிடும்படியாக தேவன் என்னை உணர்த்தினதினாலே 1983ம் வருஷம் நான் எனது நல்ல வேலையை விட்டுவிட்டு கர்த்தருக்கு ஊழியம் செய்யும் வாஞ்சையோடு எனது சொந்த ஊராகிய மணற்காடு என்ற கிராமத்திற்கு வந்தேன். எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள பாளையங்கோட்டை என்ற பட்டிணத்தில் உள்ள ஒரு சிறிய ஆவிக்குரிய சபையில் நான் ஏற்கனவே அங்கமாக இருந்ததினால் அந்த சபையின் ஊழியரோடும், விசுவாசிகளோடும் சேர்ந்து ஊழியம் செய்யவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் அந்த சபையில் திடீரென்று சில காரணங்களால் குழப்பம் ஏற்பட்டு அந்த சபையின் விசுவாசிகள் பிரிந்து, அவர்கள் விரும்பிய மற்ற சபைகளுக்கு சென்று விட்டனர். நான் ஒருவன் மாத்திரம் எந்த சபையிலும் சேராது தனித்து விடப்பட்டவனாக இருந்தேன். நான் என் தேவனுக்காக ஏதாவது செய்யவேண்டுமே என்ற வாஞ்சையில் என் சொந்த செலவில் துண்டு பிரதிகள் (Tracts) அச்சிட்டு திருநெல்வேலி, பாளையங்கோட்டை பட்டிணங்களிலும், இவைகளைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் சென்று துண்டுபிரதிகளை நான் தனியாகவே விநியோகித்து வந்தேன்.

பின்னர் இன்னும் கர்த்தருக்காக நான் ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணியபொழுது, வேத சத்தியங்களை எல்லோரும் தெளிவாக அறிந்துகொள்ளும் வண்ணமாக புத்தகங்கள் எழுதி எல்லா சபைகளிலும் உள்ள தேவ ஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று எண்ணி, கிறிஸ்தவ அடிப்படை உபதேசங்களடங்கிய நான்கு புத்தகங்களை எழுதி எனது சொந்த செலவில் அச்சிட்டுக் கொடுத்தேன். ஆனால் அச்சுக்கூலி, பேப்பர் விலை அதிகமாயிருந்ததினால் என்னால் தொடர்ந்து புத்தகங்கள் எழுதி அச்சிட முடியாமல் இருந்தேன். ஆனால் தற்சமயம் கர்த்தரின் வருகை வெகுசீக்கிரமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதினால் ஜனங்கள் வேதத்தின் சத்தியங்களை தெளிவாக அறிந்துகொண்டு, அதற்கேற்றபடி தங்கள் ஜீவியத்தை அமைத்துக்கொண்டு, ஆண்டவராகிய இயேசுவின் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையில் தொடர்ந்து இந்த புத்தகங்களை எழுதி அச்சிட முயற்சி செய்கிறேன்.

இந்த புத்தகங்களை வாசிக்கும் எனக்கு அருமையான தேவ ஜனங்கள் இந்த புத்தகங்களை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பயனுள்ளதாக கண்டால், இந்த சிறிய முயற்சிக்காக ஜெபிக்கவும், தங்களால் இயன்ற பண உதவிகள் செய்யும்படியாகவும் தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேவன்தாமே தங்களையும், தங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதித்து, தம்முடைய வருகைக்கென்று தங்களை ஆயத்தப்படுத்துவாராக.